வரு.75 இல. 31 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் වාරමංජරී

2023 ஓகஸ்ட் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

August 06 Sunday, 2023

கருணை இல்லம் கோகுலம்

ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.



நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk



ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்

ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)

188, புதுச்செட்டித்தெரு,கொழும்பு – 13, தொலைபேசி:–011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk

/ Thinakaran.lk / ThinakaranLK













## 'யாழ் நிலா' ரயில் சேவை ஆரம்பம்; அமைச்சர் பந்துல நேரில் சென்று பார்வை






படங்கள்: துஷ்மந்த மாயாதுன்ன

கல்கிஸ்ஸை முதல் யாழ். காங்கேசன்துறை வரையான 'யாழ் நிலா' சொகுசு குளிரூட்டப்பட்ட சுற்றுலா ரயில் சேவை, கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்திலிருந்து நேற்று முன்தினம் (04) இரவு 10.00 மணியளவில் தனது பயணத்தை ஆரம்பித்து, நேற்று (05) அதிகாலை 5.52 மணியளவில் காங்கேசன்துறை ரயில் நிலையத்தை சென்றடைந்தது.

இதற்கான ஆரம்ப நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது, பயணிகளுடன் அமைச்சர் பந்துல குணவர்தன சுமுகமாக கலந்துரையாடியதுடன், ரயில் புறப்படுவதற்கான சமிக்ஞையை அசைத்து ரயில் சேவையை ஆரம்பித்து வைத்தார்.

இதில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் யாழ். நோக்கிச் செல்லும் பயணிகள் பங்கேற்றிருந்தனர். இதேவேளை, நேற்றிரவு 9.30 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து பயணத்தை ஆரம்பித்த 'யாழ் நிலா' இன்று அதிகாலை 5.36 மணியளவில் கல்கிஸ்ஸை ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

### பாராளுமன்றத்தில் 09ஆம் திகதி ஜனாதிபதி விசேட உரை

# 13ஆவது திருத்தம் குறித்து கட்சிகள் பல ஆலோசனை

### கடந்த வெள்ளிக்கிழமைக்கு முன்பதாகவே பல முன்மொழிவுகள் கிடைத்துள்ளன



அனைத்துக் கட்சிகளின் மாநாட்டில் இணக்கம் காணப்பட்டமைக்கு அமையவாக 13ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் தொடர்பான தமது ஆலோசனைகளையும் கருத்துகளையும் வழங்குவதற்கு ஜனாதிபதியின் செயலாளரால் வழங்கப்பட்ட எழுத்துமூல அறிவுறுத்தலின் பிரகாரம் கடந்த வெள்ளிக்கிழமைக்குள் பல தரப்பினரிடமிருந்து முன்மொழிவுகள், ஆலோசனைகள் கிடைத்துள்ளன. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான 06

- ஈ.பி.டி.பி., மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீல. சுதந்திர கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்–துரு ஹெல உறுமய, எக்சத் ஜனரஜ பெரமுன உள்ளிட்ட பல கட்சிகள் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பு

### கிழக்கு சென்ற பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைச்சர் நஸீர் அஹமட்டின் இல்லத்துக்கு விஜயம்



'புதிய கிராமம்-புதிய நாடு' தேசிய ஒருங்கிணைந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்துக்காக விஜயம் செய்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட்டின் அழைப்பில் நேற்று முன்தினம் ஏறாவூரிலுள்ள அமைச்சரின் இல்லத்துக்கு சிநேக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போது...



06

யுனிசெப் நல்லெண்ண தூதுவராக

### இலங்கை வருகிறார் சச்சின் டெண்டுல்கர்

### நீர் கட்டண பட்டியல் SMS, ஈ பட்டியலில்!




2024 ஜனவரி முதல் அமுலாகிறது

நாடு முழுவதும் எதிர்வரும் 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து குறுந்தகவல் மற்றும் ஈ பட்டியல் மூலமே நீர் கட்டணப் பட்டியல் வழங்கப்படுமென, தேசிய நீர்வழங்கல் 06

### 13வது திருத்தம் குறித்து ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரை

CV விக்கினேஸ்வரன் MP வரவேற்பு



ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாச ஜனாதிபதி பதவிக்கு பொருத்தமற்றவரென, பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். 06

### நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட வாய்ப்பே இல்லை

ஏற்பட்டாலும் எதிர்கொள்ள அரசு தயார்



நாட்டில் எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படுமாயின், அதனை எதிர்கொள்ளும் வகையில் கைவிடப்பட்டுள்ள 11,000 ஏக்கர் நெற்காணிகளில் மீண்டும் பயிர்ச் செய்கையை ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக, விவசாய இராஜாங்க 06

சமூக ஊடகங்களில் பரப்பப்படும் விவகாரம்;

### மின்சார சபையிடம் விளக்கம் கோரும் நாமல்



இலங்கை மின்சார சபையின் கடிதத் தலைப்பின் கீழ் சமூக ஊடகங்களில் பரப்பப்பட்டு வரும் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாமை தொடர்பாக இலங்கை மின்சார சபையிடம் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விளக்கம் கோரியுள்ளார். சமூக ஊடகங்களில் பரப்பப்படும் மின்சாரக் கட்டணம் 06

## எங்கள் கருத்து

### காலம் மாறினாலும் கலைகள் மீதான ஆர்வம் மாறவில்லை

எவ்வளவுதான் இலத்திரனியல் ஊடகங்கள் வந்தாலும் அச்சு ஊடகங்களின் மீது மக்களுக்கு இருக்கும் ஆர்வம் குறைந்தபாடில்லை. உலகம் கொரோனா, பொருளாதார சீர்கேடு, அரசியல் போராட்டம் போன்றவற்றால் முடங்கி அடங்கிப் போனாலும் கலைகளின் மீதான ஆர்வமும் விருப்பமும் குறைந்தபாடில்லை. இலங்கையில் மக்கள் பொருளாதார நெருக்கடியால் அல்லற்பட்டாலும் பத்திரிகை அச்சு உபகரணங்களின் விலைகள் உயர்ந்தாலும் அவ்வப்போது நூல்களை வெளியிடுவதில் பின்னிற்பதில்லை. இன்று கூட மாதா மாதம் பௌர்ணமிதோறும் கவியரங்கத்தை நடத்தி வருகின்ற வகவம் அமைப்பின் தலைவர் நஜுமுல் ஹுசேன் சிறுகதை நூலொன்றை கொழும்பு 10, அல்ஹிதாயா கல்லூரி மண்டபத்தில் வெளியிடுகின்றார்.

இதேபோல் அண்மையில் முல்லைத்தீவைச் சேர்ந்த நதுநசி என்ற கவிஞர் தான் தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் வெளிவந்த கவிதைகளை தொகுத்து நூலாக வெளியிட்டார்.

இவருக்கு இந்த நூலின் வெளியீட்டு விழாவை கொழும்பில் நடத்துவதற்கு ஆர்வம் இருந்தாலும் அவரால் அதற்கான வாய்ப்பு வசதிகள் இல்லாததால் 06

### மாகாணசபை தேர்தலை வடக்கு, கிழக்கிலாவது நடத்த உதவுங்கள்

இந்திய தூதுவரிடம் த.மு.கூ. குழு வலியுறுத்து



மாகாணசபை தேர்தலை வடக்கு, கிழக்கிலாவது முதலில் நடத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று, தமிழ் முற்போக்கு கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணிக்குமிடையில் சந்திப்பொன்று கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் 06



06

### இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை!

KKS சீமெந்து தொழிற்சாலையிலிருந்து

### இரும்பு திருடிய 8 பெண்கள் உட்பட 20 பேர் அதிரடி கைது

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணம், காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையிலிருந்து இரும்புகளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் 8 பெண்கள் உட்பட 20 பேரை நேற்று முன்தினம் (04) பொலிஸார் கைது செய்துள்ளனர். காங்கேசன்துறை சீமெந்து 06

### 119 ஐ தவறாக பயன்படுத்தினால் சிறை மற்றும் அபராதம்

பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவிப்பு

119

பொலிஸ் தலைமையகம் அறிமுகப்படுத்தியுள்ள 119 எனும் அவசர தொலைபேசி இலக்கத்தை தவறாக பயன்படுத்துபவர்கள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்களென, 06


"உங்கள் சிறகுகளை பறக்க விடுங்கள்"
பேர் வீரர்களாக வானத்தை வெல்லுங்கள்
பொதுக்கடமை விமான ஓட்டுநர் பிரிவு – ஆண் (நிரந்தர)
அடிப்படை கல்வித்தகைமைகள்
✈ க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தி உட்பட ஆறு திறமைச்சித்தியும் சிங்களம் / தமிழில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.
✈ க.பொ.த (உ.த) பரீட்சையில் ஒரே அமர்வில் பௌதீக / உயிரியல் பிரிவில் (இயற்பியல் ஒரு கட்டாய பாடம்) குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2023 ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்
நன்மைகள்
✈ பைலட் ஒபிசர் நிலைக்கான மொத்த வருடாந்த திரட்டுச் சம்பளம் - ரூபா.1,277,316.00
✈ உயர் கல்வி வாய்ப்புகள்
✈ உணவு மற்றும் தங்குமிட வசதி
✈ மருத்துவ மற்றும் பொழுதுபோக்கு வசதி
✈ ஆகாய மற்றும் தரை போக்குவரத்து
✈ திருமண மனைகள்
✈ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி
✈ இலவச சீருடை
✈ ஆயுள் காப்புறுதி
✈ சுற்றுலா விடுதி
இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க
www.airforce.lk or www.airforce.lk/joinus/apply
இலங்கை விமானப்படை
வானத்தின் பாதுகாவலர்கள்
AIR FORCE RECRUITING
follow us on facebook
Sri Lanka Air Force Recruiting
+94 11 2 495 900
தலைமை ஆட்சேர்ப்பு அதிகாரி,இலங்கை விமானப்படை,ஏகல, கொட்டுக்கொட
மேலதிக தகவல்களுக்காக 2022 நொவம்பர் மாதம் 04ம் திகதி இலக்கம்2305 அரச வர்த்தமானி மற்றும் www.documents.gov.lk இணையதளத்தினை பார்க்கவும்



இலங்கை விமானப்படை
வானத்தின் பாதுகாவலர்கள்
"சிறந்தவர்களில் ஒருவராக மாற எங்களுடன் இணையுங்கள்"
அரசாணையமர்வு அதிகாரிகள் – நேரடி ஆட்சேர்ப்பு
மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் பிரிவு
மின்னணு மற்றும் தொலைத்தொடர்பு பொறியியல் அதிகாரி – ஆண் (நிரந்தர)
தகவல் தொழில்நுட்ப பொறியியல் பிரிவு
தகவல் தொழில்நுட்ப அமைப்புகள் ஆய்வாளர் (ஆண்/பெண்) – நிரந்தர/தொண்டர்
வலையமைப்பு பொறியியலாளர் (ஆண்) – நிரந்தர
மென்பொருள் பொறியியலாளர் (ஆண்) – நிரந்தர
தகவல் / பாதுகாப்பு விசேட நிபுனர் (ஆண்) – நிரந்தர
இணையதள வடிவமைப்பாளர் (ஆண்) – நிரந்தர
சிவில் பொறியியல் பிரிவு
சிவில் / இயந்திரவியல் பொறியியல் அதிகாரி – ஆண் (நிரந்தர)
கல்வி பிரிவு
ஆங்கில மொழி விரிவுரையாளர் – ஆண்/பெண் (தொண்டர்)
தகுதிகள்
✈ மேலதிக தகவல்களுக்காக 2022 நொவம்பர் மாதம் 04ம் திகதி இலக்கம் 2305 அரச வர்த்தமானி மற்றும் www.documents.gov.lk இணையதளத்தினை பார்க்கவும்.
நன்மைகள்
✈ மொத்த வருடாந்த திரட்டுச் சம்பளம் : • பைலட் ஒபிசர் - ரூபா.1,316,916.00
• ப்லைன் ஒபிசர் - ரூபா.1,385,436.00 • ப்ளைற் லெப்டினன்ட் - ரூபா.1,481,556.00
✈ உயர் கல்வி வாய்ப்புகள்
✈ உணவு மற்றும் தங்குமிட வசதி
✈ மருத்துவ மற்றும் பொழுதுபோக்கு வசதி
✈ ஆகாய மற்றும் தரை போக்குவரத்து
✈ திருமண மனைகள்
✈ உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி
✈ இலவச சீருடை
✈ ஆயுள் காப்புறுதி
✈ சுற்றுலா விடுதி
வான்படை வீரர் / வீராங்கனை
செயற்பாடுகள் துறை (நிரந்தர)
தரைச் செயற்பாட்டாளர் – ஆண்/பெண்
வானூர்தி பொறியியல் துறை (நிரந்தர)
வானூர்தி கட்டமைப்பு வல்லுனர் – ஆண்/பெண்
வானூர்தி இயந்திரவியலாளர் – ஆண்/பெண்
வானூர்தி மின்னியல் கருவிகள் இயந்திரவியலாளர் – ஆண்/பெண்
வானூர்தி பாதுகாப்பு கருவிகள் உதவியாளர் – ஆண்/பெண்
தகுதிகள்
✈ தொழிற்பாடுகள் துறைக்கு க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டிட்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ் மொழியில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.
✈ வானூர்தி பொறியியல் துறைக்கு க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டிட்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி பாடங்களில் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் உட்பட அதில் கணிதம் அல்லது விஞ்ஞான பாடத்தில் திறமைச்சித்தி கட்டாயம் இருத்தல் வேண்டும்.
விமானவீரர் நிலைக்கான மொத்த வருடாந்த திரட்டுச் சம்பளம் : ரூபா. 76,783.43
(அடிப்படை சம்பளம் ரூபா. 29,540.00 + உணவுக்கொடுப்பனவு ரூபா. 29,993.43 + ஏனைய கொடுப்பனவுகள் ரூபா. 17,250.00)
AIR FORCE RECRUITING
follow us on facebook
Sri Lanka Air Force Recruiting
2023 ஆகஸ்ட் 31ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்
இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்க
www.airforce.lk or www.airforce.lk/joinus/apply
தலைமை ஆட்சேர்ப்பு அதிகாரி,இலங்கை விமானப்படை,ஏகல, கொட்டுகொட
+94 11 2 495 900
மேலதிக தகவல்களுக்காக 2022 நொவம்பர் மாதம் 04ம் திகதி இலக்கம் 2305 அரச வர்த்தமானி மற்றும் www.documents.gov.lk இணையதளத்தினை பார்க்கவும்.





யால வனசீவராசிகளுக்காக பவுஸர் மூலம் தண்ணீர் நிரப்பப்படும் நீர்த்தடாகம்

கால்வாயில் மீன்கள் இறந்து காணப்படும் காட்சி



# வரட்சி, அதிகரித்த வெப்ப நிலை இயற்கை பேரழிவுக்கு வித்திடுமா?

- நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் தொடராக வீழ்ச்சி
- உடவளவை நீர்த்தேக்கத்தை அடிப்படையாகக் கொண்ட 50 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை அழியும் அபாயம்
- யால, வில்பத்து, குமண வனசீவராசிகளுக்கு பவுஸர்களில் தண்ணீர்
- வடக்கு, கிழக்கு, வட மத்திய மாகாணங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்
- ஐரோப்பாவில் தானிய உற்பத்தி 60 வீதம் வீழ்ச்சி
- அரிசி ஏற்றுமதியை இடைநிறுத்திய இந்தியா
- நீர் காணப்படும் இடங்களில் உணவுப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கோரும் இலங்கை

இலங்கையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரையும் போதியளவு மழை வீழ்ச்சி கிடைக்க வாய்ப்பில்லை. இது வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்பாகும். இந்த அறிவிப்பை சாதாரணமாக நோக்க முடியாது. அடுத்துவரும் இரு மாதங்களுக்கு போதியளவு மழை வீழ்ச்சி கிடைக்கப்பெறாவிடில் நிச்சயம் அது மிகவும் பாரதூரமான விடயமாக இருக்கும். ஏற்கனவே நாட்டில் கடும் வரட்சிக் காலநிலையும் அதிகரித்த வெப்ப நிலையும் நிலவிக் கொண்டிருக்கிறது. இதன் விளைவாக நாட்டின் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் தாக்கங்களும் பாதிப்புகளும் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

அந்த வகையில் நாட்டிலுள்ள நீரேந்து பிரதேசங்களிலும் நீர்த்தேக்கங்களிலும் தண்ணீர் மட்டம் சடுதியாகக் குறைவடைந்து வருவதை நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகார சபை, வனசீவராசிகள் திணைக்களம் என்பன உறுதிப்படுத்தியுள்ளன. குறிப்பாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 33.3 வீதமும் மகாவலி ஆற்றின் நீர்க் கொள்ளளவு 34 வீதமும் குறைவடைந்துள்ளது. சமனலவெவ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 87.9 மில்லியன் கன மீற்றர்கள் வரை வீழ்ச்சியடைந்திருக்கிறது. இதே காலநிலை மேலும் பத்து நாட்களுக்கு நீடிக்குமாயின் இந்நீர்க் கொள்ளளவு 60 மில்லியன் கன மீற்றர்கள் வரை குறைவடைந்துவிடக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று மின்சார சபை தெரிவித்திருக்கின்றது.

உடவளவை நீர்த்தேக்கத்தின் கீழ் 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்செய்கை தண்ணீர் பற்றாக்குறை மற்றும் வரட்சி காலநிலை காரணமாக அழிவடையும் நிலையை எதிர்கொண்டுள்ளது.

மேலும் வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள பெரும்பாலான குளங்களதும் நீர்த்தேக்கங்களதும் நீர் மட்டமும் பெரிதும் குறைவடைந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மல்லாவி குளத்தில் விவசாயத்திற்கு தண்ணீர் வழங்கும் கால்வாயில் இலட்சக்கணக்கான மீன்கள் இறந்து மிதப்பது தெரிய வந்துள்ளது. தற்போதைய வெப்ப காலநிலையே இதற்கு காரணமென பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வரட்சியும் வெப்ப நிலை அதிகரிப்பும் நீடிக்குமாயின் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையை நிச்சயம் பாதிக்கவே செய்யும். குறிப்பாக பெரும்போக நெற்செய்கை பெரும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீர்ப்பாசன அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தற்போதைய அதிக வெப்ப காலநிலையும் வரட்சியும் நீடிக்குமாயின் மின்னுற்பத்திக்கும் உணவுப் பயிர்ச்செய்கைக்கும் தண்ணீரை வழங்குவதில் நெருக்கடிகள் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் மின்வெட்டைக்கூட நடைமுறைக்கு கொண்டு வரக்கூடிய நி லைமையும் ஏற்படலாம் எனவும் இலங்கை மகாவலி அதிகார சபை கூறியுள்ளது.

இதேநேரம் வட மத்திய, வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் குடிநீருக்கும் பற்றாகக் குறை ஏற்படக்கூடிய அச்சுறுத்தலும் உருவாகியுள்ளது.

இவ்வரட்சி காலநிலையினால் யால, வில்பத்து, குமண, உடவளவை ஆகிய வனாந்தரங்களில் காணப்படும் உயிரினங்களும் பல்வேறு விதமான நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன. குறிப்பாக இவ் வனாந்திரங்களிலுள்ள குளங்களதும் நீரேந்து பிரதேசங்களதும் தண்ணீர் பெரிதும் வற்றிப் போயுள்ளது. நீர்ப் பற்றாக்குறையோடு அதிக உஷ்ண நிலை ஏற்பட்டுள்ளதோடு உணவுப் பற்றாக்குறைக்கும் வன சீவராசிகள் முகம் கொடுத்திருப்பதாக வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார கூறியுள்ளார். இந்நிலையில் யால வனாந்திரத்திலுள்ள வன சீவராசிகளுக்கென பவுஸர்களில் தண்ணீர் வழங்கும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலை நீடிக்குமாயின் மனிதன் வனசீவராசிகள் மோதல்களும் தோற்றம் பெறக்கூடிய அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, 'தற்போது நிலவும் கடும் வரட்சி காலநிலையினால் எதிர்வரும் பெரும் போகம் சாத்தியமற்றுப் போகுமாயின் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்க நேரிடும். அதனால் தண்ணீர் வசதி காணப்படும் இடங்களில் ஏதாவது உணவு உற்பத்தி பயிர்ச் செய்கையைத் தாமதமின்றி ஆரம்பிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது காலத்திற்கு அவசியமான வேண்டுகோளாகும். ஏனெனில் இந்த வெப்ப நிலை அதிகரிப்பும் வரட்சியும் காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளே அன்றி வேறில்லை.

என்றாலும் இவ்வெப்ப நிலை அதிகரிப்பும் வறட்சி காலநிலையும் தனியே ஒரு நாடோ ஒரு பிராந்தியமோ எதிர்கொள்ளும் பிரச்சினை அல்ல. இது முழு உலகமும் முகம் கொடுத்துள்ள விவகாரம். அதனால் இந்நிலைமை குறித்து உலகளாவிய ரீதியில் விஷேட கவனமும் செலுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ், 'இது பூமி கொதித்துக்கொண்டிருக்கும் காலம் (*Era of global boiling*). காற்றை சுவாசிக்க முடியவில்லை. வெப்பத்தை தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதன் விளைவுகள் தெளிவானவை மட்டுமல்ல சோகமானவையும் கூட. பருவமழையால் பிள்ளைகள் அடித்துச் செல்லப்படுகின்றனர். குடும்பங்கள் தீயின் தாக்கங்களில் இருந்து தப்பி ஓடுகின்றன. தொழிலாளர்கள் வெப்பத்தில் மடிகின்றனர். காலநிலை மாற்றத்தை நினைத்தால் பயமாக இருக்கிறது. இது வெறும் ஆரம்பம் மட்டுமே' என்று தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். அத்தோடு காலநிலை தொடர்பாக உடனடி நடவடிக்கை தேவை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான சூழலில் உலக வானிலை நிலையம், 'இவ்வருடம் (2023) ஜூலை தான் பூமியின் வெப்பமான மாதம்' என்று குறிப்பிட்டுள்ளதோடு, கடந்த 120,000 ஆண்டுகளில் இந்த ஜூலை தான் மிகுந்த வெப்பமான மாதமாக இருந்துள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு பதிவான அதிகபட்ச உலகளாவிய சராசரி வெப்பநிலையையும் இது முறியடித்துள்ளது' என்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் காலநிலை கண்காணிப்பு நிறுவனமான கோபர்நிகஸ் அமைப்பின் கருத்துப்படி, 'இவ்வருடம் ஜூலை மாதம் 06ஆம் திகதி, உலக சராசரி வெப்பநிலை 17.08 டிகிரி செல்சியஸாக பதிவானது. இவ்வாறு முன்னொரு போதும் அதிகரித்த வெப்பநிலை பதிவாகவில்லை.

(17ஆம் பக்கம் பார்க்க)



மர்லின் மரிக்கார்


AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON Estd. 1904
"Friday Special Buriyani
RS. 455/- PER PACK
During Weekends
Lamprais Available
Rs.865.00 per pack
Order Now.
VISIT - PickMe
Automobile Association of Ceylon
40, Sir Mohomed Macan Marker Mawatha,Colombo 03
Tele. No: 0774369013 (Krishon)



அறிவித்தல்
LED மின்குமிழ் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், வியாபாரிகள் மற்றும் சில்லறை விற்பனையாளர்கள்

Reminder



2020 மே மாதம் 26 ஆம் திகதிய 2177/3 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி நடைமுறைக்கு வந்ததையடுத்து, பொது ஒளியேற்றல் வசதிகளுக்காக பயன்படுத்தப்படும் 60 வொட் வரையான வலுவுடைய LED மின்குமிழ் உறையின் அல்லது அட்டையில் அல்லது பெட்டியில் குறைந்தபட்ச சக்தி செயல்திறன் முத்திரையை (MEP) கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த சக்தி முத்திரை SLS 1530:2016 எனும் இலங்கை தரநியமத்தில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ளவாறு LED மின்குமிழின் சக்தி செயல்திறனை சுட்டிக்காட்டும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை சட்டத்தின் 36 (2) (ஈ) மற்றும் (உ) ஆகிய பிரிவுகளினது ஏற்பாடுகளின் கீழே இந்த ஒழுங்குவிதி அமுலாக்கப்பட்டுள்ளது.

(ஈ) அவ்வப்பொழுகு குறிப்பீடுசெய்யப்படலாம் என்ற அத்தகையதொரு விதத்தில் உபகரணங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அட்டைகளில் அத்தகைய விபரங்களை காட்சிப்படுத்துமாறு பணிப்பதோடு அத்தகைய உபகரணங்களின் சக்தி செயல்திறன் நியமங்கள், சக்தி நுகர்வு வரையறைகள், பொருத்தமான முகவர்கள் ஆகியவற்றுடன் விடயங்களையும் குறிப்பீடுசெய்கின்றது.

(உ) மேற்குறித்த (ஈ) பந்தியின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள தகவுதிறன்களை அனுசரிக்காத அத்தகைய உபகரணங்களின் உற்பத்தி, இறக்குமதி, விற்பனை அல்லது கொள்வனவு என்பவற்றைக் கட்டுப்படுத்துதல்.

மேற்குறித்த இலங்கை தரநியமத்தை அனுசரிக்காத ஏதாவது LED மின்குமிழை உற்பத்தி செய்வதும் மற்றும் இறக்குமதி செய்வதும் அல்லது அந்த மின்குமிழில் உரியவாறு MEP முத்திரையை காட்சிப்படுத்தாமல் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு ஏதாவது LED மின்குமிழை களஞ்சியப்படுத்துவம், காட்சிப்படுத்துவதும், விற்பனை செய்வதும், விற்பனைக்காக கொடைமுனைவு செய்வதும் அல்லது பகர்ந்தளிப்பதும் இந்த ஒழுங்குவிதியின் கீழ் குற்றங்களாகும் என இத்தால் உரிய அனைத்துத் தரப்புகளுக்கும் அறியப்படுத்தப்படுகின்றது. எதிர்காலத்தில் நாம் சந்தையில் புலனாய்வுகளை மேற்கொண்டு, மேற்குறித்த ஒழுங்குவிதிகளை மீறியவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.





பணிப்பாளர் நாயகம்
இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை
இலக்கம் 72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை
கொழும்பு 00700

தொலைபேசி: 0112575030
தொலைநகல்: 0112575089
இணையத்தள முகவரி: www.energy.gov.lk

சக்தியை சேமிப்பது எமது கடமையாகும்



SRI LANKA INSTITUTE OF TOURISM & HOTEL MANAGEMENT
Taking Sri Lanka to Global Heights




தேசிய திட்டம் ஒன்றுக்கு பங்களிப்புச் செய்ய இலங்கையில் உள்ள விருந்தோம்பல் பயிற்சியின் முன்னோடியுடன் இணையுங்கள்

வெற்றிடம் - பயிற்றுநர்
(தற்காலிக அடிப்படை)

ஹோட்டல் விருந்தோம்பல் பயிற்சி திட்டம் (மாவட்ட மட்டம்) "இலங்கை விருந்தோம்பலை வலுவூட்டும் திறன்கள்" இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் (ஸ்ரீலஜஸவுர்ஆ) அனைத்து மாவட்ட செயலகங்கள் மற்றும் மாகாணங்களில் தலைமை செயலகங்களுடன் இணைந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் தேசிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த திட்டத்தின் கீழ் பின்வரும் துறைகளில் இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு பயிற்றுநர்களின் ஆட்சேர்ப்பு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முகப்பு அலுவலக செயற்பாடுகள் | ஹோட்டல் பராமரிப்பு | உணவகம் மற்றும் பார் சேவைகள்

கல்வி/தொழில் தகைமைகள்:

SLITHM மூலம் வழங்கப்படும் சான்றிதழ் மட்டத்திலான கற்கை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்/கற்கை சார்ந்த துறையில் ஏேஞ தரம் 04 இற்கு தேவையான தகைமை ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் தொடர்புடைய துறையில் குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவம்.

கொடுப்பனவு:
ஒரு மணித்தியாலத்திற்கு ரூபா 1000/= - 2500/=
(கல்வி தகைமைகள் மற்றும் தொழில் தகைமை அடிப்படையில் தீர்மானிக்கப்படும்)

நிகழ்ச்சிக் காலம்:
2023 அக்டோபர்
(20 நாட்கள் X 06 மணி நேரம்)

ஏனைய நிபந்தனைகள்:

- தேர்வுசெய்யப்பட்ட பயிற்றுநர்கள் இந்த நிகழ்ச்சி முழுவதும் முழு நேர கற்பித்தல் மற்றும் பயிற்சி செயற்பாடுகளில் ஈடுபட வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தமது வரிசைக்கமைய 03 மாவட்டங்களை பரிந்துரைக்க வேண்டும் என்பதோடு தமது விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட SLITHM அதிபருக்கு முதல் மாவட்ட விருப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பங்களை அனுப்பும் கடைசி திகதி 2023 ஒகஸ்ட் 27

| | | |
|---|---|---|
| மேல் மாகாணம் (கொழும்பு) | 78, காலி வீதி, கொழும்பு 03 | தொ: 011 2208 312 |
| மத்திய மாகாணம் (கண்டி) | வரபிட்டிய, குண்டசாலை, கண்டி | தொ: 081 2230 900 |
| வட மத்திய மாகாணம் (அநுராதபுரம்) | ஸ்ரீ மஹா போதி மாவத்தை, அநுராதபுரம் | தொ: 025 2223 315 |
| தென் மாகாணம் (கேகாலை) | BOI திட்டம், கொக்கல, ஹபரதுவ | தொ: 091 2283 072 |
| ஊவா மாகாணம் (பண்டாரவளை) | கொல்ப் லிங்க் வீதி, பண்டாரவளை | தொ: 057 2232 499 |
| சப்ரகமுவ (இரத்தினபுரி) | புதிய நகர், கொழும்பு வீதி, இரத்தினபுரி | தொ: 045 2226 464 |
| வட மேல் மாகாணம் (குருநாகல்) | மகுருவோய வத்த, போயகானே, குருநாகல் | தொ: 037 2223 959 |
| கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு) | இல. 07, புனித செபஸ்டியன் வீதி, அரசடி, மட்டக்களப்பு | தொ: 065 2050 306 |
| வடக்கு மாகாணம் (யாழ்ப்பாணம்) | இல. 450, பிரதான வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் | தொ: 077 595 6119 |



# விரிவடையும் இலங்கை-இந்திய நட்புறவுக் கரங்கள்

**பாக்கு நீரிணையின் ஊடாக இரு நாடுகளும் பிரிக்கப்பட்டிருந்தாலும் இலங்கையின் நெருங்கிய அண்டை நாடு இந்தியாவாகும். இதன் காரணமாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பழங்காலத்திலிருந்தே நட்புறவு இருந்து வருகின்றது. இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் லக்னோவில் அமைந்துள்ள ராஜேஷ் சிங் தயாள் மன்றத்தினால் நடத்தப்படும் முன்னணிக் கல்வி நிறுவனமான Kunwar's Global School ல் இந்திய–இலங்கை நட்புறவு தினம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் 2023 ஆகஸ்ட் 01ம் திகதி விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.**

இந்த நட்புறவு தினத்தை கொண்டாடுவதன் முக்கிய நோக்கம் நீண்ட காலத்திற்கு நட்பை வலுப்படுத்துவதாகும். இந்நிகழ்வில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள், கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்கள் கலந்துகொண்டதுடன், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் கலாசார பரிமாற்றத்தின் புதிய வழிகள் மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார உறவை வளர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் உரையாற்றுவதற்காக சண்டிகரை தளமாகக் கொண்ட கல்விச் சிந்தனையாளரும், பெற்றோரை வளப்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்றவருமான கலாநிதி சாகரிகா பாத்தியா, Lcurve கல்வி ஆராய்ச்சி நிலையத்தின் ஸ்தாபகர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி பிரேம் குமாரி புதாதோகி, ECEP நேபாள மன்றத்தின் ஸ்தாபகத் தலைவர் மற்றும் Alphabet Presschool ஸ்தாபகப் பணிப்பாளர் மற்றும் நேபாளத்தின் பாலர் பாடசாலை ஸ்தாபகர், போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். இலங்கையின் பிரதிநிதிகளாக சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளர் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் சில பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நோக்கில் இந்தியாவின் லக்னோவில் அமைந்துள்ள Kunwar's Global கல்லூரிக்கு அழைக்கப்பட்டிருந்ததோடு, அந்த கல்லூரி மாணவர்கள் அனைவரும் பல கலாசார நிகழ்ச்சிகளை நடத்தி இரு நாடுகளின் நட்புறவுக்கு புதிய அணுகுமுறையை வழங்கினர். அத்துடன் கொழும்பு ECCE இன் பெற்றோருக்கான பயிற்றுவிப்பாளரும், வைத்தியருமான திருமதி தெரேஸ் அஷாந்தி லக்மாலி செனவிரத்ன, இரத்தினபுரி தர்மபால மகா வித்தியாலயத்தின் அதிபர் P.P.P. களுபோவில ஆகியோரும் இந்த நிகழ்வைப் பிரதிநிதித்துவப்படுத்தியதோடு, இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட அனைவருக்கும் ராஜேஷ் சிங் தயாள் மன்றம் அனுசரணை வழங்கியிருந்தது.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் ராஜேஷ் சிங் தயாள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலவச மருத்துவ முகாம் இந்தப் பயணத்தின் முக்கிய அம்சமாக அமைந்திருந்தது. ராஜ்பூர், புகத்புர, சிர்சியா பவார், பவானி சாப்பர் போன்ற அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் இந்த மருத்துவ முகாமில் கலந்து கொண்டதுடன், லக்னோ நகரத்தில் அமைந்துள்ள பிரபல மருத்துவமனையான சந்தன் மருத்துவமனையின் விசேட வைத்திய நிபுணர்கள் இங்கு வருகை தந்து இலவச மருந்து சிகிச்சை மற்றும் பரிசோதனைகளை மேற்கொண்டமை இலங்கை பிரதிநிதிகளுக்கு உணர்வுபூர்வமான விடயமாக அமைந்திருந்தது. இந்த மாபெரும் மருத்துவ முகாமை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன ஆரம்பித்து வைத்தார். லக்னோவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வறிய மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை விநியோகிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கலந்துகொண்டார்.








சாரநாத், புத்த காயா, லும்பினி மற்றும் பல இடங்களுக்கு யாத்திரை மற்றும் தரிசிப்பதற்காக அமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் ராஜேஷ் சிங் தயாள் மன்றத்தினால் முழுமையான அனுசரணை கிடைத்ததால் இந்திய, இலங்கை நட்பு மேலும் வலுவடைந்தது. எதிர்காலத்தில் புத்த பகவானை வழிபடுவதற்காக இந்தியா செல்லும் பக்தர்கள் அனைவருக்கும் அவர்களது பயணத்தை எளிதாக்கும் வகையில், கிருஷி நகரில் விமான நிலையம் அமைப்பதற்கான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் முடிவும் பாராட்டப்பட வேண்டியதாகும்.

அனகாரிக தர்மபாலவின் அருங்காட்சியகத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்குவதற்கு முன்வந்த தரப்பினராகச் செயற்படுதல் மற்றும் மூலகந்த விகாரைக்கு அருகில் வர்த்தக நகரமொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் ஏதேனும் அழுத்தங்கள் மூலகந்த விகாரைக்கு ஏற்படுமா என்பது பற்றி ஆராயுமாறு மகாபோதி சங்கத்தின் தேரர்களால் அமைச்சரிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பிலும் கவனத்தைச் செலுத்தி, இந்திய பிரதமர் மற்றும் இலங்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகிய முத்தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கான சிறந்த பதிலைப் பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரால் தலையிட முடிந்தமை இந்தப் பயணத்தின் விசேட அம்சமாகும்.

> **இந்த நட்புறவு தினத்தை கொண்டாடுவதன் முக்கிய நோக்கம் நீண்ட காலத்திற்கு நட்பை வலுப்படுத்துவதாகும். இந்நிகழ்வில் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள், கல்வியாளர்கள் மற்றும் அறிஞர்கள் கலந்துகொண்டதுடன், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் கலாசார பரிமாற்றத்தின் புதிய வழிகள் மற்றும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார உறவை வளர்ப்பதன் முக்கியத்துவம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டது**

நாமலீ மாகலந்தாவ

தமிழில்: எம்.எஸ். முஸப்பிர்

# இந்தியாவின் 3000 மில்லியன் ரூபாவில் மலையகத்தில் மறுமலர்ச்சி திட்டம்

## தினகரன் வாரமஞ்சரிக்கு ஜீவன் தொண்டமான் பிரத்தியேக செவ்வி



**" கல்வி, தொழில்நுட்ப புரட்சி மூலம் மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என நம்புகின்றேன், பிரதிபலன் கிடைக்கக் கூடிய, சமூக மாற்றத்துக்கு வழிவகுக்கக் கூடிய விடயங்களுக்காகவே இந்திய முதலீட்டை பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இது சம்பந்தமாக மலையகத்தில் உள்ள அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்துவேன்." என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீ வன் தொண்டமான் தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியா சென்றிருந்தார். அவர் தலைமையிலான இலங்கை தூதுக்குழுவில் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் இடம்பெற்றிருந்தார். டில்லியில் நடைபெற்ற பேச்சுகளிலும் பங்கேற்றார்.**

**குறித்த பயணத்தை வெற்றிகரமாக முடித்துகொண்டு நாடு திரும்பிய அமைச்சர், பின்னர் தனிப்பட்ட பயணமாக தமிழகம் சென்றார். அங்கு தமிழக முதல்வர் உட்பட பல தரப்பினரையும் மரியாதை நிமித்தம் சந்தித்து உரையாடினார்.**

**இந்நிலையில் இந்திய விஜயம் மற்றும் மலையக மக்களின் மேம்பாட்டுக்காக இந்தியா வழங்க முன்வந்துள்ள 3 ஆயிரம் மில்லியன் ரூபாவில் முன்னெடுக்க எதிர்பார்த்துள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான், தினகரன் வார மஞ்சரிக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு,**

> **1. இந்தியாவின் நிதி உதவியானது ஜீவன் தொண்டமானின் வங்கி கணக்கில் வைப்பிலிடப்படவில்லை.**
> **2. மலையகத்தில் இனிவரும் மாற்றமானது நிலையானதாகவும், அதன்மூலம் எமது சமூகம் அடுத்த கட்டம் நோக்கியும் நகரக்கூடியதாக இருக்க வேண்டும்.**
> **3. தோட்ட வைத்திய உதவியாளர்கள் பிரிவுகளுக்கு ஒரு எம்.பி.பி.எஸ் வைத்தியர் என்ற அடிப்படையில் பொறிமுறையொன்றை உருவாக்க திட்டமிடப்படுகின்றது.**

**கேள்வி - இந்திய அரசினால் உறுதியளிக்கப்பட்டுள்ள 3000 மில்லியன் ரூபா நிதியுதவி பற்றி சற்று தெளிவாக கூறமுடியுமா?**

**பதில்:-** நிச்சயமாக, மலையக மக்களுக்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்குவதற்கு முன்வந்த பிரதமர் மோடி மற்றும் இந்திய அரசுக்கு முதலில் நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். மலையக மக்களின் மேம்பாட்டுக்காக உதவி வழங்குமாறு நாம் கோரிக்கை விடுத்திருந்தோம். அன்று முதல் இன்று வரை மலையக மக்களுக்காக தம்மால் முடிந்த அனைத்து உதவிகளையும் இந்தியா செய்து வருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே இந்த உதவி திட்டம் கிடைக்கப்பெற்றுள்ளது. மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையான அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்நிதியை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

**கேள்வி - இந்த 3 ஆயிரம் மில்லியன் ரூபா பற்றியும் விமர்சனங்கள் எழுந்துள்ளனவே, இது மக்களுக்காக உரிய வகையில் பயன்படுத்தப்படுமா?**

**பதில்:-** இந்தியாவின் நிதி உதவியானது ஜீவன் தொண்டமானின் வங்கி கணக்கில் வைப்பிலிடப்படவில்லை. அரசால் நியமிக்கப்பட்ட அமைச்சர் இருக்கின்றார். இந்திய தூதுரகம் இருக்கின்றது, எனவே, வெளிப்படைதன்மையுடன் தான் நடவடிக்கை இடம்பெறும்.

**கேள்வி - 3 ஆயிரம் மில்லியன் ரூபாவை எதற்கெல்லாம் பயன்படுத்தலாம் என கருதுகின்றீர்கள்?**

**பதில்:-** மலையகத்தில் இனிவரும் மாற்றமானது நிலையானதாகவும், அதன்மூலம் எமது சமூகம் அடுத்த கட்டம் நோக்கியும் நகரக்கூடியதாக இருக்க வேண்டும். அந்தவகையில் கல்வி, சுகாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட விடயங்களை மேம்படுத்தும் திட்டங்களில் முதலிட்டால் அதன் மூலம் பிரதிபலன் கிடைக்கும். அறுவடைக்கு நீண்டகாலம் சென்றாலும் அது மாற்றத்துக்கான வழியாகும். இது எனது தனிப்பட்ட யோசனை. இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படும். துறைசார் விடயங்கள் பற்றி சற்று தெளிவாக விளக்கலாம் என நினைக்கின்றேன்.

**கல்வி**

கல்வித்துறை என்றதுமே மலையக பல்கலைக்கழகம் மட்டும் அல்ல, பல்கலைக்கழகம் அமைந்தால் அங்கு கல்வி கற்க மாணவர்கள் இருக்க வேண்டும் அல்லவா? எனவே, அடிமட்டத்தில் இருந்து மறுசீரமைப்புகள் இடம்பெற வேண்டும். தோட்டப் பகுதிகளில் உள்ள சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறார் திறன் விருத்தி நிலையங்களாக மாற்றப்பட வேண்டும். இளம் பருவம் முதலே கணனி அறிவை வழங்க வேண்டும். 'ஸ்மாட் கிளாஸ்' என்பது தொலைக்காட்சி பார்ப்பது மட்டும் அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மலையகத்தில் குறிப்பாக பெருந்தோட்ட பகுதிகளில் சிறார்கள் மத்தியில் போஷாக்கு மட்டம் குறைவாக உள்ளது. எனவே, அவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை சிறுவர் பராமரிப்பு நிலைய மட்டத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். எமது மாணவர்களுக்கு சுதந்திரமாக கல்வி பயிலக்கூடிய சூழ்நிலையையும், உலகை வெல்வதற்கான ஆரம்பகட்ட அறிவையும் வழங்கினால் நிச்சயம் அவர்கள் தூரநோக்கு சிந்தனையுடன் செயற்படுவார்கள், கல்வி மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பது என் கருத்து.

**சுகாதாரம்**

தோட்டப்பகுதிகளில் 486 தோட்ட வைத்திய உதவியாளர்கள் உள்ளனர், தோட்ட வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சின் கண்காணிப்புக்குள் வரும் என கூறப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிகாலத்தில் இதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் கொரோனா, நிதி நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இதனை செயற்படுத்த முடியவில்லை. இந்நிலையில் தோட்டப்பகுதிகளில் உள்ள 3 தோட்ட வைத்திய உதவியாளர்கள் பிரிவுகளுக்கு ஒரு எம்.பி.பி.எஸ் வைத்தியர் என்ற அடிப்படையில் பொறிமுறையொன்றை உருவாக்கத் திட்டமிடப்படுகின்றது. இதற்காக ஓய்வுபெற்ற எம்.பி.பி.எஸ் வைத்தியர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். அவர்களுக்கான சம்பளத்துக்கு பங்களிப்பு வழங்க தோட்ட நிறுவனங்கள் உடன்பட்டுள்ளன. இந்த திட்டம் வெற்றியளிக்கவும் இந்திய நிதியில் ஒரு தொகையை பயன்படுத்துவது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது.

**தொழில்நுட்பம்**

இலங்கையில் கணினிப் பயன்பாடு மற்றும் தொழில்நுட்ப அறிவு விகிதம் 21.6 வீதமாக காணப்படும் நிலையில் அது தோட்டப்பகுதிகளில் 4 வீதமாக உள்ளது. எனவே, IT துறைக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். அப்போதுதான் தொழில்சார் தகைமையுடைய ஊழியர்களை உருவாக்ககூடியதாக இருக்கும். அப்போதுதான் நவீன சந்தையில் தாக்குப்பிடிக்ககூடியதாக இருக்கும். தமிழக மாநில அரசின் தொழில்நுட்பவியல் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை சந்தித்தபோது தொழில்நுட்ப பயிற்சிசார் உதவி கோரப்பட்டது. அதற்கான வரைவு திட்டம் கோரப்பட்டுள்ளது. அதனை நாம் வழங்குவோம். அதன்பின்னர் பயிற்சி திட்டத்தை ஆரம்பிப்பார்கள் என நம்புகின்றோம்.

60 ஸ்மாட் வகுப்பறைகள் உருவாக்கப்படும். ஆரம்ப பாடசாலைகளில் இடப்பற்றாக்குறை உள்ளது. உட்கட்டமைப்பு வசதியும் இல்லாமல் உள்ளது. எனவே, இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும். ஒரு வீடு கட்டினால் அது ஒரு குடும்பத்துக்குதான் நல்லது. ஒரு பாடசாலை கட்டினால் அது அந்த சமூகத்துக்கே நல்லது.

இந்தியாவில் இருந்து ஆசிரிய பயிற்சியாளர்கள் வரவழைக்கப்படுவார்கள், ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வருகை தந்து அவர்கள் பயிற்சி வழங்குவார்கள், அது பயிற்சி கல்லூரியாக விரிவுபடுத்தப்படும், இதன்மூலம் விஞ்ஞானம், கணிதபாடம் சார்ந்த விடயங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை பிரச்சினையும் இதன்மூலம் தீர்க்கப்படும் என நம்புகின்றேன்.

**கேள்வி - வேலைத்திட்டம் தொடர்பில் மலையகத்தில் ஏனைய தரப்புகளின் கருத்துகள் உள்வாங்கப்படுமா?**

**பதில்:-** ஆம், மலையக மக்கள் பிரதிநிதிகள் அனைவரையும் சந்தித்து கலந்துரையாடுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். வெகுவிரைவில் இச்சந்திப்பு நடைபெறும் என நம்புகின்றேன். சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோருடனும் பேச்சு நடத்தப்படும். ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களின் பின்னர் வேலைத்திட்டங்களுக்கான வரைவு நகல் தயாரிக்கப்படும்.

**கேள்வி - தமிழக முதல்வருடனான சந்திப்பு குறித்து.....**

**பதில்:-** தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினை மரியாதை நிமித்தம் சந்தித்திருந்தேன், இலங்கைக்கும், தமிழகத்துக்கும் இடையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அன்று முதல் இன்று வரை உறவுப் பாலமாக இருந்து வருகின்றது, மலையகம் 200 ஐ பாரத பிரதமர் அங்கீகரித்துள்ளார், எனவே, இதற்கு உங்களின் அங்கீகாரமும் அவசியம் என தமிழக முதல்வரிடம் நான் எடுத்துரைத்தேன். இந்நிகழ்வுக்கான அதிகாரபூர்வ அழைப்பிதழ் விரைவில் கையளிக்கப்படும். தனது பிரதிநிதியையாவது முதல்வர் அனுப்புவார் என்பது உறுதி. அத்துடன், கல்வி சார்ந்த நான்கு கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன என்றார்.



க.கிஷாந்தன்



# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# சுகாதார மருத்துவத்துறை மீது குற்றம் சுமத்தி அரசியல் இலாபம் தேடுவதற்கு எதிரணி முயற்சி!

## சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல வழங்கிய பேட்டி



**சுகாதாரத்துறை மீதும், நாட்டுக்குள் கொண்டுவரப்படும் மருந்துகள் தொடர்பிலும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார். எமக்கு வழங்கிய பேட்டியில் அமைச்சர் தெரிவித்ததாவது:**

**கே: குறிப்பிட்ட மருந்துகள் தொடர்பாக பல்வேறு தரப்பினரால் எழுப்பப்படும் குற்றச்சாட்டுகளை உடனடியாக விசாரிக்க சுயாதீன நிபுணர் குழுவை நியமிக்க நீங்கள் முடிவு செய்தீர்கள். இது பற்றி விளக்க முடியுமா?**

பதில்: இதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் இவ்விடயத்தை ஆராய்ந்ததுடன், சம்பந்தப்பட்ட இடத்தையும் பார்வையிட்டனர். அதுவே நியமித்த குழுவின் பணி, அதுவே நிலைக்குழுவாக இருக்கும். பேராதனை, கண்டி ஆகிய இரு இடங்களில் நடந்த சம்பவங்கள் குறித்து ஒரு வார காலத்திற்குள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

**கே: ஊடகங்களில் வெளியான தகவல்களின்படி அரசு மருத்துவமனைகளில் தரமற்ற மருந்துகளால் பல மரணங்கள் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: தரமற்ற மருந்துகள் பற்றிய செய்திகளை விளம்பரப் படுத்த ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகிறது. சில ஊடகங்கள் தொலைக்காட்சியில் விளக்கங்கள் மற்றும் ஊடக விவாதங்களையும் நடத்தின. பேராதனை மருத்துவமனையில் மரணம் முற்றிலும் தரமற்ற மருந்துகளால் நிகழ்ந்தது என்று ஒரு பெண் கூறுவதை நான் பார்த்தேன்.

அறிக்கையைப் பார்க்காமல் தரமற்ற மருந்தால் மரணம் நிகழ்ந்தது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். வெளிப்படையாக, அவர்கள் ஒரு குழப்பத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள் அல்லது எந்த அறிவியல் அடிப்படையும் இல்லாமல் தங்கள் சொந்த முடிவை நிறுவ முயற்சிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட தொலைக்காட்சி அலைவரிசையில் இருந்த இரண்டு பெண்களும் இந்தப் பிரச்சினையில் கருத்துத் தெரிவித்ததை நான் பார்த்தேன். தரமற்ற மருந்துகள், இந்திய மருந்துகள் என்று பேசிக் கொண்டிருந்த மக்கள், தரமற்ற மருந்துகளால்தான் மரணம் நிகழ்ந்துள்ளது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

## உலகில் குறைந்தது 50 சதவீத இந்திய மருந்துகள் கனடா மற்றும் இங்கிலாந்து போன்ற வளர்ந்துவரும் நாடுகள் உட்பட அனைத்து அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பாவனையில் உள்ளன

**கே: அரச மருத்துவமனைகளில் தரமற்ற மருந்துகள் பரவலாகக் காணப்படுவதாக தவறான குற்றச்சாட்டுகளை முன்வைத்து, நாட்டின் இலவச சுகாதாரக் கட்டமைப்பு மீது திட்டமிட்ட தாக்குதல்கள் நடத்தப்படுவதாக நீங்கள் கூறியிருந்தீர்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: நான் கவனித்த இரண்டு விடயங்கள் உள்ளன. ஒன்று, எமக்கு அளிக்கப்பட்ட இந்திய உதவிக்கு எதிரான நடவடிக்கையாகும். சில புவிசார் அரசியல் சூழ்நிலைகள் இருப்பதாகத் தோன்றுகிறது, எனவே அவர்கள் இந்த நேரத்தில் பொருத்தமானது என்று நினைக்கும் காரணங்களுக்காக இந்தியாவைத் தாக்க முயற்சிக்கிறார்கள்.

**கே: பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உங்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம் கையளித்துள்ளது. எனினும் மக்களின் கோரிக்கைக்காக மாத்திரம் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளீர்கள். உங்கள் பார்வைகள் என்ன?**

பதில்: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஒரு வருடத்திற்கு முன்னர் நாட்டில் ஏற்பட்ட பாரிய குற்றச்சாட்டுகள் மற்றும் நிலைமையை ஆராய்ந்து வருவதால், இது அரசாங்கத்திற்கு எதிரான சக்திகளின் திட்டமிட்ட நடவடிக்கை என நான் கருதுகிறேன். எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் வீதிக்குத் தள்ளப்பட்டனர். அடிப்படையில், நாங்கள் இந்த பிரச்சினைகளை மிகவும் திட்டவட்டமாக நிவர்த்தி செய்து வருகிறோம். மேலும் வெளிநாடுகளில் உள்ள எங்கள் நண்பர்கள் மற்றும் எங்களுக்கு நிதி உதவி வழங்கிய நபர்களுடன் நாங்கள் மிகவும் திறம்பட ஈடுபட்டுள்ளோம்.

கடன் மறுசீரமைப்பும் நடைபெறுகிறது. இந்த வளர்ச்சிகள் அனைத்தும் படிப்படியாக நடைபெற்று நாடு சீராகி வருகிறது. மிக அதிகமாக இருந்த பணவீக்கம் நியாயமான அளவில் குறைந்துள்ளது. எனவே, ஒரு வருடத்திற்கு முன்பு அவர்கள் மேற்கொண்ட பிரசாரம் முழுவதுமாக மாறி, சம்பந்தப்பட்ட தரப்பினரிடமும், நன்கொடையாளர்களிடமும், எங்களுக்கு வசதி செய்தவர்களிடமும் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன என்ற எண்ணத்தில் பொதுமக்கள் உள்ளனர்.

**கே: சுகாதாரத்துறையில் ஊழல் மற்றும் பிற முறைகேடுகளுக்கு எதிரான பிரசாரம், சுகாதார அமைச்சரை பதவி நீக்கம் செய்யும் முயற்சியுடன் மட்டுப்படுத்தப்படக்கூடாது என்பதும், அதற்கு பரந்த நோக்கம் இருக்க வேண்டும் என்பதும் பொதுவான ஒருமித்த கருத்து. இது சம்பந்தமாக உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: உண்மையில் நானும் அந்தக் கோரிக்கையை வைத்துள்ளேன். நிதி முறைகேடு மற்றும் பொதுநிர்வாக அமைச்சு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு இதுவாகும். ஆரம்பத்தில், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் ஊடாக விரிவான விசாரணையை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளேன். நான்தனிப்பட்ட முறையில் அந்த செயன்முறையின் வழியாக செல்ல விரும்பினேன்.

அவர்கள் ஏற்கனவே தேவையான ஆட்களை அழைத்து வந்து அந்த செயல் முறையை வரிசைப்படுத்தியுள்ளனர். அதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

**கே: இலங்கையில் மருந்துகள் மற்றும் மருத்துப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் உண்மை உள்ளதா?**

பதில்: ஆம், இருக்கிறது. தற்போது, அந்த நிலைமையை முகாமைத்துவம் செய்யக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறோம். நாங்கள் நிலைமையை மேம்படுத்தியுள்ளோம்.

**கே: சிறிய நோய்களுக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் தரமற்ற மருந்துகளை வழங்கியதால் உயிரிழந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்துகின்றனவே?**

பதில்: அவர்கள் தரக்குறைவாகச் சொன்னால் நாம் என்ன செய்வது? சில இந்திய மருந்துகள் தரமற்றவை என்று குற்றம் சாட்டுவதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் 10_15 ஆண்டுகளுக்கு முன்பும் அவ்வாறு பேசியதாக நினைக்கிறேன்.

இன்று இந்தியா வேறு நிலையில் உள்ளது. நீங்கள் பத்திரிகைகள் மற்றும் பிற புள்ளிவிவரங்களைப் பார்த்தால் புரியும்.


உலகில் குறைந்தது 50 சதவீத இந்திய மருந்துகள் கனடா மற்றும் இங்கிலாந்து போன்ற வளர்ந்துவரும் நாடுகள் உட்பட அனைத்து வளர்ந்த நாடுகளிலும் உள்ளன. நான் உங்களுக்குச் சொன்னது போல, இது ஒரு புவிசார் அரசியல் பிரச்சினையாக இருக்கலாம் அல்லது இந்திய மருந்துத் துறை மீதான தாக்குதலாக இருக்கலாம். பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

எமக்கு மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது இந்தியா நிபந்தனையின்றி எங்களுக்கு ஆதரவை வழங்கியது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

## இது புவிசார் அரசியல் பிரச்சினை; இந்திய மருந்துத்துறை மீதான திட்டமிட்ட தாக்குதல்!

## விசாரணை அறிக்கையைப் பார்க்காமல் தரமற்ற மருந்தால் மரணம் நிகழ்ந்தது என்ற முடிவுக்கு சிலர் வந்துள்ளனர். வெளிப்படையாக, அவர்கள் ஒரு குழப்பத்தை உருவாக்க முயற்சிக்கிறார்கள் அல்லது எந்த அறிவியல் அடிப்படையும் இல்லாமல் தங்கள் சொந்த முடிவை நிறுவ முயற்சிக்கின்றனர்






# பொதுமக்களின் அன்றாட வாழ்வை இலகுபடுத்தும் ஸ்மார்ட் நகரங்கள்!

தகவல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன், உலகளாவிய சமூகம் தொழில்நுட்ப வாய்ப்புகளை அதிக வசதிக்காக பயன்படுத்துகிறது. ஸ்மார்ட் நகரங்கள் அதில் ஒரு முக்கிய நடவடிக்கையாகும். பிரதேசத்தில் தண்ணீர், மின்சாரம், வீடு, போக்குவரத்து போன்ற பொதுவசதிகள் தொழில்நுட்ப சாதனங்களுடன் இணைக்கப்படுவதோடு, அரச நிர்வாகமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீட்டுக்கும் தகவல் தொடர்பாடல் வசதி கிடைக்கிறது. குற்றங்களைக் குறைக்கவும், பாதுகாப்பை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கல்வி மற்றும் சுகாதார வசதிகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழலை சமநிலைப்படுத்துவது மற்றொரு அம்சம்.

2015 ஆம் ஆண்டில் இந்தியா 100 நகரங்களை ஸ்மார்ட் நகரங்களாக உருவாக்க முடிவு செய்திருந்தது. முப்பத்துநான்கு நகரங்கள் இதுவரை தங்கள் இலக்குகளை அடைந்துள்ளன. மற்றைய அறுபத்தாறு நகரங்கள் திட்டமிட்ட இலக்குகளை அடையவில்லை. அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள் அவற்றை முடிக்க வேண்டும் என இந்திய மத்திய அரசு ஆலோசனை வழங்கியுள்ளது.

ஆக்ரா, வாரணாசி, அஹமதாபாத், சென்னை மற்றும் பூனே உள்ளிட்ட நகரங்கள் ஸ்மார்ட் நகர இலக்கை நோக்கி குறிவைத்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. மத்தியப் பிரதேசத்தின் இந்தோர் நகரில் உள்ள வீடுகளுக்கு நீண்ட முகவரி இல்லை. ஸ்மார்ட் சாலை வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தபால் விநியோகம், வீடுகளைக் கண்டுபிடிப்பது ஸ்கான் செய்யப்பபட்ட குறியீடுகளால் மேற்கொள்ளப்படுகிறது. இந்தியாவின் முதல் டிஜிட்டல் குடிமக்கள் சேகரிப்பில் ஐந்து இலட்சம் முகவரிகள் சேமிக்கப்பட்டுள்ளன. உள்ளூர் நிர்வாகம் நேரடியாக குடிமக்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. வரி வசூல் முதல் வீடுகளில் மின்சாரம் மற்றும் தண்ணீர் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது வரை அனைத்தையும் கண்காணிப்பது எளிதாகி விட்டது.

குப்பைகளை அகற்றுவதற்கும் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பொதுவசதிகள் பாதிக்கப்பட்டால், புகார்கள் தெரிவிக்கப்பட்டு குறுகிய காலத்தில் சீர்செய்யப்படுகிறது. அவசர அறிவிப்பில், அனர்த்த சேவைகள், தீயணைப்புப் பிரிவு மாத்திரமல்ல அம்புலன்ஸ் வசதி கூட வழங்கப்படுகிறது.

ஸ்மார்ட்நகர கருத்தின்படி, குற்றச்செயல்கள் அதிகம் இடம்பெறும் நகரங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படும். முகம் அடையாளம் காணும் பாதுகாப்பு கமராக்கள் பொருத்தப்படும். சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் குறித்து 24 மணி நேரமும் விசாரணைகள் நடத்தப்படும்.

மின்விளக்குகளில் பொருத்தப்பட்ட கமராக்கள் மூலம் ஆட்கள் இல்லாதபோது தானாகவே விளக்குகள் அணைக்கப்படுகின்றன, மேலும் யாராவது உள்ளே நுழைந்தவுடன், தெரு முழுவதும் ஒளிரும். இங்கு செயற்கை நுண்ணறிவு அங்கு பயன்படுத்தப்படுகிறது. மனிதனைப் போன்ற முடிவெடுக்கும் கணினி தொகுதியானது மின்சாரம், நீர் ஆகியவற்றைச் சேமிப்பதோடு எரிபொருள் விரயத்தையும் குறைக்கின்றது. ஸ்மார்ட் நகர கருதுகோள் மூலம் எரிபொருளைப் பயன்படுத்தும் வாகனங்கள் நகருக்குள் நுழைவதும் கட்டுப்படுத்தப்படுகிறது. குறைவான போக்குவரத்து மற்றும் குறைவான குற்றங்கள் கொண்ட நகரங்கள் குடிமக்களுக்கு ஆறுதல் அளிக்கின்றன. ஸ்மார்ட் நகரங்களை உருவாக்குவதற்காக செலவிடப்பட்ட பெரும் முதலீட்டை குறுகிய காலத்தில் திரும்பப் பெற முடியும் என்று திட்டமிடல் துறைகள் சுட்டிக்காட்டுகின்றன.

கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுடன் செயற்கை நுண்ணறிவு இணைக்கப்பட்டு, பாடத்திட்டத் தேர்வு முதல் செயற்திட்ட பணி கண்காணிப்பு வரை அனைத்தும் எளிதாக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மக்கள் தமது இரத்த அழுத்தத்தை அளவிட்டு தானே மாதிரியை ஒப்படைக்கக்கூடிய பாதுகாப்பான முறைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் குடும்ப மருத்துவரிடம் வழங்கப்படுகின்றன. ஸ்மார்ட் சுகாதார அடிப்படையில் நோயாளியை வழிநடத்துவது மருத்துவரின் பணியாகவிருக்கும். வைத்திய அறிக்கைகளை ஆராய்ந்து உடனடியாக சிகிச்சைக்கு வருமாறு வீட்டுக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.

செயற்கை நுண்ணறிவு நகரில் மட்டுமின்றி அதனை அண்டிய பகுதிகளில் உள்ள விவசாய நடவடிக்கைகளையும் உள்ளடக்கும். வானிலை அறிக்கைகள் அதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஒரு சிறிய நிலத்தில் கூட வெவ்வேறு பயிர்ச்செய்கை முறைகள் உருவாக்கப்படுகின்றன. பசுமை இல்லங்களில் மண்ணற்ற அல்லது நீரற்ற வளர்ப்பு முறைகள் ஸ்மார்ட் விவசாயத்தில் பொதுவானவை. பயிருக்கு இட வேண்டிய தண்ணீர் மற்றும் உரத்தேவைகளை கையடக்க தொலைபேசி மூலம் கட்டுப்படுத்தலாம்.

இந்தியாவில் திட்டமிடப்பட்டுள்ள நூறு ஸ்மார்ட் நகரங்களில் இத்தகைய வசதிகள் விரைவாக ஏற்படுத்தப்பட்டு, வளர்ச்சி மற்றும் தொழில்நுட்பத்துடன் மக்களின் வாழ்க்கை நவீனமயமாக்கப்படும். பொருளாதார நெருக்கடி தொடர்பில் மிகவும் மோசமான நிலையில் உள்ள இலங்கை நெருக்கடியை வாய்ப்பாகக் கொள்ள வேண்டும்.

குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களின்படி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். நெருக்கடியான சமயங்களில், திறமையானவர்களை தக்க வைத்துக்கொள்ள புத்திசாலித்தனமான முடிவுகளை எடுப்பது அவசியம். ஒரு சீர்திருத்தத்திற்குப் பிறகு, காலாவதியான அதிகாரத்துவம் மற்றும் திறமையற்ற நிர்வாகத்துடன் பழைய யுகத்திற்குச் செல்வது பொருத்தமற்றது. மக்கள் பிரதிநிதிகளும் அரசியல் கட்சிகளும் புதிய சூழ்நிலையின் கட்டமைப்பை ஆய்வு செய்ய வேண்டும். உண்மையில், அரசியல் கட்சிகளின் வாக்குகளைப் பெற்று ஆட்சியைப் பிடிக்கும் கொள்கைகளிலிருந்து விடுபடுவது முக்கியம்.

பாரம்பரியத்தை எதிர்க்கும் அரசியல் கட்சிகள் தொழில்நுட்பத்தை உணர்ந்து புத்திசாலித்தனமான முறைகளுக்குள் நுழைய வேண்டும். மேலும் பழைய அரசியல் கொள்கையை நவீன யுகத்திற்காக செயல்படுத்தும் முறைகளை ஆராய்வது முக்கியமாகும். தொழில்நுட்பம் வழங்கக்கூடிய ஒத்துழைப்பைப் பற்றி விவாதிப்பது இன்றைய அரசியல்வாதிகளின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

யுனிசெப் நல்லெண்ண தூதுவராக

# இலங்கை வருகிறார் சச்சின் டெண்டுல்கர்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யுனிசெப் சிறுவர் அமைப்பின் தெற்காசியாவுக்கான பிராந்திய நல்லெண்ணத் தூதுவராக அவரது இலங்கை விஜயம் அமையவுள்ளதாக தெரிய வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் அமைப்பான யுனிசெப்பினுடைய நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ள அவர், சிறுவர்களையும் அவர்களது குடும்பங்களையும் சந்திக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, இலங்கைக்கான தமது விஜயம் தொடர்பான அறிக்கையை அவர் வெளியிடுவாரென, தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேவேளை, கோவிட்19 பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியன நாடு முழுவதுமுள்ள சிறுவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை செலுத்தியுள்ளதாக, இலங்கையிலுள்ள யுனிசெப் அமைப்பு தெரிவித்தது.

# இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை!



ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இஸ்லாமாபாத் தோஷகானா எனப்படும் ஊழல் குற்றச்சாட்டு வழக்கில் இஸ்லாமாபாத் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்றம், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானை குற்றவாளியாக இனங்கண்டு, அவருக்கு இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.


மேலும், இந்த வழக்கில் அவருக்கு ஒரு இலட்சம் பாகிஸ்தானிய ரூபா அபராதமும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பாராளுமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பையடுத்து, அவர் ஆட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன் பின்னர், அவர் மீது பதிவு செய்யப்பட்ட 100க்கும் மேற்பட்ட வழக்குகளில் ஊழல் வழக்கும் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா மாவட்டத்திலுள்ள

# மலைப்பகுதிகளுக்குள் பிரவேசிக்க தடை!

## அரசாங்க அதிபர் நந்தன கலபொட அறிவிப்பு



நுவரெலியா மாவட்டத்திலுள்ள வனஜீவராசிகள் மற்றும் வனப்பகுதிகளுக்குள் அனுமதியின்றி பிரவேசிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட அறிவித்துள்ளார்.

இதற்கமைய, இப்பகுதிகளில் மலையேறுவதற்கும் அங்கு முகாமிடுவதற்கும் நேற்று முன்தினம் முதல் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தலவாக்கலை கிரேட்வெஸ்டர்ன் வனப்பகுதியில் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டதையடுத்து, வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடலொன்று நடத்தப்பட்டதாகவும் இதன் பின்னர் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, எதிர்காலத்தில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஏதேனுமொரு வனப்பகுதியை எவராவது பார்வையிட விரும்பினால், விடயத்துடன் தொடர்புடைய அதிகாரிகளின் அனுமதி பெறப்பட வேண்டுமெனவும் அவ்வாறு பெறப்படுகின்ற அனுமதி பொலிஸாருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனவும், நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபொட தெரிவித்தார். அத்துடன், பயணத்தின் நிறைவிலும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

## நீர் கட்டண பட்டியல்...

மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது. கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினுடைய நீர் பட்டியல் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் பியல் பத்மநாத் இதனை அறிவித்துள்ளார்.

திருகோணமலை, கொழும்பு தெற்கு, கண்டி தெற்கு மற்றும் பொலன்னறுவை ஆகியவற்றில் எதிர்வரும ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து குறுந்தகவல் அல்லது ஈ பட்டியல் மாத்திரம் மூலமே நீர் பட்டியலை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து நாடு முழுவதும் இந்த நடைமுறை அமுல்படுத்தவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

நேத்ரா TVயில்

# 'அமைதி சாத்தியம்' நிகழ்ச்சி

நேத்ரா (TV) தமிழ் தொலைக்காட்சியில் 'அமைதி சாத்தியம்' எனும் நிகழ்ச்சி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06) மாலை 05.30 மணி முதல் 6.00 மணிவரை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அத்துடன், இந்த நிகழ்ச்சி பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இதேவேளை, 'Peace is Possible' எனும் நிகழ்ச்சி பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு 10.00 மணி முதல் 10.30 மணிவரை ஆங்கிலத்தில் நடைபெறவுள்ளதாக, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# இலங்கை தனித்துவ டிஜிட்டல் தேசிய அடையாள அட்டை திட்டம்!

இலங்கை தனித்துவ டிஜிட்டல் தேசிய அடையாள அட்டைத் திட்டத்தை (Sri Lanka Unique Digital Identity SLUDI) துரிதமாக நடைமுறைப்படுத்த இந்திய இலங்கை திட்டக் கண்காணிப்பு குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற போதே, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முற்பணமாக இத்திட்டத்துக்காக மொத்தமாக மதிப்பிடப்பட்ட தொகையில் 15% சதவீதமான அதாவது, 450 மில்லியன் இந்திய ரூபா பெறுமதியான காசோலையை தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்திடம் இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது கையளித்தார்.

தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் எம்.எல்டோஸ் மெதிவ், தொழில்நுட்ப அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எம்.டி.குணவர்த்தன, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, ஜனாதிபதி செயலக மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்த்தன ஆகியோர் அடங்கிய இந்த மேற்பார்வைக் குழுவே கூடிக் கலந்துரையாடியது.

## எங்கள் கருத்து

# காலம் மாறினாலும் கலைகள் மீதான ஆர்வம் மாறவில்லை

கொழும்பில் வெளியீட்டு விழாவை நடத்துவதை தள்ளிப்போட்டுக் கொண்டு வந்தார். ஆனால் அவருக்கான அந்த வாய்ப்பையும் எமது தினகரன் பெற்றுக் கொடுத்து அந்த வெளியீட்டு விழாவை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலே இவ்வாறு நூல்கள் வெளியிடுகின்றபோது ஒரு தொகை நிதியை கொடுத்து அவற்றின் முதற்பிரதிகளை பெற்று வருகின்றார் புரவலர் ஹாசிம் உமர். இவரது இந்த பங்களிப்பை கருத்திற்கொண்டு பெரும்பாலனோர் தமது நூல்களை வெளியிட்டு வருகின்றார். புரவலர் ஹாசிம் உமர் இவ்வாறு இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்களின் முதற்பிரதிகளை பெற்று சாதனை படைத்துள்ளார். இவர் இவ்வாறு சாதனை படைப்பதற்கும் காரணம் என்ன இவ்வாறு நூல்கள் வெளிவருவதால் தானே.

இந்த வகையில் கவிஞர்களான மேமன் கவி, ஜின்னா ஷெரிப்தீன், முல்லை முஸ்ரிபா, பாலமுனை பாருக், ஈழகணேஷ், இளநெஞ்சன் முர்ஷிதீன், யாழ் அஸிம், இலங்கை பொன்மனச் செம்மல் தாஜ்மஹான், சட்டத்தரணி இம்தியாஸ் ரஷித், அலி அக்பர் போன்ற கவிஞர்கள் சிறந்த கவிதைகளை படைத்து வருகின்றார்கள்.

இன்று அன்றாடம் புது புது கவிஞர்கள் புதிய புதிய கவிதைகளை படைத்து வருகின்றனர். இவர்களும் இந்த கவிதைகளை தொகுத்து நூலாக வெளியிட முயற்சித்து வருகின்றார்கள். இது புத்தகங்கள் வாசிப்பின் மீதான ஆர்வம் குறைந்தாலும் படைப்பிலக்கியத்தின் மீதான ஆர்வமும் தமிழின் மீதான ஆர்வமும் குறைந்து விடவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றன. ஒரு காலத்தில் விரல் விட்டு எண்ணக்கூடியளவிலான பத்திரிகைகளே வெளிவந்தன. அப்போது குறைந்தளவிலான படைப்புகளே வெளிவந்தன. இன்று அந்நிலை மாறி கவிஞர்களோ எழுத்தாளர்களோ தங்கள் ஆக்கங்களை சமூக ஊடகங்களின் ஊடாகவேணும் வெளிவிட்டு வருவதால் அன்றைய நிலை இன்று மாறியுள்ளதே என்றே கூறலாம். காலம் எவ்வளவு தான் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை தந்தாலும் கலைஞர்கள் தங்கள் கலைப்பணிகளை மிக இலகுவாக அரங்கேற்றி வருகின்றார்கள். ஒரு காலத்தில் திரைப்படம் தயாரிப்பது என்பது குதிரைக் கொம்பாகவே இருந்தது. ஆனால் இன்றுள்ள நவீன தொழில் நுட்பங்களின் வளர்ச்சியாலும் நவீன கலை வடிவங்களாலும் அதுவும் இலகுவான ஒன்றாகி விட்டது இந்த குறுந்திரைப்பட வடிவங்களால்.

எனவே கலைகளோ இலக்கியங்களோ அன்று இருந்ததை விட இன்று வளர்ச்சி அடைந்துள்ளது, வளர்ச்சி அடைந்து வருகின்றது என்றே கூறலாம். கொழும்பு மாநகரில் அடிக்கடி நிகழ்வுகளை நடத்தி வருகின்ற புதிய அலை வட்டமும் அதன் ஸ்தாபகர் ராதா மேத்தா தலைமையில் கலை, இலக்கிய நிகழ்வுகளை நடத்தி வருவது கலைகளும் இலக்கியங்களும் வளர்ச்சி பெற்று வருவதால் தானே.

துரைராசா சுரேஸை பணிப்பாளராக கொண்டு இயங்கும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் கலைஞர்களையும் சமூக சேவையாளர்களையும் பாராட்டி வருடாந்தம் விருதுகளை வழங்கி வருவதும் வருடாந்தம் விருதுகளை வழங்கி வந்த எஸ்.விஜேராஜாவை தலைவராகக் கொண்டு இயங்கும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் அறநெறி பாடசாலைகளுக்கு இடையே ஆடற்கலைப் போட்டிகளையும் விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வருவதும் ஐயப்பன் என்ற பெயரில் பக்திப் படமொன்றை தயாரிக்க முன்வந்துள்ளது. கலை, இலக்கிய விளையாட்டுகளின் மீதான ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள தடையில்லாமல் இருப்பதால் தானே. இன்று புலம்பெயர்ந்து சென்றவர்கள் தாங்கள் வெளிநாடுகளில் பிரசுரிக்கின்ற நூல்களை இலங்கை மண்ணில் வந்து வெளியிடுவதற்கு காரணம் இலங்கையில் வாசிப்பவர்களின் எண்ணிக்கையும் தமிழின் மீது ஆர்வம் கொண்டவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதாலும் அரசாங்கம் அவற்றுக்கு எந்தவித தடையும் விதிக்காமல் இருப்பதாலும் தானே. புலம்பெயர்ந்தவர்கள் இவ்வாறு இலங்கையில் உள்ள படைப்பாளிகளின் படைப்புகளை வெளிநாடுகளுக்கு கொண்டு சென்று வழங்குவதாலும் இலங்கையில் உள்ள கலைஞர்களையும் படைப்பாளிகளையும் அந்நாடுகளுக்கு அழைத்து கௌரவிப்பதாலும் இவர்களையும் இவ்வாறு உற்சாகப்படுத்தலாம் அல்லவா?

## மின்சார சபையிடம்...

தொடர்பான துல்லியமான விபரங்களை தமக்கு வழங்குமாறும் அது உண்மையான ஆவணமாக இருந்தால், அதற்கு தகுந்த பதிலை அளிக்குமாறும் இலங்கை மின்சார சபைக்கு எழுதியுள்ள கடிதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) முன்னாள் மாகாணசபை உறுப்பினர் நளின் ஹேவகே தாக்கல் செய்த தகவலறியும் உரிமைச் சட்டத்துக்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை மின்சார சபையால், இந்த விபரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த 2019ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் செப்டெம்பர் 15ஆம் திகதிவரை நாமல் எம்.பி.யின் வீட்டில் நடைபெற்ற விழாவுக்கான மின்சாரக் கட்டணம் 26 இலட்சத்து 82 ஆயிரத்து 246 ரூபா 57 சதமென குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கட்டணம் இதுவரை செலுத்தப்படவில்லையென, மின்சார சபை தெரிவித்துள்ளது. இதுவே சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளது. இது தொடர்பாகவே நாமல் எம்.பி. மின்சார சபையிடம் விளக்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## நாட்டில் உணவு நெருக்கடி...

அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன டி சில்வா தெரிவித்தார். கமநல அபிவிருத்தி திணைக்களத்தினூடாக கைவிடப்பட்டுள்ள நெற் காணிகளில் மீண்டும் பயிரிடும் வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் இதற்காக அரசாங்கம் 420 மில்லியன் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் (04) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது,

"இந்தியாவும் பாகிஸ்தானும் தற்போது அரிசி ஏற்றுமதியை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. எதிர்காலத்தில் ஏற்படக்கூடுமென எதிர்வுகூறப்பட்டுள்ள உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்ள அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

எனவே, ஒரு நாடென்ற வகையில் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள நாமும் தயாராக வேண்டும். நாட்டின் விவசாயத்துறையை மேம்படுத்துவதை அரசாங்கத்தால் மாத்திரம் செய்ய முடியாது. அதற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்.

நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக நெல் கொள்வனவை இடைநிறுத்தியிருந்த நெல் சந்தைப்படுத்தல் சபை, ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் மீண்டும் முறையான வழிமுறைகளூடாக நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கொள்வனவு செய்யப்படும் நெல் கையிருப்பை களஞ்சியப்படுத்த நாடு பூராகவும் களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எமது நாட்டில் அரிசி மேலதிக கையிருப்பு இருந்ததாகவும் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அந்நிலை வீழ்ச்சி அடைந்ததால் அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இந்த வருடம் விளைச்சல் அதிகரித்துள்ளதால் மீண்டும் பழைய நிலைக்கு மீளலாமென நம்பிக்கை வெளியிட்டார்.

எமது நாட்டின் பயன்பாட்டுக்கு சுமார் 24 இலட்சம் மெற்றிக்தொன் அரிசி தேவைப்படுவதாகவும் அந்த வகையில், தற்போது முன்னெடுக்கப்படும் முறையான பொறிமுறைகளின் மூலம் எதிர்காலத்தில் எமது நாடு அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடையும்.

மேலும் சோளம், உழுந்து, பயறு உள்ளிட்ட பயிர்களின் விளைச்சலை அதிகரிக்க விவசாய அமைச்சரினுடைய ஆலோசனையின் பேரில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உழுந்து, பயறு ஆகியவற்றை பயிரிடும் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால், எதிர்காலத்தில் உழுந்து, பயறு ஆகிய பயிர்களில் பற்றாக்குறை ஏற்படாதெனவும் தெரிவித்தார்.

## 13வது திருத்தம் குறித்து...

இதன்போது, சமகால அரசியல் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அவர்,

"அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளதாக கூறப்படுகின்றது. அது வரவேற்கத்தக்கது. அவர் உரையாற்றினாலே, அவரது மனதில் என்ன இருக்கிறதென்று தெரியவரும்.

பொலிஸ் அதிகாரங்களை தவிர்த்து 13ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அவர் பேசக்கூடும். அதை பிரச்சினையாக மாற்றி 13ஆவது திருத்தச்சட்டத்தை முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தாமலிருப்பதை தமிழ்த் தலைவர்கள் தவிர்க்கப் பார்க்கின்றோம். எந்தவொரு அரசியல்வாதியும் எது சரியென்று செய்வதில்லை. மாறாக, எதை செய்தால் மக்களின் ஆதரவும் கண்டனமும் கிடைக்குமென்பதை பார்த்தே செய்கின்றார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதற்கு விதிவிலக்கல்ல. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியா சென்று வந்த பின்னணியில் அவர் அது தொடர்பாக பேசக்கூடும். எனவே, அவரது மனதில் என்ன இருக்கிறதென்பதை அவர் உரையாற்றுவதன் மூலமே தெரிந்து கொள்ள முடியும்.

13ஆவது திருத்தத்திலிருந்து பொலிஸ் அதிகாரங்களை நீக்குவது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில கொண்டு வந்திருக்கக்கூடிய தனிநபர் பிரேரனைக்கு ஆதரவு கிடைக்குமா? என்று தெரியாது. அவர் நினைத்ததை போல் 13ஆவதை குறைக்கவோ, கூட்டவோ முடியாது.

எங்கள் மக்களுக்கு அதிகாரங்கள் கிடைக்க வேண்டும். அதற்காகவே நாம் 13ஆவதை பலப்படுத்தும் திட்டத்தை ஆதரிக்கின்றோம். எல்லா தமிழ்க் கட்சிகளும் சமஷ்டியையே தமது இலக்காகக் குறிப்பிடுகின்றன.

அதில் அவற்றுக்கிடையில் வேறுபாடில்லை. ஆனால், அதை எப்படி அடைவதென்று யாரிடமும் எந்தத் திட்டமும் இல்லை. என்னிடமும் இல்லை. சிறிது சிறிதாக எங்களுடைய அதிகாரங்களை கையிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

சமஷ்டி, கூட்டு சமஷ்டியென சில கட்சிகள் கூறினாலும், இவை அனைத்தும் தூரத்திலுள்ள குறிக்கோள். அதை அடைவதற்கு முன்னர் மக்களுக்கு அதிகாரங்களை பெற 13ஆவதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

தற்போது எவ்வித அதிகாரங்களுமற்று இருப்பதால், அதிகாரங்களை பெற்று அதை அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளதாலேயே, நாம் 13ஆவதை கோருகின்றோம். ஆயினும், அது தீர்வாக அமையாது.

13ஆவதை பெற்றால் பிரச்சினை தீர்ந்துவிட்டதாக சிங்களத் தரப்பு கூறினாலும், நாம்தான் கவனமாக இருக்க வேண்டும்.

மக்களுக்கு அதிகாரங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பௌத்தம், இலங்கைக்கு வந்து 700 வருடங்களின் பின்னரே சிங்கள மொழியும் சிங்கள மக்களும் வந்தனர்.

தற்போது பிழையான வேலைகளில் ஈடுபட்டு, சிங்களவர்கள் இருந்தார்களென எடுத்துக்காட்ட முனைகின்றனர். இது சம்பந்தமாக தொல்பொருள் திணைக்களத்துடன் பேச வேண்டிய நிலையுள்ளது" எனத் தெரிவித்தார்.

## 13ஆவது திருத்தம் குறித்து...

நடவடிக்கையாக கடந்த மாதம் ஜூலை 26ஆம் திகதி அனைத்துக் கட்சிகளின் மாநாடு கூட்டப்பட்டதுடன், மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக தமது கருத்துகளையும் முன்மொழிவுகளையும் எதிர்வரும் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கட்சிகள் மற்றும் குழுக்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பாக முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ள அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, ஈ.பி.டி.பி, எக்சத் ஜனரஜ பெரமுன, அரவிந்தகுமார் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி மற்றும் பல கட்சிகள் இவற்றை சமர்ப்பித்துள்ளன.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துகள் மற்றும் முன்மொழிவுகளை ஓகஸ்ட் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளுமாறு தனக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்ததாக ஜனாதிபதியின் செயலாளர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தப் பிரேரணையை பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் 09ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பிக்கவுள்ளதுடன், அவர் விசேட உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

இதேவேளை, இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகள், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை கடந்த செவ்வாய்க்கிழமை (01) சந்தித்து பொலிஸ் அதிகாரங்கள் மற்றும் பிற விடயங்களை வலியுறுத்தி 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்துக்கு முன்னர் தமிழ்க் கட்சி தலைவர்களை சந்தித்த ஜனாதிபதி, பொலிஸ் அதிகாரங்கள் இல்லாமல் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடியிருந்தார். நல்லிணக்கம் மற்றும் அதிகாரப்பகிர்வு ஆகியவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான விரிவான முன்மொழிவை இந்தியாவுக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் முன்வைத்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

## மாகாணசபை தேர்தலை...

நேற்று முன்தினம் (04) மாலை நடைபெற்றது. இதன்போதே, மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்ததாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"பொலிஸ் அதிகாரத்தை பிரச்சினையாக்கி மாகாணசபையை மறுப்பது நியாயமல்ல. முதலில் வடக்கு, கிழக்கிலாவது மாகாணசபை தேர்தலை நடத்தச் சொல்லுங்கள்.

இந்திய தூதரகத்தில் அமைந்துள்ள மலையக கல்வி அறக்கட்டளையை புதுப்பியுங்கள்.

அதன் மூலம் இந்திய அரசாங்கத்தின் 300 கோடி ரூபா நன்கொடையை மலையகக் கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்துங்கள்.

அந்த நிதி யாருக்காக, எதற்காக வழங்கப்பட்டதோ அதற்காக பயன்பட வேண்டுமென்று இந்திய தூதுவருடனான சந்திப்பின் போது எடுத்துரைத்ததாக, மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா அழுத்தம் பிரயோகிக்க வேண்டுமென்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி வலியுறுத்தியுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக பேசப்பட்டதாகவும் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா தலையிட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

## இரும்பு திருடிய 8 பெண்கள்...

தொழிற்சாலையினுள் கும்பலொன்று அத்துமீறி நுழைந்து திருட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில், இது தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய, சீமெந்து தொழிற்சாலைக்கு விரைந்த பொலிஸார், திருட்டில் ஈடுபட்டிருந்த இந்தச் சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்தச் சந்தேகநபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் பிரதேசவாசிகள் இரும்பு திருட்டில் ஈடுபட்டு வருவதாகவும் கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் சுமார் 120 மில்லியன் ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய இரும்புகள் திருடப்பட்டுள்ளதாகவும், சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் தர்மபிரிய அண்மையில் தெரிவித்திருந்தார்.

## 119ஐ தவறாக பயன்படுத்தினால்...

பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. 119 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை எடுத்து தவறான தகவல்களை வேண்டுமென்றே வழங்குபவர்கள் அல்லது அவசர தொலைபேசி இலக்கத்தை தவறாக பயன்படுத்துபவர்கள் சிறைத்தண்டனை மற்றும் அபராதத்துடன் தண்டிக்கப்படுவார்களெனவும், பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இந்த அவசர இலக்கம் 24 மணி நேரமும் இயங்குவதால், நாளாந்தம் சுமார் 3,000 முதல் 3,500 அழைப்புகள் பெறப்படுவதாகவும், பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்தது.

# "என் மண் என் மக்கள்" பாத யாத்திரை தமிழகத்தில் பா.ஜ.க அலையை ஏற்படுத்துமா?



**பா.ஜ.க.வின் தமிழகத் தலைவர் அண்ணாமலை தனது ஐந்து மாதகால பாத யாத்திரையை ஆரம்பித்துள்ளார். கடந்த ஜூலை 28ஆம் திகதி இராமேஸ்வரத்துக்கு வந்த மத்திய அமைச்சரும், பிரதமர் மோடியின் வலது கரமாக அறியப்படுபவருமான அமித்ஷா, இப்பாத யாத்திரையை ஆரம்பித்து வைத்தார் என்பதில் இருந்தே இப்பயணத்தை பா.ஜ.க. எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறது என்பதை புரிந்து கொள்ளலாம்.**

இப் பாதயாத்திரையின் பெயர் 'என் மண் என் மக்கள்' என்பதாகும். இராமநாதபுரத்தில் 29ஆம் திகதி ஆரம்பமான பாத யாத்திரையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். புதிய தமிழகம், தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் அ.தி.மு.க.வுக்கு கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும் எடப்பாடி பழனிச்சாமி கலந்து கொள்ளவில்லை.

இப் பாதயாத்திரை ஐந்து மாத காலத்துக்குள் 39 பாராளுமன்ற தொகுதிகளையும், 234 தமிழக சட்ட மன்றத் தொகுதிகளையும் ஊடறுத்துச் சென்று 1770 கி.மீ. தூரத்தைக் கடக்கும் என்றும் 2024 ஜனவரி 11ஆம் திகதி சென்னையை வந்தடையும் என்றும் தமிழக பா.ஜ.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழிநெடுக ஆங்காங்கே பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசின் அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர்கள் கலந்து கொள்ளும் பத்து பெரிய அரசியல் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது. ஜனவரி மாதம் சென்னையில் நடைபெறவுள்ள இறுதிநாள் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

தமிழகம் என்பது பெரியார் மண். இங்கே சனாதன மத அரசியல் கால் ஊன்றாது. ஊன்றவும் விட மாட்டோம் என்பது திராவிடக் கட்சிகள் அடிக்கடி சொல்லிவரும் பா.ஜ.க. எதிர்ப்பு கோஷம். பா.ஜ.க. வின் செல்வாக்குக்கு சவால்விடக்கூடிய இரு மாநிலங்களாக மேற்கு வங்காளமும் தமிழகமுமே விளங்கி வருகின்றன. மேற்கு வங்காளத்தில் 2016 சட்டசபைத் தேர்தலில் மூன்று தொகுதிகளில் வெற்றிபெற்ற பா.ஜ.க, 2021 தேர்தலில் 77 தொகுதிகளில் வெற்றி பெற்று தன் வளர்ச்சியை உறுதி செய்தது. இத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் 211 தொகுதிகளில் வெற்றிபெற்று அரசு அமைத்தாலும் அதன் தலைவர் மம்தா பனார்ஜி, தனது நந்திகிராம் தொகுதியில் தன்னை எதிர்த்து போட்டியிட்ட தன் முன்னாள் சகாவும் பா.ஜ.க. வேட்பாளருமான சுவேந்து அதிகாரியிடம் 1956 வாக்கு வித்தியாசத்தில் தோற்றுப் போனார். பின்னர் ஆறுமாத காலத்துக்குள் வேறு ஒரு தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

சேவை மனப்பான்மையும், எளிமையான பழக்க வழக்கங்களையும், தன்னலம் கருதாத, ஊழலற்ற தலைவரான மம்தா பனார்ஜியை அவரது தொகுதியிலேயே தோற்கடிக்கச் செய்யும் அளவுக்கு மேற்கு வங்காளத்தில் ஐந்துவருட காலத்துக்குள் பா.ஜ.க. வினால் வலிமை பெற முடிந்தது என்பது பா.ஜ.க.வின் மிகத் தந்திரமான காய்நகர்த்தல்களின் வலிமையையும் சாதுரியத்தையுமே கோடிட்டுக் காட்டுகிறது. அடுத்த மேற்கு வங்க சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தமிழகத்தில் அண்ணாமலை இப்போது ஆரம்பித்திருக்கும் பாத யாத்திரையை இக்கண் கொண்டே பார்க்க வேண்டும். இன்றைக்கும் பெரியார் மண்ணில் வாலாட்ட முடியாது என்று திராவிடக் கட்சிகள் இறுமாந்து கிடக்கின்றன. இங்கே முயல் ஆமை ஓட்டத்தை நாம் மறந்து விடுவதற்கில்லை. தனக்கு தலை சாய்க்காத தமிழகத்தை



வென்றே தீருவது என்று பா.ஜ.க. கங்கணம் கட்டி காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறது. அதன் மிக முக்கியமான ஒரு நகர்வே இந்த நடைபயணம்.

இதில் உள்ள அனுகூலம் என்னவென்றால், பாத யாத்திரை என்ற பெயரில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரத்தை இப்போதே தமிழகம் முழுவதும் பா.ஜ.க. ஆரம்பித்து விட்டது என்பதுதான். ஜனவரி மாதம்வரை அண்ணாமலை ஊர் ஊராக நடக்க, செய்திகளும் படங்களும் தினமும் வெளிவந்து கொண்டிருக்கும். ஊர் ஊராக பா.ஜ.க. கொள்கைகளையும் சாதனைகளையும் அவர் முழுங்குவார். தி.மு.க. ஊழல் ஆட்சி என்பதை சொல்லிக் கொண்டே இருப்பார். தி.மு.க. அரசு விடக் கூடிய தவறுகளை, அரசியல் நகர்வுகளை சுட்டிக்காட்டியபடியே நடப்பார். அவரது தினசரி பேச்சுகளுக்கு தி.மு.க பதில் சொல்லிக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

> **ஒரு பக்கம் பாத யாத்திரை; மறுபுறம் அமலாக்கலின் அதிரடி சோதனைகள் இன்னொருபுறம் அ.தி.மு.க. மீது தாக்குதல் என பல்முனை நகர்வுகளை திராவிட கட்சிகள் மீது மேற்–கொள்ளும் பா.ஜ.க. அரசு**

தன் பயணத்தில் அவர் தி.மு.க.வை மட்டும் விமர்சிக்கப் போவதில்லை. அ.தி.மு.க.வையும் தொடர்ந்து விமர்சிக்கவே செய்கிறார். முன்னாள் முதலமைச்சரும் ஊழல், முறைகேடுகளில் திளைத்தவர்தான் என அவர் கூறியது ஜெயலலிதாவை மனதில் இருத்தியே என்பதை புரிந்துகொண்ட அ.தி.மு.க. தலைமை அவருக்கு எதிராக எதிர்வினையாற்றியது. அண்ணாமலையை அடக்கி வைக்கும்படி டில்லித் தலைமையிடம் எடப்பாடி கேட்டுக் கொண்டாலும் புது டில்லி அதைக் கண்டுகொள்ளவில்லை. இப்போதும் அ.தி.மு.க.வை விமர்சிக்கவே செய்கிறார். இத்தனைக்கும் பா.ஜ.க.வின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சியே அ.தி.மு.க. சமீபத்தில் தமது கூட்டணியில் அங்கம் வகிக்கும் 38 கட்சிகள் மற்றும் அமைப்புகளை அழைத்து புதுடில்லியில் ஆலோசனைக் கூட்டம் நடத்திய பா.ஜ.க., பிரதமருக்கு பக்கத்தில் எடப்பாடி பழனிச்சாமியை அமர வைத்து, கூட்டணியில் உள்ள பெரிய கட்சி அ.தி.மு.க.வே என்ற அங்கீகாரத்தை அளித்தது.

காதலும் மோதலும் என்று சொல்வார்கள். கடந்த சட்ட சபைத் தேர்தலில் நான்கு எம்.எல்.ஏ. ஆசனங்களை வாங்கிக் கொடுத்த கட்சியாக இருந்தாலும் பா.ஜ.க., அ.தி.மு.க.வை காதலும் மோதலுமாகத்தான் நடத்தி வருகிறது. அ.தி.மு.க.வில் மூன்று அணிகள் உள்ளன. டி.டி.வி. தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், எடப்பாடியின் அ.தி.மு.க., மற்றும் ஓ.பன்னீர் செல்வத்தின் அணி. முன்னர் பன்னீர் செல்வத்துடன் நெருக்கம் காட்டிவந்த பா.ஜ.க., தற்போது எடப்பாடியார் அ.தி.மு.க.வின் தலைமையை கைப்பற்றிய பின்னர் அவருடன் நெருக்கம் கொண்டிருக்கிறது. எடப்பாடியார் முரண்டு பிடித்தால் அடுத்த இரண்டு அணிகளுடன் சேர்ந்து அ.தி.மு.க. தலைமைக்கு குடைச்சல் கொடுக்க பா.ஜ.க. தயங்கப் போவதில்லை.

அடுத்த வருட பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தே பா.ஜ.க. போட்டியிடும். பாராளுமன்றத் தொகுதி என்பது ஏறக்குறைய நான்கு சட்டசபைத் தொகுதிகளை உள்ளடக்கியது. எனவே விசாலமான ஒரு தொகுதியில் பா.ஜ.க. தனிக் கட்சியாக போட்டியிடுவது விஷப்பரீட்சை போன்றது. அதே சமயம் தமிழகத்துக்கு விஜயம் செய்திருந்த அமித்ஷா, 25 பாராளுமன்றத் தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றிபெறும் என்று பேசியிருந்தது. அ.தி.மு.க.வைக கலக்கத்தில் ஆழ்த்தியிருந்தது.

ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் அ.தி.மு.க.வை மூன்று கூறுகளாக பா.ஜ.க.வினால் பிரிக்க முடிந்தது. தற்போதும் கூட, டில்லி தலைமை, அ.தி.மு.க. தொடர்பாக ஒரு நிலைப்பாட்டில் இருக்க, தமிழகத்தின் தலைவர் அண்ணாமலை வேறு நிலைப்பாட்டில் உள்ளார் என்பதில் இருந்து இரண்டு வகையான கயிறிழுப்புகளில் பா.ஜ.க. ஈடுபட்டுள்ளது என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பா.ஜ.க.வுக்கு இன்னும் கைவராத விஷயமாக இருப்பது, தி.மு.க.வை வழிக்குக் கொண்டு வருவதுதான். ஏனெனில் இரு கட்சிகளும் நேரெதிர் நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கின்றன.

இந்துத்துவம், சனாதனதர்மம், இந்தி – சமஸ்கிருதத்துக்கு முன்னுரிமை அளித்தல், அகண்ட பாரதம், சிறுபான்மை சமய எதிர்ப்பு, புனிதப் பசு, மதசார்பின்மை கொள்கையை எதிர்த்தல், இந்துக்களுக்கு மட்டுமே முன்னுரிமை, ஆரிய மேலாண்மையை நிலை நிறுத்தல் என்பன பா.ஜ.க.வின் மாறாத கொள்கைகள் தி.மு.க. இவற்றுக்கு மாறானது.

ஒரு உதாரணம் காட்டலாம்.

நாகலாந்து மக்களில் 95 சதவீதமானோர் கிறிஸ்தவர்கள். பா.ஜ.க.வோ கிறிஸ்தவத்துக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டது. எனவே நாகலாந்தில் எப்படி மக்கள் மனதை வெல்வது? எனவே பா.ஜ.க. தன் பிரசாரத்தின் போது *BJP* என்பதை பாரதீய ஜனதா கட்சி என்று மக்களிடம் சொல்லவில்லை.

**(17ஆம் பக்கம் பார்க்க)**

அருள் சத்தியநாதன்...

# நல்லூர் திருவிழாவும் இலங்கைப் பொருளாதாரமும்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்

**உலகில் ஒவ்வொரு நாடும் தனது பொருளாதாரம் மற்றும் நாட்டு மக்களின் நன்மைகளைக் கருத்திற்கொண்டு பல்வேறு செயற்பாடுகளினை தொடர் தேர்ச்சியாக செய்துவருவதனை நாம் பார்த்து வருகின்றோம். உதாரணமாக உலகக் கோப்பை Cricket, Foot Ball, Olympics போன்ற பெரிய அளவிலான நிகழ்வினை ஒவ்வொரு நாடும் தனது நாட்டினில் நடத்துவதற்கு போட்டி போட்டுக்கொண்டு முன்வருவதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அதற்கு மிகமுக்கியக் காரணமாக இருப்பது அவ்வாறு நடாத்தும் எந்தவொரு நிகழ்வினாலும் நாட்டுக்கு ஏற்படும் நேரடியான மற்றும் மறைமுகமான பல்வேறு பொருளாதார நன்மைகள் ஆகும்.**

அதேபோல ஒவ்வொரு வருடமும் எமது அழகிய இலங்கை நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் கடவுளே அருள் பாலித்துக் கொடுத்திருக்கும் ஓர் சிறந்த வாய்ப்பே நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மற்றும் அதன் திருவிழாவும் ஆகும். இதுவே முதலிடத்தினைப் பெறுகின்றது. நல்லூர்க் கந்தன் திருவிழா நடைபெறுவதற்கு முன்னைய மற்றும் பின்னைய காலத்தை ஒட்டியே ஏனைய பல கோவில்களின் திருவிழாக்களும் வருகின்றன. உதாரணமாக நயினை நாகபூஷணி அம்மன் திருவிழா, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திருவிழா, சந்நிதி முருகன் ஆலயத் திருவிழா, வல்லிபுர ஆழ்வார் கோவில் திருவிழா எனக் கூறிக்கொண்டே போகலாம். அதுமட்டுமல்லாது நல்லூர்க் கந்தன் திருவிழா நடைபெறும் காலங்களில் அந்த கந்தன் அருளால் சிறந்த காலநிலையும் அமைந்துவிடும். அதிக வெயிலோ மழையோ இல்லாமல், மக்களின் இயல்பு வாழ்வுக்கு ஏற்றதாக அமையும் ஒரு சிறந்த காலமாக இருப்பதனையும் நாம் காலாகாலமாக கவனித்து வருகின்றோம்.


நாம் ஒவ்வொருவரும் கடந்த பல தசாப்தங்களாக ஏதோ ஒருவகையில் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து வந்தே உள்ளோம். அப்படிப்பட்ட எங்களெல்லோரையும் தட்டிக்கொடுப்பதற்காகவே நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழா அமைகின்றது. அந்த அருமையான சந்தர்ப்பத்தை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். அதன்வாயிலாக பல்வேறுபட்ட நன்மைகளை நாம் நிச்சயமாக பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் வடபகுதியில் பிரம்மாண்டமாகக் கொண்டாடப்படும் மிக முக்கியமானதும், கலாசார முக்கியத்துவமும் வாய்ந்ததுமான நிகழ்வாகும். முருகப் பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த பண்டிகைக்கு இலங்கையிலிருந்து மட்டுமல்லாது வெளிநாடுகளில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். ஆன்மிக மற்றும் கலாசார முக்கியத்துவத்துக்கு அப்பால் உள்ளூர் மற்றும் தேசியப் பொருளாதாரத்தை உயர்த்துவதில் இத்திருவிழா மாபெரும் பங்கு வகிக்கிறது. யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினால் ஏற்பட்ட / ஏற்படுகின்ற பல்வேறு பொருளாதார நன்மைகளை பின்வருமாறு ஆராயலாம்.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் தொழில் இவ்விழா இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் சகலரையும் ஈர்க்கும் ஒரு முக்கிய சுற்றுலா அம்சமாக செயல்படுகிறது. திருவிழாவின் போது பெரும் ஊர்வலங்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் சமயச் சடங்குகள் ஆகியவற்றைக் காண சுற்றுலாப் பயணிகள் குறிப்பாக யாழ். சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அதிகரிப்பினால் தங்குமிடம், போக்குவரத்து, உணவு மற்றும் சுற்றுலா தொடர்பான பிற சேவைகளுக்கான தேவைகளை அதிகரிக்க வழிவகுக்கிறது. இதன் விளைவாக ஹோட்டல்கள், கெஸ்ட்ஹவுஸ்கள் மற்றும் தனியார் தங்குமிடங்களுக்கும் அதிகத் தேவையும் அதனால் அதிகரித்த கேள்வியும் ஏற்படுவதைக் காணலாம். இதன் விளைவாக இந்தத் திருவிழா சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கிவருவதுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது மற்றும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுகிறது.

### உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கம்

திருவிழாவின் போது, நல்லூர்க் கந்தசுவா மி கோவிலை சுற்றியு ள்ள தெருக்கள் பரபரப்பான சந்தைகளாக மாறும். ஏராளமான விற்பனையாளர்கள் தற்காலிக கடைகளை அமைத்து கலைப்பொருட்கள், பாரம்பரிய ஆடைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் உள்ளூர் சுவையான உணவுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருட்களை விற்பனை செய்கின்றனர். இந்தத் துடிப்பான பொருளாதாரச் செயற்பாடு உள்ளூர் தொழில் முனைவோர் மற்றும் சிறு வணிகங்கள் தங்கள் தயாரிப்புக்களை காட்சிப்படுத்தவும் வருமானத்தை ஈட்டவும் ஒரு தளத்தை வழங்குகிறது. இந்த பெரும் திருவிழா உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு ஊக்கமாகச் செயற்படுகிறது. ஏனெனில் அதிகரித்த மக்களின் தேவைகள் யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள வணிகங்களுக்கு அதிக விற்பனை மற்றும் இலாபமாக அமைகிறது.




### வேலை வாய்ப்புக்கள் -

யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவினால் அந்தப் பகுதியில் வசிக்கும் தனிநபர்களுக்கு தற்காலிக வேலை வாய்ப்புக்கான குறிப்பிடத்தக்க ஆதாரமாக விளங்குகிறது. இந்த நிகழ்வுக்கு தளபாடங்கள், பாதுகாப்பு, சுகாதாரம், கூட்டத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை நிர்வகிப்பதற்கு பரந்த பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். நிகழ்வு மேலாண்மை, போக்குவரத்து, கேட்டரிங் மற்றும் சில்லறை விற்பனை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தற்காலிக வேலைகள் உருவாக்கப்படுகின்றன. இந்த வேலை வாய்ப்புக்கள் ஏராளமான தனிநபர்களுக்கு (குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு) வாழ்வாதாரத்தை வழங்குகிறது. திருவிழாவினால் வேலை வாய்ப்பில் ஏற்படும் நேர்மறையான தாக்கம், வறுமைக் குறைப்புக்கு மேலும் பங்களிப்பதோடு உள்ளூர் சமூகத்தின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துகிறது.

உட்கட்டமைப்பு மேம்பாடு திருவிழாவின் போது பெருமளவிலான பார்வையாளர்களின் வருகைக்கு இடமளிக்கும் வகையில் நல்லூர் பகுதியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தொடர்ச்சியான உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான தேவை ஏற்படுகின்றது. திருவிழாவில் பங்கேற்பவர்களுக்கு ஒரு மென்மையான மற்றும் மகிழ்ச்சியான அனுபவத்தை உறுதி செய்ய மேம்படுத்தப்பட்ட சாலைகள், வாகனத் தரிப்பிட வசதிகள், துப்புரவு அமைப்புகள் மற்றும் பிற வசதிகள் போன்றன அவசியமாகின்றன. இப்பகுதியின் ஒட்டுமொத்த உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் அரசாங்கமும் உள்ளூர் அதிகாரிகளும் முதலீடு செய்வதால் இந்த விழா உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஊக்கியாக செயல்படுகிறது. இந்த முதலீடுகள் திருவிழாவுக்கு பயனளிப்பது மட்டுமல்லாமல், உள்ளூர் சமூகம் மற்றும் எதிர்கால சுற்றுலா வாய்ப்புகளுக்கு நீண்டகால நேர்மறையான தாக்கங்களையும் கொண்டுள்ளது.

### கலாசாரப் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு

யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் செழுமையான கலாசார பாரம்பரியத்தை பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தத் திருவிழா பாரம்பரிய இசை, நடனம் மற்றும் தலைமுறை தலைமுறையாக கடந்து வந்த சடங்குகளை காட்சிப்படுத்துகிறது. பலதரப்பட்ட பார்வையாளர்களை ஈர்ப்பதன் மூலம் இவ்விழா இலங்கை கலாசாரத்திற்கான விழிப்புணர்வையும் பாராட்டுதலையும் கலாசார பரிமாற்றம் மற்றும் புரிதலையும் வளர்க்கிறது. இந்தக் கலாசார ஊக்குவிப்பு கலாசார சுற்றுலா வளர்ச்சிக்கு பங்களிப்பதோடு நாட்டின் தனித்துவமான பாரம்பரியத்தை அனுபவிப்பதில் ஆர்வமுள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது. இதன் விளைவாக இலங்கையில் கலாசார பாதுகாப்பு மற்றும் கலாசார சுற்றுலாவின் நிலையான வளர்ச்சிக்கு இந்தத் திருவிழா ஒரு ஊக்கியாக செயல்படுகிறது.

### வருவாய் உருவாக்கம்

யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவின் பொருளாதார நன்மைகள் சுற்றுலா மற்றும் உள்ளூர் வர்த்தகத்தின் உடனடி தாக்கத்திற்கு அப்பாற்பட்டது. இந்தத் திருவிழா பல்வேறு வழிகளில் அரசாங்கத்திற்கு கணிசமான வருவாய் ஈட்டுகிறது.

முதலாவதாக, திருவிழாவின் போது அதிகரித்த சுற்றுலாப் பயணிகளின் வருகை சுற்றுலா தொடர்பான வரிகள் மற்றும் கட்டணங்கள் மூலம் அரசாங்க வருவாயை அதிகரிக்க வழிவகுக்கிறது. ஹோட்டல் வரிகள், போக்குவரத்து வரிகள் மற்றும் பாரம்பரிய தளங்கள் மற்றும் இடங்களுக்கு நுழைவுக் கட்டணம் ஆகியவை இதில் அடங்கும். அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் மற்றும் பார்வையாளர்கள், அரசாங்கத்தின் ஒட்டுமொத்த வரி வருவாயில் பங்களித்து, அதிகரித்த வசூலாக மொழிபெயர்க்கிறார்கள்.

இரண்டாவதாக, ஸ்பான்சர்ஷிப் / அனுசரணை மற்றும் விளம்பரங்கள் மூலம் திருவிழா வருவாய் ஈட்டப்படுகின்றது. இந்த நிகழ்வு பிரபலமடைந்து அதிக பார்வையாளர்களை ஈர்ப்பதால், வணிகங்களும் நிறுவனங்களும் தங்கள் வியாபாரக் குறிகளை / பிராண்டுகளை திருவிழாவுடன் இணைக்க ஆர்வமாக உள்ளன. ஊர்வலங்கள், கலாசார நிகழ்ச்சிகள் அல்லது விளம்பரப் பொருட்கள் போன்ற நிகழ்வின் வெவ்வேறு அம்சங்களுக்கு அவர்கள் நிதியுதவி செய்கின்றனர். இந்த ஸ்பான்சர்ஷிப் ஒப்பந்தங்கள் விழா ஏற்பாட்டாளர்களுக்கு கணிசமான வருவாயை வழங்குவதோடு ஒட்டுமொத்த பொருளாதார தாக்கத்திற்கும் பங்களிக்கின்றது.

கூடுதலாக, இந்தத் திருவிழா உள்ளூர் கைவினைஞர்கள் தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த ஒரு தளமாக செயற்படுகிறது. சமயப் பொருட்கள், பாரம்பரிய உடைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் நினைவுப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனையானது விற்பனையாளர்களுக்கு மட்டுமல்லாது வரிவிதிப்பு மூலம் அரசாங்கத்திற்கும் வருமானத்தை ஈட்டுகிறது. இந்தத் திருவிழாவானது இந்தப் பொருட்களுக்குச் சாதகமான சந்தையை உருவாக்கி உள்ளூர் பொருளாதாரத்தை உயர்த்தி, கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கிறது.

மேலும், திருவிழாவின் போது அதிகரித்த பொருளாதார நடவடிக்கை உள்ளூர் பொருளாதாரத்தில் செலவினங்களைத் தூண்டுகிறது. பார்வையாளர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் தங்குமிடம், உணவு மற்றும் பானங்கள், போக்குவரத்து, ஷாப்பிங் மற்றும் பல்வேறு சேவைகளுக்கு பணம் செலவழிக்கிறார்கள். இந்த செலவினம் உள்ளூர் பொருளாதாரத்துக்குள் பரவுவதோடு வணிகங்களுக்கான வருமானத்தை உருவாக்குகிறது மற்றும் பெறுமதி சேர் வரி (VAT), சமூக பாதுகாப்பு உதவுத்தொகை அறவீடு (SSCL) மற்றும் ஏனைய விற்பனை வரி போன்ற மறைமுக வரிகள் மூலம் வரி வருவாய்க்கு பங்களிப்பு செய்கிறது.

மேலும், யாழ் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழாவைச் சுற்றி கட்டியெழுப்பப்பட்ட நேர்மறையான பிம்பமும் நற்பெயரும் நீண்டகால பொருளாதார தாக்கங்களைக் கொண்டுள்ளது. இந்தத் திருவிழா எதிர்கால சுற்றுலா துறைக்கு ஊக்கமாகச் செயற்படுகிறது, மீண்டும் வருகைகளை ஊக்குவிக்கிறது மற்றும் ஆண்டு முழுவதும் புதிய பார்வையாளர்களை ஈர்க்கிறது. இப்பகுதியில் சுற்றுலாவின் நீடித்த வளர்ச்சி, வேலை வாய்ப்பு உருவாக்கம், வருமானம் ஈட்டுதல் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

**(17 ஆம் பக்கம் பார்க்க)**

# தேர்தலுக்கான ஆண்டாக அமையவிருக்கும் 2024!

**எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு தேர்தலுக்கான ஆண்டாக அமையவிருப்பதால் அதற்கான முதற்கட்ட ஆயத்தங்களில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டிருப்பதைக் காணமுடிகிறது. பெரும்பாலும் அடுத்த வருடத்தில் ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.**



**முதலில் ஜனாதிபதித் தேர்தல், அதன் பின்னர் பாராளுமன்ற, மாகாண சபைத் தேர்தல்கள்!**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்பதில் ஏராளமான அரசியல் தரப்புகளும் விருப்பம்!**

அரசியலமைப்புக்கு அமைய அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இருந்தபோதும் அதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

2024ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்திருந்தார். ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் அதன் பின்னர் மாகாணசபைத் தேர்தல் என்பன அடுத்த வருடம் நடைபெறவிருப்பதாக அவர் அண்மையில் கூறியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்றும் அவருக்கு ஆதரவு வழங்க பல்வேறு தரப்பினர் தம்முடன் இணைந்து வருவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல்களை இலக்காகக் கொண்டு அரசியல் கூட்டணிகளை அமைப்பதற்கான ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளை அரசியல் கட்சிகள் ஆரம்பித்துள்ளன. பாரிய கூட்டணியொன்றை அமைத்தே தேர்தல்களை எதிர்கொள்ளப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.



**ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாக பாரிய கூட்டணியொன்று உருவாகும் அறிகுறி! நாட்டை பொருளாதார வீழ்ச்சியிலிருந்து முழுமையாக மீட்டெடுக்கும் ஆளுமை ஜனாதிபதிக்கே உள்ளதாக புத்திஜீவிகள் நம்பிக்கை!**



ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமன்றி ஏனைய கட்சிகளும் இதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளன. ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த வரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்று அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி உறுதிபடக் கூறியுள்ளது.

இருந்தபோதும் ஏனைய எந்தவொரு கட்சியும் வேட்பாளர்கள் குறித்து உறுதியான அறிவிப்புக்களை வெளியிடவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கி வரும் பொதுஜன பெரமுன கட்சியில் உள்ள பலர் அவருக்கே தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளனர். இருந்தபோதும் பலமான வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கப் போவதாக அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் கூறி வருகின்றனர்.

இருந்தபோதும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் அடுத்தவருடம் நடைபெறக் கூடிய தேர்தல்கள் தீர்மானம் மிக்கவையாக இருக்கும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. சுமார் ஒரு வருடங்களுக்கு முன்னர் நாடு எதிர்கொண்டிருந்த நிலையையும், நாட்டில் தற்பொழுது காணப்படும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த மாற்றத்துக்கு வித்திட்டவர் யார் என்பது அனைவருக்கும் புரியும்.

இவ்வாறான பின்னணியில் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்கக் கூடிய பலம் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவாவதே பொருத்தமாகவும் இருக்கும் என்று நாட்டின் புத்திஜீவிகள் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று கடந்த ஒருவருட காலத்தில நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை உருவாகியுள்ளது. ஜனாதிபதியின் இந்த செயற்பாடுகள் தொடர்ந்தும் நாட்டை சரியான பாதைக்கு இட்டுச்செல்லும் என்ற சாதக எண்ணப்பாடொன்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மறுபக்கத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் விருப்பம் தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், பொதுஜன பெரமுன கட்சியிலும் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்க வேண்டும் என்பதில் விருப்பம் கொண்டுள்ளனர்.

எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான பாரிய கூட்டணியொன்று உருவாக்கப்பட்டு ஆதரவு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவே என அக்கட்சியின் மத்திய குழு தீர்மானித்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதேபோல, தேசிய மக்கள் சக்தி சார்பில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக களமிறங்குவார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதுவாக இருந்தாலும் தேர்தல் குறித்த உறுதியான அறிவிப்பு எதுவும் வெளியாகவில்லை என்பதால் வேட்பாளர்கள் குறித்த அறிவிப்புக்களில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களும் காணப்படுகின்றன. இருந்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் போட்டியிடுவார் என்றே கணிக்கப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த களம் இவ்வாறிருக்கையில், அடுத்து நடைபெறக்கூடிய பொதுத்தேர்தல் நிச்சயம் தீர்மானம் மிக்கதொன்றாகவே அமையும் என்பதுதான் பலரதும் அபிப்பிராயம் ஆகும். இதற்காக அடிமட்டத்தில் தம்மைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளில் சகல கட்சிகளும் இறங்கியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என சகல கட்சிகளும் பிரதேச ரீதியில் அரசியல் கூட்டங்களை நடத்தத் தொடங்கியுள்ளன. அது மாத்திரமன்றி கூட்டணிகள் பற்றிய ஆரம்பகட்டப் பேச்சுக்களும் இடம்பெற்று வருகின்றன. பாரிய மாற்றமொன்றை மக்கள் எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் நடத்தப்படக் கூடிய தேர்தல் என்பதால் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படக் கூடிய கொள்கைத் திட்டங்கள் தொடர்பில் அதவானம் செலுத்தப்படுகிறது. குறிப்பாகப் பொருளாதா ரீதியில் நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான கொள்கைத் திட்டங்களைக் கொண்ட கட்சிகளுக்கான வாய்ப்புக்களே அதிகம் இருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துடன் இணைந்ததாகப் பல்வேறு சட்டத்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம், மத்திய வங்கிச் சட்டமூலம் போன்ற பல்வேறு சாதகமான திட்டங்களைக் குறிப்பிட முடியும். ஆரம்பிக்கப்பட்ட சாதகமான செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கக் கூடிய வகையில் அடுத்த பாராளுமன்றம் அமைவது நாட்டின் எதிர்காலத்துக்குச் சிறந்ததாக அமையும் என்கிறார்கள் புத்திஜீவிகள்.

**பி.ஹர்ஷன்...✍**

---

## பா.ஜ.க அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை;

# மக்களவையில் விவாதம் நாளைமறுதினம் ஆரம்பம்!

**பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாரதீய ஜனதா கட்சிக்கு எதிராக மக்களவையில் நாளைமறுதினம் 8 ஆம் திகதி நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் ஆரம்பமாகவிருக்கும் நிலையில், பா.ஜ.க அரசுக்கு பிஜூ ஜனதா தளம் ஆதரவு அளித்துள்ளது.**



நாடாளுமன்ற மக்களவையில் எதிர்வரும் 8 ஆம் திகதி இப்பிரேரணை மீது விவாதம் தொடங்குகிறது. தொடர்ந்து, ஒகஸ்ட் 10 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி அதற்குப் பதில் அளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மணிப்பூர் விவகாரத்தில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்கு பிரதமர் செவிசாய்க்கவில்லை என்று தெரிவித்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

நடைபெறவிருக்கும் முக்கியமான மாநிலத் தேர்தல்கள் மற்றும் 2024 மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு எதிரான ஆயுதமாக இப்பிரேரணையை எதிர்க்கட்சிகள் கருதுகின்றன.

ஆனால் இத்தீர்மானத்தில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுவதென்பது சாத்தியமே இல்லை. நரேந்திர மோடியின் அரசு மிகவும் பலமாக இருப்பதால் அப்பிரேரணை வெற்றியளிக்கப் போவதில்லை. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெறுவதாயின் 272 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. பாரதீய ஜனதாவின் பக்கம் தற்போது வை.எஸ்.ஆர் (ஆசனங்கள் 22), பிஜூ ஜனதா தளம் (ஆசனங்கள்12) ஆகியவற்றைச் சேர்த்துப் பார்க்கும் போது தற்போது 303 எம்.பி.க்கள் (உறுதிப்படுத்தக் கூடிய எண்ணிக்கை) உள்ளனர்.

எனவே எதிரணிகள் தோற்பது உறுதியாகிவிட்டது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடியை உரையாற்ற வைப்பதும், அடுத்தவருட நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவுக்கு எதிரான வியூகத்தை வகுப்பதுமே எதிரணியின் தந்திரம்!**



**330 உறுப்பினர்களின் உறுதியான ஆதரவு இருக்கையில், 140 பேர் கொண்ட எதிரணி வெற்றியடைவது சாத்தியமேயில்லை!**

கடந்த ஜூலை 20 ஆம் திகதி மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தொடர்ந்து முடங்கியுள்ளன. எதிர்க்கட்சிகள் மணிப்பூர் நிலைவரத்தை முதலில் சபையில் தெரிவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தன. நம்பிக்கையில்லாத் தீர்மானம் பிரதமரை பேச வைப்பதற்கான ஒரு வழியாகும் என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

கடந்த ஜூலை 26 ஆம் திகதி மக்களவையில் மத்திய அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தி காங்கிரஸ் உறுப்பினர் கவுரவ் கோகோய் நோட்டீஸ் வழங்கினார். 26 எதிர்க்கட்சிகள் அடங்கிய 'இண்டியா' கூட்டணி சார்பில் வழங்கப்பட்டுள்ள இந்த நோட்டீஸை ஏற்றுக் கொண்ட மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா, இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் எதிர்வரும் 8 ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இந்திய மக்களவையில் மொத்தம் 543 இடங்கள் உள்ளன. இவற்றில் 5 இடங்கள் வெற்றிடமாக உள்ளன. ஆளும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 330 உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது.

இதேவேளை 'இண்டியா கூட்டணி' கட்சிகளின் பலம் 140 இற்கும் சற்றுக் கூடுதலாக உள்ளது. மிகுதியாக உள்ள 60 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இந்த இரண்டு கூட்டணியிலும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே மத்திய அரசுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடையும் என்பது இப்போதே உறுதியாகிவிட்டது.

நாடாளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க ஆட்சியை வீழ்த்துவதற்குத் தேவையான உறுப்பினர்களின் ஆதரவு இல்லாத நிலையில், புதன்கிழமை (ஜூலை 26) எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தேசிய அளவில் மாத்திரமன்றி சர்வதேச அளவிலும் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

எதிர்க்கட்சிகள் சார்பில் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் குறித்து பேசும் அரசியல் ஆய்வாளர்கள், இது மக்கள் மத்தியில் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு மட்டுமே என்கிறார்கள்.

நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர் ஒகஸ்ட் 11 ஆம் திகதி வரை நடைபெறுகிறது. இந்த கூட்டத் தொடரில் அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய மசோதாக்கள் அதிகளவில் உள்ளன.

இந்நிலையில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை பா.ஜ.க அரசாங்கம் சிறிதும் கவலையின்றி எதிர்கொள்கிறது என்றே களநிலைமைகள் புலப்படுத்துகின்றன.

ஆசனங்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள எதிர்க்கட்சிகள், நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றிபெறும் என எதிர்பார்க்கவில்லை. ஆனால் தங்களது ஒரே நோக்கம், மணிப்பூர் குறித்துப் பிரதமரைப் பேச வைப்பது மட்டுமே என்று கூறிவருகின்றன.

**எஸ்.சாரங்கன்...✍**

# தேசியப் பிரச்சினைக்கான தீர்வில் ஜனாதிபதி உறுதியான நிலைப்பாடு






## 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமல் விடுவதென்பது அரசியலமைப்பையே மீறுகின்ற செயல்!

**இலங்கையில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள தேசியப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுவரும் முயற்சிகள் அண்மைய நாட்களில் அரசியல் அரங்கில் பேசுபொருளாகியுள்ளன.**

குறிப்பாக அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது என்ற அவருடைய உறுதியான நிலைப்பாடு தொடர்பில் அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன.

இவ்வாறான பின்னணியில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமக்குக் காணப்படும் பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் வழங்குமாறு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதனை சகல கட்சிகளுக்கும் அறிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் கடந்த மாதம் 26 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களுக்கு அமைவாக இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. தேசிய நல்லிணக்கம் தொடர்பில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து அறிவிப்பதற்காக இந்த சர்வ



கட்சி மாநாடு கூட்டப்பட்டிருந்தது.

இருந்தபோதும் இதில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவது குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றிருந்தன. அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரையாடுவது போதுமானதல்ல. அது முழுநாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால், அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமன்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை என்றும் புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே காணப்படுகிறது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த சர்வகட்சி மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

## மாகாணசபை முறைமையில் தமிழ்க் கட்சிகள் அலட்சியம்; 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் தமிழர் அரசியல் தரப்புகளிடையே மாறுபட்ட கருத்துகள்!

இதற்கு அமைய 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான அரசாங்க முன்மொழிவுகளை ஜனாதிபதி கூடிய விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கும் நிலையிலேயே ஏனைய கட்சிகளின் யோசனைகளையும் எழுத்துமூலம் கோரியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாடு தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்த பெரும்பாலான தென்னிலங்கைக் கட்சிகள் அதிகாரப் பகிர்வு குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாடு முன்வைக்கப்பட வேண்டும் என்றும், அதன் பின்னரே கலந்துரையாடல்களை நடத்த முடியும் என்றும் கூறியிருந்தன.

இதன் அடிப்படையில் பார்க்கும்போது ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைப் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளை எடுத்துள்ளார் என்பது தெளிவாகிறது. ஜனாதிபதி பாராளுமன்றத்தில் முன்வைக்கும் யோசனைக்கு அமைய அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாடுகளை அறிவிக்க முடியும்.

குறிப்பாக 13 ஆவது அரசியலமைப்பில் காணப்படும் மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு பற்றியே பெரும்பலானா கட்சிகள் கரிசனை காண்பித்து வருகின்றன. விசேடமாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதா இல்லையா என்பது பற்றிய கருத்தாடல்கள் அதிகரித்துள்ளன. இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு அமைய கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறையைக் கொண்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து ஆட்சிசெய்த ஜனாதிபதிமார் எவரும் முழுமையான அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்கியிருக்கவில்லை.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை எவரும் நடைமுறைப்படுத்தவில்லை. இவ்வாறிருக்கையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போவதாக ஜனாதிபதி கூறியிருப்பதே பல்வேறு அரசியல் கட்சிகளை நெருடல்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் என வரும்போது அது இந்தியாவின் விருப்பத்துக்கு அமையக் கொண்டுவரப்பட்டதொரு விடயம், நாட்டைப் பிரித்து வடக்கு, கிழக்கை தனியான அலகுகளாக்கும் முயற்சி என்றதொரு தோற்றப்பாடே தென்னிலங்கை அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிலைப்பாட்டிலேயே தென்னிலங்கைக் கட்சிகள் இன்னமும் இருந்து வருகின்றன.

எனவேதான் மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வு என வரும்போது மீண்டும் மீண்டும் நாடு பிளவுபடப் போகிறது என்ற கோஷங்களைக் கையில் எடுத்தவாறு களத்தில் இறங்கி விடுகின்றனர். நாடு பொருளாதார ரீதியில் சந்தித்துள்ள பின்னடைவுகளிலிருந்து மீள்வதற்கு எடுக்கும் முயற்சிகளில் அரசியல் ஸ்திரத்தன்மையும் அவசியம் என்பதை உணர்ந்து ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், வழமைபோல அரசியல் கோஷங்களுடன் சுயலாப அரசியல் செய்யத் தொடங்கினால் அது நாட்டின் எதிர்காலத்துக்கு எந்தளவுக்கு நன்மை அளிக்கும் என்பது கேள்விக்குறியே. விசேடமாக இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்துவரும் தரப்பினர் ஜனாதிபதியின் இந்த நேர்மையான முயற்சியை தமது அரசியல் நீடிப்புக்குப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்றே தெரிகின்றது. அதிகாரப் பகிர்வு என்ற பேச்சு எடுத்தாலே அதற்கு எதிராக தென்னிலங்கைக் கட்சிகள் களத்தில் இறங்குவது ஒரு பக்கம் இருக்க, தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் தரப்பினரிடம் இதுவிடயத்தில் ஒருமித்த நிலைப்பாடு இல்லை என்பதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் புலப்பட்டுள்ளது.

1956 முதல் ஒவ்வொரு தேர்தலிலும் வெளிப்படுத்தப்படும் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு இணங்க, சமஷ்டிக் கட்டமைப்பில் அதிகாரப் பகிர்வு இருக்க வேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பின் ஒரு பகுதியே தவிர, ஒரு தனி இணைப்பு அல்ல. ஜனாதிபதி மற்றும் நாம் அனைவரும் அதை நிலைநிறுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் சத்தியப்பிரமாணம் செய்துள்ளோம். அரசியலமைப்பின் ஒரு பகுதியை நடைமுறைப்படுத்தாது விடுவது என்பது அரசியலமைப்பு முழுவதையும் மீறுவதாகவே அமையும்.

அரசியலமைப்பில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நாம் வலியுறுத்துகின்றோம். எனினும், அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு' என அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பான அரசாங்க முன்மொழிவுகள் ஜனாதிபதியினால் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு!

மறுபக்கத்தில் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மீது நம்பிக்கையில்லாதவர்களாக கஜேந்திரகுமார் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி காணப்படுகிறது. சமஷ்டி மாத்திரமே தீர்வாக இருக்கும் என்பதை வலியுறுத்தி அவர்கள் அதிகாரப் பகிர்வு குறித்த ஜனாதிபதியின் மாநாடுகளையும் புறக்கணித்துள்ளனர்.

அதேநேரம், ஆயுதரீதியான பலம் இல்லாத பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு விக்னேஸ்வரன் தலைமையிலான கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது.



இவ்வாறு தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்து அமைய மாகாணசபை முறைமை கொண்டுவரப்பட்டாலும் தமிழ் அரசியல் கட்சிகள் அன்று தொட்டு இதில் அதிக நம்பிக்கை கொண்டனவாக இருக்கவில்லை. ஆரம்பத்தில் மாகாணசபை முறைமையை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவொரு தமிழ் கட்சிகளோ அல்லது தமிழ் இயக்கங்களோ முன்வராத நிலையிலேயே வரதாராஜப் பெருமாள் முதன் முதலில் இணைந்த வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு முதலமைச்சராகக் களமிறக்கப்பட்டார்.

அதன் பின்னரே படிப்படியாக தமிழ்க் கட்சிகள் மாகாணசபை மீது தமது கவனத்தைச் செலுத்தியிருந்தன. இவ்வாறான அரசியல் பின்னணியில் மீண்டும் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசும்போது தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒருமித்த நிலைப்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அது மாத்திரமன்றி, நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பம் சகல தரப்பினராலும் குறிப்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகளால் சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கு முன்னர் கிடைத்த பல்வேறு சந்தர்ப்பங்கள் நழுவவிடப்பட்டுள்ளமையால் கிடைத்திருக்கும் இச்சந்தர்ப்பத்தையாவது சரியாக அவர்கள் பயன்படுத்த முயற்சிக்க வேண்டும். அதிகாரப் பகிர்வு விடயத்தை வெறுமனே தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் மாத்திரம் தீர்மானித்துவிட முடியாது. தென்னிலங்கை அரசியல் களத்திலும் இதய சுத்தியுடனான அர்ப்பணிப்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தென்பகுதியில் உள்ள மக்களை உருவேற்றிவிடும் பட்சத்தில் ஜனாதிபதியின் முயற்சிகள் வெற்றியளிக்காமல் போவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

இதுபோன்ற கசப்பான கடந்தகால அனுபவங்கள் பல நாட்டுக்கு உள்ளது என்பதையும் நாம் இந்நேரத்தில் நினைவில் கொள்ள வேண்டும்.

இருந்தபோதும், நாட்டின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி முன்னெடுத்துள்ள இந்த முயற்சிக்கு அரசியல் இலாபங்களை மறந்து சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கினால் சுபீட்சமானதொரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதே யதார்த்தம்.

## நாடு பொருளாதார ரீதியில் சந்தித்துள்ள பின்னடைவுகளிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளில் அரசியல் ஸ்திரத்தன்மையும் அவசியம் என்பதை புரிந்து கொள்ள மறுக்கும் தென்னிலங்கை அரசியல் சக்திகள்!

# உலகளாவிய ரீதியில் ஒலித்த குரல் ஓய்ந்துவிட்டது

**1969ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்மீது எனக்கு ஏற்பட்ட ஆர்வம் காரணமாக ஒரு அபிமான நேயராக மாறினேன். அப்போது இலங்கை வானொலியில் கடமையாற்றி வந்த பல அறிவிப்பாளர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் விடுமுறையில் அல்லது ஆலய உற்சவங்களின் நேர்முக வர்ணனைகளுக்காக யாழ்ப்பாணம் வரும்போது அவர்களை தேடிச் சென்று சந்திப்பது என் வழக்கமாக இருந்தது.**

1972ஆம் ஆண்டு என நினைக்கிறேன். ஒருநாள், யாழ்ப்பாணம் கொழும்புத்துறையிலுள்ள அல்பிரட் துரையப்பாவின் (அப்போது யாழ். மாநகர சபையின் முதல்வராக இருந்தவர்) வீட்டில் இலங்கை வானொலியின் அறிவிப்பாளர் ஒருவர் தங்கி நிற்பதாக தகவல் கிடைத்தது. அங்கு சென்றபோது துடிப்பான இளைஞர் ஒருவரை கண்டேன். அவர்தான் விமல் சொக்கநாதன். அதுவே முதற் சந்திப்பாக அமைந்தது. என்னை அறிமுகம் செய்தபோது, கடிதங்கள் மூலமாக அறிமுகமான ஒரு நேயரை நேரில் சந்திப்பது தனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக சொன்னார். அன்புடன் உபசரித்தார்.

இவருடன் உரையாடிவிட்டு வெளியேறும்போது ஓர் அழைப்பு மடலை என்னிடம் கையளித்துவிட்டு "வசதியானால் வாருங்கள்" என்றார். பின்புதான் எனக்கு விஷயம் புரிந்தது. ஒரு மாதத்திற்கு முன்புதான் விமலுக்கு கொழும்பில் திருமணம் நடந்திருக்கிறது. தன்னுடன் சட்டக்கல்லூரியில் படித்த பத்மா என்ற பெண்ணை திருமணம் செய்திருக்கிறார். அல்பிரட் துரையப்பாவின் மனைவியின் தங்கை தான் பத்மா. எனவேதான் யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது உறவினர்களையும் நண்பர்களையும் அழைத்து, அல்பிரட் துரையப்பா வீட்டில் திருமண வரவேற்பு உபசாரமொன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். அதற்கான அழைப்பிதழே அன்று எனக்கு தந்திருந்தார்.


குறிப்பிட்ட தினத்தன்று அவரது திருமண வரவேற்பு உபசார வைபவத்திற்கும் சென்றிருந்தேன். தனது அபிமானத்திற்குரிய வானொலி நேயர்கள் பலருடன் நானும் வருகை தந்திருப்பது பற்றி மகிழ்ச்சியடைந்தார்.

விமல் சொக்கநாதன் 1944.06.30ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை கிராமத்து பாடசாலையில் பயின்றார். தகப்பனார் கொழும்பில் கடமையாற்றிய காரணத்தால் இடைநிலை மற்றும் உயர்கல்வியை கொழும்பு வெஸ்லிக் கல்லூரியிலும், கொட்டாஞ்சேனை சென். பெனடிக் கல்லூரியிலும் தொடர்ந்தார். பின்பு கொழும்பு சட்டக்கல்லூரியில் இணைந்து கொண்டார்.

அந்த வேளையில் தான் 1960களின் ஆரம்பத்தில் இலங்கை வானொலியில் 'சிறுவர் மலர்' முதலான நிகழ்ச்சிகளில் பங்குபற்ற ஆரம்பித்தார். பின்னர் இலங்கை வானொலியின் பகுதிநேர அறிவிப்பாளராகவும் இணைத்துக் கொள்ளப்பட்டார். 1970ஆம் ஆண்டு சட்டக் கல்லூரிக் கல்வியை நிறைவுசெய்து கொண்ட பின்னர் இலங்கை வானொலியில் நிரந்தர அறிவிப்பாளராக நியமனம் கிடைத்தது.

இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக, நிகழ்ச்சித் தொகுப்பாளராக, அறிவிப்பாளராக, செய்தி வாசிப்பாளராக, நேர்முக வர்ணனையாளராக பணியாற்றிய பெருமைக்குரியவர் இவர். தேசிய சேவையில் 'கண்டதும் கேட்டதும் செய்திச் சுருள்' என்ற வாராந்த நிகழ்ச்சியொன்றை தொகுத்து வழங்கியிருக்கிறார். வர்த்தக சேவையில் 1972ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து 'வாலிப வட்டம்' என்ற ஒரு மணிநேர நிகழ்ச்சியொன்றை நீண்ட காலமாக நடத்திவந்துள்ளார். 'இசையும் கதையும்' 'அறிவிப்பாளருடன் அரைமணி நேரம்' போன்ற நிகழ்ச்சிகளையும் இவர் தொகுத்து வழங்கியிருக்கிறார். இவர் வர்த்தக சேவையில் 'என் விருப்பம்' நிகழ்ச்சியின்போது எப்போதும் முதலாவது பாடலாக முருகன் புகழ்பாடும் திரைப்படப் பாடலையே ஒலிபரப்புவது வழக்கம்.

விமல் சொக்கநாதன் 1976 ஜனவரி மாதத்தில் இலங்கை வானொலியிலிருந்து விலகி சட்டத்துறை மேற்படிப்புக்காக இங்கிலாந்து செல்லும் வேளையில், 'விடைபெறுகிறேன்' என்று முன்பக்கத்தில் குறிப்பிட்டு தன்மீது அபிமானம் வைத்திருந்த அனைத்து நேயர்களுக்கும் நன்றி சொல்லும் வகையில் ஒரு அட்டையை (தபாலட்டையொன்றை இரண்டாக மடித்தது போன்ற அமைப்பில்) தபாலில் அனுப்பி வைத்திருந்ததை பழம்பெரும் நேயர்களாகிய எங்களால் மறந்துவிடமுடியாது.



விமல் இங்கிலாந்து சென்ற சில மாதங்களில் லண்டன் பி.பி.ஸி தமிழோசை குடும்பத்தில் ஒருவராக இணைந்து கொண்டார். அப்போது தமிழோசைக்குப் பொறுப்பாக சங்கரமூர்த்தி சங்கரும், உதவிப் பொறுப்பாளராக ஆனந்தி சூரியப்பிரகாசமும் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். விமல் நாளாந்த செய்திகளையும், செய்தி விமர்சனங்களையும் நீண்டகாலமாக வழங்கியிருக்கிறார். இலங்கையிலிருந்து விடைபெற்று இங்கிலாந்து சென்றதும், பி.பி.ஸி தமிழோசை மூலமாக இவரது குரல் ஒலிக்கத் தொடங்கியதால், இலங்கை நேயர்கள் மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்து கொண்டிருந்த அனைத்து தமிழ் நேயர்களின் செவிகளுக்கும் இவரது செய்தி வாசிப்பு சென்றடைந்தது என்பது சிறப்புக்குரியது.

விமல் இங்கிலாந்து சென்றபின், அங்கு சட்டத்துறையில் உயர் கல்வியை மேற்கொண்டு சட்டப் பரீட்சையில் முதலாம் தரத்தில் சித்தியடைந்தார் என்பது பெருமைக்குரிய செய்தி. இதனைத் தொடர்ந்து லண்டனிலுள்ள வழக்கறிஞரான கலப்பு இன வெள்ளையர் ஒருவர் தனது சட்டத்துறை நிறுவனத்தில் விமலை தன் உதவியாளராக இணைத்துக் கொண்டார். அப்போது இவரை வாரத்தில் இருநாட்கள் பி.பி.ஸியில் கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கியிருந்தார். பி.பி.ஸி அறிவிப்பாளர் ஒருவர், தன் நிறுவனத்தில் பணியாற்றுவதை பெருமையாகக் கருதிய அவர், தனது நிறுவனத்திற்கு சட்ட உதவிகளுக்கும், ஆலோசனைகளுக்கும் வரும் இலங்கைத் தமிழ்க் குடும்பத்தினரின் முன்னிலையில் விமலை அழைத்து "உங்களுக்கு இவரைத் தெரியுமா?" என்று கேட்பாராம். விமலை நேரில் கண்ட மகிழ்ச்சியில் அவர்கள் இருக்கும் போது, "இவர் என்னுடன்தான் பணியாற்றுகிறார்" என்று சொல்வாராம். பின்னாளில் விமலும் அவரது மனைவியும் இணைந்து லண்டனில் ஒரு சட்டத்துறை நிறுவனத்தை அமைத்து நீண்டகாலம் நடத்தி வந்துள்ளனர்.

விமல் லண்டனில் ஐ.பி.ஸி வானொலியிலும், பின்னர் ஐ.பி.ஸி தொலைக்காட்சி, ரி.ரி.என் தொலைக்காட்சி, லண்டன் சன்றைஸ் தமிழ் வானொலி ஆகியவற்றிலும் பணியாற்றியிருப்பதுடன், சமகாலத்தில் லண்டன் மெய்வெளி தொலைக்காட்சி சேவையிலும் செய்தி வாசிப்பாளராக இருந்துள்ளார்.

இவர் 2007ஆம் ஆண்டு 'வானொலிக் கலை' என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். சென்னை, கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா ஆகிய நாடுகளில் இந்நூலின் அறிமுக விழாக்கள் இடம்பெற்றன. ஒலிபரப்புத்துறையில் தான் பெற்ற அனுபவங்களை வெளிப்படுத்துவதாகவும், அதனூடாக இளம் ஒலிபரப்பாளர்களுக்கு தரமான ஆலோசனைகளை வழங்கும் வகையிலும் இந்த 'வானொலிக் கலை' நூல் அமைந்திருப்பது சிறப்புக்குரியது.

இவரது இரண்டாவது நூலான 'விமலின் பக்கங்கள்' 2019ஆம் ஆண்டு வெளிவந்தது. இலங்கையிலும், பின்னர் இங்கிலாந்திலும் பத்திரிகைத் துறையில் பணியாற்றிய ஈ.கே. ராஜகோபால் லண்டனிலிருந்து மாதாந்தம் வெளியிட்டு வந்த 'புதினம்' பத்திரிகையில் விமல் தொடர்ச்சியாக எழுதிவந்த 'விமலின் பக்கம்' கட்டுரைகளின் தொகுப்பாகவே 'விமலின் பக்கங்கள்' நூல் அமைந்துள்ளது. இதன் அறிமுக விழாக்கள் சென்னை, லண்டன், பிரான்ஸ் ஆகிய நகரங்களில் இடம்பெற்றுள்ளன.

விமல் சொக்கநாதன் இலங்கையில் தொடர்ச்சியாக எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பாகவே, 'இலண்டனிலிருந்து விமல்' என்ற இவரது மூன்றாவது நூல் வெளிவந்துள்ளது. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால், இந்த நூல் தாயகத்தில் வெளியிட்டிருப்பதாகும். இதற்காக இலங்கைக்கு வந்த விமல், மூன்று வார காலம் இங்கு தங்கியிருந்துள்ளார். இந்த நூலின் வெளியீட்டு விழாக்கள் கடந்த மே மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திலும், 27ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்கத்திலும் இடம்பெற்றிருந்தன. இதனைத் தொடர்ந்து, ஜுன் மாதம் 3ஆம் திகதியன்று, இன்னொரு மூத்த ஒலிபரப்பாளரான பி.எச். அப்துல் ஹமீத் எழுதி வெளியிட்டுள்ள 'வானலைகளில் ஒரு வழிப்போக்கன்' என்ற நூலின் அறிமுக விழா கொழும்பில் நடைபெற்றபோது, அந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி சிறப்பித்தவர் விமல் சொக்கநாதன்.

விமலின் மறைவுச் செய்தியை கேட்டறிந்தவுடன் பி.எச். அப்துல் ஹமீத் தனது முகநூல் பக்கத்தில் "என்னிலும் வயதில் மூத்தவர். எனினும் இருவரும் நிரந்தரப் பதவியில் ஒன்றாகவே இணைந்தோம். உண்மையான தோழமை உணர்வுடன் ஒன்றாகப் பணிபுரிந்த அந்தக் காலங்களை நினைத்துப் பார்க்கும் போது, இந்த இழப்புச் செய்தியை தாங்க முடியவில்லை. சமீபத்தில் எனது நூல் அறிமுக விழாவுக்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்த மகிழ்ச்சியின் ஈரம்கூடக் காயவில்லை" என்று தனது வருத்தத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

விமல் சொக்கநாதன் ஜுலை 20ஆம் திகதியன்று தனது வட்ஸ்அப் ஊடாக நண்பர்களுக்கு அனுப்பிவைத்த தகவல் குறிப்பில், தனது 'விமலின் பக்கங்கள்', 'இலண்டனிலிருந்து விமல்' ஆகிய இரு நூல்களினதும் அறிமுக விழா எதிர்வரும் அக்டோபர் 14ஆம் திகதியன்று கனடாவில் நடத்தப்படவிருக்கிறது என்பதை தெரிவித்திருந்தார்.

விமலின் மறைவுக்கு தனது அனுதாபத்தை வெளியிட்டிருக்கும் இன்னொரு மூத்த ஒலிபரப்பாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகமுமான வி.என். மதிஅழகன், "அன்றைய தினம் கனடாவில் விமலின் நூல்களது அறிமுகவிழா அல்ல. விமலுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வாகவே அதனை நடத்த வேண்டிய துரதிர்ஷ்ட நிலை ஏற்பட்டுவிட்டது" என்று கவலை தெரிவித்துள்ளார்.

விமல் சொக்கநாதன் லண்டனில் சட்டத்துறை, ஒலி, ஒளி ஊடகத்துறை மற்றும் பத்திரிகைத்துறைப் பணிகளுடன், அங்குள்ள சைவ ஆலயங்களின் பரிபாலனசபையுடன் இணைந்து சமயப் பணியிலும் தீவிர பங்காற்றியிருப்பதும் சிறப்புக்குரியது. லண்டன் 'புதினம்' பத்திரிகையின் இருபதாவது ஆண்டு விழாவிலும், லண்டன் ஐ.பி.ஸி வானொலியின் மற்றொரு நிகழ்விலும் இவருக்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கி கௌரவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (17 ஆம் பக்கம் பார்க்க)

ஊரெழு
அ. கனகசூரியர்


தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை
Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

மோட்டார் வாகனங்கள்

119
பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

Isuzu TD 20 LORRY, Cab/ Chassis புதிய பெயின்ட்/ வயரிங் / என்ஜின், Fully over-haul ed Rs . Three Mill io n. 07 73864644 048098

வர்த்தகம்

209
வியாபார ஸ்தலம்
வாடகைக்கு/ குத்தகைக்கு

ஐந்துலாம்பு சந்திக்கு அருகாமையில் கொழும்பு 13 இல் ஆட்டுப்பட்டி தெருவில் 2 கட்டிடங்கள் வாடகைக்கு உண்டு. மொத்த வியாபாரத்துக்கு உகந்தது. உதாரணம் உணவகம், எண்ணை வியாபாரம், ஸ்டோர்ஸ். தொடர்பு க ளுக்கு 077076 8454. 048729

வேலைவாய்ப்பு

301
வேலை வாய்ப்பு
வேலை வாய்ப்புகள்/சேவைகள்

இரவு 8 - 9 இற்கிடையில் ஒன்லைன் வேலைக்கு விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு வட்ஸ் அப்மெஸேஜ். 0765740553. 048586

306
வெற்றிடங்கள்
மருத்துவம்

கண்டிக்கு அருகில் உள்ள ஓர் மருத்துவ ஆலோசனை நிலையத்திற்கு MBBS/ SLMC பதிவுசெய்த வைத்தியர் தேவை . (முழு நேரம்/ பகுதி நேரம்) தங்கு மி டம் உண்டு. 077- 7566105/ 076-5479510 041710

318
வெற்றிடங்கள்
டிரைவர்கள்

கனரக வாகன சாரதி உரிமம் சகிதம் சாரதி டிலிவரி வாகனத்திற்கு இரத்மலானை, மொரட்டுவ, கல்கிசை சுற்றுப் புறத்தில் தேவை. சம்பளம் 50, 000/ = பெற்றுக் கொள்ளலாம். விசாரணைகளுக்கு நெஸ்கோ என்டர்பிரைசஸ், இல. 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 048078

320
வெற்றிடங்கள்
ஹோட்டல்கள், பேக்கரிகள்

எமது ரெஸ்டூரன்ட் இற்கு பயிற்சிபெற்ற, பயிற்சி பெறாத பெண் ஊழியர்கள் தேவை. கெஷியர், ஜுஸ்கேர்ள், கிளீ னர், ஹெல்பர், சப்மெ ரின் பன் தயாரிப்போர் சம்பளம் 45 000 - 60, 000/ - வரை உணவு த ங்குமிடத்துடன். நீர்கொழும்பு 0778845833. 048671

பண்டாரவளை எல்ல நகரில் சுற்றுலா ஹோட்டலுக்கு ஊழியர்கள் தேவை. ஆங்கிலம் மற்றும் கணனி அறிவு அவசியம். 0771299210, 0572228693. 048190

321
வெற்றிடங்கள்
தோட்டத்துறை

மத்துகம தங்கி இறப்பர் பால் வெட்டுவதற்கு தம்பதி தேவை. 0772428173, 0707715812. 048622

325
தொழில்துறை
பொது

பழைய இரும்பு பொருட்கள் கடைக்கு சாரதிகள் மற்றும் புளொக்கல் மெசீன் இயக்குநர் தேவை. கொட்டாவ.0775712584, 0765808984. 048258

காணி/தோட்டம்

616
வீடு சொத்து
கொழும்பு
மாவட்டம்
விற்பனைக்கு

களுபோவில 20 பேர்ச் காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு. டி சில்வா வீதியில் அமைந்துள்ளது. வைத்தியசாலைக்கு மிக அருகில். விலை 140 (மில்.) (தரகர்கள் வேண்டாம்). 0776492313, 0776310866. 047409

மாலபே, வெளிவிட்ட, விஹாரய மாவத்தவுக்கு 500M தூரம் 10 பேர்ச் பெற்றுக் காணி தூய உறு தியுடன் விற்பனைக்கு. 0776109092 048035

617
வீடு சொத்து
கம்பஹா
மாவட்டம்
விற்பனைக்கு

களனி, பொல்ஹேன, 2 படுக்கையறைகள்/ குளியலறைகள் 21 பேர்ச் மேல் மாடி வீ டு தோட்டம். ரூபா 29 .5 மில்லியன் தர கர் வேண்டாம். 07 73864644 048094

641
வீடு சொத்து
கொழும்பு
மாவட்டம்
வாடகைக்கு குத்தகைக்கு

நாவல, ஸ்டூடியோ வகை அப்பார்ட்மென்ட். பிரத்தியேக உள்நுழைவு ரூ. 120, 000/ - தரகர் வே ண்டாம். 0773864644. 048106

647
வீடு சொத்து
மாத்தளை
மாவட்டம்
வாடகைக்கு குத்தகைக்கு

மாத்தளை ஆமினா சாஹிரா தேசிய பாடசாலைகளுக்கு அருகில் இரண்டு அறைகளுடன் வீடு வாடகைக்கு. ரூபா 25, 000 தொடர்பு 0778 989664, 071485 9214. 048303

வாரமஞ்சரி
திருமண சேவைகள்
classified@lakehouse.lk
077 7 278 948
011 2 429 347
- 011 2 429 383
- 011 2 429 342/343


# துஷ்பிரயோகிக்கப்படும் வாழ்வாதார, தொழில் முயற்சிக்கான உதவிகள்

கருணாகரன்

புலம்பெயர் மக்களின் பங்களிப்புக் குறித்து ஆய்வு செய்யும் மாணவியொருவர் வந்திருந்தார். அவருடைய ஆய்வுப் பரப்பு அல்லது ஆய்வுப் பொருள், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் மக்களின் உதவிகள் எப்படியான விளைவுகளைத் தந்துள்ளன? என்பதாகும். இதைக்குறித்து உரையாடிய அவதானங்களில் சிலவற்றை இங்கே பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன்.

புலம்பெயர் மக்களின் உதவிகள் என்பது பல வகையானது. முக்கியமாக இடர்காலங்களில் நெருக்கடியைத் தணிப்பதாகவும் இயல்பான சூழலில் அரசியல், பண்பாட்டு, சமூகவியல் சார்ந்துமாக உள்ளது.

எனவே இதை நாம் வகைப்படுத்திப் பார்ப்பது நல்லது. ஒன்று, நிதி மூலமாக மேற்கொள்ளப்படும் உதவி. இரண்டாவது, அறிவாற்றலின் மூலமானது. மூன்றாவது, அரசியல் ரீதியானது. நான்காவது, துறைசார் பங்களிப்பு.

இதை வகைப்படுத்தினால், முதலில் நிதி மூலமாக மேற்கொள்ளப்படும் உதவியே பெரியது. அதனால் அது பன்முகப்பட்டதாக உள்ளது.

1. நெருக்கடிகால உதவி அல்லது இடர்கால உதவி. இடரை அல்லது நெருக்கடியைத் தணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் உதவி இதில் முதன்மையடையும். போர், சுனாமி, கொரோனா தொற்று என ஒவ்வொரு பேரிடரின்போதும் புலம்பெயர் சமூகத்தின் நிதி ஆதார உதவிகள் மிகப் பெரிய அளவில் இருந்துள்ளன, இருக்கின்றன. இதில் உறவினர்கள், நண்பர்கள் எனத் தெரிந்த சூழலுக்குள் மட்டும் மட்டுப்படாமல், முகமே தெரியாதோருக்கான உதவிகளும் அடங்கும். இந்த முகமே தெரியாதோருக்கு (உதவி தேவைப்படுவோர் என்பதற்கு அப்பால் இவர்கள் யார் என்றே தெரியாத நிலையில்) வழங்கப்படும் உதவிகள் ஒரு புதிய பண்பாட்டுக் கோலத்தையே அடையாளம் காட்டுகிறது.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனின் சிந்தனைப் போக்கிற்கு அமைய, இந்த பன்முகச் சிந்தனை ஒரு பண்பாடாக நம்முடைய மக்கள் மனதிலே உருப்பெற்றுள்ளது. என்பதால்தான் அவர்கள் தமக்குத் தெரியாத முகங்களையும் தமது உறவினராகக் கொண்டு இந்த உதவிகளைச் செய்து வருகின்றனர்.

இது உணவுப் பொருட்கள், உடைகள் தொடக்கம் வாழ்வாதார உதவிகள், தொழில் முயற்சிக்கான உதவிகள், மருத்துவத்துக்கான உதவிகள், கல்விக்கான உதவிகள் எனப்பல வகையாக விரிகிறது. இந்த உதவிகளைப் பயனுறப் பெறுவோரும் உண்டு. இதை துஷ்பிரயோகம் செய்வோரும் உண்டு.

பேரிடர் கால உதவியானது, அப்போதைய நெருக்கடிச் சூழலைத் தணிப்பதற்காகவும் அன்றைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகவும் செய்யப்படுவதாகும். இதில் தனியாட்களாகத் தாமாகவே முன்வந்து உதவுவோருண்டு. அதைப்போல இந்த உதவியானது தனியாட்களுக்கு மட்டுமென்றில்லாது அமைப்புகள், நிறுவனங்கள், சிறுவர் இல்லங்கள், முதியோர் பராமரிப்பு நிலையங்கள், மாற்றுத்திறனாளி அமைப்புகள் போன்றவற்றுக்கு உதவுவதாகவும் உள்ளது. இதைவிட புலம்பெயர் மக்கள் சிலர் அணியாகவோ குழுவாகவோ இணைந்து செய்கின்ற உதவிகளும் இதில் சேரும். அங்குள்ள அமைப்புகளும் இந்த உதவிகளைப் பன்முகத் தன்மையிற் செய்கின்றன.

## முறையான திட்டமிடலும் நேர்மைத்தனமும் இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்ற – பெறப்படுகின்ற உதவிகள்

பேரிடர் உதவியில் உணவு, மருந்துப் பொருட்கள், உடைகள், நிதி போன்றன கூடுதலாக இடம்பெறுகின்றன. பேரிடர் உதவி என்பது அந்தந்தக் காலத்தில் அதிகமாக இருக்கும். பின்னர் இது மெல்ல மெல்லக் குறைவடைந்து இல்லாமல் போய் விடும். அல்லது அதில் கிடைக்கின்ற சில நல்ல தொடர்புகளின் அடிப்படையில் தொடர்ந்து அடுத்த கட்டத்துக்குச் செய்யப்படும் உதவியாக மாற்றமடைகிறது. ஆனால் இதன் பரப்புக் குறைவு.

பேரிடர் தவிர்ந்த வாழ்வாதார உதவி, தொழில் முயற்சிகளுக்கான உதவி எனப்படுவது தெரிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகும். இந்தத் தெரிவை அயலில் உள்ளவர்கள் தொடக்கம் உள்ளூரில் செயற்படும் பொது அமைப்புகள் வரையில் மேற்கொள்கின்றன. சில தெரிவுகளை அரசியற் கட்சிகளும் அவற்றின் செயற்பாட்டாளர்களும் செய்வதையும் அவதானிக்க முடிகிறது. இந்தத் தெரிவில் உள்ள பிரச்சினைகள், தவறுகள், சிக்கல்கள் பற்றித் தனியாக எழுத வேண்டும். ஆனாலும் இந்தத் தெரிவுகளைப் புறக்கணிக்க முடியாது.

## புலம்பெயர் சமூகத்தின் பெருமளவிலான உதவிகளில் குறிப்பிட்ட அளவிலானவை உரிய பயனைத் தராமல் போய் விட்டன

வாழ்வாதார உதவிகள் தவிர்த்து. மருத்துவ உதவிகள், கல்விக்கான உதவிகள், தொழில் முயற்சிக்கான உதவிகள் போன்றவற்றையும் நாம் பார்க்க வேண்டும். இந்த உதவிகள் எல்லாப் பிரதேசங்களுக்கும் எல்லோருக்கும் சரி சமமாகக் கிடைக்கின்றன என்று கூற முடியாது. அதற்கான பொறிமுறை எதுவும் யாரிடத்திலும் இல்லை. அவரவர் தமக்குத் தெரிந்த அளவில் அல்லது தெரிந்த வகையில் இந்த உதவிகளைச் செய்கின்றனர். எல்லாப் பிரதேசங்களுக்கும் உதவியைப் பகிர்ந்து நடைமுறைப்படுத்தக் கூடிய நம்பிக்கையான எந்தக் கட்டமைப்பும் இல்லை என்பதே இதற்குக் காரணம்.

இந்த வாழ்வாதார உதவிகள், தொழில் முயற்சிகளுக்கான உதவிகள், மருத்துவ உதவிகள், கல்விக்கான உதவிகள் போன்றவற்றில் ஓரளவுக்கு வெற்றிகரமாக அமைந்தவை கல்வி, மருத்துவத்துக்கான உதவிகளே. இவை உரிய பயனாளிகளை நேரில் சென்று சேர்வதும், இவை பாடசாலைகள் மற்றும் படிக்கும் மாணவர் என நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாலும் பெருமளவுக்குச் சேதாரமடைவது குறைவு. இதைப்போலவே மருத்துவ உதவிகளும். உரிய பயனாளியின் மருத்துத் தேவை – நோயின் அல்லது பாதிப்பின் விவரம், அவருடைய சிகிச்சை முறைமை, அதன் தாற்பரியம், சிகிச்சை அளிக்கும் நிலையம் அல்லது சிகிச்சை அளிக்கும் மருத்துவர் என்ற மெய் விபரங்களின் அடிப்படையிலும் இவை தொடர்பான தரப்புகளின் கண்காணிப்பிலும் இந்த உதவிகள் மேற்கொள்ளப்படுவதால் சேதாரங்களும் குறைவு. தவறுகளும் தவிர்க்கப்படுகிறது. ஆனால், வாழ்வாதாரம், தொழில் முயற்சிக்கான உதவிகள்தான் இந்த நிதியுதவித் திட்டத்தில் கவலையளிப்பதும் கேள்விக்குள்ளாகியதுமாக உள்ளது. ஏனென்றால், முறையான திட்டமிடலும் நேர்மைத்தனமும் இல்லாமல் மேற்கொள்ளப்படுகின்ற – பெறப்படுகின்ற உதவிகள். இதில் இருதரப்பிலும் தவறுகள் உண்டு.

ஒன்று, இவ்வாறான உதவிகளை வழங்குவோரின் நல்லெண்ணம் மதிப்புக்குரியது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் கொண்டிருக்கின்ற புரிதல் அல்லது விளக்கம் என்பது கவலையளிப்பதாகும். இந்த புரிதல் குறைபாடு அல்லது விளக்க் குறைவு என்பது இவர்களுடைய நல்லெண்ண முயற்சிகளை பலவீனப்படுத்துகின்றன. இந்த உதவிகளைப் பெறுவோரில் பலர் கிடைக்கின்ற உதவிகளை உரிய முறையில் பயன்படுத்தி தமது வாழ்வாதாரத்தையோ தொழில் முயற்சிகளையோ வளர்த்துக் கொள்வதில்லை. பதிலாக இவற்றை அவர்கள் உச்சமாகப் பயன்படுத்திக் கொள்வதுமில்லை. மிகச் சிலர் மட்டும் உரிய முறையில் பயன்படுத்தி வெற்றியடைகின்றனர். சிலர் இவ்வாறான உதவிகளை ஏமாற்றிப் பெறவும் முயற்சிக்கின்றனர். அதற்கேற்ற முறையில் பல தவறான தகவல்களையும் பொய் விவரங்களையும் கொடுத்து உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். சிலர் இன்னும் ஒரு படி மேலே சென்று, ஒரே வாழ்வாதாரத்துக்கும் ஒரே தொழில் முயற்சிக்கும் பலரிடம் – பல தரப்புகளிடம் உதவிகளைப் பெற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய உதவி பெறுகை மருத்துவம், கல்வி போன்ற உதவி பெறுவோரிடத்திலும் உண்டு. ஆனால் அங்கே மிகமிகக் குறைவு. இங்கே வாழ்வாதாரம், தொழில் முயற்சி போன்றவற்றில்தான் அது அதிகம்.

இந்தத் துஷ்பிரயோகம் அல்லது இத்தகைய மோசடிக்குக் காரணம், சரியான கட்டமைப்பு எதுவும் இங்கும் (தாயகத்திலும்) அங்கும் (புலம்பெயர் சூழலிலும்) இல்லாதிருப்பதே யாகும்.

சரியான கட்டமைப்பு ஒன்றோ பலவோ இருக்குமானால் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்கும்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

# BUDGET ADZ

It suits your budget


0777 394 679 | 070 663 33 88

Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
Hotline: 074 031 5517
Leemaka Industries (Pvt) Ltd.

WAREHOUSE FOR RENT
SAPUGASKANDA
70,000 sqft Good Quality Very Clean Warehouse for Rent At Lanka Industrial Estate, Sapugaskanda
Contact : 074 032 2929
Email : indoitalia.negaraja@gmail.com

WANTED
SHOP SPACE
A House / Road front shop
Galle Road
Duplication Road
Marine Drive
Call 77 988 0500
777 272 038
Mail
wme.admn@gmail.com
wme.corpt@gmail.com

Wanted Small Ground Floor House

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING 14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING AND 9.5 PERCH BARE LAND
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

DAHAM HOME BUILDERS (PVT) LTD

THREE-STOREY HOUSE FOR SALE IN KELANIYA
Total Price: Rs. 65 Million
0772 015 390

ARIYARATHNE CONSTRUCTIONS
WAREHOUSE CONSTRUCTION
Polycarbonate
0777 24 23 19 / 0711 24 23 19


OFFICE FURNITURE
AVAILABLE FOR SALE
A variety of used office furniture, in good condition (High-back, Low back, Visitor chairs, Tables, Sofa's, Cupboards, Glass panels and aluminum partitioning etc.) available for sale
Prices negotiable, bulk sale order.
Please contact:
071-79 82 304
for inquiries.

TJC MANGO BAG
0773 828 387 / 0718 844 474



காணி விற்பனைக்கு
0112 883 050

Shoba Kite
www.shobakite.com
Made in Sri Lanka



கிரிபத்கொடவில்



0773 470 681 / 0777 343 274
0777 777 974


## BUDGET ADZ போட்டோ குறும் விளம்பரம்











பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பொருளாதாரம் வங்குரோத்து அடையும்வரை கொள்கையில் விடாப்பிடியாக இருந்த கடந்தகால அரசாங்கங்கள்

## இன்றைய நிலைக்கு வகைசொல்ல வேண்டியவர்கள் அவர்களே

**இலங்கையில் கொவிட் கொள்ளை நோய் மற்றும் பொருளாதார வங்குரோத்து நிலை ஏற்பட்டதன் பின்னர் வறுமைநிலை சடுதியாக அதிகரித்துள்ளது. இலங்கை வறுமை தணிப்பு தொடர்பில் அடைந்திருந்த வெற்றிகள் முழுமையாகத் தலைகீழாக மாறி 2009ஆம் ஆண்டில் காணப்பட்ட வறுமை நிலைக்கு மீண்டும் சென்றுள்ளது. 2020 இல் 12.7 சதவீதமாக இருந்த வறுமைச் சதவீதம் 2021இல் 13.1 ஆக அதிகரித்து 2022.ல் 25.6 ஆக இரு மடங்காக அதிகரித்தது. இது 2009இல் காணப்பட்ட வறுமைச் சதவீதத்துக்கு சமமாகும். இச்சதவீதம் 2023இல் 31 சதவீதம் வரையில் உயர்ந்துள்ளதாக சில நம்பத்தகுந்த தரவுகள் கூறுகின்றன. ஆகவே இலங்கையின் வறுமை நிலையானது மிகத் துரிதமாக உயர்ந்து சென்றுள்ளது. ஆனால் இந்த வறுமைநிலையை தணிப்பதற்கு உரிய முயற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொள்ளப்பட்டனவே தவிர, இதுவரையில் உரிய நிவாரணங்கள் மக்களுக்குக் கிடைக்கவில்லை.**

கொவிட் நோய் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மக்களையும் வர்த்தக நிறுவனங்களையும் காப்பாற்றுவதற்காக இதே காலப் பகுதியில் அபிவிருந்தி அடைந்த நாடுகளும் எழுச்சி பெற்றுவரும் அபிவிருந்தி அடைந்துவரும் நாடுகளும் கூட மீட்புப் பொதிகளை அறிமுகப்படுத்தின. அரசாங்கங்கள் நெருக்கடி நிலைமையின் போது பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்ட போதும், வணிக நிறுவனங்கள் நிலைகுலைந்த போதும் உரிய கொள்கைகளை அமுல்ப்படுத்தி பொருளாதாரத்தின் உயிர் நிலைகளை உரியவாறு பாதுகாத்தன. இதனால் நெருக்கடி நிலை ஏற்பட்ட இரு வருடங்களில் மீண்டும் பொருளாதார மீட்சி நிலையை அடைந்தன. உதாரணமாக தெற்காசிய வட்டகையில் இலங்கையைத் தவிர எல்லா நாடுகளும் சராசரியாக 4.5 சதவீத பொருளாதார வளர்ச்சியைப்பதிவு செய்தன. மாலைதீவு அதிகூடிய 8.2 சதவீத வளர்ச்சியைப்பதிவு செய்தது. இலங்கையோ 7.8 சதவீத பொருளாதார சுருக்கத்தைப் பதிவு செய்தது. ஆகவே இலங்கையின் இந்த மோசமான பொருளாதார சாதனைக்கு கொவிட் தொற்றோ, உலகளாவிய பொருளாதாரப் பின்னடைவோ காரணமல்ல. மாறாக முட்டாள்தனமான பொருளாதாரக் கொள்கைகளும் பொருளாதாரம் வங்குரோத்து அடையும் வரையில் அக்கொள்கைகளில் விடாப்பிடியாக இருந்தமையும் காலம் கடந்த நிலையில் இப்பிரச்சினை ஏற்பட்ட மூலாதாரங்களைக் கண்டறிந்து அவற்றை சீர் செய்யும் முயற்சிகளையும்; தமது நடத்தைகள் காரணமாக நாட்டில் பிரச்சினைகள் ஏற்படக் காரணமாகிய நபர்கள் தமது நடத்தைக்கு பொறுப்புக் கூறும் நிலையையும் ஏற்படுத்தாமல் எல்லாப் பொருளாதாரச் சுமைகளையும் மக்கள் மீதும் வணிக நிறுவனங்கள் மீதும் சுமத்தி பொருளாதாரத்தை மீட்பதாகக் கூறும் முயற்சிகள் நாட்டில் வறுமையையும் மக்கள் மத்தியில் வாழ்க்கை பற்றிய நம்பிக்கை அற்ற நிலையினையும் உருவாக்கி பொதுமக்கள் வாழ்க்கையை அவலநிலைக்குத் தள்ளியிருக்கின்றன.



உலகின் பெரும்பாலான நாடுகள் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்த போது பெரும்பாலான நாடுகளின் அரசாங்கங்கள் மானியங்களையும் உதவித் திட்டங்களையும் வழங்கி மக்களையும் வணிக நிறுவனங்களையும் மீட்டவேளை, இலங்கையோ வரிகளை முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு உயர்த்தி எல்லா மானியங்களையும் வெட்டித்தள்ளி, பொதுமக்களை நட்டாற்றில் விட்டது. அதன் பலனே இன்றைய வறுமை நிலை அதிகரிப்பாகும்.

துறைகள் ரீதியாக வறுமைநிலையினை ஒப்பிடும் போது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சனத் தொகையின் அளவு அதிகரித்துள்ளது. 2019இல் 6 சதவீதமாக இருந்த நகர்ப்புற வறுமை, 2023இல் 18 சதவீதமாக மும்மடங்கு அதிகரித்துள்ள அதேவேளை கிராமிய வறுமை அதே காலப்பகுதியில் 15 சதவீதத்திலிருந்து 32 சதவீதமாக இருமடங்கு அதிகரித்துள்ளது. அதேவேளை இலங்கையின் மிகவறிய துறையாகிய பெருந்தோட்டத் துறையில் அது 34 சதவீதம் என்ற உயர்ந்த மட்டத்திலிருந்து இதே காலப்பகுதியில் 51சத வீதமாக மேலும் உயர்வடைந்துள்ளது.

ஆகவே இலங்கையின் எல்லாத்துறைகளிலும் வறுமை நிலை அதிகரித்துள்ள நிலையில் நகர்ப்புற வறுமையின் சதவீத அதிகரிப்பு மிக உயர்வாக உள்ளது. 2019இல் மேற்கொள்ளப்பட்ட அரசாங்கக் கணிப்பீடுகளில் நாட்டில் சுமார் 30 இலட்சம் பேர் வறுமையில் வாடுவதாக அறிவிக்கப்பட்டது. 2023இல் இந்த எண்ணிக்கை 70 இலட்சமாக அதிகரித்துள்ளதாக சுயாதீனமான கணிப்பீடுகள் கூறுகின்றன. ஆகவே மிகக் குறுகிய காலத்தினுள் 40 இலட்சம் பேர் வறுமையில் வீழ்ந்துள்ளனர் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அதேவேளை 2019 இல் 6966 ரூபாவாக இருந்த தேசிய வறுமைக் கோடு 2022இல் 13777 ரூபாவாக இருமடங்காக அதிகரித்துள்ளமையானது, இறந்து போகாமல் உயிர்வாழ்வதற்கு தேவைப்படும் குறைந்தபட்ச பணத்தின் அளவும் பணவீக்கம் காரணமாக அதிகரித்து மக்களில் புதியவர்களை வறுமைக் குழியில் தள்ளிவிட்டுள்ளது.

அதேவேளை தொழில் புரியும் வறியவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. தொழில் புரியும் வறியவர்களில் மிகப்பெரிய எண்ணிக்கையினர் பெருந்தோட்டத்துறையில் வாழ்கின்றனர். இவர்களுக்கு தொழில் உண்டு. ஆனால் அத்தொழிலின் மூலம் பெறப்படும் வருவாய் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளது. அது வாழ்க்கையை நடத்தப் போதுமானது அல்ல. அது மட்டுமன்றி அரச மற்றும் தனியார் துறையில் தொழில் புரிபவர்களின் வாழ்க்கைத் தரம் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளது. பணவீக்க அதிகரிப்பு, வரிஅதிகரிப்பு, வட்டிவீத அதிகரிப்பு ஆகிய மூன்று சுருக்குகளும் சேர்ந்து தொழில் புரிந்து வருமானம் ஈட்டும் மக்களின் குரல் வளையை நெரிக்கின்றன.

மின்கட்டணம், நீர்க்கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என்பன அதிகரித்து எஞ்சியுள்ளதையும் உறிஞ்சிக் கொள்கின்றன. ஆகவே சம்பளங்களில் எந்த மாற்றங்களும் ஏற்படாமல் நிலையாக உள்ள நிலையில் மக்களின் வருமானத்தில் அவர்கள் முன்னர் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்தி செய்யப்பயன்படுத்திய பணத்தின் ஒருபகுதியை அரசாங்கம் வரியாக உறிஞ்சுகிறது. இன்னொரு பகுதியை அவர்களுக்கு கடன் வழங்கிய வங்கிகள் வட்டிவீத அதிகரிப்பின் மூலம் உறிஞ்சிக்கொள்கின்றன. இன்னொரு பகுதியை தவித்த முயல் அடிக்கும் வியாபாரிகள் உறிஞ்சிக்கொள்கின்றனர்.

ஆகவே தமது வருமானத்தில் உணவுக்கும் கூடபோதியளவு செலவிட முடியாத அவல நிலைக்கு தொழில் புரியும் வகுப்பினர் தள்ளப்பட்டுள்ளனர். நடுத்தர வருமானம் பெறும் மக்களும் கூட தமது வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை அரசாங்கத்திற்கு கொடுத்து அழவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். அவர்கள் அரசாங்கத்தின் தயவில் வாழ்பவர்கள் அல்லர். இது அவர்களின் வாழ்க்கைத் தரத்திலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. கூட்டிக் கழித்துப்பார்த்தால் எவரோ செய்த பாவங்களுக்கான தண்டனையை மக்கள் எல்லோரும் அனுபவித்துத் தீர்க்கவேண்டிய அவல நிலையே இலங்கையில் இப்போது காணப்படுகிறது.

# நைகரின் இராணுவ சதிப்புரட்சியும் மேற்கு ஆபிரிக்க பிராந்திய அரசியலும்



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**பூகோள அரசியலில் ஆபிரிக்க கண்டம் தனித்துவிடப்பட்ட நிலையை உணர்கிறது. வன்முறையும் வறுமையும் போரும் அதிகம் மேலோங்கியுள்ள பகுதியாக காணப்படுகிறது. மனித இனத்தின் தோற்றத்தில் மையப்பகுதியாக அடையாளம் காணப்படும் ஆபிரிக்கா ஐரோப்பியரால் திட்டமிட்டு அடிமைத்தனத்துக்கு உட்படுத்தப்பட்டதுடன் விசப்பரிசோதனைகளுக்கும் உள்ளாக்கப்பட்டு அழிவுக்குள் தள்ளப்பட்டது. ஐரோப்பியர் ஆபிரிக்கரின் நாகரிகத்தின் செழுமையை முழுமையாக அழித்து வெள்ளையின மேலாதிக்கத்தை நிறுவ தற்போதும் போராடிவருகின்றனர். அந்த கண்டத்து நாடுகளின் அரசியல், பொருளாதார இருப்பினை கேள்விக்குட்படுத்தி வன்முறைக் களமாக மாற்றியுள்ளனர். அதற்கான அரசியல் கலாசாரத்தை அந்த மக்களிடம் வளர்த்ததோடு ஆட்சி முறைமைகளை வன்முறை மூலம் கைப்பற்றவும் அதனை அரசியலாக்கவும் ஒத்துழைப்பு வழங்க மேற்குலகம் தவறவில்லை. அத்தகைய அணுகுமுறையின் வரிசையிலேயே மேற்கு ஆபிரிக்க நாடான நைகரில் ஏற்பட்டுள்ள இராணுவ சதிப்புரட்சியை தேடுவதாக இக்கட்டுரை அமையவுள்ளது.**

நைகர் குடியரசின் அரசியல் வரலாற்றில் பிராந்திய முடியாட்சிகளின் சந்ததிகள் முக்கியம் வகித்தது போல் நவீன வரலாற்றில் பிரான்ஸின் குடியேற்றம் முதன்மை வகித்தது. 1960 கள் வரை பிரான்ஸ் குடியரசாக விளங்கிய நைகர் 1960 களிலிருந்து தனிக்கட்சியினதும் இராணுவ ஆட்சியின் கீழும் காணப்பட்டது. 1999 ஆம் ஆண்டு பிரான்ஸ் மாதிரியிலான பாராளுமன்ற ஜனாதிபதி முறைமையிலான ஐந்தாவது குடியரசு யாப்பின் கீழ் தேர்தல் நடைபெற்றது. அதனையும் இராணுவப் புரட்சி முடிவுக்கு கொண்டுவர, 2002, 2004 களில் மீளவும் ஜனாதிபதிக்கான தேர்தல் நிகழ்ந்த போதும், அனைத்து ஜனநாயக அரசியல் முயற்சிகளும் தோல்வியடைந்தன. இறுதியில் 2021ஆம் ஆண்டு நிகழ்ந்த தேர்தலில் முகமட் வசூம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். 26 ஜூலை 2023 அன்று இராணுவ சதி மூலம் வசூம் சிறைப்பிடிக்கப்பட்டு வீட்டுக்காவலில் அடைக்கப்பட்டுள்ளார். இராணுவம் *Abdourahamane Tchiani* தலைமையில் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

நைகர் குடியரசு நிலத் தொடர்ச்சியைக் கொண்ட நாடு. அதன் எல்லை நாடுகளாக வடகிழக்கில் லிபியாவையும், கிழக்கே சாட்டையும், தெற்கே நைஜிரியாவையும் தென் மேற்கே *Benin and Burkina faso* வையும் கொண்டுள்ளது. நைகர் ஒற்றையாட்சி நாடாகும். அங்கு அலுவலக மொழியாக பிரெஞ்சும் தேசிய மொழியாக அராபியும் ஏனைய பிரதேச மொழிகளும் பாவனையிலுள்ளன. இனரீதியில் ஏறக்குறைய 53 சதவீதமானவர்கள் *Hausua* இனத்தவரும் *Zarma* மற்றும் *Songhay* இனத்தவர் 23சதவீதமும் ஏனைய ஏழு சிறுபான்மை இனப்பிரிவினரும் காணப்படுகின்றனர். 99 சதவீதமானவர்கள் இஸ்லாத்தை மதமாகக் கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதனைவிட மிகக் குறைந்த சதவீதத்தில் கிறிஸ்தவர்களும் காணப்படுகின்றனர்.

நைகர் குடியரசின் இராணுவ சதிப்புரட்சிக்கு ஆபிரிக்க கண்டத்திலும் ஏனைய பிராந்தியங்களிலிருந்தும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆபிரிக்க யூனியன் பலமாக கண்டித்ததுடன் சிறைபிடிக்கப்பட்ட ஜனாதிபதியை உடனடியாக நிபந்தனைகள் எதுவுமின்றி விடுதலை செய்யுமாறு இராணுவத்திடம் கோரியுள்ளது. அவ்வாறே மேற்கு ஆபிரிக்க பொருளாதார அமையம் இராணுவப் புரட்சியை கண்டித்ததுடன் எச்சரிக்கை செய்துள்ளது. சிறைபிடிக்கப்பட்ட ஜனாதிபதி முகமட் வசூமின் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது. இது இராணுவத்தின் தவறான நடத்தை என்றும் உடனடியாக மீளவும் ஜனநாயக கட்டமைப்பின் தொழிற்பாட்டை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் பிராந்தியத்தின் ஜனநாயகத்தையும் அதன் அடிப்படைகளையும் பாதுகாக்கவும் பலப்படுத்தவும் அதிகாரத்தை ஜனநாயகத்தின் மூலம் நிலைநாட்டவும் உதவுமாறு கோரியுள்ளது.



அவ்வாறான கண்டனத்தை வெளிப்படுத்திய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் அந்தோனியோ குட்டெரஸ் நைகர் மீதான எந்த இராணுவ சதியையும் ஏற்றுக் கெர்ள்ள முடியாது அனைத்து பங்கெடுப்பாளர்களும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார். மேலும் ஜனாதிபதி முகமட் வாசூமுக்கு முழுமையான ஆதரவை வெளிப்படுத்துவதாகவும் உடனடியாக இராணுவ சதிப்புரட்சியை கைவிடுமாறும் ஐ.நா.கோரியுள்ளது. ஐரோப்பிய யூனியன் பிரான்ஸ் மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பன இராணுவப் புரட்சியை கண்டித்ததுடன் உடனடியாக ஜனாதிபதி முகமட் வசூமை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளனர். பிரான்ஸின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஜனநாயகத்தையும் ஒருமைப்பாட்டையும் அதுசார்ந்த நிறுவனங்களையும் மீளமைக்க பிரான்ஸ் இணைந்து செயல்படும் என வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்க வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜோக் சுலீவன் இராணுவத்தின் நடவடிக்கைக்கு பலமான கண்டனத்தை தெரிவித்ததுடன் ஜனநாயகத்தின் அடிப்படையில் தேர்தல் மூலம் தெரிவான அரசாங்கத்தின் தொழிற்பாட்டை மேற்கொள்ள அனுமதிக்குமாறு எச்சரித்துள்ளது. சிறைப்பிடிக்கப்பட்ட ஆட்சியாளர் அனைவரையும் விடுவிப்பதுடன் வன்முறையற்ற சூழலை உருவாக்க வேண்டும் எனவும் அமெரிக்க பிரஜைகள் மீதான நடவடிக்கை எதுவும் ஏற்படாத வகையில் பாதுகாக்கும் விதத்தில் தமது கண்காணிப்பு அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதே நேரம் இராணுவம் தனது இராணுவ சதிப்புரட்சியை நியாயப்படுத்த முயன்றுள்ளது. குறிப்பாக முகமட் வசூம் தலைமையிலான ஆட்சியில் எத்தகைய பொருளாதாரத் திட்டங்களும் அபிவிருத்தியை நோக்கி முன்வைக்கப்படவில்லை எனவும் அதனால் பொருட்களது விலையேற்றமும் வறுமையும் அதிகரித்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ளது. அதனைவிட ஊழல் அபாயமான நிலைக்கு ஆட்சியாளர்கள் நைகர் நாட்டை உருவாக்கி வருவதாகவும் அவற்றை முடிவுக்கு கொண்டுவரும் விதத்திலேயே ஆட்சி மாற்றத்தை தாம் மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. இதனை கானா நாட்டில் இயங்கும் கோபிஅனான் சர்வதேச அமைதிப்படை பயிற்சி மைய பேராசிரியர் இமானுவேல் குவிசி அனிங் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இத்தகைய இராணுவ சதியை நியாயப்படுத்த முடியாது. மேற்கு ஆபிரிக்கா முழுவதும் ஊழலுக்கு எதிராக தீவிர உணர்வாளர்கள் போராடி வருகின்றனர். மேற்கு ஆபிரிக்காவில் ஊழல் பெரும் யானையை அறைக்குள் வைத்திருப்பது போல் உள்ளது. அதற்காக வன்முறை மூலம் ஊழலுக்கு எதிராக போராடுவதை சாதகமான வளர்ச்சி என கூறமுடியாது எனக்குறிப்பிட்டுள்ளார்.

எதுவாயினும் பிராந்திய ரீதியில் நைகரின் இராணுவ சதி அதிகமான அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக உள்ளூர் குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கிவரும் மேற்கு நாடுகளின் முகவர்களது நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அயல் நாடுகளில் ஆட்சியை தக்க வைக்க போராடும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இது பிராந்திய உறுதிப்பாட்டையும் பாதுகாப்பினையும் பாதிக்கும் விடயமாக அமையவுள்ளது. மாலி இராணுவ அரசாங்கத்துடன் நெருக்கமான உறவை கொண்டுள்ள பிரான்ஸின் நடவடிக்கைகள் நைகரிலும் நிகழ வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. குடியேற்ற ஆட்சிக்காலத்தில் மேற்கொண்ட உறவினை மீளவும் பிரான்ஸ் இப்பிராந்தியத்தில் ஏற்படுத்தி வருவதாக தெரியவருகிறது.

ஆபிரிக்கப் பிராந்தியங்கள் முழுமையாக இராணுவ மயவாக்கத்துக்குள் உட்படுகின்ற போக்கு எழுச்சியடைகிறது. ஜனநாயகத்தின் மூலமான ஆட்சி மாற்றத்தின் கட்டமைப்பும் நிறுவனங்களும் வளர்ச்சியடைய முடியாத நிலைக்குள் காணப்படுகின்றன. இராணுவத்தையே அரச கட்டுமானத்தின் முதன்மை நிறுவனமாக உருவாக்கியுள்ளன. அத்தகைய அரசியல் காலாசாரத்திற்கான கட்டமைப்புகளை தேசிய அரச உருவாக்கங்களில் ஏற்படுத்தியதுடன் அதனையே மேற்கு நாடுகளும் குடியேற்ற நாடுகளும் உக்குவிக்கின்றன. ஒரு பக்கம் பொருளாதார வறுமையும் மறு பக்கத்தில் இராணுவ சதிப்புரட்சிகளும் தேச அரச கட்டமைப்பினை சரியான திசையில் கொண்டு செல்ல முடியாது தடுக்கிறது. இந் நாடுகளை கையாளும் ஆதிக்கப் போட்டி நாடுகள் வன்முறையையும் இராணுவ மயவாக்கத்தையும் ஊக்குவிப்பதாகவே குற்றம் சாட்டப்படுகிறது. இதன் விளைவுகளையே நைகர் எதிர் கொண்டுள்ளது. வன்முறைக்குள்ளால் அரசுகளது தேச கட்டுமானம் நிகழும் பிராந்தியமாக மேற்கு ஆபிரிக்கா மாறியுள்ளதைக் காணமுடிகிறது. இப்பகுதியிலுள்ள நாடுகளில் அனேகமானவை பிரான்ஸின் குடியேற்றத்திற்குள்ளால் அரசியல் கலாசாரத்தை கட்டமைத்தவை என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

எனவே இராணுவமும் இராணுவ ஆட்சியும் நவீன அரசியல் வரலாற்றில் இன்னுமே பிரயோகத்தில் உள்ள அதிகார செய்முறையாக உள்ளது. அதிலும் ஆபிரிக்கா முதலிடத்தில் அமைந்துள்ள கண்டமாக அமைந்துள்ளது. அதற்கான அடிப்படை அந்த நாடுகளிலுள்ள அரசியல் கலாசாரமாகும். அதனைத் தோற்றுவித்த குடியேற்ற நாடுகளும் அதன் எச்சசொச்சங்களும் முக்கியமானவையாக உள்ளன. அது மட்டுமல்லாது தொடர்ச்சியாக மேற்கு நாடுகளுக்கும் புதிதாக எழுச்சி பெறும் சீனா இந்தியா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளது அணுகுமுறையும் போட்டியும் பிராதான விடயங்களாக உள்ளன.

# வேதனையான வேதன முறை

பீ.மரியதாஸ்

**கூலி என்பது ஓர் உழைப்பாளி செய்யும் வேலைக்கான பணம் அல்லது பண்டமான கொடுப்பனவு. எதுவாக இருந்தாலும் அது குறைவாக இருப்பதுவே நியதியாக இருந்து வருகின்றது. அதனால் உழைப்பாளர்கள் ஏழைகளாகவும், வறியோர்களாக இருப்பது யதார்த்தம். இது இயல்பானது என்ற மயக்கமான, தெளிவற்ற விளக்கம் நடைமுறையில் இருக்கின்றது.**



மக்களிடம் காணப்படும் உடையார், இல்லார் வேறுபாட்டின் பிரதிபலிப்பே இது. இதுவே வர்க்கப் பிரிவினை. மனித சமுதாய வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் தோற்றம் பெற்ற இவ்வேறுபாட்டில் உருவானது முதலாளித்துவ சமூகக் கட்டமைப்பு.

முதலாளித்துவக் கட்டமைப்பில் உற்பத்திக் காரணிகளின் உரிமையாளர்கள் உடையோராகவும், உரிதற்றோர், இல்லாதவர்களாகவும் மாற்றம் பெற்றனர். சமூக உட்கட்டமைப்பில் ஏற்பட்ட இம் மாற்றத்திற்கு ஏற்ப அதனைப் பற்றிய விளக்கங்கள் உருவாகின. அவை உடமையாளர்களின் நலன்களுக்கு ஏற்றவாறு கட்டமைக்கப்பட்டன. இதனால் வர்க்க வேறுபாடு இயல்பான நியதி என்ற மாயை ஆழமாக வேரூன்றி வலுப்பெற்றது. இந்த மோசடியை புரிந்துகொண்டு, சமத்துவ நிலையினை ஏற்படுத்தும் வரை வேறுபாடு நிலைத்திருக்கும்.

எண்ணிக்கையில் கூடிய மலையகத் தமிழர்கள் தேயிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர் செறிவான இத்தொழிலுக்கு பராமரிப்புக்கும் உற்பத்திக்கும், தொடர்ச்சியான தொழிலாளர் நிரம்பல் அவசியம். 1970க்குப் பின்னர் இதில் தளம்பல் ஏற்பட்டது. 1988 முதல் 2001 வரை,இரு தசாப்த காலத்தில் இது 58% ஆக வீழ்ச்சியுற்றதாகவும், 3 சதவீதத்தினர் வட, கிழக்கு மாகாணங்களுக்கு குடிபெயர்ந்ததாகவும், தென் மாகாணத்தில் உள்ள சிறு தோட்டங்களில் 20% மான மலையகத் தமிழரும், வட மாகாணத்துக்கு 10% மலையகத் தமிழரும் குடிபெயர்த்ததாகவும், களுத்துறை மாவட்டத்தில் 30000 பேரும், காலி மாவட்டத்தில் 18000 பேரும், மாத்தறை மாவட்டத்தில் 19000 மலையகத் தமிழர்கள் வாழ்வதாகவும் பேரா. சந்திரபோஸ் (2008) கூறுகின்றார். இவர்கள் நகர, தோட்ட, வடக்கு, கிழக்கு மாகாண இந்திய தமிழர் என்று வகைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

தொழிலாளர் செறிவின் தொய்வுக்கு பல காரணிகள் உண்டு. அவற்றில் மிக முக்கியமானது வருமானம் பற்றியது. அவ்வருமானம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது? அதற்கான அளவுகோல் யாது என்பதனை புரிந்துகொண்டால் அதன் சூட்சுமம் தெரியவரும். கூலி நிர்ணயிக்கப்படும் விதம் பற்றி பல கோட்பாடுகள் உண்டு. கூலியும், உற்பத்தித் திறனும் பொருளாதாரத்தின் மிக அடிப்படையானதும், முக்கியத்துவமானதுமாகும் என்று வொஸ்ட்ருட் சாஹன் (vostrut chaahan ) என்ற நூலாசிரியர் கூறுவதோடு, அவை பொருளாதார கொள்கைக்கான அடிப்படைக் கட்டமைப்பினைத் தருவதோடு, பொருளாதார ஸ்திரத்தினை ஏற்படுத்துவதற்கான சட்டகத்தினை (framework)தருவதாகவும் கூறியுள்ளார். ஏதாவது ஒரு சேவைக்கு அல்லது உழைப்புக்கு கொடுக்கப்படும் பணக் கொடுப்பனவாக கூலி கருதப்படுகின்றது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் கூலி அவர்கள் வாழ்வதற்கும், குடும்பத்தினரைப் பராமரிக்கவும் போதுமானதாக இருக்க வேண்டுமென்று அடம் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார். இது கூலி பற்றிய வாழ்வாதார கோட்பாட்டின் பாற்பட்டது. இக் கோட்பாட்டினை தவிர, இரும்பு விதி (iron theory), வீறாப்பு விதி (brazen theory), உபரிக் கோட்பாடு (Surplus theory),வாழ்க்கைத் தராதரக் கோட்பாடு, கூலி நிதித்தொகைக் கோட்பாடு, பேரக் கோட்பாடு, இறுதி நிலை உழைப்புத் திறன் கோட்பாடு ஆகிய கோட்பாடுகள் உண்டு.

இவ்வாறு பல கோட்பாடுகள் இருந்த போதிலும் குறைந்தபட்ச கூலி முறையே நடைமுறையில் இருக்கின்றது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முதலாளிகளின் நீதியற்ற செயற்பாடுகளைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டது இக் கொள்கை. தொழிலாளி ஒருவர் தனது உழைப்பினை அங்கீரிக்கக்கூடிய ஆகக் குறைந்த மட்ட கூலிக்கு விற்பதற்கு இணங்கக்கூடிய தொகை இது. இதிலிருந்து வேறுபடும் வாழ்க்கைக்கான கூலி (Living wage) தொழிலாளர்களின் வாழ்வாதாரங்களை பூர்த்தி செய்யக்கூடிய ஆகக் குறைந்த கூலியாகும். தனி நபருக்கும், குடும்பத்துக்கும் போதுமான உணவு, உறைவிடம், பிற தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய கூலிமட்டம் என்ற விளக்கம் இதற்கு உண்டு. ஜூல்லா ககன் (Julla kagan) என்பவர் தொழிலார்களின் திருப்திகரமான வாழ்க்கை மட்டத்துக்கும், வறுமையில் வீழ்வதில் இருந்து தடுப்பதற்கும் ஏற்ற வருமானத்தை பெறுவதனை குறிப்பதே இக்கோட்பாடு என்று கூறியுள்ளார்.

இலங்கையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளரின் வாழக்கைக்கான கூலிப் பற்றி பேரா.விஜெயச்சந்திரன் பின் வரும் தகவல்களைத் தருகின்றார். தொழிலாளி குடும்பம் ஒன்றின் அளவு (size) 4 பேர்; பெற்றோரும் 2 பிள்ளைகளும், சராசரி வருமானம் பெறுவோர் 1 .54, நாகரிகமான வாழ்க்கைக்கு தொழிலாளி ஒருவருக்கு தேவைப்படும் வருமானம் 83332/= ரூபா, ஒரு தொழிலாளியின் நாளாந்த கூலி 900/= + வாழக்கை செலவு கொடுப்பனவு 100/= மொத்தம் 1000/= . 2021 மார்ச் 5ஆம் திகதி சம்பள சபையால் நிர்ணயிக்கப்பட்டது இது. ஒரு தொழிலாளியின் மாத மொத்த வருமானம் 25828 .75 சதம். இலங்கையில் தரமான குடும்பம் ஒன்றுக்கு தேவையான வாழ்க்கைக்கான கூலி 60330/=, மாதாந்த நிகர கூலி 56136/=. இந்த புள்ளி விபரங்கள் தோட்டத் தொழிலாளர் பெறும் மிக தாழ்ந்த நிலையினை காட்டுகின்றன.

பேரா.சின்னத்தம்பி, விஜெயச்சந்திரன் ஆகியோர் இலங்கை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைக்கான வேதனம் என்ற நூலில் பின்வரும் விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். மத்திய வங்கி அறிக்கை தரவுகளை கையாண்டுள்ளனர். கூலி 3 காரணங்களால் கவனத்திற்கு உரியதாகின்றது. 1.அது இல்லமொன்றின் வருமானத்தின் முக்கிய மூலமாக இருக்கின்றது. 2. மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்வதற்கு போதுமான நுகர்வினை உறுதிப் படுத்துவதற்கு அவசியமாகின்றது. 3. மானிட நீதியினையும், கௌரவத்தினையும் உறுதிப் படுத்துவதற்கு அத்திவாசியமாகின்றது,

மனித சமுதாய வளர்ச்சிக்கும், நீடிப்பிற்கும் வேதனம் அடி ஆதாரமாய் அமைகின்றது என்பதே சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் விளக்கத்தின் சாராம்சம். வேதனமெனும் நிழலுக்கு உருவமாக இருக்கும் உழைப்பு, உழைப்பாளி ஆகியவற்றின் முக்கியத்தினை இதில் இருந்து தெளிவாக புரிந்து கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட நூலிலுள்ள மற்ற தகவல்கள் பின் வருமாறு: 1 .குடும்பமொன்றின் மாதாந்த வாழ்க்கைச் செலவு உணவு: 20508/=, வீட்டுக்கான செலவு 7178/=, உணவு, வீடு தவிர்ந்த செலவு 14896/=, எதிர்பாராத செலவுகள் 2129/=, மொத்தம் 44711/=, மாதாந்த செலவினை சமாளிக்க 26934/= தேவைப்படுவதாக இவ்வாய்வு மதிப்பிட்டுள்ளது. இந்த ஆய்வின் பிற முக்கிய தகவல்கள்; இலங்கையில் பொதுத் துறையில் பயிற்சி பெறா தொழிலாளரின் நாளாந்த வேதனம் 1516/=; மாதாந்த வேதனம் 30330/=; முறைசாரா தேயிலைத் துறையில் தொழிலாளியின் நாளாந்த வேதனம் 797/=; மாதாந்த சராசரி வேதனம் 19925/=;முறை சாரா ரப்பர் துறையில் தொழிலாளி பெறும் நாட்கூலி 825/=, மாதாந்த சராசரி வேதனம் 20625/=; முறை சாரா தெங்கு உற்பத்தித் துறையில் நாட்கூலி 1318/=, மாதாந்த சராசரி வேதனம் 32930/=; விவசாயத் துறையின் நாளாந்த கூலி 1012/=, மாதாந்த சராசரி வேதனம் 25300/=, கட்டுமானத் துறையின் தேர்ச்சி பெறா உதவித் தொழிலாளியின் நாட்கூலி 1079/=; மாதாந்த வேதனம் 26975/=. முறை சாரா துறை எனப்படுவது நியதிகளுக்கு கட்டுப்படாதவை. இவை தொழிற்சங்க அமைப்பற்ற,தொழில் பாதுகாப்பற்ற தொழிலாளர்களைக் கொண்டவை. மேலே தரப்பட்டுள்ள தரவுகள் தோட்டத் தொழிலார்கள் ஒப்பீட்டளவில் மிகக் குறைத்த கூலி பெறுவதனையும், முறைசாரா துறையில் அதனைவிட மோசமான வேதன, வாழ்நிலைக் கொண்டோராகவும் இருப்பதனைக் காட்டுகின்றன.(புள்ளி விபரங்கள் 2017 மத்திய வங்கி அறிக்கைபடி)

கூலி பற்றிய வியாக்கியானங்கள் சார்புத் தன்மையானவை.பொதுவாக முதலீட்டாளர்களுக்கு சார்பானவை.இதன் சூட்சுமத்தினை ஓரளவுக்காவது புரிந்து கொள்வது பயனுள்ளது. பொதுவாக தொழிலாளி தனது உழைப்பினை விற்கிறார் என்று கூறப்படுவது தவறானது, விற்கப்படுவது உழைப்புச் சக்தி என்பதே சரியானது என்று பிரெடெரிக் ஏங்கெல் கூறுகின்றார். "உழைப்புச் சக்தியானது ஒரு பரிவர்த்தனை பண்டமாக இருந்து வருகின்றது. வேறு எந்த பரிவர்தனைப் பண்டத்தையும் போன்றதே ஆயினும் இது தனி குணாம்சம் கொண்ட பரிவர்தனைப் பண்டமாக இருக்கின்றது. அதாவது, இது மதிப்பினைத் தோற்றுவிக்கும் மதிப்பின் தோற்றுவாயாக இருக்கும் தனி குணாதிசயம் கொண்டது" மூலப் பொருட்களை உழைப்புச் சக்தி பாவனைக்கேற்ற நுகர்வுப் பண்டங்களாக மாற்றி அமைக்கின்றது. பண்டங்களை பணம் கொடுத்து நுகர்வுக்காக வாங்குகின்றோம். கொடுக்கப்படும் பணமே விலை. இந்த விலைக்குள் ஒளிந்திருப்பது உழைப்புச் சக்தி. என்றாலும், விலையை நிர்ணயிப்பது உழைப்புச் சக்தியின் உரிமையாளனான பாட்டாளி அல்ல. மாறாக, உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்கும் முதலாளியான முதலீட்டாளர்.

இவ்விதமான விளக்கத்தின் பின்னணியில் தோட்டத் தொழிலாளரின் கூலி நிலைமையின் பரிணாமம் பின்வருமாறு இருந்துள்ளது."தேயிலையே இலங்கை உயிரின் குருதி" என்று மாற்றமுறும் இலங்கையின் தேயிலைத் தொழில் ( Sri Lanka tea industry in transition Forrest ) என்ற நூலாசிரியர் கூறுகின்றார். இந்த உயிரின் குருதிற்கு உடம்பிலுள்ள குருதி, வியர்வை, ஈற்றில் உடல் ஆகியவற்றை அர்ப்பணிக்கும் தொழிலாளியின் கூலி காலத்துக்குக் காலம் ஆமை வேகத்தில் மாறி வந்துள்ளது. இம்மாற்றங்கள் தொழில் கொள்வோரின் பரோபகாரத்தின் விளைவினால் அல்ல. காலத்தின் நெருக்கடி, முகாமைத்துவ மாற்றம், அரசியல் நிலைமை,தொழிலாளரின் தன்முனைப்பு போராட்டம், தொழிற்சங்கப் போராட்டம் ஆகியவற்றின் விளைவாகும். 1823 முதல்' 1972 வரையான காலத்தில் தோட்டங்கள் பிரித்தானியரின் உடைமை. உரிமையாளர்கள் கூலியினை நிர்ணயித்தனர். 1930 வரை தொழிற்சங்க முனைப்புகளும், முயற்சிகளும் இல்லாத,பெரிய கங்காணிகளின் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளர் இருந்த இருள் சூழ்ந்த காலம். இதற்குப் பின்னரே தொழிலாளரின் போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கின. போராட்டங்கள், அடக்கு முறைகளுக்கு எதிரான, கூலி உயர்வுக் கோரிக்கை ஆகிய இரு நோக்குகளைக் கொண்டிருந்தன. கூலி உயர்வு கோரிக்கை படிமுறை இதனைக் காட்டுகின்றது.

அன்றைய கட்டத்தில் பெற்றோருடன் சிறுவர்களும் வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. பால் அடிப்படையிலும், வயது அடிப்படையிலும் கூலி நிர்ணயிக்கப்பட்டது. ஆணுக்கு 46 சதம், பெண்ணுக்கு 37 சதம், சிறாருக்கு 25 சதம் என ஆரம்பித்த நாட்கூலி இன்று 900 ரூபாவாக உயர்ந்துள்ளது. 200 வருட காலமாக ஊர்ந்து வந்துள்ள கூலி உயர்வு இது. 1984 இல் சிறுவர் கூலி இல்லாமலாக்கப்பட்டதோடு,1987 இல் பால் அடிப்படையான கூலி வேறுபாடும் ஒழிக்கப்பட்டது.

போராட்டங்களின் மூலமாகவே கூலி உயர்வு சாத்தியமாயிற்று. இதற்காக தொழிலாளர்கள் தொடர்ந்து பல இன்னல்களுக்கு மத்தியில் போராட வேண்டியிருந்தது. போராட்டங்கள், சட்டப்படி வேலை செய்தல்,மெதுவாக வேலை செய்தல் போன்ற பல வடிவங்களில் மேற்கொள்ளப்பட்டன. முகாமையாளர்கள் பலாத்கார எதிர் நடவடிக்கைகளின் போது தொழிலாளர்களும் வன்செயல்களுக்கு தள்ளப்பட்ட சம்பவங்கள் பல நடந்துள்ளன. இதற்கு மாற்று வழியாக கூட்டு ஒப்பந்த முயற்சி 1951இல் கம்பெனிகளுக்கும், இ.தொ .கா வுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டது. அதில், குறைந்த கூலி அளவு, வீடு, மருந்து உட்பட பிற நலன்கள் என்ற விடயங்களும் உள்ளடங்கியிருந்தது. காலவரையறையினைக் கொண்டிராத இவ்வொப்பந்தம் பின்னர் தொடரப்படவில்லை. உற்பத்தித் திறன் அடிப்படையிலான கூலி இவ்வொப்பந்தத்தால் நிர்ணயிக்கப்பட்டதாக ஸ்கந்த குணசேகர என்ற நூலாசிரியர் கூறியுள்ளார்.

கூலி உழைப்புக்கான விலை வேலை செய்வோரின் குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு சமமாக இருக்க வேண்டும். கூலியின் விலையும், அதனைப் பெறுவோர் நுகரும் பொருட்களின் விலைகளும் முதலீட்டாளர்களால் நிர்ணயிக்கப்படுவதால் அவர்களுக்கு இரு வழிகளிலும் லாபம் கிடைக்கின்றது. காரணம் அவர்களிடமே உற்பத்திக் காரணிகள் சிக்கி இருப்பதாகும். உற்பத்திக் காரணிகள் எவ்வாறு அவர்களது உடமைகளாக மாறியது? பொருட்களை உற்பத்தி செய்ய குறிப்பிட்ட கால அளவு உழைப்பு தேவைப் படுகின்றது. இந்த கால அளவினை சமூகவழி உழைப்பு நேரம் என்பர். தொழிலாளி குறிப்பிட்ட நேர உழைப்பிற்கு மேலதிகமாக வேலை செய்கின்றார். இது உபரி உழைப்பு எனப்படுகின்றது. இந்த உபரி உழைப்புத்தான் மூலதனத்தின் தோற்றுவாயும், மூலமும். உபரி உழைப்பு சேமிக்கப்பட்ட உழைப்பாகி, மூலதனத்தை உருவாகின்றது. இதனை நடைமுறையோடு விளங்கிக்கொள்வது பயனுள்ளது.

முன்மொழியப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கான வேதன உயர்வு (Proposed wage increase for tea plantation workers Janaka Ratnasiri, 2021 .02 .16 ) என்ற நூலாசிரியர், ஒரு தொழிலாளி 30 நிமிட தேநீர் இடைவெளியுடன் 6 மணித்தியாலம் வேலை செய்வதாகவும், மாதத்தில் 16 /18 நாட்கள் வேலை செய்வதோடு, நாட் கூலிக்கு மேலதிகமாக பறிக்கும் கொழுந்துக்கு 25/= முதல் 30/= வரை பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளதோடு, பிற துறைகளில் மாதாந்த சம்பளம் பெறும் தொழிலாளர்களுக்கு உள்ள அமைய,சுகவீன விடுமுறைக்கு உரித்தற்றோர் என்று குறிப்பிடுகின்றார். தொழிலாளிக்கு வேலை இல்லையேல் கூலி இல்லை; வருடாந்த விடுமுறையோ,வர்த்தக விடுமுறையோ கிடையாது. ஊ.சே.நிதி மொத்த வேதன அடிப்படையில் அல்லாது, அடிப்படை வேதன அடிப்படையில் கணிக்கப்படுவதோடு, இது ஊ.சே. நி.சட்டத்திற்கு முரணானது என்று கூறும் அவர்,தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடு, வைத்திய வசதிகள் இல்லாததையும் குறிப்பிட்டுள்ளார்.

தேயிலை வியாபார விபரங்களும் இவரது நூலில் கூறப்பட்டுள்ளன. தேயிலை ஏற்றுமதியின்போது ஏற்றுமதியாளர்கள் வெளிநாட்டு கொள்வனர்களுக்கு விநியோகிக்க கூடுதல் தொகை வாங்கப்படுவதாகவும், சுமார் 3 சதவீதமே உள்நாட்டு விநியோகத்துக்கு வாங்கப்படுகின்றது என்றும் கூறுகின்றார். தேயிலை சபையின் தரவுகளின்படி சுமார் 325 ஏற்றுமதியாளர்கள் இருக்கிறார்கள். கூடிய லாப விகிதம் காரணமாக தற்போது பிராந்திய கம்பெனிகளும் ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ளன. 2019 ம.வங்கி அறிக்கையின்படி ஒரு கிலோ தேயிலைக்கான ஏல விற்பனை ரூ 566 .67; சராசரி ஏற்றுமதி விலை ரூ822 .25. ஆகவே லாபம் ரூ275 .58 . மொத்த உற்பத்தி 300 .13 மில்.கிலோ. ஏற்றுமதி செய்யப்பட்டது . 292 .65 மி.கிலோ.ஏற்றுமதியாளர்களின் மொத்த லாபம் 80 .65 பில்.ரூபா. ஒரு கிலோவுக்கான ஏற்றுமதி வரி 10 ரூபா; மொத்தம் 2 .9 பில்.ரூபா. தேயிலை விளம்பரத்துக்கு ஒரு பில்.ரூபா. தரகர் கொடுப்பனவு 1 அல்லது 2 .9 பில். ரூபா. வரிகள் யாவும் செலுத்தப்பட்ட பின்னரான லாபம் 65 பில்.ரூபா.

ஒவ்வொரு கம்பெனிக்கும் 150 உத்தியோகத்தர்கள் இருப்பதாகக் கொண்டால், மொத்தம் 16250 பேர். ஒவ்வொருவரும் பெறக்கூடிய மாத சம்பளம் 400 ,000 ரூபா. இதேவேளை கொழுந்து பறிப்போர் பெறும் வருமானம் இத்தொகையைவிட 1 /25 குறைவானது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு கிலோ தூள் உற்பத்திக்கு 4 கிலோ தளிர் தேவைப்படுகின்றது என்பது மரபு வழி வாய்ப்பாடு.தொழிலாளி நாளொன்றுக்கு 18 கிலோ கொழுந்து பறிக்க வேண்டுமென்பது நியமம். இதன் படி 4 1 /2 கிலோ தூள் கிடைக்கின்றது. இதனை சராசரி விலையோடு பெருக்கினால் வரும் தொகையினை விட மிக சொற்பமே கூலியாகக் கிடைக்கின்றது.

ஜனக ரத்னசிறியின் விளக்கத்தின்படி நாளொன்றுக்கு 18 கி.கொழுந்து பறிக்கப் படுமிடத்து 4 1 /2 கி.தூள் உற்பத்திசெய்யப் பட முடியும். விற்கப்படும் விலைக்கேற்ப இதில் அரைவாசி தேயிலைத் தூளுக்கான வருமானம் கூட தொழிலாளிக்குக் கிடைப்பதில்லை. அதேவேளையில் கொடுக்கப்படும் வேதனத்திற்கு,செய்யப்படும் 6 மணி நேரத்தில் அரைவாசிக்கும் குறைவான 1 1 /2 அல்லது 2 மணி நேர உழைப்பே போதுமானது. இதனால் 4 முதல் 4 1 /2 மணிநேர உபரி உழைப்பு கம்பனிக்குக் கிடைக்கின்றது. இந்த உழைப்புச் சுரண்டல் கொம்பனிகளின் மூலதன திரட்டினை மேலும் அதிகரிக்கின்றது.

பேரா.விஜெயச்சந்திரன் தனது நூலில் 2020 /21 ஆண்டுகளில் தேயிலைக்கான உற்பத்திச் செலவு 618 .49 சதம் என்றும், 2021 மார்ச் மாதத்துக்கும் 2022 செப்டம்பர் மாதத்துக்கும் இடையில் தேயிலையின் சராசரி விலை ரூ1420 .55 சதமாக அதிகரித்த வேளையில், ஏல விற்பனை சராசரி விலையைவிட குறைவாகவே அதிகரித்ததாகக் குறிப்பிடுகின்றார். இவ்விளக்கங்கள் யாவும் வருமானத்துக்கும் தொழிலாளியின் வேதனத்திற்கும் இடையில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டுவதோடு, இதில் மறைந்துள்ள பாரிய மோசடியினைக் காட்டுவதாகவும் இருக்கின்றது.

தற்போது பிரித்தானியாவிலும், அமெரிக்காவிலும் சி.டீ.சி.(C T C ) தூளுக்கு கிராக்கி கூடியுள்ளது. 2019 ம.வ.வங்கி அறிக்கையின் படி கிலோ சராசரி 797/= ரூபாவுக்கு, 285 மில் கிலோ கருந்தேயிலைத் தூள் ஏற்றுமதி செய்யப்பட்டது;இவ் ஏற்றுமதி வருமானங்களும் தேயிலை வருமானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும்.

இன்று தேயிலைத் தோட்டங்கள் கருப்பந்தைல மரக்காடுகளாகி உள்ளன. இதன் மூலமும், பிற இன மரங்களின் மூலமும் கிடைக்கும் வருமானமும் கம்பெனிகளுக்குக் கிடைப்பதோடு, ஊடு பயிராக வளர்க்கப்படும் கோப்பு, மிளகு போன்றவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும் உள்ளது.

மூடப்பட்டுள்ள பெருந்தொகையான தொழிற்சாலையின் இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள் விற்கப்படுகின்றன; நெருக்குக்கு இரையாகும் தொழிற்சாலைகளின் பொருட்கள் விற்கப்படுவதாலும் வருமானம் கிடைக்கின்றது. பங்களாக்கள் வாடகைக்கு விடப்பட்டு அல்லது சுற்றுலா விடுதிகளாக மாற்றப்பட்டு வருமானம் குவிக்கப்படுகின்றது. கம்பனிகள் பல வழிகளில் பெருந்தொகை வருமானத்தினைப் பெறுகின்றது.

இத்தகைய வருமான குவிப்புக்கு



தொழிலாளரின் உழைப்பே மூல காரணி. ஆனால் அவர்கள் இச் சுழற்சியில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டு, எவ்விதமான பங்கு மற்ற விலக்கி வைக்கப்பட்டுள்ள நிலையே நடைமுறையில் இருக்கின்றது. இத்தகைய நச்சு வட்டத்தில் இருந்து தொழிலாளர்கள் விடுவிக்கப் பட்டு, அவர்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான வேதனம் கொடுக்கப்பட வேண்டும். இதற்கேற்ப,தொழிலாளரின் வேதனம் நிலைமைக்கேற்ப மீளாய்வுக்கும், மீளமைப்புக்கும் உள்ளாக்கப்படவேண்டும். தொழிலாளர் இன்று பெறும் வேதனம் பல போராட்டங்களின் மூலமாகவே கிடைத்துள்ளது. போராட்டத்தைத் தவிர்ப்பதற்காக பேச்சுவார்த்தை மூலம் சுமுக இணக்கதிற்காக கூட்டு ஒப்பந்தம் செய்யப்படுகின்றது. 1951இல் கம்பெனிகளுக்கும், இ.தொ.கா.வுக்கும் இடையே கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டு, நாளடைவில் அது காலாவதி ஆனது. 1992 வரை இ.தொ.க., தே.தோ.தொ.சங்கம், அரசாங்க பிரதிநிதி , கம்பனி பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய சம்பள நிர்ணய சபையால் கூலி நிர்ணயிக்கப்பட்டது. இதில் வாழக்கைச் செலவு,வேலை நாட்களின் எண்ணிக்கை, சமூக நலன் ஏற்பாடுகள் போன்ற அம்சங்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

1992இல் தோட்டங்கள் மீண்டும் தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு, 23 பிராந்திய கம்பனிகளின் முகாமைத்துவத்தின் கீழ் சென்றன. அதனோடு கூட்டு ஒப்பந்த முறை மீண்டும் உயிர்பெற்றது. 1992 இல் கந்தப்பளை தொழிற்சாலை ஹோட்டலில் அது கோலாகலமாக அரங்கேற்றப்பட்டது. முதலாளிமார் சம்மேளன பிரமுகர்கள், இ.தொ.கா.,தே.தோ.தொ.ச. பிரமுகர்கள், அமைச்சர் , கம்பனியொன்றின் முகாமையாளர் உட்பட பல பிரமுகர்களின் பிரசன்னத்தோடு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2 வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்பட்ட இவ் வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், கைச்சாத்திட்ட தொழிற்சங்கப் பிரமுகர்கள் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு சுற்றுலா மேற்கொண்டமை சந்தேகத்தினை வலுப்படுத்தியது. இந்த ஒப்பந்தத்தில் வாழ்க்கை செலவு கொடுப்பனவு நீக்கப்பட்டு,கூலி உறைநிலையில் வைக்கப்பட்டது.கூட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தொழிலாளர்களின் ஏதோ ஒன்று அல்லது பல நலன்கள் இல்லாமல் ஆக்கப்பட்டன. அவற்றினை தெரிந்து கொண்டே தொழிற்சங்கத்தினர் கையொப்பம் இட்டுள்ளனர். 2015ஆம்ஆண்டு ஒப்பந்தத்தில் வெளியார்(Out grower ) பயிரிடல் முறைமை, ஒப்பந்த நடைமுறை காலத்தில் படிப்படியாக புகுத்தப்படும் என்ற சரத்து உள்ளது. அதனை அறிந்து கொண்டே தொழிற்சங்கத்தினர் ஒப்பமிட்டுள்ளனர். இதன் பலனை வேதனையோடு தொழிலாளர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களது வாழ்க்கையும், வாழ்க்கை முறையும் நாசமாகியுள்ளது. கொம்பனிகளுக்கு அதனால் எந்தவித பாதிப்பும் இல்லை. இதனைப்பற்றி தொழிற்சங்கங்கள் மௌனம் சாதிக்கின்றன. இரு சாராருக்கிடையிலான கையொப்பம்இடப்படா ஒப்பந்தத்துக்கு அப்பாற்பட்ட முறைமை இது என்பதனை தொழிற் சங்கத்தினர் புரிந்துள்ளனரா என்ற சந்தேகம் எழுகின்றது.

2019ஆம் ஆண்டுக்கு பின்னர் நாட்டில் குழப்பகரமான நிலைமை ஏற்பட்டது. சமூகக் கட்டமைப்பு ஆட்டங்கண்டது. இருள் சூழ்ந்த நிலையில் கூட்டு ஒப்பந்தம் அனாதையாகி செயல் இழந்தது. தொழிலாளர்களின் கொந்தளிப்பினை சமாளிப்பதற்காக அரசாங்கம் நேரிடையாக கூலி விடயத்தில் தலையிட்டு, மீண்டும் சம்பள நிர்ணய சபையின் மூலம் கூலியினை உயர்த்த வேண்டியதாயிற்று. கபடத்தனமும்,தெளிவும் அற்ற தொழிற்சங்க தலைவர் ஒருவரால் நாள் ஒன்றுக்கு 1000/= ரூபா கூலிவேண்டும் என்று கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இது நடை முறைக்கு வருமா என்று சந்தேகப்பட்ட மற்ற தொழிற்சங்கங்களும்,சிவில் அமைப்புகளும் தொடர் போராட்டங்களின் மூலம் அழுத்தம் கொடுத்ததால் சம்பள சபை நாள் கூலியாக 900/= ரூபாவும், வாழ்க்கைச் செலவு கொடுப்பனவாக 100/= ரூபாவும் கொடுக்கப்பட வேண்டும் என்று 2021 மார்ச் மாதம் 5ஆம் திகதி தீர்மானித்தது .2019 இல் அதிகரிக்கத் தொடங்கிய பொருட்களின் விலைகள் இன்று பல மடங்கு அதிகரித்துள்ளன. இதனால் தொழிலாளர்கள் போதிய அளவு சாப்பாடு இன்றி பட்டினி கிடைப்பதோடு, அவர்களின் பிள்ளைகள் படிப்பினை கைவிட்டு, பட்டினியோடு லயங்களில் முடங்கிக் கிடக்கின்றனர். பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தொழிலுக்குச் சென்று குற்றுயிரோடு நோயாளர்களாக அல்லது பிணமாக வருகின்றனர்.

வாழ்க்கை சுமையால் திணறிய போதும், காய்ந்த வயிற்றோடு தொழிலார்கள் உழைத்துக்கொண்டே இருக்கின்றனர். கொரோனாவால் நாடே முடங்கிய கட்டத்திலும் தேயிலை, றப்பர் தோட்டத்தொழிலாளர்கள் உழைத்துக்கொண்டே இருந்தனர். இவர்களுக்கு விடிவு உண்டா என்றால், நிச்சயமாக உண்டு என்பதே பதில். மாற்றமும், முன்னேற்றமும் இயற்கை விதி. அமைப்பு மாற்றம் கோரிய குரல் ஒலித்துக்கொண்டே இருக்கின்றது.



## எங்கே எங்கள் நிலம்

எம். ராமதாஸ்
இறம்பொடை

ஆண்டக்கத மாண்டக்கத
ஆதியிலே வந்த கத
ஆண்டவனே எங்க கத
அந்தியிலே செத்தக்கத....
தொலைதூர காட்டயெல்லாம்
தூறுவாரி விட்டமக்க
அரைவாசி இடத்துக்கின்று
லாயக்கத்து போனமக்க....
கரையானுக்கும் பூரானுக்கும்
சொந்தமான வீடிருக்கு
கல்லு பொந்தில் குடியிருக்கும்
நாகத்துக்கும் வீடிருக்கு....
எறநூறு ஆண்டுகளாய்
இருந்த நெலம் சொந்தமில்ல
ஆதிக்க சிந்தனைக்கும்
எள்ளளவு கொறச்சலில்ல....
நூறாண்டு தாண்டிவிட்டும்
மாறாம போயிருக்கு
நாறிப்போன இந்தகத
நாள்தோரும் தானிருக்கு....
தலைவருக்கு கொறைச்சலில்ல ....
கூப்பாட்டுக்கு கொறச்சலில்ல ...
தொண்டருக்கு கொறச்சலில்ல....
கொறைகளுக்கு கொறச்சலில்ல....
வேளப்பாக்க மட்டும் தானா
வேர்வை சிந்தும் எங்க சனம்
வேளை முடிஞ்சதன்னா
வெட்டப்பய நாங்கதானோ
□எங்கேடா எங்க நெலம் ...□
கேக்கும் காலம் வந்திரனும்....
சங்க கடிச்சி தின்னும்
காலம் ஒன்னு வந்திடனும்.....
நாங்க உப்பு தண்ணி தந்தவிங்க
நன்றி கெட்ட எச்ச நீங்க
எள்ளுக்கூட பொறி எறயாதுடா
எங்க வவுறெறிஞ்சா.....
எங்கேடா எங்க நெலம்
(என் நெஞ்சம் கொண்ட ஈரம்)




## அகதிகள்



இணுவில் வாகீசன்

ஊரின்றி உறவின்றி
உடல் சாய நிலமின்றி
உடமைகளின்றி உயிருடன்
உயிர்காக்க நாடோடிகளாய்
உலகில் இன்றும் அகதிகள்


புலம்பெயர மனமின்றி
புலம்பெயர்ந்தும் தெருவினிலே
நிலமின்றி வாழும் மக்கள்
உலகினிலே அழு குரல்களுடன்
உலகமதை கேட்கவில்லை

பாதுகாக்கவென தினங்கள்
பாதுகாக்க தவறிவிட்டோம்
பாதை வழி இல்லா அகதிகளை
பாதுகாப்பார் யாருமில்லை
பாவமென புலம்பித்திரிகின்றோம்

## ஒரு பட்டாம்பூச்சியாய் நான்!

ச. இராஜ்குமார்

நின் நினைவுகளில் நானில்லை
உன் கனவுகளில் ஏனோ நானில்லை
எளிதில் எனை மறந்தாய்
எதிரில் வர யாரோவென கடந்தாய்
உன் மனக்கிளையிலிருந்து
என் ஞாபக பூக்களை உதிர்த்தாய்
மரித்த பூக்களிடமிருந்து
மகரந்தம் தேடியலைகிறேன்
ஒரு பட்டாம்பூச்சியாய்....!!



## மாறுமா... மலை... அகம்...?

ஷெல்லிதாசன், திருகோணமலை

இரு நூற்றாண்டுகளாகியும்
இருள் விலகா வாழ்க்கை
அருள் வேண்டிப் பல
அரசியல் (ஆ) சாமிகளை
தோள் காவி துயர்களைய வேண்டியும்
பாரா முகமாகி தமது
பங்குகளுக்குப் பங்கம் வராமல்
காய்களை நகர்த்தி
பதவி இருக்கைகளை தக்கவைக்கும்
மனப்பாங்குகளில்
மண்ணுக்குள் தலை புகுத்திய
தீக்கோழித்தனத்தில் அவர்கள்

அட்டைக் கடிக்குள்ளும்
அன்றாடம் காச்ச வழியற்ற
வெறு வயிற்றுத் தேனீர் குவளைக்குள்ளும்
நித்தம் நித்தம்
வாழ்க்கையைத் தொலைத்தும்
அல்லாடும் மனித ஜீவன்களாய்
நாங்கள்

வோட்டுக்களின் போது மட்டும்
எங்களது முகவரிகள் தேடி
வாக்குறுதிப் பல்லவி பாடும்
அரசியல் வாடிக்கையாளர்கள்
இவர்களது பல்லவிகளில்
சரண் அடைந்து
ஓடும் "தண்ணி"யில் நீந்தி விளையாடி
களிகூர ஒரு கூட்டம் பின்னால்
அலைபாயும்

ஈரைந்தடிக் காம்பராக்களில்
இரண்டு மூன்று குடித்தனங்கள்
இரவு பகல் உழைத்தும்
ஈடேறா வாழ்வியல்கள்
பலவண்ணக் கொடிகள்
படபடக்கும் காற்றினிலே
ஒரு வண்ணமும்
எங்களது உணர்வுகளின்
மேலைக் காற்றுப்படாத
மெத்தனப் போக்குகளின் பயணத்தில்

பணம்பண்ணிப்போகும் இவர்களின்
பண்பாட்டு அரசியலில்
இனியும் விடியல்வருமென எண்ணி
இன்னும் எத்தனை நூற்றாண்டை
பணயம் வைத்து நாம் வாழ்வது!



## மௌனம் கலைத்திடு பெண்ணே..!

ஏரூர் கவிமாமணி எம்.ரி.எம்.அன்ஸார்

வெறுமையான மனதிற்குள்
கருவாக வந்தவளே உந்தன்
கடைக்கண் பார்வைக்குள் என்னை
சிறைப் படுத்துகிறாயே!

தஞ்சமே நீயென
நெஞ்சம் நிமிர்த்துகிறேன் – தினம்
மிஞ்சும் அன்பினிலே உன்னில்
மஞ்சம்கொள்கிறேன்!

இரவின் தூக்கம்
இன்பத்தைத் தருகிறது கனவில்
நீ வரவே மனம்
களிப்பில் திளைக்கிறது!


ஒரு பொய்யாவது
சொல் சகியே என்னை
விரும்புகிறேனென்று நானும் மெய்யாகவே
உயிர் வாழ்வேன்!

எதிர்காலம் நீயாக
என்னைத் தொலைக்கிறேன் நீ
புதிர்க்கோலம் போடாதே என்
பிஞ்சு நெஞ்சம்
தாங்காதே!

மௌனம் கலைத்தே
ஏதாவது பேசிடு உன்னில்
மையல் கொண்டதற்கு – நிஜச்
சான்றாய் அமையட்டும்!

## பூமி வெப்பம்

குருமண்வெளி ரவி




உலகத்தலைவர்களே!
ஒன்று சேருங்கள்
பூமி வெப்பத்தை
வெகுவாக குறைப்பதற்கு
விரைந்து பேசுங்கள்
கவலையாய் இருக்கிறது
ஜூலை இரண்டாயிரத்து
இருபத்து மூன்று இதுவரை
அதிக வெப்பமாம்!
இப்படியே போனால்
என்னவாகும் எதிர்காலம்?
உலகில் உணவுப்பஞ்சம்
ஏற்படப்போவது
உறுதியாகிவிட்டது
இதற்கு சான்று
இந்தியாவும்,
ஐக்கிய அமீரகமும்
அரிசி ஏற்றுமதிக்கு
தடையை விதித்ததுதான்
இன்னும் தாமதமேன்
இன்றே பேசுங்கள்
பூமியின் வெப்பத்தை
வெகுவாக குறைப்பதற்கு
விரைந்து பேசுங்கள்!

## மழை

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி



மண்மகள் மகிழ்ந்திட
விண்ணவள் அழுதிடும்
விசித்திரம்

வறண்ட நிலத்திற்கு
திரண்ட மேகங்கள்
செய்யும் நீரபிஷேகம்

கோடையின் கொடுமைக்கு
வாடையோடு வந்திறங்கும்
வரப்பிரசாதம்

தூறலும் சாரலும்
குளிர் தூவிக்
காதல் செய்யும்
குதூகலம்
மழை

## வறுமையில் ஓர் நாள்

வி.தீபன்ராஜ்
நானுஓயா கிளரண்டன்

என்னை பார்த்து சிரிக்கும் பசியே
தோற்கிறேன் ஒரு இலை சோற்றுக்கு
பசியின் அருமை தெரியாத உன்னிடத்தில்
ஏழையின் தவிப்பின் தனித்துவமாம்
தாகம் தீர்க்க வழியின்றி
வழியற்று போன அகதியாய்
உணர்வற்ற ஏழையின் வறுமையில்
வறுமை என்ற வாழ்கையில்
வாழ்கை என்னும் ஏழ்மையில்
ஏழ்மை என்ற பசியில்
பசி என்னும் பட்டினியில்
பஞ்சம் தீர்க்க வழியில்லாமல்
வழியில் தேடிய நாட்களைவிட
பசியில் தேடிய நாட்கள் அதிகம்
பணம் உள்ளவன்
உணவின் ருசியை தேடுகின்றான்
பணத்தின் வாசனை படாதவன்
பசியில் உணவை தேடுகின்றான்

## மனசுக்கு ஆறுதல்

ஏரூர் ஸன்

இழப்பொன்றின் 'வலி'
அது
இழந்தவர்களுக்குத்தான்
தெரியும்

இழப்பொன்றின் 'வெகுமதி'
அதுவும்
இழந்தவர்களுக்குத்தான்
தெரியும்

இதனால்...
எத்தனை கவலைகள்,
எத்தனை இன்னல்கள்,
எத்தனை பேச்சுக்கள்,
எத்தனை ஏச்சுக்கள்...
அத்தனைக்கும்
இறைவனை நம்புதல் மட்டுமே
சுகமான ஆறுதல்;

ஆம்... வாழ்வில்
இழந்தவைகளுக்கும்
இழக்க இருப்பவைகளுக்கும்
பின்னால்
அவனே வைத்துள்ளான்
மிகப்பெரிய வெற்றியை
என்றெண்ணுதல் மட்டுமே

## த(க)ண்ணீர்க் கதை.....

மக்கொனையூராள்

கழனி எல்லாம் காஞ்சு போச்சு
மண்ணெல்லாம் வறண்டு போச்சு
ஆறு குளம் வத்தியாச்சு
வெதச்சிருந்த பயிர் எல்லாம்
வாடித்தான் போயாச்சு
விவசாயி தலையெழுத்து
தண்ணியால மாறிப் போச்சு

குடிக்கவும் தண்ணி இல்ல
குடும்பம் எல்லாம் தவிக்கலாச்சு
கொடம் எடுத்து தொலதூரம்
நடபோட வேண்டியதாச்சு

சமச்சிச் சாப்பிடவே
வழியில்லா எங்களுக்கு
பச்சத் தண்ணியும்
இண்டக்கி இல்லாமல் போயாச்சு

ஒதடெல்லாம் உலர்ந்து போச்சு
தொண்டக்குழி காய்ஞ்சு போச்சு


தொலதூரம் போறத்துக்கும்
ஒடம்புல தெம்பில்லயே
எங்கட நெலமயதான்
பார்க்கிறதுக்கு ஆளில்லயே

நகரத்து மனுசர் எல்லாம்
நீச்சல்கொளத்துல
விழுந்து குளிக்கிறாங்கலாமே...
நாங்க குடிக்க கொஞ்சம் தண்ணி
கொணந்து தர மனசில்லயோ...

உசிரக் குடுத்து ஒழைக்கிற எங்களுக்கு
பச்சத்தண்ணியும் இல்ல
பார்க்குறதுக்கு ஆளும் இல்ல

பாவப்பட்டட நாங்க இங்க
தண்ணி தண்ணி எண்டு
தலசுத்தி தவிக்கிறோங்க...






# இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக NERDC

இலங்கை பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்கும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு பலதரப்பட்ட சேவைகளை வழங்கும் ஒரு நிறுவனமாக தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC) விளங்குகின்றது.

1970களின் பின்னர் இலங்கையில் அதிகளவான கைத்தொழில் நிலையங்கள், தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் விளைவாக தொழில்நுட்ப வளர்ச்சி, ஆராய்ச்சிகள், மற்றும் ஆய்வுகளுக்கான தேவை ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்தே 1957ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக 1974 ஆம் ஆண்டு தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (National Engineering Research & Development Centre) மறைந்த கலாநிதி குலசிங்கவினால் ஆரம்பிக்கப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட முதன்மை நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். தற்போது இந் நிறுவனம், தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் கீழ் ஜாஎல, ஏக்கல கைத்தொழில் பேட்டையில் இயங்கி வருகின்றது.

தொழில்நுட்ப ரீதியிலான ஆராய்ச்சி, கைத்தொழில் அபிவிருத்தி, தொழில்நுட்பங்களை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் அதேநேரம் ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களின் கண்டுபிடிப்பு மற்றும் படைப்பாற்றலை சீரமைப்பதற்கான பணிகளையும் இந் நிறுவனம் மேற்கொண்டுவருகின்றது. இதுதவிர நவீன தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட சுயதொழில் முயற்சிகளுக்கும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் முக்கிய பங்காற்றுகின்றது.

மேலும், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதிலும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.

இதில் கட்டுமானப் பொறியியல் துறை, மிகவும் பழமைவாய்ந்த ஒன்றாக காணப்படுகின்றது. National Engineering Research & Development Centre இன் முன்னோடிகளின் ஒருவரான கலாநிதி A.N.S குலசிங்கவினால் இத்துறை உருவாக்கப்பட்டது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் இது நிறுவப்பட்டது. இத்துறையின் ஊடாக மேற்கொள்ளப்படும் குறைந்த செலவிலான தரமான கட்டடத் தொழில்நுட்பம் மிகவும் பிரபலமானது. பல பொறியியலாளர்கள் செலவு குறைந்த கட்டட தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்புகளின் பிற மேம்பாடுகளை மேம்படுத்த பங்களித்தனர். இதுவரை வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் குறைந்த செலவில் பல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

பாரம்பரிய ஓடுகள் மற்றும் எஸ்பெஸ்டஸ் (Asbestos) கூரைத்தகடுகளுக்கு பதிலாக சீமெந்து மற்றும் மணல் கலந்து செய்யப்பட்ட கூரைத்தகடுகளை தயாரிக்கும் தொழில்நுட்பம் பயனுள்ள ஒன்றாக காணப்படுகிறது. இது 2016 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

இதுவரை நாடு முழுவதும் குறைந்த செலவிலான பல கட்டடங்கள், பாலங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. பாரம்பரியத் தொழில்நுட்பங்களினூடாக வீடுகளில் நிர்மாணிக்கப்படும் மாடிப்படிகளுக்காக அதிக பணம் செலவாவதால் 'L' வடிவில் தயாரிக்கப்பட்ட கொங்கிரீட் மாடிப்படிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அண்மையில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் இராஜகிரிய வளாகத்திலுள்ள ஆயுர்வேத பிரிவுக்கான கட்டடத்தை குறைந்த செலவில் தரமான வகையில் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் அமைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறைந்த செலவிலான சிறந்த தொழில்நுட்பங்களை கொண்டு அமைந்த தகனக்கிரியை மண்டபங்கள் 300க்கு ம் மேல் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவை கொவிட் 19 தொற்றுக் காலப்பகுதியில் சடலங்களை எரியூட்டுவதற்கு பெரிதும் உதவியாகவிருந்தன. அதுமட்டுமின்றி கொவிட்19 அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான காலால் இயக்கும் தண்ணீர்க் குழாயும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகும்.

இதுதவிர தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தொழில்நுட்ப உதவிகள் இயற்கை அனர்த்தங்களின் போதும் கைகொடுத்துள்ளது.

மேலும், நீர்ப்பாசன கால்வாய்களில் பெருகிக் காணப்படும் களைகளை அகற்றிச் சுத்தம் செய்யும் இயந்திரம், நன்னீர் மீன்களை இனப்பெருக்கம் செய்ய இயந்திரங்களை வடிவமைத்தல், தேங்காய் உற்பத்தித் துறைக்கு இயந்திர சாதனங்களை அறிமுகம் செய்தமை, பால் கறக்கும் இயந்திரங்களை மேம்படுத்தியமை பனஞ்சாறு பிழியும் இயந்திரம், அப்பம் உற்பத்தி செய்யும் இயந்திரம் போன்றன இந்நிறுவனத்தின் சிறந்த கண்டுபிடிப்புகளாகும்.

இதுதொடர்பில் நிறுவனத் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

1970 ஆம் ஆண்டுகளிலிருந்த அரச கொள்கைகளுக்கேற்ப இந் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க கூடிய வகையில் இந்நிறுவனத்தை நவீனமயப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக நிறுவனம் என்ற ரீதியில் புதிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவேண்டும். நிலைபேறான அபிவிருத்தியை இலக்காக கொண்டு முகாமைத்துவ கட்டமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். இந்நிறுவனம், நான்கு முக்கிய பிரிவுகளின் ஊடாகவே இயங்கிவருகின்றது. தற்போது குறைந்த செலவிலான கட்டுமான பணிகளை ஊக்குவித்துவருகின்றோம். கட்டட நிர்மாணத்துறையில் ஈடுபடும் கம்பனிகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கி ஊக்குவித்து வருகின்றோம். இதற்கு சிறிய கட்டணத்தையும் அறவிட்டு வருகின்றோம். தற்சமயம் குறைந்த செலவிலான மாதிரி வீடுகளை அமைத்துள்ளோம். குறைந்த செலவிலான சிறந்த தொழில்நுட்பங்களை கொண்டு அமைத்த தகனக்கிரியை மண்டபங்களை அமைப்பதில் National Engineering Research & Development Centre முதலிடத்தில் உள்ளது. சுமார். 300 மேற்பட்ட தகனக்கிரியை மண்டங்களை அமைத்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

**வசந்தா அருள்ரட்ணம்**

## தலையணை மந்திரம்!

கண்ணிருந்தும் குருடராய்
காதிருந்தும் செவிடராய்
இருந்திடுங்கள்
உங்கள் இல்லத்தில்
உங்கள் மனைவி
பலசாலியாக இருந்தால்

கதிரையொன்று இருந்தால்
அதில் சாய்ந்திடுங்கள்
முடிந்தால் கண்மூடி
சற்று தூங்கிடுங்கள்
துணிக் கடையில்
உங்கள் துணைவி
ஆடைத் தெரிவினை
முடிக்கும் வரையில்

உணவில் உப்பு கூடியிருந்தால்
சகித்துக் கொள்ளுங்கள்
சீனியே இல்லையென்றாலும்
சிரித்துக்கொண்டேயிருங்கள்
கசப்பாக இருந்தாலும்
காட்டிக் கொள்ளாதீர்கள்
முடிந்தால் “அதி அற்புதம்”
என்று பாராட்டிடுங்கள்
உங்கள் மனைவியின்
சமையலாக இருந்தால்

உங்கள் பள்ளிதோழி
பல்கலை கழகத்தோழி
அலுவலகத் தோழி
அழகானவளாயிருந்தாள்
அறிமுகப்படுத்தாதீர்கள்
உங்கள் மனைவிக்குஅது
உங்கள் தாம்பத்தியத்துக்கு
உடனடி அபாயம்

உலகத்தில் சிறந்த அழகி
உலகத்தில் உயர்ந்த குணவதி
உள்ளத்தைக் கவர்ந்த தோழி
உன்னை விட்டால்
உலகெங்கிலும் எவருமில்லை
உறுதியாக் கூறிடுங்கள்
உங்கள் மனைவியிடம்
குறைந்து விடவா போகிறது?

மனைவியின் உறவினர்
உங்கள் வீடு வந்தால்
உங்கள் முகத்தில்
புன்னகை நிறைந்திருக்கட்டும்
உள்ளத்தில் என்ன இருந்தாலும்'

இவை இப்படித்தான்..
என்றாலும் எப்போதும்
உள்ளத்தில் உணர்வில்
உயரிய எண்ணத்தில்
உண்மையாய் இருங்கள்
உங்கள் மனைவிக்கு
உங்கள் வாழ்வினில்
உவகை வெள்ளம்
பெருக்கெடுத்தோடும்!

**இலக்கியச் செம்மல், கலாபூஷணம்**
**சட்டத்தரணி**
**ரஷீத் எம். இம்தியாஸ்**

## நஜ்முல் ஹுசைனின் "வேறாக வேர்கள்"

### நிகழ்வில் பிரதம அதிதி ரவூப் ஹக்கீம் நூல் நயவுரை





கவிமணி நஜ்முல் ஹுசைனின் "வேறாக வேர்கள்" நூல் வெளியீட்டு விழா கொழும்பு, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை அல் ஹிதாயா தேசியக்கல்லூரி எம்.சி.பஹார்தீன் கேட்போர் கூடத்தில் இன்று 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (06.08.2023) மாலை 3.45 மணிக்கு நடைபெறுவுள்ளது.

"ஸ்ரீ லங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்ற" ஏற்பாட்டில் நிகழவிருக்கும் இவ்விழாவுக்கு மன்றத்தலைவர் தமிழ்த்தென்றல் அலி அக்பர் தலைமை தாங்குகிறார். பாராளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் அதே நேரம் அவர், நூல் நயவுரையும் வழங்குவார். இந்நிகழ்வுக்கு இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்கிறார். விசேட அதிதியாக தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் பங்கேற்கிறார்.

முதல் பிரதியை வர்த்தகர் டாக்டர் எம்.சீ.பஹார்தீன் பெறுகிறார்.

**எம்.எஸ்.எம்.ஜின்னா**
**(செயலாளர் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம்)**





ஸ்ரீநாட்டியாலயா இயக்குனர் "கலைவளர்மணி" ஸ்ரீமதி வெங்கட்டின் மாணவிகளும் புதல்விகளுமான விபா வெங்கட், ஸ்மிருதி வெங்கட் ஆகியோரின் பரதநாட்டிய சலங்கை பூஜை மற்றும் அரங்கேற்ற நிகழ்வுகள் மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபாவில் விமரிசையாக நடைபெற்றது.
இலங்கை அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குநர் "கலாசூரி" திவ்யா சுஜேன் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.
இவருடன் உலகப் புகழ் பெற்ற நடனகுரு " கலைமாமணி" சித்ரா விஸ்வேஸ்வரனும், "கலைமாமணி" குற்றாலம் செல்வமும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.
இந்நிகழ்வில் சென்னை பாரதீய வித்யா பவன் இயக்குநர் "கலைமாமணி " ராமசாமி, கார்த்திக் பைன் ஆட்ஸ் செயலாளர் சேகர், பாரத் கலாசார ஆலோசகரும் நடிகையுமான வை.ஜி. மதுவந்தி, "கலைமாமணி" ஷோபனா ரமேஷ் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸின் 'சிந்திப்போம்' நூல் வெளியீடு





பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுதிய 'சிந்திப்போம்' பத்திகளின் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு 7 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இலங்கை மிகவும் உன்னத மற்றும் செழுமை மிகு நிலைமையை அடைய வேண்டும் என்ற உயர்ந்த எதிர்பார்ப்போடு முற்போக்குப் பார்வை நோக்குடன் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் சில காலமாக தேசிய பத்திரிகையொன்றுக்கு எழுதிய பத்திகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது.

முன்னதாக பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர் ஐந்து படைப்புகளை இலக்கியத் துறைக்கு சமர்ப்பித்துள்ளார்.

'சிந்திப்போம்' நூல் வெளியீட்டு நிகழ்வன்று 50 சதவீதம் விசேட விலைக்கழிவுடன் இந்நூலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இலங்கைக்கு விஜயம் செய்த பழநி ஸ்ரீமத் போகர் ஆதீன புலிப்பாணி சித்தரின் கருவழி வாரிசு ஆறுகால் பீடம் 13வது பட்டம், துர்க்கா பீடாதிபதி, சீர்வளர்சீர் சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள், கவிமாமணி கலா விஸ்வநாதன் எழுதிய பெருஞ்சித்தர் பெரியானைக் குட்டி சுவாமிகள் சரிதம் சித்தரமிர்தம் என்ற நூலை வெள்ளவத்தை மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் வெளியிட்டு வைத்தபோது எடுத்த படத்தில், ஆலய அறங்காவலர் சுந்தரலிங்கம், நூல் வெளியீட்டாளர் எச்.எச். விக்கிரமசிங்க. இந்திய சிவசேன கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் சசிகுமார், தமிழ்நாடு குமாரவேல் நாயனார் ஆகியோரைக் காணலாம்.



அமரத்துமடைந்த முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீ.எச்.பியசேனவின் புதல்வர் பியசேன கிருத்திகன், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். நீர் வழங்கல் அமைச்சரின் ஆலையடிவேம்பு பிரதேச இணைப்பாளராக இவர் முன்னர் கடமையாற்றியதும் குறிப்பிடத்தக்கது.
(படம்: வாச்சிக்குடா விஷேட நிருபர் சுகிர்தகுமார்)

# உயிர்ப்பு

இத்தா முடிந்து சமீரா வெளியே வந்து அன்று இரண்டாவது நாள். அது ஒரு ஞாயிற்றுக்கிழமையும்தான். உம்மா, நாநா, மதினி, தாத்தா, மச்சான் அவர்களின் பிள்ளைகள் என வீட்டில் நிறையப்பேர். உம்மா, தாத்தா, மதினி என எல்லோரும் சேர்ந்து அன்று விசேடமாகவே சமைத்திருந்தார்கள். உண்ட களைப்புத் தீர்ந்து எவ்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

'சமீரா, இனி என்ன செய்யிறதா யோசின....?'

நாநா அன்சார் கேட்க, எல்லோரும் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தன்மடியில் உறங்கிக் கொண்டிருந்த ஐந்தே வயதான மகள் பர்வினின் தலையை வருடிக் கொண்டிருந்த சமீராவின் கண்கள் கலங்குகின்றன. வழியும் கண்ணீர்பட்டு மகள் விழித்து விடக்கூடாதே என்ற எண்ணத்தில் அவசர அவசரமாக முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

'அழாத சமீரா.... யாரு நெனச்சா இப்டிஒரு நெலமைல மச்சான் மௌத்தாவாரெண்;டு. எல்லாம் நஸீபுதான்....'(விதிதான்)

நாநா தழுதழுத்த குரலில் ஆறுதல் கூறுகிறார்.

மோட்டார் விபத்தொன்றில் தளத்திலேயே இறந்துபோன சமீராவின் கணவன் சாதிக் பற்றிய நினைவுகள் எல்லோர் மனதையும் வாட்டுகின்றன.

'என்ன செய்ய....நடந்தது நடந்திரிச்சி. இனி நடக்கவேண்டியத பத்தி யோசிக்க வேண்டியது தான்...'

தேநீர்க்கோப்பைகளோடு வந்த அன்சாரின் மனைவி சியாமா அங்கே நிலவிய அமைதியைத் தன் வார்த்தைகளால் கலைக்கிறாள்.

'இத்தாலீந்த காலத்துல உம்மா சமீராவோட ஈந்தது சரி. அப்ப, உம்மா கூட இல்லாம எனக்கு சரியான கஸ்டமா போச்சி.... வேலவெட்டியள்வளுல எனக்கொதவி செய்ய ஒத்தருமில்ல. கடவாசலுக்கு போறதென்டாலும் நாந்தான் போவோணும். புள்ளயள இஸ்கூலுக்கும் நாந்தான் கூட்டிக் கொண்டுபோவோணும்.அவருவேலஉட்டுவர ராவேழு மணியாவும். உம்மாவ நானினி அவசரமா என்ட ஊட்டுக்கு கூட்டிக்கொண்டு போவோணும். இனி நீ என்ன செய்யபோறாய் சமீரா....? எங்க இரிக்க போறாய்.....? சொல்லு....'

சமீராவின் பதிலை எதிர்பார்த்து தாத்தா மஸீதா கேட்கிறாள். சமீரா எதுவும் பேசாமல் அமைதியாகவே இருக்கிறாள்.

'இப்டிபேசாமீந்தா என்ன அர்த்தம்...? புள்ளய என்னட்ட தந்திட்டு நீ வெளிநாட்டுக்குபோ. பொம்புள புள்ள. நாளக்கி அத முடிச்சிகுடுக்க நகநட்டு, ஊடுவாசல் எல்லாம் தேவப்படும். அது சுட்டி.......'

பேச்சை இடைநிறுத்தியபடி நாநா அன்சாரின் பக்கம் திரும்புகிறாள் மஸீதா.

'என்ன நாநா....நான்சொல்றதுல எதும் பிழயா.....?'

"இல்லை என்பது போல் தலை யாட்டுகிறார் அவர்.

' இல்லாட்டி கல்யாணம்ஒன்ட செஞ்சிவெப்பம்.... பொண்டாட்டிமார்மௌத்தாபோனஎத்துனயோ ஆம்புளயள் இரிப்பாங்க.... அவங்கட புள்ளகுட்டியள பாக்க ஒதவி இல்லாம ரெண்டாங் கலியாணம் செய்ய பொண்ணு தேடிக்கொண்டீப்பாங்க. அப்டியார சரி பாத்து செஞ்சிவெப்பம்.... ஒங்கடகூட்டாளி ரபீக்ட பொஞ்சாதிகூட மூணு புள்ளயள உட்டுட்டு கிட்டத்துல தானே மௌத்தா.......'

' மதினீ........'

சியாமாவின் பேச்சினிடையே சமீராவின் குரல் அங்கே ஓங்கி ஒலிக்கிறது.

'நானிப்ப கல்யாணம் செஞ்சிவெய்ங் கெண்டு ஒங்களயெலாம் கேட்டனா...?'

சமீராவின் கேள்வியால் தாக்குண்ட சியாமா கோபம் கொப்பளிக்க கணவன் அன்சாரை முறைத்துப் பார்க்கிறாள்.

'இனி நீ ஒண்டும் சொல்லாமீந்தா ஆளுக்காள் அவங்கவங்கட ஐடியாவ சொல்லத்தானே செய்வாங்க...'

அன்சார் நியாயம் பேசத் தொடங்குகிறார்.

'இதுக்கெலாம் விருப்பமில்லாட்டி ஒண்டுசெய். இந்த ஊட்ட கூலிக்கிகுடுத்திட்டு ஏன்ட ஊட்டுல வந்திரி. மதினிக்கிம் ஒதவியாயிரிக்கிம். ஒனக்கும் பாதுகாப்பா இரிக்கிம். ஏன்ட புள்ளயளோட ஒன்டபுள்ளயிம் வளரட்டும்....'

அன்சார் தன் கருத்தை கூறிமுடிக்கிறார்.

'டீ ஆறிப்போவுது. எல்லாரும் எடுத்து குடீங்க....'

தானும் ஒரு கோப்பை தேனீரை எடுத்தபடியே சொல்கிறாள் சமீரா. அவளின் நிதானம் அவர்களை ஆச்சரியப்படுத்துகிறது. எல்லோரும் தேநீர் குடித்து முடிக்கும் வரை காத்திருந்தவள் உம்மாவைக் கேட்கிறாள்.



'உம்மா, எனக்குதொணயாஎனையோட இந்த ஊட்டுல ஒங்களுக்கு இரிக்கேலுமா...?'

அந்தக் கேள்வி உம்மாவோடு எல்லோரையும் கேள்விக்குறியோடு அவளைப் பார்க்க வைக்கிறது.

'இதுக்கு நானொத்துக்கொள்ள மாட்டன்...' தாத்தா மஸீதா கத்துகிறாள்.

'என்ன சமீரா, என்ன பேசுறாய் நீ....? கரண்ட்பில், தண்ணிபில். ஊட்டுசெலவு, புள்ளைட ஸ்கூல்செலவெண்டு எம்புட்டு செலவிருக்கிது.... எந்த வருமானமுமில்லாம ஒங்கடசெலவுக்கே வழியில்லாத நெலமைல உம்மாவயிம் கூடவெச்சிக் கொண்டு சமாளிக்கேலுமா....? யோசிச்சிதான் நீ பேசுறாயா....?'

நாநா அவளது நிலைமையை அவளுக்கே எடுத்துச் சொல்கிறார்.

'எல்லாம் நல்லா யோசிச்சிட்டுத் தான் நாநா பேசுறன். எனக்கு நல்லா தைக்கெத்தெரியுமென்டதும் கூலிக்கி உடுப்பு தக்கிறதும் ஒங்களுக்கெல்லாம் நல்லா தெரியிம். அதால எனக்கு தச்சி சம்பாதிக்கேலும். ஊட்டுலயே ஒரு டெய்லர் ஷொப்ப தொடங்குவன். மத்தது, இத்தா காலத்துல நான் நிப்பாட்டிரிந்த ட்யுஷனயும் தொடங்குவன். அல்ஹம்துலில்லா எண்டு இதுகளில கெடெக்கிற வருமானம் எனக்கு போதுமாவும். எனக்கு தனிக்குத்தொணயா உம்மா மட்டும் என்னோட இரிப்பாங்கெண்டா போதும். இந்த விசயத்துல நீங்கெல்லாம் ஒருமுடிவுக்கு வாங்க....'

அவளுடைய அழுத்தமான பேச்சுக்கு எதிர்ப்புக் கூறமுடிவாதவர்களாய் அவர்கள் வாயடைத்து நிற்க உம்மா சொல்கிறார்.

'ஒங்களுக்கு தொணயா நானொங்களோட இந்த ஊட்டுல ஈக்கிறன் மகள்';

உம்மாவின் பதிலால் சமீரா முகம் மலர, தாத்தா மஸீதா உம்மாவை முறைத்து முறைத்துப் பார்த்து வாய்க்குள் ஏதேதோ முணுமுணுக்கிறாள்.

'உங்கெல்லார்கிட்டயிம் ஒருவிசயம் சொல்லோணும்...' சமீரா மீண்டும் பேச்சை ஆரம்பிக்கிறாள்.

அவர்கள் அக்கறையில்லாமல் எங்கெங்கோ பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

'நான்தொடந்து படிக்கப்போறன். இந்த வருசம் நடக்குற " லோ கொலேஜ் என்ட்ரன்ஸ் எக்ஸேம் எழுதபோறன்...."

'என்ன.....?'

அனைவரது பார்வையும் அவள் மீது தெறிக்கின்றது.

'நான் லோகொலேஜ் என்ட்ரன்ஸ் எக்ஸேம் பாஸ்பண்ணியிருந்த சமயத்துல எனய மேலபடிக்க உடாம கல்யாணம் செஞ்சிவெச்சீங்க. இப்ப அந்த படிப்ப தொடங்கப் போறன்....'

'என்ன சமீரா, ஒளர்றீங்க.......? இதெல்லாம் நடக்கிற காரியமா.....? மாப்ள மௌத்தா போனபொறவு ஊட்டோடவாசல்ல அடங்கி இரிக்காம, படிக்க வெளியெறங்குறன் என்ட்றீங்க....ஊரு பாத்து சிரிக்கிம். மனுஷர் எங்களுக்கு தான் கதசொல்லுவாங்க..'

படபடவென்று பொரிந்து தள்ளிய சியாமா மாமியார் பக்கம் திரும்பிக் கேட்கிறாள்.

'என்ன மாமி....ஒங்கட மவள் சொன்னத கேட்டீங்கதானே...? ஒண்டும் சொல்லாம ஏன் சும்மா இரிக்கிறீங்க.....?'

சமீராவின் உம்மா எல்லோரையும் பார்த்து அமைதியாகச் சிரிக்கிறார். எட்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவமொன்று அவர் கண்முன் நிழலாடுகிறது.

போனில் வந்த செய்தியொன்றைக் கேட்டுவிட்டு மகிழ்ச்சி பொங்க ஓடிவந்து உம்மாவைக் கட்டிப் பிடித்தபடி கூறுகிறாள் சமீரா.

'உம்மா, லோகொலேஜ் என்ட்ரன்ஸ் எக்ஸேம்ல நா பெஸ்ட் ரிஸல்டாமும்மா. சிபாயா, மர்சூனா, ருமைஸா எல்லாம் கூட பாஸாம்.'

உம்மாவுக்குப் பெருமிதமாக இருக்கிறது.

வெளியே போயிருந்த வாப்பா, நாநா இருவருக்கும் மகிழ்ச்சி மேலிட தொலைபேசி மூலம் விசயத்தைச் சொல்லுகிறாள் சமீரா.

'வாப்பா ஒண்டுமே சொல்லாம மொபைல கட்பண்ணிட்டார் மா. நாநா கங்குராஜுலேஸன்ஸ் என்டு ஒத்த வார்த்தையோட போன வச்சிட்டாரு மா'

கவலை தோய்ந்த குரலில் கூறுகிறாள் சமீரா.

சிறிது நேரத்தில் வாப்பா, நாநா இரண்டு பேரும் சேர்ந்தே வருகிறார்கள். ஒன்றுமே சொல்லாமல் இருவரும் உள்ளே போய்விடுகிறார்கள்.

சமீரா மலங்க மலங்க விழிக்கிறாள்.

'ஏன் மா, நான் பாஸ்பண்ணினது இவங்களுக்கு புடிக்கலயா? வாப்பாட்டயிம் நாநாட்டயிம் கேட்டுட்டுதானே எக்ஸேம் எழுதினன். படிக்கவெக்கிறம் எண்டு சொன்னாங்கதானேமா..? இப்ப ஏனிப்பிடி மோத்த திருப்பிக் கொண்டு போறாங்க....?

கவலையோடு தாயைக் கேட்கிறாள் அவள்.

'சமீரா, ஒனக்கு கல்யாண விசயமொண்டு வந்தீக்கிது. நல்ல எடம். இப்ப எங்களுக்கு அதான் முக்கியம். வெளங்கிகோ....'

வாப்பா உள்ளே இருந்தபடியே சொல்கிறார்.

'நான் படிக்க ஆசப்படுறனும்மா.... எனக்கிப்ப கல்யாணம் வாணம். வாப்பாட்டயிம் நாநாட்டயிம் சொல்லுங்க மா.... ஏன்ட ரிஸல்ட்ஸ்; பெஸ்ட் ரிஸல்டும்கூட உம்மா.....'

அவள் உம்மாவிடம் கெஞ்சுகிறாள். பசி, தாகம், தூக்கம் தொலைத்து கெஞ்சலும் கேவலுமாய் இரண்டு நாட்கள் கடந்து போனதுதான் மிச்சம். தோற்றுப் போகிறாள் அவள்.

காலம் வருடங்களை பிரசவித்துக் கொண்டோடுகிறது. எட்டு வருடங்களில் நண்பிகள் மூவரும் சட்டத்தரணிகளாகி, தொழில் பார்த்து, மணமுடித்து குடும்பமாய் வாழ, இவள் வீட்டோடு மனைவியாய் ஒரு பிள்ளைக்குத் தாயாகி, இன்று விபத்தொன்றில் கணவனை இழந்து கைம்பெண்ணாகி நிற்கிறாள்.

'என்ன உம்மா.....பேசாம எங்கயோ பாத்துகொண்டீக்கிறீங்க.....? அவள்ட மரமண்டைல ஒறக்கிறமாதிரி சொல்லுங்க, இதெல்லாம் சரிப்பட்டுவராதெண்டு.....'

உம்மாவை உசுப்பிச் சொல்லுகிறாள் மஸீதா. உம்மா பழைய நினைவுகள் கலைந்தவராய் அவளைப் பார்க்கிறார்.

'சமீரா, நீ யோசிச்சிதான் பேசுறாயா....? ஒனக்கும் ஒண்ட புள்ளகிம் இப்ப நாங்கதான் பொறுப்பு. மேல படிக்கிறதெண்டா சும்மாவா....? இதுக்கெல்லாம் யாருக்கு செலவழிக்கேலும்? இந்த நெனப்ப உட்டுட்டு வெளிநாட்டுக்கு பெய்த்து ஒழக்கிற, சேக்குற வழியபாரு சமீரா...'

அன்சாரின் பேச்சை எல்லோரும் அங்கீகரிக்க, சமீரா தீர்க்கமான பார்வையோடு எந்தச் சலனமுமில்லாமல் அமைதியாகக் காணப்படுகிறாள்.


'படிப்புக்காவுற செலவபத்தி நீங்கொத்தரும் கவலப்படவாணாம். அதுக்கெலாம் எனக்கு ஹெல்ப் இரிக்கிது..... நானித்தாவுலீந்த காலத்துல ஏன்ட ஸ்கூல்பிரண்ட்ஸ் நெறயபேர் எனயபாக்க வந்திருந்தாங்க. ஏண்ட படிப்புக்கு அவங்கெல்லாம் சேந்து ஒதவுறதா அப்பவாக்களிச்சாங்க. இப்ப லோயர்ஸா இரிக்கிற சிபாயா, ருமைஸா, மர்சூனா மூணுபேரும் ஹெல்ப் பண்ணுறதா சொல்லீக்கிறாங்க. ப்ரண்ட்ஸ் எல்லாம் சேந்து ஏன்ட பேர்ல பேங்கெகவுன்ட் ஒண்டும் ஓபன் பண்ணீக்கிறாங்க. இப்ப வரக்கிம் அதுல பத்துலெச்சம் மட்டும் சேந்தீக்கிது. அதோட கார்மன்ட்ஸ் பெக்ட்ரி வச்சிரிக்கிற மர்யம் ஏன்ட படிப்புட முழுசெலவயிம் ஏத்துக் கொள்றதாவேறசொல்லீக்கிறா.அதால நான் படிக்கப்போறன். எனய யாரும் தடுக்கவாணம். ஏன்ட மானம், மருவாதிய காப்பாத்திகொள்ள எனக்குதெரியும். ஊர் கதசொல்றதுக்கு படிக்க போறவங்கொண்டும் மானம் மருவாதிய விக்க போறவங்கில்ல...'

உயிர்த்தெழுந்த சமீராவின் உள்ளத்தையும் தீர்க்கமான பேச்சையும் இனி எதைச்சொல்லியும் தகர்க்க முடியாது என்பது புரிகிறது அவர்களுக்கு. சிறிது நேரத்தின் பின் அவர்கள் எல்லோரும் அவளிடம் சொல்லிக்கொள்ளாமல் ஒன்றாகவே வீட்டிலிருந்து வெளியேறுகிறார்கள்.

உம்மாவோடு வாசல்வரை வந்து அவர்களை வழியனுப்பிவிட்டு உள்ளே திரும்புகிறாள் அவள்.

கொழும்பு
எம்.ஏ. ரஹீமா

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 81




திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

திகதி ............ கையொப்பம் ............

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 81
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 81

### இடமிருந்து வலம்

1. ஔவையார் இயற்றிய நீதி நூல்
4. ஓசை. காதால் மட்டும் கேட்டு உணரக் கூடியது.
6. தோழி திரும்பிவிட்டாள்
7. தகப்பன் (திரும்பியுள்ளது)
8. தென்னிந்திய சஞ்சிகை (குழம்பியுள்ளது)
10. மகிழ்ச்சி
12. ஒரு காரியத்தை சாதிக்கக் கையாளும் சாமர்த்தியமான வழிமுறை (திரும்பியுள்ளது)
15. மனைவி திரும்பிவிட்டாள்.
16. வயலும் வயல் சார்ந்த இடமும்
17. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள் (குழம்பியுள்ளது)
19. பொம்மையைக் குறிக்கும்
20. ஓர் உறவு முறை
21. குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவும் தடயம் அல்லது தகவல்

### மேலிருந்து கீழ்

1. அதிகாரம் மேலோங்கிய நிலை
2. மனதில் எழும் கலக்க உணர்வு
3. ஒன்றை ஊகித்து அறியும் வகையில் வெளிப்படுத்தும் தன்மை
4. ஒரு குறிப்பிட்ட தேவைக்காக ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உடன்படிக்கை.
5. ஆண், பெண் தன்மையற்றவரை இப்படியும் சொல்வர். (தலைகீழ்)
9. ஒழுங்குமுறை
11. இதுவும் ஒருவகை பூச்செடி (தலைகீழ்)
13. ஒருவரின் போக்கு அல்லது வளர்ச்சியில் ஏற்படும் மாற்றம் (குழம்பியுள்ளது)
14. கணவன் மனைவியை இப்படியும் சொல்வர்.
17. உப்புமா தயாரிப்பதற்குத் தேவையானது
18. ஒருவரின் இடுப்புப் பகுதியைக் குறிக்கும்(தலைகீழ்)
19. வழி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 80

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. துறவி
3. நெஞ்சம்
6. காவல்
8.கோள்
9. பரதன்
10. தளம்
11. வனம்
13. வரி
15. தனம்
17. தோம்பு
19. புவி
21. அனல்
22. கப்பல்
24. மனை

**மேலிருந்து கீழ்**

1. துன்பம்
2. விகாரம்
3. நெல்
4. சகோதரி
5. வள்ளம்
7. வதனம்
12. வனப்பு
14. அம்பு
16. தவில்
17. தோல்வி
18. புனல்
20. மகன்
23. பனை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 80

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **சி1. ஏ.எஸ். மேத்தா** 344, சித்திரகூடம், களுவாஞ்சிக்குடி | **எஸ். தவநாயகி** 24/41 செல்வநாயகம் வீதி முதலாம் குறுக்கு மட்டக்களப்பு | **கே. எப். மில்ஹானி** புளியடி வீதி, ஏறாவூர் |

### பாராட்டு பெறுவோர்

1. **வண. எம். அனோமதஸ்ஸி** மினுவாங்கொடை
2. **பாத்திமா சுமைய்யா** அக்கறைப்பற்று
3. **எம்.எச்.சி.என். ஹம்தா** வெலிகம
4. **மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை
5. **எம்.பி ஏஜின்** திருகோணமலை
6. **ஏ. புண்ணியநேசன்** காரைதீவு 05
7. **என்.கே வேணி** பலாங்கொடை
8. **சபீஹா சப்ராஸ்** பண்டாரகம
9. **எப்.ஆர்.ஏ.ஷக்கூர்** மடவள பஸார்
10. **ஏ.சீ.யூ. நஜீம்** மெதகம

## துஷ்பிரயோகிக்கப்படும்... (10ஆம் பக்க தொடர்)

அந்தத் திட்டங்களின் அடிப்படையில் உதவிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அந்த உதவிகள் எத்தகைய பயனை விளைக்கின்றன என்ற மதிப்பீடும் அவற்றின் நடைமுறைகளைப் பற்றிய கண்காணிப்பும் நடந்திருக்கும்.

இங்கே அப்படி ஏதும் நிகழவில்லை. இதனால் புலம்பெயர் சமூகத்தின் பெருமளவிலான உதவிகளில் குறிப்பிட்ட அளவிலானவை உரிய பயனைத் தராமல், எதிர்பார்ப்புகளை நிறைவேற்றாமல் போய் விட்டன.

இதற்கு இங்குள்ள அரசியற் கட்சிகள், தலைமைகள், செயற்பாட்டியக்கங்கள், செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், பல்கலைக்கழகம், துறைசார் செயற்படுநர்கள் என அனைவருமே பொறுப்பாளிகளாகும்.

அதைப்போல புலம்பெயர் சூழலிலும் ஒரு குடையின் கீழ் இந்த உதவி அமைப்புகளை ஒருங்கிணைக்கக் கூடிய ஏதுநிலைகளும் காணப்படவில்லை.

இதனால் இடையில் சுழிப்போர் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொள்கிறார்கள்.

2. நேரடி நிதிப்பங்களிப்புக்கு அப்பாலான அறிவு மற்றும் துறைசார் நிபுணத்துவ அறிவு சார்ந்து அளிக்கப்படும் பங்களிப்பு பற்றியது.

இதில் மரநடுகை தொடக்கம் பல்கலைக்கழகக் கல்விக்கான உதவிகள், பாதிக்கப்பட்டோரின் உள மேம்பாட்டுக்கான உதவிகள், இங்கே தாயகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய, மேற்கொள்ளக் கூடிய வேலைத்திட்டங்கள், உள்ளூர் உற்பத்திகளுக்கான ஊக்கங்கள், உற்பத்தி மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள், பிற முதலீடுகளுக்கான உதவிகள் வரையில் இதில் அடங்கும். ஆனால் இதுவும் உரிய திட்டமிடல் – உரிய விளக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்ல முடியாது. இதனால் இந்த உதவிகளும் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எட்டவும் இல்லை. எதிர்பார்க்கப்பட்ட பயனை அளிக்கவும் இல்லை.

இதற்காகப் புலம்பெயர் மக்களின் பங்களிப்புகள் வீணடிக்கப்பட்டன என்று அர்த்தமில்லை. அவர்களுடைய உரிய நோக்கம் இங்கே சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. இதைக்குறித்து அடுத்த வாரம் பார்க்கலாம்.

## உலகளாவிய ரீதியில் ஒலித்த... (10ஆம் பக்க தொடர்)

மற்றுமொரு மூத்த ஒலிபரப்பாளரான யோகா தில்லைநாதன் விமலின் சகோதரியாவார். இவரும் முன்பு இலங்கை வானொலியில் பணியாற்றியவர். வர்த்தக சேவையில் ஒலிபரப்பாகி வந்த பூவும் பொட்டும், மணிமலர், இசையும் கதையும் போன்ற நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியவர். புலம்பெயர்ந்து இங்கிலாந்து சென்ற பின்னர், அங்கு இயங்கிவந்த சன்றைஸ் வானொலியில் 'கானக்குயில்' என்ற பெயரில் தமிழ் ஒலிபரப்பை ஆரம்பித்து நடத்தி வந்தார்.

விமல் சொக்கநாதனுடனான என் தொடர்புகள் என்றென்றும் மறக்கமுடியாதவை. ஒரு நண்பராகவே என்னுடன் பழகி வந்தவர். அவரது குடும்பத்தினருடனும் நெருங்கிய தொடர்புண்டு. அவரது மனைவி பத்மா லண்டனில் ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றி வருகிறார். அத்துடன் ஒரு சட்ட நிறுவனத்தையும் நடத்தி வருகிறார். இவர்களது ஏகபுதல்வி லண்டனில் பிறந்தவர். அங்கு படித்து இளமானி பட்டம்பெற்று பிரிட்டிஷ் ஆங்கில ஊடகத் துறையில் பணியாற்றி வருகிறார். இவருக்கு திருமணமாகியிருப்பதுடன், ஒரு குழந்தையும் இருக்கிறது.

விமல் சொக்கநாதன் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து இங்கிலாந்து சென்ற பின்னரும் எங்கள் இருவருக்குமிடையிலான நட்புறவு தொடர்ந்தது. லண்டன் பி.பி.ஸி தமிழோசையில் அவரது செய்தி விமர்சனங்களைக் கேட்டு, அடிக்கடி கடிதங்கள் எழுதி அனுப்பி வைப்பது வழக்கமாக இருந்தது. ஆரம்பத்தில் கடிதங்கள் மூலமாகவும், பின்னாளில் தொலைபேசி உரையாடல் ஊடாகவும் எங்கள் நட்புறவு வளர்ந்தது.

இவர் இலங்கை வரும்வேளைகளில், எப்போதுமே எனக்கு தகவல் தருவார். அவர் தங்கி நிற்கும் இடங்களில் போய் சந்திப்பது வழக்கம், பல தடவைகள் இருவரும் இணைந்து ஹோட்டலில் உணவருந்திய சந்தர்ப்பங்களை இலகுவில் மறந்துவிட முடியாது.

கடந்த மே மாதம் இலங்கைக்கு வருவதற்கு ஒரு மாதம் முன்பதாகவே எனக்கு தகவல் அனுப்பியிருந்தார். வரும் திகதி, யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நூல் வெளியீடுகளை நடத்தும் தினங்கள் என பல விஷயங்களை குறிப்பிட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் சென்று திரும்பி வருவதற்கான பஸ் பயணச்சீட்டுகளையும் நானே பதிவு செய்து கொடுத்திருந்தேன். இதற்கும் மேலாக அவரது மூன்றாவது வெளியீடான 'இலண்டனிலிருந்து விமல்' என்ற நூலுக்குரிய கட்டுரைகள் கொழும்பிலுள்ள அச்சகம் ஒன்றிலேயே தட்டச்சு செய்யப்பட்டு அச்சிடப்பட்டதால், சகல கட்டுரைகளையும் ஒப்புநோக்கி திருத்தும் பணி எனக்கு தரப்பட்டது. விமலுக்கு திருப்தியான வகையில் செய்து கொடுத்தது எனக்கும் திருப்தி மட்டுமல்ல மகிழ்ச்சியும்கூட.

இம்முறையும் ஹோட்டலில் விமலுடன் இணைந்து உணவு அருந்தும் போது, பலவித விஷயங்களைப் பற்றியும் பேசினோம்.

இன்றைய இளம் ஒலிபரப்பாளர்களைப் பற்றி விமலிடம் பேச்சுக் கொடுத்தேன். ஒலிபரப்புக் கலைபற்றி அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் இன்னும் இருக்கின்றன. அனுபவம் வாய்ந்த ஒலிபரப்பாளர்கள் அவற்றைக் கற்றுக் கொடுக்க முன்வர வேண்டும் என்றார். அவர் இலங்கை வானொலியை மறக்கவில்லை. ஒலிபரப்புத்துறை இன்று வானளாவ வளர்ந்துள்ளது. எங்கெங்கும் வானொலி நிலையங்கள் காணப்படுகின்றன. அவை இசையையும், செய்திகளையும், சித்திரங்களையும், பேட்டிகளையும் ஒலிபரப்பி வருகின்றன. இருந்தாலும் தமிழில் வானொலி ஒலிபரப்புக்கு இலக்கணம் வகுத்து முன்னோடியாக இருப்பது இலங்கை வானொலிதான் என்பதை எவருமே மறுக்க முடியாது என்று பெருமகிழ்ச்சியுடன் சொன்னார்.

அடுத்த நூல் வெளியீடு ஏதாவது இருக்கிறதா என்றும் கேட்டு வைத்தேன். தனது முதலாவது நூலான 'வானொலிக் கலை'யில் பயனுள்ள பல தகவல்களை சொல்லியிருக்கிறேன். சமகாலத்துக்குப் பொருத்தமானதாகவும், வளர்ந்து வரும் ஒலிபரப்பாளர்களுக்கு வழிகாட்டலாகவும் அமைந்த கருத்துக்களை வெளிப்படுத்தும் வகையிலும் எழுதவேண்டும் என்ற தன் விருப்பத்தை சற்று அடக்கமாகவே வெளிப்படுத்தினார்.

விமல் 1976ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற பின்னர், பல தடவைகள் தாயகம் வந்து சென்றுள்ளார். ஆனால், அவர் கடந்த மே மாதம் இலங்கை வந்தபோது வானொலி நேயர்களுடனான உறவைப் பற்றி, பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

"எழுபதுகளில் வானொலியில் என்னுடன் அறிமுகமான ஏராளமான இளைஞர்களையும், யுவதிகளையும் இம்முறை என்னால் சந்திக்க முடிந்தது. ஐம்பது வருடகால இடைவெளியின் பின் அவர்களை சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டேன். எனது மூன்றாவது நூல் இலங்கையில் வெளியிடப்பட்டதால், இத்தனை சகோதர சகோதரிகளையும் விழாவின்போது என்னால் நேரில் சந்தித்து அளவளாவ முடிந்தது." இந்த மன நிறைவுடன் விமல் வானொலி நேயர்களிடமிருந்து நிரந்தரமாகவே விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

மரணத்தை அனைவரும் சந்தித்தேயாகவேண்டும். அதனை மறுக்க முடியாது. ஆனால் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த நல்லிதயம் படைத்த ஒரு மனிதர் எதிர்பாராதவிதமாக ஒரு விபத்து மூலம் அகால மரணத்தை தழுவிக்கொண்டது துயரமான செய்தி. இதனால் அவரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் மட்டுமல்ல, அவர்மீது அபிமானம் கொண்ட என்போன்ற பல்லாயிரக்கணக்கான நேயர்களின் இதயங்களிலும் ஏற்பட்டிருக்கும் பெருந்துயரமானது ஆறாது ஆறாது! அழுதாலும் தீராது!

## வரட்சி, அதிகரித்த... (03ஆம் பக்க தொடர்)

தற்போதைய அதிகரித்த வெப்பநிலைக்கும் வரட்சி காலநிலைக்கும் பெற்றோலியம், நிலக்கரி, எரிவாயு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது என்பதை சுற்றாடல் விஞ்ஞானிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

புவி வெப்பமடைதல் ஒரு பக்கம் இருக்க, எல் நினோ காரணமாக கிழக்கு பசுபிக் சமுத்திரம் வெப்பமடைந்துள்ளது. இது வளிமண்டலத்தில் வெப்பத்தை வெளியிடுகிறது. அதன் காரணத்தினால் இவ்வருடமோ (2023) அல்லது அடுத்த வருடமோ (2024) அதிக வெப்பமான ஆண்டாக பதிவாக வாய்ப்பு உள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு அதன் விளைவான வரட்சி என்பன காரணமாக ஏற்பட்டுள்ள தாக்கங்களில் உணவு உற்பத்தி பயிர்ச்செய்கை பாதிப்பு குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

குறிப்பாக ஐரோப்பாவில் தானியங்களின் உற்பத்தி 60% குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதேபோன்ற தாக்கங்களையும் பாதிப்புகளையும் உலகின் ஏனைய நாடுகளும் பிராந்தியங்களும் கூடிக் குறைந்த அளவில் எதிர்கொண்டுள்ளன.

அதனால் வரட்சி மற்றும் வெப்பநிலை அதிகரிப்பின் பின்புலத்தில் நெல் உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தியில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை முன்னிலைப்படுத்தி பாஸ்மதி தவிர்ந்த அரிசி ஏற்றுமதியை இவ்வருடம் (2023) ஜுலை மாதம் 20 ஆம் திகதி முதல் இந்தியா இடைநிறுத்தியுள்ளது.

உள்நாட்டு மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அந்நாடு குறிப்பிட்டுள்ளது.

ஆனால் உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் 40 சதவீதப் பங்கை வகிக்கும் இந்தியா கடந்த வருடம் மாத்திரம் 140 நாடுகளுக்கென 22 மில்லியன் தொன் அரிசியை ஏற்றுமதி செய்திருக்கின்றது.

இந்நிலையில் இந்தியாவின் இந்நடவடிக்கையின் விளைவாக உலகின் பல நாடுகளும் அரிசி தேவையை நிறைவேற்றிக் கொள்வதில் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கும். அத்தோடு சர்வதேச அளவில் அரிசி தட்டுப்பாடு ஏற்படவும் வழிவகுக்க முடியும். இதனைக் கருத்தில் கொண்டு அரிசி ஏற்றுமதிக்கான கட்டுப்பாட்டை நீக்குமாறு இந்தியாவிடம் கேட்டுக்கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியம், இக் கட்டுப்பாடுகள் உலகின் பிற பகுதிகளில் அரிசி உள்ளிட்ட தானிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கவும் வழிவகுக்கும்' என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

அதனால் வரட்சி மற்றும் வெப்பநிலை அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் பாதிப்புக்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தி செயற்பட வேண்டிய காலம் இது. அப்போது தான் அந்த பாதிப்புக்களை வெற்றிகரமாக எதிர்க்கொள்ளக்கூடியதாக இருக்கும். அதுவே சுற்றுச்சூழல் நிபுணர்களின் கருத்ததாகும்.

# நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பிரகாசிக்கும் ஜம்மு காஷ்மீர்

370 வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில், ஜம்மு காஷ்மீரில் ஒரு புதிய விடியல். கடந்த நான்கு ஆண்டுகளில் அந்த யூனியன் பிரதேசம் முழு வளர்ச்சி அடைந்துள்ளது. பொருளாதாரம் முதல் உட்கட்டமைப்பு மேம்பாடு வரை அனைத்தும் வெவ்வேறு நிலைக்கு உயர்ந்தன. அந்த யூனியன் பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படத் தொடங்கியிருக்கிறது

"ஆகஸ்ட் 2019 க்குப் பிறகு பொருளாதாரம் செழிப்புற்றிருக்கிறது. 2021/22 நிதியாண்டில் MSMEகளின் ஏற்றுமதி 54 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மற்றும் இறக்குமதியாளர், ஏற்றுமதியாளர் பதிவு 173 சதவீதம் அதிகரித்துள்ளது. உணவு பதப்படுத்துதல், கைவினைப்பொருட்கள் மற்றும் கரிம பொருட்கள் மீதான மூலோபாய ரீதியான கவனக் குவிப்பு பொருளாதார வளர்ச்சியைத் தூண்டியுள்ளது," என்று யூனியன் பிரதேசத்தின் லெப்டினன்ட் கவர்னர் மனோஜ் சின்ஹா ஒரு ட்வீட்டில் கூறினார். ஜம்மு காஷ்மீர் நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் தோட்டக்கலை சந்தைகளில் ஒன்றாகும் என்றார். "இயற்கை வளங்கள் மற்றும் திறமையான பணியாளர்கள் எங்களின் பலம், புதிய தொழில்துறை திட்டத்தின் மூலம் ஜம்மு காஷ்மீரை MSME களுக்கான இடமாக மாற்றுகிறது."

MSMEகளின் புதிய வலிமை, பின்னடைவு மற்றும் உலகளாவிய போட்டித் திறன் ஆகியவை இந்தியாவை உற்பத்திக்கான விருப்பமான இடமாக மாற்றும் என்றும் சின்ஹா கூறினார்.

ஒரு உத்தியோகபூர்வ கையேட்டில், கடந்த மூன்று ஆண்டுகளில், "மீண்டும் எழுச்சி பெற்ற நிறுவன க் கட்டமைப்பின் காரணமாக வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான வேகம் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது" என்று அரசாங்கம் கூ றியது.

"அதேபோல், பஞ்சாயத்துகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் போன்ற அடிமட்ட ஜனநாயக அமைப்புகளுக்கு பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முடிவெடுக்கும் செயற்பாட்டில் தீவிரமாக பங்கேற்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது" என்று அது கூறியது. "கடந்த இரண்டு ஆண்டுகளில், அரசாங்கம் இதுவரை புறக்கணிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய முயற்சித்துள்ளது. தலித்துகள், பழங்குடியினர் மற்றும் சமூகபொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் சமத்துவமான நிர்வாக முறையால் பயனடைந்துள்ளனர், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் பெண்களும் பயனடைந்துள்ளனர்," என்று அது மேலும் கூறியுள்ளது. யூனியன் பிரதேசம் "வணிகம், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் மற்றும் விளையாட்டுத் துறையில் புதிய எல்லைகளை அடைந்துள்ளது" என்று அரசாங்கம் கூறியது.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.08.03
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5195
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,163,016.00
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 2 6 1 5 4 8

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1543 03/08/2023
71376
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 403,161,852.00
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 16
வெற்றி இலக்கங்கள் 14 30 49 75

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
சீட்டிழுப்பு திகதி 2023-08-03
504
ரூ. 4,242,173.80
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 31 45 60 62
விசேட இலக்கினம் மிதுனம்

தன நிதானய
திகதி 2023/08/03
சீட்டிழுப்பு இலக்கம் 1225
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,084,563.20
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 20 49 60 67
விசேட எழுத்து F
Double Chance இலக்கம் 03278

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3437
சீட்டிழுப்பு திகதி 2023.08.03
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,325,213.20
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 04 06 60 75
விசேட எழுத்து V
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 09168

Lucky 7 லக்கி 7
திகதி 03.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0021
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 8 1 2 3 2 2
L7 இலக்கம் 2 5
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,464,726.64

## நல்லூர் திருவிழாவும்... (07 ஆம் பக்கத் தொடர்)

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இலங்கையின் பொருளாதாரத்திற்கு பல வழிகளில் கணிசமான பங்களிப்பை வழங்குகிறது.

திருவிழாவின் தாக்கம் அதன் கலாசார மற்றும் மத முக்கியத்துவத்திற்கு அப்பாற்பட்டது, உள்ளூர் மற்றும் தேசிய அளவில் பொருளாதார நன்மைகளை உருவாக்குகிறது.

அதிகரித்த சுற்றுலா, உள்ளூர் வணிகங்களுக்கு ஊக்கம், வேலை உருவாக்கம், உட்கட்டமைப்பு மேம்பாடு, கலாசார மேம்பாடு மற்றும் அரசாங்கத்திற்கு வருவாய் ஈட்டுதல் ஆகியவற்றின் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான ஊக்கியாக செயல்படுகிறது.

சுற்றுலாவை ஊக்குவிக்கவும், பாரம்பரியத்தை பாதுகாக்கவும், ஒரு பிராந்தியத்தின் ஒட்டுமொத்த சமூகப்பொருளாதார கட்டமைப்பை மேம்படுத்தவும் கலாசார நிகழ்வுகளின் திறனை இது காட்டுகிறது.

இத்தகைய பண்டிகைகளின் பொருளாதார நன்மைகளை அங்கீகரிப்பதன் மூலமும் அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமும் நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் செழிப்பை உந்துவதற்கு இலங்கை அதன் வளமான கலாசார பாரம்பரியத்தை மேலும் பயன்படுத்த முடியும்.

எனவே, சந்தர்ப்பங்களை நல்லமுறையிலும், எமக்குச் சாதகமான முறையிலும் பயன்படுத்துவதன் மூலமாக இலங்கையிலுள்ள ஒவ்வொருவரும் தனிநபர் வருமானத்தினை உயர்த்த முடிவதுடன் முழு இலங்கை நாட்டினையும் சிறந்த தன்நிறைவு பெற்ற செல்வந்த நாடாக வளர்ச்சி பெற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தன் திருவிழா ஒரு சிறந்த வாய்ப்பாக இருப்பதனால் நீங்கள் எல்லோரும் பயன்பெற வேண்டுகின்றேன்.

## " என் மண் என் மக்கள்"... (07ஆம் பக்கத் தொடர்)

'பாரதீய ஜீசஸ் பார்ட்டி' என்றுதான் நாகலாந்து கிராமப்புறங்களில் தன்னை அக்கட்சி அறிமுகம் செய்து கொண்டதால்தான் அங்கே வெற்றிபெற்று அரசு அமைக்க முடிந்தது என்று சொல்வார்கள். அடிப்படைக் கொள்கைகளை மாற்றாமல் மேலோட்டமாக வேறொரு நிலைப்பாட்டில் இருப்பது போல பா.ஜ.க. தன்னைக் காட்டிக் கொள்ளும். உலகில் பழைமையான மொழி என்றும் திருக்குறளை எடுத்துக் காட்டாக சொற்பொழிவுகளில் பயன்படுத்துவதும், பப்புவா நியூகினியாவில் திருக்குறளை வெளியிடுவதும் பிரதமர் மோடிக்கு கைவந்தகலை. நிர்மலா சீதாராமனும் தன் வரவு செலவு நிதியறிக்கையை சமர்ப்பித்து உரையாற்றும் போதும் திருக்குறள், புறநாநூறு பாடல்களையும் பயன்படுத்துவார். 'ஜீசஸ் பார்ட்டி" என அழைத்துக் கொண்டது போன்ற அணுகுமுறையை தமிழக மக்கள் மீது பிரயோகிப்பதாகவே இவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

தற்போது பா.ஜ.க. டில்லி தலைமை தி.மு.க.வை நேரிடையாகவே விமர்சிக்கத் தலைப்பட்டுள்ளது. பிரதமர் மோடியும் அமித்ஷாவும் குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல், ஊழல் அமைச்சர்களை பதவி நீக்காமல் வைத்திருப்பது என்று குற்றம் சாட்டத் தொடங்கியுள்ளனர். செந்தில் பாலாஜி மீது அமுலாக்கல்துறையை ஏவி விட்ட பா.ஜ.க. அரசு, அமைச்சர் பொன்முடியிடம் விசாரணை நடத்தியது. இது தி.மு.க. அமைச்சர்கள் அனைவரையும் கிலியில் ஆழத்தியுமிருக்கிறது. உதயநிதி ஸ்டாலின் மீது அமுலாக்கல்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தலாம் என்ற ஒரு செய்தியும் சமீபத்தில் சென்னையில் எழுந்து அடங்கியது. தி.மு.க. தலைமையை வழிக்குக் கொண்டுவர அதையும் கூட ஒரு ஆயுதமாக பா.ஜ.க. பயன்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கவே செய்கிறது.

தி.மு.க.வில் பிளவு ஏற்படுத்துவது சிரமமானதொன்றாக விளங்குவதற்கு அது குடும்ப ரீதியாக நிலை பெற்றிருப்பதே காரணம். காங்கிரஸ் ஆட்சியும் கூட, அ.ராசாவையும் கனிமொழியையும் கைது செய்து திஹார் ஜெயிலில் அடைத்ததை கருணாநிதி குடும்பத்தில் விரிசலை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவே விமர்சகர்களினால் பார்க்கப்பட்டது. முன்னர் கருணாநிதி குடும்பத்துக்கும் முரசொலிமாறன் குடும்பத்துக்கும் இடையே முரண்பாடுகள் தோன்றின. அண்ணா அறிவாலய கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருந்த சன் டி.வி. அலுவலம் அப்புறப்படுத்தப்பட்டதும், சன் டி.விக்கு மாற்றாக கலைஞர் டி.வி. தோற்றம் பெற்றதும் அக்காலத்தில்தான். அந்த விரிசல் பின்னர் சரி செய்யப்பட்டது.

தி.மு.க.வில் இருந்து யாரைப் பிரித்தெடுத்தாலும் அது தி.மு.க.வுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. ஸ்டாலினிடமிருந்து உதயநிதியை பிரித்தால்தான் தி.மு.க. இரண்டாகப் பிளக்கக் கூடும். மாறன் சகோதரர்கள் வர்த்தகர்கள் என்ற வகையில் தி.மு.க.வுடன் நிற்பதே அரசியல் பொருளாதார ரீதியாக அவர்களுக்கு லாபம்; பலமும் கூட. இவர்கள் செல்வந்தர்கள் என்பதால் கோடிகளில் விலை பேசவும் முடியாது. தி.மு.க.வை பிளக்க முடியாது என்றால், சாத்தியமான அடுத்த அணுகுமுறை, ஊழலில் திளைக்கும் குடும்பக் கட்சி என்ற டமாரத்தை தொடர்ந்தும், பேரொலியாகவும் ஒலிக்கச் செய்வதுதான். அதைத்தான் அண்ணாமலை தற்போது செய்து வருகிறார் ஜனவரி 11ஆம் திகதிவரை. இப் பாதயாத்திரை முடிவடையும் போது தமிழகத்தில் பா.ஜ.க.வுக்கு தற்போதிருக்கும் ஆதரவு தளம் மேலும் விரிவடையும், வாக்களிப்போர் எண்ணிக்கை பல மடங்காக அதிகரிக்கும் என்று தமிழக பா.ஜ.க. கருதுகிறது.

# கொட்டாஞ்சேனையில் இன்று மாலை அம்மா பகவானின் கலச பூஜை



ஸ்ரீ பரஞ்சோதி லக்ஷமி கடாக்ஷ ஐஸ்வர்ய கலச பூஜை இன்று (6.8.2023) மாலை 3.30 மணிமுதல் கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறும். ஒருவருக்குள் எதிர்மறை எண்ணங்கள் தலைதூக்கும் போது அவருடைய நேர்மறை எண்ணங்கள் வலு இழக்க ஆரம்பிக்கின்றது. இவ் எதிர்மறை எண்ணங்களால் ஒருவரின் இறைசைத் தன்யம் தாழ்ந்து போகின்றது.

எண்ணங்களில் ஏற்படும் இவ்வகை மாற்றங்களினாலே தனி மனித மற்றும் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும் காரணமாகின்றது. இவ் நிலைமாற தனி மனித எண்ணங்கள் உயர் செழுமை அடைய வேண்டும்.

இவ் மாற்றமானது நாட்டின் பொருளாதார நிலை மேன்மையடையும் என்பதே ஸ்ரீ பரம் ஜோதி அம்மா பகவானின் சங்கல்ப்பமாகும். இலங்கை வாழ் மக்கள் பொருளாதார ரீதியாக சுபீட்சம் அடைய வேண்டும், மக்கள் வளமுடன் நலமுடனும் இறைசைத் தன்யத்துடன் வாழ வேண்டும் என்பதற்காகவே அம்மா பகவான் பக்தர்கள் இந்த பூஜையை ஏற்பாடு செய்துள்ளார்கள். இப்பூஜையில் கலந்துகொண்டு இஷ்ட சித்திகளை பெற்று கொள்ளுமாறு வேண்டுகோள் விடுகின்றனர்.

எச்.எச்.விக்கிரமசிங்க

# வேலை வெற்றிடங்கள்

## GSMB டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்

(புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் துணைக் கம்பனி)

**கம்பனியின் கீழே குறிப்பிடப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வெளியக மற்றும் உள்ளக விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### (01) மனிதவள மற்றும் மற்றும் நிர்வாக முகாமையாளர்

**வெளியக விண்ணப்பதாரர்கள் (1 உடன் 2)**

**கல்வித் தகைமைகள் :-**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ பொது முகாமைத்துவம் வர்த்தக முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகத்தில் ஓர் இளநிலைப் பட்டம்

**மற்றும்**

**சேவை அனுபவம்**

2. மனிதவள முகாமை/ முதலாம் பட்டத்தை பெற்றுக் கொண்ட பின்னர் நிர்வாகத்தில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட தகைமைக்குப் பின்னரான அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள் (கீழேயுள்ள 1 அல்லது 2)**

1. மேலே குறிப்பிடப்பட்டவாறு வெளியக விண்ணப்பதாரிகளிடம் தேவைப்படும் தகைமைகளைப் பெற்றுக்கொண்டிருத்தல்.
2. உயர் தேசிய டிப்ளோமாவுடன் (NVQ மட்டம் 6 குறையாத) உடன் சம்பந்தப்பட்ட துறையில் - கனிஷ்ட முகாமையாளர் வகுதி (JM 1-1) பதவியில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது - மனிதவள முகாமை துறையில் மேற்படி தகைமையை கொண்டிருத்தல்.

### (02) சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் முகாமையாளர்

**வெளியக விண்ணப்பதாரிகள் ( 1 உடன் 2)**

**கல்வித் தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட, சம்பந்தப்பட்ட துறையில் சந்தைப்படுத்தல்/ முகாமைத்துவம்/ வர்த்தக நிர்வாகத்தின் இளமாணிப் பட்டம்

**மற்றும்**

**சேவை அனுபவம்**

2. முதலாம் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட பட்டப் பின்படிப்புத் தகைமை அனுபவம்

**திட்டமிடல் துறையில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.**

1. மேலே உள்ளது போல் வெளியக விண்ணப்பதாரிகளின் தேவைப்படும் தேவைப்படும் தகைமைகளைக் கொண்டிருத்தல்.
2. இளமாணிப்பட்டத்துடன் சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ வகுதி (MM1-1) பதவியில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. உயர் தேசிய டிப்ளோமா (NVQ மட்டம் 6 இற்கு குறையாத) அல்லது சந்தைப்படுத்தல்/ முகாமைத்துவ துறையில் மேற்படி தகைமையுடன் பதவியுடன் சம்பந்தப்பட்ட சந்தைப்படுத்தல் துறையில் கனிஷ்ட முகாமையாளர் வகுதி (JM 1-1) பதவியில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

### (03) சட்ட முகாமையாளர்

**உள்ளக மற்றும் வெளியக விண்ணப்பதாரிகள்**
**(1 மற்றும் 2 உடன் 3)**

**கல்வி மற்றும் தொழில்சார்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகரிக்கப்பட்ட, சட்டத்தின் (LLB) ஓர் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

2. சட்டத்தரணி

**அத்துடன்**

3. பட்டம்/ தகைமையைப் பெற்றுக்கொண்ட பின்னர் சிறப்பு பயிற்சி/ சட்ட துறையில் குறைந்தபட்சம் ஒரு (01) வருட பட்டப் பின் படிப்பு தகைமை அனுபவம்.

**சம்பள அளவு**

MM 1 - 1 (தரம் II)
(ரூபா 53,175 - 10x1375 - 15x1910 - 95,575) மற்றும் ஏனைய கம்பனியினால் வழங்கப்படும் கொடுப்பனவுகள்)

**வயதெல்லை**

22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு கூடிய வயதெல்லை பொருந்தாது.

**பதவியுடன் பொருந்தக்கூடிய பொது நிபந்தனைகள்**

- இப்பதவி 1 வருட ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அத்துடன் செயற்திறனின் அடிப்படையில் ஒப்பந்தம் நீடிக்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஊழியர் சேமலாப நிதிக்கு 8% பங்களிப்பை வழங்க வேண்டும். அத்துடன் கம்பனியானது 12% ஐ பங்களிப்புச் செய்யும். அத்துடன் மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3%ஐ பங்ளிப்பு செய்யப்படும்.
- அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிகள் சபையின் விண்ணப்பதாரர்கள் முறையே அந்தந்த நிறுவனங்களில் தலைமையூடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- விண்ணப்பதாரியின் விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு உறவினரல்லாத பரிந்துரைப்பவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொ.பே. இலக்கங்கள் விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.
- கல்வித் தகைமைகள், அனுபவம், தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

உங்களது சுயதரவுகளை பதிவுத் தபாலில் 2023.08.24 அன்று அல்லது அதற்கு முன்பு கீழ்க்காணும் முகவரியை அடையுமாறு பதிவுத் தபாலில் சமர்ப்பியுங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

குறுகிய பட்டியலப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகத்தேர்விற்காக அழைக்கப்படுவர்.

**பிரதம செயற்பாட்டு அலுவலர்,**
**GSMB டெக்னிக்கல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**இல. 190/A, ரத்னவீர கட்டிடம்,**
**ஸ்டான்லி திலகரத்ன மாவத்த,**
**நுகேகொடை.**

# நவீன Smartphone களை அணுகுவதற்காக vivo உடன் கைகோர்க்கும் சிங்கர்



முன்னணி Smartphone உற்பத்தியாளரான vivo உடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக சிங்கர் ஸ்ரீ லங்கா பிஎல்சி அறிவித்துள்ளது. அதன் மூலம் vivo இன் உத்தியோகபூர்வ தேசிய விநியோகத்தராக சிங்கர் திகழும். இலங்கையில் Smartphone கட்டமைப்பை மேம்படுத்துவதில் இந்த கைகோர்ப்பு முக்கிய படியாக அமைந்திருக்கும் என்பதுடன், நுகர்வோருக்கு புத்தாக்கமான மற்றும் உயர்தரம் வாய்ந்த vivo Smartphone களை அணுகுவதற்கான வாய்ப்புகளை வழங்கும்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் சிங்கர் குரூப் ஒஃவ் கம்பனிஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹேஷ் விஜேவர்தன கருத்துத் தெரிவிக்கையில், “புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய சேவை போன்ற எமது பெறுமதிகளைப் பகிர்ந்துள்ள வர்த்தக நாமமான vivo உடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்தப் பங்காண்மையினூடாக, நவீன தொழில்நுட்பம் மற்றும் உள்ளம்சங்கள் பொருந்திய Smartphoneகளை இலங்கையின் வாடிக்கையாளர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளோம். ஒன்றிணைந்து, நாம் ஒப்பற்ற Smartphone அனுபவத்தை ஏற்படுத்தவுள்ளதுடன், நாடு முழுவதிலும் நாம் கொண்டுள்ள பிரத்தியேகமான விற்பனை பிரசன்னத்தினூடாக இதற்கு வலுச் சேர்க்கப்படும்.” என்றார். vivo அதன் புத்தாக்கமான தொழில்நுட்பம் மற்றும் இனங்காணல் உள்ளம்சங்கள் போன்றவற்றுக்காக உலகளாவிய ரீதியில் அறியப்படுகின்றது. இந்தப் பங்காண்மையினூடாக, இலங்கையின் நுகர்வோரின் விரல்நுனிகளுக்கு பிரத்தியேகமான Smartphone தெரிவுகள் கொண்டுவரப்படும்.

சிங்கரின் பரந்த விற்பனை வலையமைப்புடன், இலங்கையில் பல்வேறு சர்வதேச வர்த்தக நாமங்களின் அங்கீகாரம் பெற்ற ஏக விநியோகத்தர் எனும் கீர்த்தி நாமம் போன்றன, vivo க்கு சிறந்த பொருத்தமாக அமைந்துள்ளது. வாடிக்கையாளர் தன்னிறைவுக்கான தனது அர்ப்பணிப்பின் அங்கமாக, Smartphoneகளுக்கு பரிபூரண வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் அர்ப்பணிப்பான விற்பனைக்கு பிந்திய சேவைகள் போன்றவற்றை சிங்கர் வழங்கும்.

# Home Lands Holding உடன் இணையும் HNB




ரியல் எஸ்டேட் துறையை புத்துயிர் பெறச் செய்யும் முயற்சியில், இலங்கையின் முன்னணி தனியார் துறை வங்கியான HNB PLC, எதிர்கால வீட்டு உரிமையாளர்களுக்கு தங்களுடைய சொந்த காணி கட்டடங்களுக்காக முதலீடு செய்வதற்கு சிறந்த நிதித் தீர்வுகளை வழங்குவதற்காக ரியல் எஸ்டேட் நிறுவனமான Home Land Holdings இன் உத்தியோக பூர்வ வங்கிப் பங்காளியாக கையொப்பமிட்டுள்ளது.

Home Landsஇன் விரிவான கோப்புறை முழுவதிலுமுள்ள காணி நிலங்களுக்கும் இந்த ஊக்குவிப்பு நடவடிக்கை பொருந்தும். பத்தரமுல்லையில் உள்ள Home Lands தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் இந்த கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. HNBஇன் பிரதிப் பொது முகாமையாளர் – வாடிக்கையாளர் வங்கிக் குழுமம், சஞ்ஜேய் விஜேமான்ன, HNB AGM தனிப்பட்ட நிதிச் சேவைகள் (PFS), காஞ்சனா கருணாகம மற்றும் Home Lands குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நளின் ஹேரத் மற்றும் HNB மற்றும் Home Lands குழுமத்தின் சிரேஷ்ட முகாமையாளர்களும் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

“உலகளாவிய தொற்றுநோய் மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்ட சவால்கள் இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் ரியல் எஸ்டேட் துறைக்கான கண்ணோட்டம்நேர்மறையானதுமற்றும்மீள்தன்மை கொண்டது. ரியல் எஸ்டேட் ஆர்வலர்கள் மற்றும் வருங்கால வீட்டு உரிமையாளர்கள் தங்கள் கனவு வீட்டுக்காக முதலீடு செய்ய விரும்பும் பல முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இந்தத் துறை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது.” என HNB AGM – தனிப்பட்ட நிதிச் சேவைகள், காஞ்சனா கருணாகம தெரிவித்தார்.

# பண அனுப்புகை திட்டத்தை விஸ்தரித்த நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி



நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி தனது 'கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட ஓர் உறவு' பண அனுப்புகை திட்டத்தை 2023 டிசம்பர் மாதம் வரை நீடித்துள்ளதாக அறிவித்துள்ளது. வாடிக்கையாளர்களிடமிருந்து இந்தத் திட்டத்துக்கு கிடைத்த பெருமளவு வரவேற்பைத் தொடர்ந்து, வங்கி இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியினூடாக வெளிநாட்டு பண அனுப்பல்களை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த சுப்பர் மார்க்கெட் வவுச்சர்களை வெல்வதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. ஆகக்குறைந்தது ரூ. 50,000 பெறுமதியான ஒவ்வொரு வெளிநாட்டு பண அனுப்புகை கொடுக்கல் வாங்கல் அல்லது அதற்கு நிகரான வெளிநாட்டு நாணயப் பெறுமதி இந்த வெற்றியாளர் தெரிவுக்கான ஒரு விண்ணப்பமாக கவனத்தில் கொள்ளப்படும்.

பங்குபற்றுநர்கள் மத்தியில் விறுவிறுப்பை ஏற்படுத்தும் வகையில், மாபெரும் இறுதி வெற்றியாளருக்கு டிசம்பர் மாத நிறைவில் இந்தத் திட்டம் பூர்த்தியடைந்ததும், வெளிநாட்டு விமானப் பயணச் சீட்டு பரிசாக வழங்கப்படும். பணத்தை அனுப்புபவர் மற்றும் பெறுபவரினால் இந்த விமான டிக்கட்களை பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதால், வெளிநாடுகளில் இருக்கும் தமது அன்புக்குரியவர்களுடன் மீள இணைந்து கொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். மாபெரும் இறுதிப் பரிசில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யும் நாட்டுக்கு இலவச விமானப் பயணச் சீட்டு பரிசாக வழங்கப்படும்.

# திறைசேரிக்கு லிற்றோ காஸ் லங்கா மேற்கொண்ட மகத்தான பங்களிப்பு



இலங்கையின் தேசியதிரவப் பெற்றோலிய வாயு வழங்குனரான லிற்றோ காஸ் லங்கா லிமிடட் தனது பிரதான பங்குதாரரான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் ஊடாக 1.5 பில்லியன் ரூபா பங்கு இலாபத்தை திறைசேரிக்கு வழங்கிப் பாரிய பங்களிப்பை மேற்கொண்டுள்ளது.

மூலோபாய முகாமைத்துவம், வினைத்திறன் மற்றும் பொதுமக்களின் தேவைகளுக்காகப் பணியாற்றும் அர்ப்பணிப்பு போன்றவையே இலாபமீட்டும் ஒரு சில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களில் ஒன்றான லிற்றோ நிறுவனத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளன. திரவப் பெற்றோலிய வாயு வழங்குநரின் விவேகமான நிதி நடைமுறைகள் அரசாங்கத்தின் திறைசேரிக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்க இடமளித்திருப்பதுடன், பொது நிதி தேவைகளுக்கு நிதியளிப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்குத் தேவையான ஊக்கத்தையும் இது அளிக்கிறது.

இக்கட்டான சூழ்நிலையில் சிறப்பான பங்களிப்பின் மூலம் அரசாங்கத்தைப் பலப்படுத்த முடிந்தமை குறித்து லிற்றோ காஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், “அரசுக்குச் சொந்தமான நிறுவனம் என்ற ரீதியில் நாம் எப்பொழுதும் மக்களின் நலன்புரிக்கே தொடர்ந்தும் முன்னுரிமை அளித்து வருகிறோம். குறிப்பாக கொவிட்19 முடக்கங்களின் போதுவீடுகள் மற்றும் வணிகங்களுக்குத் தேவையான இடையறாத விநியோகத்தை உறுதிசெய்திருந்தோம். உலக சந்தையில் திரவப் பெற்றோலிய வாயுவின் விலை குறையும்போது அதன் நன்மையை வாடிக்கையாளர்களுக்குப் பெற்றுக் கொடுக்கக் கூடிய விலைச் சூத்திரத்தை நாம் பின்பற்றுகின்றோம். இதற்குத் தலைகீழான நிலைமை ஏற்படும்போது வாடிக்கையாளர்கள் மீது முழுமையான சுமையை ஏற்படுத்தாது செலவுக்கு மானியங்கள் வழங்குகின்றோம்”என்றார்.

# இலங்கையில் குளுக்கோமா சிகிச்சையை புரட்சிகரமாக்க ZEISS SLT இனை அறிமுகப்படுத்தும் DIMO Healthcare

இலங்கையில் முன்னணியிலுள்ள பல்வகைத் துறை கூட்டு நிறுவனமான DIMO, அதன் மதிப்புமிக்க Healthcare பிரிவான DIMO Healthcare மூலம் ZEISS Selective Laser Trabeculoplasty (SLT) தொழில்நுட்பத்தை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியமை தொடர்பில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. இந்த அற்புதமான லேசர் சிகிச்சையானது குளுக்கோமா (கண் அழுத்த) நோயை முகாமைத்துவம் செய்வதில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தனியான ஒரு செயன்முறையின் ஊடாக கண்ணின் உள் அழுத்தத்தை திறம்பட கட்டுப்படுத்தி, கிளைக்கோமா நோயாளிகளுக்கு, தினசரி மருந்துகளின் தேவையை கணிசமாகக் குறைக்கிறது.

மவுண்ட் லோட்டஸ் (Mount Lotus) மருத்துவமனையில் முதலாவது ZEISS SLT நிறுவப்பட்டமையானது, இலங்கையின் கண் மருத்துவத் துறையில் ஒரு குறிப்பிடும்படியான மைல்கல்லைக் குறிக்கிறது. ZEISS இற்கான அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர் எனும் வகையில், நாட்டின் சுகாதாரத் துறையில் மேம்பட்ட தீர்வுகளைக் கொண்டுவருவதில் DIMO Healthcare உறுதியாக உள்ளது. இந்த சிகிச்சை அணுகுமுறை இங்கிலாந்தில் உள்ள தேசிய சுகாதார மற்றும் பராமரிப்பு விசேடத்துவ நிறுவனத்தின் (National Institute for Health and Care Excellence NICE) பரிந்துரைகளுடன் ஒத்துப்போகிறது. இது நாட்பட்ட திறந்தகோண குளுக்கோமாவுடன் (openangle glaucoma) புதிதாக கண்டறியப்பட்ட நபர்களுக்கான முதன்மை சிகிச்சையாக SLT இனை அடையாளம் காட்டுகிறது.

# சிறந்த புத்தாக்க நிறுவனத்துக்கான விருதை சுவீகரித்த CDB




இலங்கையின் முழுமையான நிதிச் சேவைகள் வழங்குநரான சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB), அறிமுக Dare to Dream விருதுகள் 2023 இலங்கை பதிப்பு நிகழ்வில் ஆண்டின் மிகவும் புத்தாக்கமான நிறுவனமாக கௌரவிக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வுக்கு SAP மற்றும் ஜோன் கீல்ஸ் IT அனுசரணை வழங்கியிருந்தன. தூர நோக்கிலமைந்த தொழில்நுட்ப புத்தாக்கங்கள் மற்றும் இலங்கையில் டிஜிட்டல் மாற்றியமைப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கான அர்ப்பணிப்பு போன்றவற்றினூடாக, நிதிச் சேவைகள் துறையில் புரட்சியை ஏற்படுத்துவதில் CDB இன் அர்ப்பணிப்பை உறுதி செய்வதாக இந்த விருது அமைந்துள்ளது.

புத்தாக்கம், தொழில்நுட்ப பின்பற்றல் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு ஆகியவற்றில் முன்னோடிகளாக அமைந்திருக்கும் தூர நோக்குடைய சிந்தனையாளர்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்படுகின்றது. அதனூடாக, இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெறுவதற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது. இந்த விருதைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர், ஒட்டு மொத்த தொழில்நுட்ப நடைமுறைப்படுத்தல்களின் அடிப்படையில், CDB இன் விண்ணப்பத்தை நிபுணர்கள் குழுவினர் மதிப்பாய்வு செய்திருந்தனர். நாட்டில் அண்மையில் நிலவியிருந்த சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் இந்தப் பணிகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பது காண்பிக்கப்பட்டிருந்தது.

செயன்முறை புத்தாக்கங்களை மேம்படுத்தி நடைமுறைப்படுத்துவதில் CDB தொடர்ச்சியாக கவனம் செலுத்துகின்றது.

# அவுஸ்திரேலியாவின் உதவி மூலம் வடமத்திய மாகாண இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு




அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுடன் இயங்கும் உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமானது இலங்கையின் கல்வி அமைச்சுடன் இணைந்து விருந்தோம்பல் மற்றும் சுற்றுலாத் துறையின் நிலையான தொழில் வாய்ப்புகளுக்கும், வருமானத்தை அதிகரிக்கவும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது. இலங்கைக்கான அவுஸ்திரேலியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் அவர்கள் தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) பிரசன்ன ரணசிங்க அவர்களுடன் இணைந்து பொலன்னறுவையில் புதுப்பிக்கப்பட்ட சமையல் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்.

சமையல்துறையில் வல்லுனர்களாக வர விரும்பும் இளைஞர்களின் தொழில் முனைப்புகளுக்கு இம் மேம்படுத்தப்பட்ட வசதியுடன் கூடிய பயிற்சி நிலையம் பெரும் உதவியாக அமையும் என பிரதி உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், சுற்றுலாத்துறைக்கான அவுஸ்திரேலியாவின் ஆதரவு நீண்டகாலமாக இருந்து வருகின்றது எனவும் தர மேம்பாடு, பொருத்தப்பாடு மற்றும் உள்வாங்கப்பட்ட வளர்ச்சிக்கான திறன் அபிவிருத்தி போன்றவற்றுக்கு இவை பெரிதும் பங்காற்றுவதாகவும் கூறினார். இச் சமையல் பயிற்சி நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள நவீன உபகரணத் தொகுதியானது இத்துறையின் இளம் தொழில் வல்லுனர்கள் விசேடமாக பெண்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களின் திறன் அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்காற்ற வேண்டும் என்பதனை நோக்கமாக கொண்டுள்ளது.

# கிரிபத்கொடையில் Orient Finance PLC புதிய கிளை




இலங்கையில் முன்னணி நிதி நிறுவனமும், ஜனசக்தி குழுமத்தின் உறுப்பினருமான Orient Finance PLC, கிரிபத்கொடையில் தமது புதிய கிளையினை திறந்து வைத்துள்ளது. தமது 32ஆவது கிளையை திறந்து வைத்துள்ளதன் மூலம் தமது கிளை வலையமைப்பை விரிவுபடுத்தியுள்ள Orient Finance PLC, தமது சேவைகள் அனைத்து வாடிக்கையாளர்களையும் சென்றடைவதை உறுதி செய்துள்ளது.

Orient Finance தமது வாடிக்கையாளர்களின் பல்வேறுபட்ட நிதியியல் தேவைகளை வினைத்திறனுடன் பூர்த்தி செய்யக் கூடியதாகவும் வாடிக்கையாளர்களுடனான தமது உறவை மேலும் பலப்படுத்திக் கொள்ளக் கூடியதாகவும் கடந்த நிதியாண்டில் தமது பல கிளைகளை இடமாற்றம் செய்ததுடன் சில கிளைகளை புதுப்பிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டது. கிரிபத்கொடை நகரில் வாழும் தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு தேவையான விரிவான நிதியியல் தேவைகள் மற்றும் நிபுணத்துவத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள கிரிபத்கொடை கிளையினை நாடிட முடியும்.

Orient Finance வைப்புத் திரட்டல் சேமிப்பு கணக்குகள் லீசிங் தங்கக் கடன் மாற்று நிதித் தீர்வுகள் பெருநிறுவன நிதி போன்ற பல விரிவான நிதிச் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு தேவையான விதத்தில் தனிப்பயனாக்கப்பட்ட முறையில் வழங்குகிறது.

நிறுவனமானது 40 ஆண்டுகால நிலைத்தன்மை, உறுதி, நம்பகத்தன்மை மற்றும் நிபுணத்துவம் என்பவற்றை இந்நிதியியல் தொழிற்துறைக்கு வழங்குகின்றது. புத்தாக்கத்துக்கு முன்னுரிமை அளித்தல், புதுமையான தயாரிப்புக்கள் மற்றும் சிறந்த வாடிக்கையாளர் சேவை என்பவற்றை உள்ளடக்கிய வாடிக்கையாளர்களை மையப்படுத்திய நிதிச்சேவைகள் வழங்குனராக தம்மை நிலைநிறுத்தியுள்ளது.

# ஜனாதிபதி ஆயுர்வேத விருது வழங்கும் விழாவின் பிரதான பங்காளியாக யூனிலீவரின் லீவர் ஆயுஷ்




வரலாற்றில் முதன்முறையாக ஆயுர்வேத அமைச்சின் கீழுள்ள, ஆயுர்வேத திணைக்களத்தினால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'வெததுரு அபிமன் ஜனாதிபதி ஆயுர்வேத விருது வழங்கும் விழா' வின் பிரதான பங்காளியாக, யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் முதன்மையான ஆயுர்வேத வர்த்தக நாமமான லீவர் ஆயுஷ், ஆயுர்வேத திணைக்களத்துடன் இணைந்து முன்னெடுத்திருந்தது. வெததுரு அபிமன் என்பது ஆயுர்வேத மருத்துவ நிபுணர்களின் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் ஒரு திட்டமாகும் என்பதோடு, இலங்கையில் ஆயுர்வேத மற்றும் சுதேச மருத்துவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

BMICH இல் நடைபெற்ற இந்த தேசிய நிகழ்வில் பிரதம அதிதிகளாக பிரதமர் தினேஷ் குணவர்தன, பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹண திஸாநாயக்க மற்றும் ஆயுர்வேத ஆணையாளர் டாக்டர் தம்மிக்க அபேகுணவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் ஒவ்வொரு வெற்றியாளருக்கும் சான்றிதழ்கள் மற்றும் மதிப்புமிக்க பட்டம் வழங்கப்பட்ட அதே நேரத்தில், லீவர் ஆயுஷ் பாரம்பரிய ரீதியான மற்றும் பட்டம் பெற்றவர்கள் பிரிவுகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வெற்றியாளர்களுக்கு வெகுமதிகளை வழங்கி வைத்தது.

ஆயுர்வேத திணைக்களம் உள்நாட்டு மருத்துவத்தை மேம்படுத்துவதிலும், பழமையான பாரம்பரிய மருத்துவ முறைகளை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

கொழும்பில் உள்ள ஒரு முஸ்லிம் பெண்கள் இல்லத்திற்கு வதிவிட

**பெண் உதவியாளர்**

தேவை.

அழையுங்கள்

**077-3421166**

අතුරුදහන් වූ තැනැත්තන් පිළිබඳ කාර්යාලය
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
OFFICE ON MISSING PERSONS

# ஆட்சேர்ப்பு

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது 2016ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (ஸ்தாபித்தல், நிர்வகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஓர் அலுவலகமாகும்.

அப் பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆர்வமுள்ள மற்றும் அனுபவமுள்ள தொழில் நிபுணர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது அழைக்கிறது.

பதவி வெற்றிடங்கள் மற்றும் மேலதிக தகவல்களுக்காக.

https://www.moj.gov.lk என்ற இணைய பக்கத்தை அணுகவும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 2023 ஆகஸ்ட் 20

**தலைவர்**
**காணாமல் போன நபர்களின் அலுவலகம்**
**தொலைபேசி : 011-2861431**
**தொலைநகல் : 011-2861450**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

SMIB

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

SMIB/TD/2023/08/02

## கேள்வி அறிவித்தல்

**Database நிர்வாகிகள், முறைமை நிர்வாகிகள், மென்பொருள் பொறியியலாளர்கள் மற்றும் Application Support பொறியியலாளர்களின் (முறைமை இயக்குநர்கள்) வெளிவள சேவைகள்**

அரச ஈட்டு முதலீட்டு வங்கிக்கு Database நிர்வாகிகள், நிர்வாகிகள், முறைமை நிர்வாகிகள், மென்பொருள் பொறியியலாளர்கள் மற்றும் Application Support பொறியியலாளர்களின் (முறைமை இயக்குநர்கள்) பதவிகளை வெளிவளம் (Outsourcing) செய்வதற்கு தகவல் தொழில்நுட்ப சேவை/முகாமைத்துவ சேவை துறையில், முன்னுரிமை வங்கி மற்றும் நிதித் துறையில் 03 வருடகால அனுபவம் உள்ள, புகழ்பெற்ற சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத 5000.00 இல. ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் கொழும்பு-03, இல. 269, காலி வீதி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, 4ஆம் மாடி, (மனித வளங்கள் மற்றும் பொருள்வள) பிரதான முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட இடத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| | |
|---|---|
| **விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் மற்றும் நேரம்** | **2023 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு** |
| **விலைமனுக்கள் திறக்கப்படுதல்** | **முடிவுறுத்தலின் பின் உடனடியாக** |
| **விலைக்கோரல் பிணை முறித் தொகை** | **இல.ரூபா 100,000.00** |

எந்தவொரு காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு அல்லது சகல விலைமனுக்களையும் நிராகரிக்கும் அல்லது விலைக்கோரலின் ஏதாவதொரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது.

**மேலதிக தகவல்களுக்கு: 011-7722879 / 011-7722876**
**பெறுகைக் குழு,**
**அரச ஈட்டு முதலீட்டு வங்கி,**
**இல. 269, காலி வீதி, கொழும்பு-03.**

சுற்றாடல் அமைச்சு
GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP)

**GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு கட்டளை முகாமைத்துவ முறைமையொன்றை (OMS) வடிவமைத்தல், அபிவிருத்தி செய்தல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல்**

**பெறுகை இலக்கம்: GSMBTS/PUR/NCB/2023-40**

GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு கட்டளை முகாமைத்துவ முறைமையொன்றை (OMS) வழங்குவதற்காக இலங்கையில் தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த உள்நாட்டு மென்பொருள் அபிவிருத்தி நிறுவனங்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட முன்மொழிவுகளை GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

ஆவணத்தின் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணமாக 5,000.00 (ஐயாயிரம் ரூபா) ரொக்கப் பணமாக செலுத்துவதன் பேரிலும் மற்றும் 2023 ஆகஸ்ட் 07ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 25ஆம் திகதி வரையில் பி.ப. 3.00 மணி வரையான அலுவலக நேரங்களில் நுகேகொட, 190/A, ஸ்டேன்லி திலக்கரத்ன மாவத்தை, ரத்னவீர கட்டிடம், GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் பெறுகைப் பிரிவிற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரிலும் ஆங்கில மொழியிலான முன்மொழிவு ஆவணங்களைப் கொள்வனவு செய்யலாம்.

இந்தக் கேள்விக்கு இரண்டு கடிதவுறை நடைமுறை பின்பற்றப்படும். ஒவ்வொரு விலைமனுவுடனும் தொழில்நுட்ப முன்மொழிவொன்று மற்றும் நிதி முன்மொழிவொன்றும் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். முன்மொழிவுகளை 2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தொழில்நுட்ப முன்மொழிவுகள் முடிவுறுத்தல் நேரம் முடிவடைந்த பின் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரரால் விலைக்கோரல் பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி கவனத்திற் கொள்ளப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்குபற்ற விரும்புபவர்கள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் அனுமதிக்கப்படுவர்.

கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் குறிக்கப்பட்ட கடிதவுறையொன்றில் தொழில்நுட்ப முன்மொழிவு உள்ளடக்கப்படல் வேண்டும் என்பதுடன் 2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் திறக்க வேண்டாம் எனும் எச்சரிக்கை குறிப்பும் மற்றும் நிதி முன்மொழிவுகளை கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் குறிக்கப்பட்ட கடிதவுறையொன்றில் உள்ளிட்டு விலைமனுதாரர்களின் முன்னிலையில் தவிர திறக்க வேண்டாம் என்ற எச்சரிக்கை குறிப்பும் குறிப்பிடப்படுதல் வேண்டும். தொழில்நுட்ப முன்மொழிவு மற்றும் நிதி முன்மொழிவைக் கொண்ட இரு கடித உறைகளையும் வெளிப்புற உறையொன்றினுள் உள்ளிட்டு கேள்வியின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் மற்றும் ''2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் திறக்க வேண்டாம்'' எனும் எச்சரிக்கை குறிப்பும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

சகல முன்மொழிவுகளுடனும் 20,000.00 (இருபதாயிரம்) ரூபாவிற்கான இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவு அல்லது நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வங்கி வரைவு அல்லது விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

தொழில்நுட்ப முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணிசமாக பதிலளிக்கக்கூடிய விலைமனுவைச் சமர்ப்பித்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு அறிவிக்கப்படும். பின்னர் நிதி முன்மொழிவுகள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் விலைமனுதாரர்கள் முன்னிலையில் நிதி முன்மொழிவுகள் திறக்கப்படும்.

GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்திற்கு ஆகக்குறைந்த விலைக்கோரலை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடு இல்லை. GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ற சிறந்த முறைமையைத் தெரிவுசெய்ய பெறுகைக் குழு சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும். இந்த முன்மொழிவுகளில் GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,**
**190/A, ரட்னவீர கட்டிடம்,**
**ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை,**
**நுகேகொட.**

**2023 ஆகஸ்ட் 07ஆம் திகதி.**

The Housewives' companion
Classifieds on
Daily News

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
Ministry of Agriculture
கமத்தொழில் அமைச்சு

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

Agriculture Modernization Project

**කෘෂිකර්ම අමාත්‍යාංශය**
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**
**(කෘෂිකර්ම අමාත්‍යාංශය / விவசாயப்பிரிவு / Agriculture Division)**
**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**
**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**குண்டசாலை, கன்னொருவ மற்றும் தொடங்கொல்ல நடுகைப் பொருட்கள் உற்பத்திக்கு 10 எண்ணிக்கையான அரை தன்னியக்க பொலி சுரங்கங்கள் (Semi-Automated Poly Tunnels) நிர்மாணித்தல் மற்றும் HORDI, கன்னொருவயில் கட்டுப்பாட்டு சூழல் சகிதம் முழுமையான தன்னியக்க பொலி சுரங்கங்களை (Fully Automated Poly Tunnel) நிர்மாணித்தல்**

**ஒப்பந்த இல. LK-MOA-PMU-261089-CW-RFB**
**ஒப்பந்த இல. LK-MOA-PMU-261088-CW-RFB**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை மேம்படுத்தும் செயற்றிட்டத்தின் கிரயத்திற்காக 58.630 மில்லியன் அ.ஐ.டொலருக்கு நிகரான தொகையை பலவகையான நாணய அலகுகளில் கடனாக பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கீழேயுள்ள அட்டவணையிலுள்ள தகுதியுள்ள கொடுப்பனவுகளுக்காக செலவு செய்வதற்கு உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான பின்வரும் வேலைகளுக்கான தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டத்தின் செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விளக்கம் | பெசேவ நீங்கலாக மதிப்பீடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலை மனுக்கள் செல்லு படியாகும் காலப் பகுதி | விலை மனுப் பிணைத் தொகை (ரூபா) | பிணை முறி செல்லு படியாகும் காலப் பகுதி | மீளளிக்கப் படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-261088-CW-RFB | HORDI, கன்னொருவ, கட்டுப்பாட்டு சூழல் சகிதம் முழுமையான தன்னியக்க பொலி சுரங்கங்களை (Fully Automated Poly Tunnel) நிர்மாணித்தல் | 5.62 | 3 மாதங்கள் | C8 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2023 நவம்பர் 14ஆம் திகதி வரை | 100,000.00 | 2023 டிசம்பர் 12ஆம் திகதி வரை | 3,000.00 |
| LK-MOA-PMU-261089-CW-RFB | குண்டசாலை, கன்னொருவ மற்றும் தொடங்கொல்ல நடுகைப் பொருட்கள் உற்பத்திக்கு 10 எண்ணிக்கையான அரை தன்னியக்க பொலி சுரங்கங்கள் (Semi-Automated Poly Tunnels) நிர்மாணித்தல் | 81.2 | 6 மாதங்கள் | C4 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2023 டிசம்பர் 26ஆம் திகதி வரை | 1,200,000.00 | 2024 ஜனவரி 23ஆம் திகதி வரை | 18,000.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான செல்லுபடியாகும் திகதியின் பிரகாரம் விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஒரு விலைமனுதாரர் ஒரு ஒப்பந்தத்திற்கு ஒரு விலைமனுக்கோரலை மாத்திரமே சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கு தகுதியாக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட நிர்மாணத்திற்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.
5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.
6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112073044/ 0714961603/ 0714881265 தொலைநகல் இல: 0112-877546) (மின்னஞ்சல்- procurementspasmp@hotmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
7. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. மேற்கூறப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்ல, பன்னிபிட்டிய வீதி, 123/2ஆம் இலக்கத்திலுள்ள கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட கண்காணிப்புப் பிரிவிற்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023 ஆகஸ்ட் 07ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 28ஆம் திகதி வரை ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட கண்காணிப்புப் பிரிவு, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி மேற்படி முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**123/2, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.**

**2023 ஆகஸ்ட் 06ஆம் திகதி.**

## பாதுகாப்பு அமைச்சு

## ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான விலைமனுக்கோரல் (EOI)

### முன்மொழியப்பட்ட குருநாகல் வளாக கட்டுமானத்திற்கான கூட்டமைப்பு ஆலோசனை சேவைகள்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

ஒப்பந்த இலக்கம் : **KDU/PRO/RP&SERVICE(KUR)/ 01/2023**

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், முற்றிலும் புதிய தோற்றத்துடன் குருநாகலில் நிறுவப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** வடமேற்கு வளாகத்தை நிர்மாணிப்பது தொடர்பான பணிப் பரிந்துரையின்படி ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்கு **ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக** இணையத்தளத்தில் (www.kdu.ac.lk) இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகைமையினைக்கொண்ட மற்றும் அனுபவம் வாய்ந்த ஆலோசனை சேவை வழங்குனர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரல்.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2023.08.07** ஆம் திகதியிலிருந்து **2023.09.04** ஆம் திகதி வரை மு.ப.09.00 **மணியிலிருந்து** பி.ப.15.00 மணி வரையான காலப்பகுதியினுள் **பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை** எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பட்டுள்ள முகவரியில் **2023.08.07 முதல் 2023.09.04** ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி** வரை சரிபார்க்கலாம் **(தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)**
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. **2023.09.05 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில்** மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **பணிப்பாளர்** (ஏற்பாடடியல்), இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி - **0710219449 / 011-2632430** தொலைநகல் **011-2632430, ocrepair@kdu.ac.lk** மற்றும் **www.kdu.ac.lk/ocls/tender-notices** பார்வையிடலாம் "ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான விலைமனுக்கோரலிருந்து)

**தவிசாளர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலான, இலங்கை.**

## கட்டுமான கைவினைஞர்களுக்கான தேசிய கைவினை அடையாள அட்டை வழங்குதல் மற்றும் திறமையான கைவினைஞராக கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்தல்.

2014 இலக்கம் 33 கீழ் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் படி திறமையான கட்டுமானத் தொழிலாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை அணுகுமுறைகளைப் பரிசீலனைசெய்து கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல் மற்றும் அவர்களின் தகவல்களை பராமரிக்கும் நோக்கத்துடன், திறமையான கட்டுமானத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் 27 துறைகளின் வகைப்படுத்தப்படுகிறார்கள் "பிரதான கட்டுமான கைவினைஞர்கள்" மற்றும் "கட்டுமானத் கைவினைஞர்கள்" என 2 முக்கிய பிரிவுகளின் கீழ் தனித்தனியாக பின்வரும் திறன் தரத்திற்காக தொழில்நுட்ப அடையாள அட்டை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

| கட்டுமானத் கைவினைஞர்கள் | |
|---|---|
| MSN | கட்டுமானத் கைவினைஞர் (கொத்தனார்) (Construction Craftsman (Masonry)) |
| WCB | தச்சுவேலை (கட்டிடம்) (Wood Craftsman (Buildings)) |
| WCF | தச்சுவேலை (தளபாடம்) (Wood Craftsman (Furniture)) |
| TIL | டைல் நிறுவுனர் (Tile Layer) |
| PNT | வர்ண பூசுபவர் (கட்டிடம்) (Painter (Buildings)) |
| ELC | மின் வல்லுநர் (Electrician) |
| PLB | குழாய் பணியாளர் (Plumber) |
| BBD | கம்பி வளைக்கும் வல்லுநர் (Bar Bender) |
| WLD | ஒட்டுனர் (Welder) |
| ALF | அலுமினியம் கட்டமைத்தல் (Aluminum Fabricator) |
| OTH | வேறு (Other) |

| கட்டுமான இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்கள் | |
|---|---|
| CEM | கட்டுமான இயந்திர வல்லுநர் (Construction Equipment Mechanic) |

| கட்டுமான இயந்திரங்களை இயக்குபவர் | |
|---|---|
| LE | இலகு கட்டுமான இயந்திரம் இயக்குபவர் (Light Equipment Operator) |
| T | ட்ரக்டர் இயக்குபவர (Tractor Operator) |
| SPVR | தன்னியக்க அதிர்வு உருளை இயந்திரம் இயக்குபவர் (Self-propelled Vibrator Roller Operator) |
| BL | பெக்கோலோடர் இயந்திரம் இயக்குபவர் (Backhoe Loader Operator) |
| WL | வீல்லோடர் இயந்திரம் இயக்குபவர் (Wheel Loader Operator) |
| HE | ஹைரோலிக் இயந்திரம் இயக்குபவர் (Hydraulic Excavator Operator) |
| MG | மோட்டர் கிரைன்டர் இயக்குபவர் (Motor Grader Operator) |
| CT | கிரவல் ட்ரக் இயக்குபவர் (Crawler Tractor Operator) |
| MC | நடமாடும் கிரேன் இயக்குபவர் (Mobile Crane Operator) |
| DT | ட்ரம்ப் ட்ரக் இயக்குபவர் (Dump Truck Operator) |
| FLT | போர்க்லிப்ட் ட்ரக் இயக்குபவர் (Forklift Truck Operator) |
| PT | இயந்திரகளை இடமாற்றும் இயக்குனர் (Plant Transporter Operator) |
| SSL | ஸ்கிட் ஸ்டையர் லோடர் (Skid Steer Loader Operator) |
| TMC | ட்ரக் இணைப்பு கிரேன் இயக்குபவர் (Truck Mounted Crane Operator) |
| OTH | වෙනත් (Other) |

**திறமையான கட்டுமான கைவினைஞர்களாகப் பதிவு செய்யும் உங்களுக்காக**

- உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வலுவூட்டல் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அணுகுதல்.
- திறமையான கைவினைஞராக சமூக அங்கீகாரம் பெறுதல்.
- தொழில்முறை தரத்தை மேம்படுத்துதல்.
- அதிக உற்பத்தி மற்றும் தரம் வாய்ந்த திறமையான பணியாளர்களின் ஒரு அங்கம் வகிப்பதற்கான வாய்ப்பு.

**பதிவுக்காக விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்**

- 18 வயதுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.
- ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- தேசிய தொழில் திறன் தகுதி (NVQ) சான்றிதழ் மற்றும் அனுபவம். (NVQ இல்லாத கைவினைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.)
- அரச/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயமாக கட்டுமானத் துறையில் பணிபுரிபவர்கள்.

**தேர்வு செய்யப்படும் முறை**

விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உங்கள் துறைத் திறன்களை மதிப்பிடுவதற்கான திறன் பரீட்சைக்கு (Skills Test) உட்படுத்தப்படுவீர்கள்.

**அனுகூலங்கள்**

- உங்கள் அனுபவம் மற்றும் அனைத்து தகவல்களுடன் QR குறியீட்டுடன் தேசிய கட்டுமான கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல்.
- கட்டுமானத் துறையில் உங்களைப் பற்றிய தொழில்முறைத் திறனை அங்கீகாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- உங்கள் பதிவு தொடர்பான தகவலை CIDA இணையதளத்தில் உள்ளிடுவதன் மூலம், உங்கள் சேவையைப் பெற விரும்பும் தரப்பினர் உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள உதவுகிறது.
- பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் கைவினைஞர்களை அடையாளம் கண்டு கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.

**NVQ சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்**

NVQ சான்றிதழ்கள் இல்லாத கைவினைஞர்களுக்காக முன் அறிவுடன் சான்றளிக்கப்பட்ட RPL (Recognition of prior learning) முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**விசாரணைகள்** ஏ.ஏ. லத்தீப் அவர்கள் : **011-3119002 / 070-2731990**

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

"செவ்சிரிபாய" இல-123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 011-2699801, 011-2695965, 011-2686092 பெக்ஸ் : 011-2699737
மின்னஞ்சல் : cidatraining@gmail.com இணையம் : www.cida.gov.lk

* Trusted Marketplace of Classified Advertisers...
adz Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

## தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணி

### தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியில் ஆணை அங்கிகாரம் பெற்ற அதிகாரிகளாக இணைந்து கொள்க

கல்வியியற்துறையில் உள்ள தொழில் வல்லுநர்களை தேசிய மாணவச்சிப்பாய்கள் படையணியில் ஆணை அங்கிகாரம் பெற்ற அதிகாரிகளாக இணைந்து கொண்டு பாடசாலை மாணவச்சிப்பாய்களை தேசத்தின் எதிர்காலத் தலைவர்களாகவும், ஒழுக்கம் மிக்க பிரஜைகளாகவும் கட்டியெழுப்ப கிடைக்கும் மிகச் சிறந்த சந்தர்ப்பம்.

அடிப்படைத் தகுதிகள்

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்
- அரசாங்க பாடசாலை/ அரச அங்கிகாரம் பெற்ற தனியார் பாடசாலை/ பிரிவேனா ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களாக இருத்தல்
- அல்லது இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை/இலங்கை அதிபர் சேவை/ஆசிரிய ஆலோசகர் சேவையைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்
- 2023.08.31ஆம் திகதியன்று 35 வயதுக்கு குறைந்தவராக இருத்தல்
- அடிப்படை இராணுவ பயிற்சியை பெற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த உடற் தகுதியுடையவராக இருத்தல்
- உயரம் - ஆண் விண்ணப்பதாரர்களின் உயரம் 160cm இற்கு குறையாதவாறும்
  பெண் விண்ணப்பதாரிகளின் உயரம் 150cm இற்கு குறையாதவாறும் இருத்தல் வேண்டும்



விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி
**2023 செப்டெம்பர் 15**

**சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்கள்**

இலவச சீருடைகள்
வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் மற்றும் பயிற்சி பாடநெறிகள்
முப்படைகள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களில் விசேட பாடநெறி படிப்புக்கான வாய்ப்புக்கள்
இணைப்புச்சேவையின் போது சிறந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்
இலவச மருத்துவ வசதி

விண்ணப்பம் மற்றும் மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள இணையத்தளத்தினுள் பிரவேசிக்க
www.cadet.gov.lk



விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி : Corps Secretary , Corps Secretary Branch, Headquarters, National, National Cadet Corps, No: 15 , Dutugemunu Street, Pamankada,Dehiwala.

Corps Secretary Branch
011-2815343
070-3613103
070-3613194

Corps Secretary
Corps Secretary Branch
Headquarters
National Cadet Corps
No 15
Dutugemunu Street
Pamankada,Dehiwala

011 28 15343
ncchq.lk@gmail.com
www.cadet.gov.lk

## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## பெறுகை அறிவித்தல்

### Procurement of Supply, Installation, Maintenance and Commissioning of Next Generation Anti - Virus Solution and Email Security Gateway For two years - PR/02/12-10

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் விடய விதானத்தின் கீழ் செயற்படும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பெறுகைக்குழுவினால் இரண்டு வருட காலத்திற்கு Procurement of Supply, Installation, Maintenance and Commissioning of Next Generation Anti - Virus Solution and Email Security Gateway பெறுகைக்காக தகைமையான தகுதியுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

தேவைப்பாடுகள் பற்றிய விவரமான விளக்கம் கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB) செயற்பாட்டின் பிரகாரம் கேள்வி கோரல் இடம்பெறுவதுடன் கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் விடயங்களைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் (GOSL) பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாகுமாறு சகல தகைமைகளுடைய கேள்விதாரர்களுக்கு திறக்கப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ள தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு 2023.08.07 முதல் 2023.08.27 வரை மு.ப. 9 முதல் பி.ப. 4 வரையான நேரத்திற்குள் இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த, பத்தரமுல்லவில் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இரண்டாம் மாடியில் பெறுகைப் பிரிவிலிருந்து தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். மற்றும் ஆவணப் பரிசோதனைகளை கட்டணங்கள் இன்றி மேற்கொள்ளலாம். (தொ.பே. 011-2880550 மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk).

கேள்விதாரர்களால் 2023.08.07 முதல் 2023.08.27 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் வியாபாரப் பதிவு சான்றிதழின் போட்டோப் பிரதியுடன், பணியகத்திற்கு எழுத்துமூலம் வேண்டுதலைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 5000.00 கட்டணத்தை காசாகச் செலுத்திய பின்பு கேள்வி ஆவணங்களை பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விதாரர்களால் கேள்விகள் திறக்கப்படும் தினம் முதல் 120 நாட்களுக்குச் செல்லுபடியாகுமாறு நிபந்தனையற்ற ரூ. 60,000.00 பெறுமதியுடைய கேள்விப் பிணை முறியொன்றையும் தேர்ந்தெடுக்கப்படும். கேள்விதாரர்களால் முழுமையான கேள்விப் பெறுமதியில் 10% இற்குச் சமமான செயற்பாட்டுப் பிணையொன்றை வழங்குதல் வேண்டும். கேள்விப் பிணைமுறி மற்றும் செயற்பாட்டு பிணை முறி ஆகிய இரண்டையும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் மற்றும் இலங்கையில் செயற்படும் அனுமதிப் பத்திரம் கொண்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் உள்ளடக்கிய முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Procurement of Supply, Installation, Maintenance and Commissioning of Next Generation Anti - Virus Solution and Email Security Gateway For two years - PR/02/12-10" என்று குறிப்பிட்டு 2023.08.29 மு.ப. 10.00 இற்கு முன்பு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தகைமையகத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மின்னஞ்சல் முறையில் அனுப்பப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். சகல கேள்விகளும் அம்முகவரியிலேயே கேள்விகள் முடிவடைந்தவுடன் திறக்கப்படுவதுடன், கேள்விதாரர்கள் மற்றும் அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்விகள் திறக்கப்படுவதற்கு சமுகமளிக்கலாம். இதற்கான கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.08.16 பி.ப. 1.00 இற்கு பணியகத்தின் பணிப்பாளர் சபை கூட்ட அறையில் நடைபெறும்.

எந்தக் காரணமும் கூறப்படாமலேயே எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பணியகத்தின் திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரியதுடன், கேள்விகளை தயாரித்தல் அல்லது அனுப்பும் போது அது பற்றி கேள்விதாரர்களுக்கு ஏற்படும் நேரடி அல்லது மறைமுகமான செலவுகளை மீண்டும் செலுத்துவதற்கு பணியகம் எந்தப் பொறுப்பையும் அல்லது இணக்கத்தையும் மேற்கொள்ளமாட்டாது. இது பற்றிய திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொ.பே/பெக்ஸ்: 2880550 / 2880564**
**மின்னஞ்சல் முகவரி:** mgr_procurement@slbfe.lk

**"அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு"**




## மேஷம்

(அஸ்விணி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

5 ஆம் இடத்தில் சுக்கிரனும் புதனும் கூடியிருப்பதும், குருவினுடைய பார்வையைப் பெறுவதும் நல்ல அமைப்பு. 3, 6 க்குரிய புதன் 5 ஆம் இடத்துக்கு வருகின்றபோது பல நன்மைகளைத் தருவார். லக்னாதிபதியோடு சேர்ந்து சுக்கிரன் குருவின் பார்வையைப் பெறுவதாலும் அவர்கள் மூவரும் இணைந்து இலாபஸ்தானத்தைப் பார்ப்பதாலும் தொழிலில் லாபம் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். சனியினுடைய வக்ர நிலையை கவனிக்க வேண்டும். அவர் லாபஸ்தானத்தில் இருக்கிறார். இயல்புக்கு மாறான நிலை என்பதால் எதையும் நீங்கள் நிதானமாக தீர்க்கமாக முடிவெடுத்து செய்ய வேண்டும். அகலக்கால் வைக்க வேண்டாம்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

லக்னாதிபதி சுக்கிரன் சப்தமாதிபதி செவ்வாயோடு இணைந்து குடும்ப அதிபதி புதனோடு கேந்திரத்தில் கூடியிருக்க அவர்களை குரு பார்ப்பது நல்ல அமைப்பு. புதன் சுக்கிரனோடு இணைவதால் ஏற்கனவே உள்ள சுக்கிர மங்கள யோகத்தோடு புத சுக்கிர யோகமும் சேருகிறது. தொழிலில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். குழந்தைகளுக்கு தேவையான வசதிகளைச் செய்து தருவீர்கள். கணவன் மனைவி உறவுகள் நன்றாகவே இருக்கும். தாய் வழி ஆதரவு கிடைக்கும். செவ்வாய் 4ஆம் இடத்தில் இருப்பதும், சனி அவரைப் பார்ப்பதும் சகோதரர்களிடையே எதிர்பாராத மனக் கசப்புகளை உண்டாக்கும், உடம்பில் நரம்பு சம்பந்தப்பட்ட சில பிரச்சினைகள் வரலாம், 12 ஆம் இடத்தில் குரு இருப்பதும் அவரோடு ராகு இருப்பதும் உடல் ஆரோக்கிய விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்பதை சொல்லுகின்றது, சோம்பேறித் தனத்தை கைவிடவும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்) சப்தமாதிபதி குரு, லாபஸ்தானத்தில் இருந்து உங்கள் தைரிய ஸ்தானத்தைப் பார்வையிடுவது நல்ல அமைப்பு. இராசிநாதன் புதன் தைரிய ஸ்தானத்தில் இருக்கின்றார். பல வழிகளில் உங்களுக்கான நன்மைகளை நீங்களே தேடிக் கொள்ளும் அமைப்பு. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் வாய்ப்புண்டு. வீடு கட்டும் வாய்ப்பும், புதிய வீட்டுக்கு குடிபோகும் வாய்ப்பும் உண்டு. வருமானத்தில் இருந்த பின்னடைவுகள் மாறும். எட்டுக்குரிய சனி வக்கிரகதி அடைந்திருப்பது ஒரு வகையில் நல்லது. 5 ஆம் இடத்தில் உள்ள கேதுவால் குழந்தைகள் விஷயத்தில் பிரச்சினைகள் வரலாம். புதன் 3இல் இருப்பதால் ஏதேனும் ஒரு காரியத்தை அவசரமாக செய்துவிட்டு பிறகு ஏன் செய்தோம் என்று வருத்தப்படும் சூழ்நிலை வரலாம். நிதானமாகவும் கவனமாகவும் செயல்படவும்.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

இராசியில் குடும்ப அதிபதி சூரியன் இருக்கின்றார். 10 இல் குரு இருப்பதால் சில மாற்றங்கள் வரும். அவர் குடும்பஸ்தானத்தைப் பார்வையிடுவதாலும், அங்கே பஞ்சமாதிபதி சுக்கிரன் நிற்பதாலும், கணவன், மனைவி உறவு நல்ல விதமாகவே இருக்கும். பண விஷயத்தில் நெருக்கடிகள் இருக்காது. கொடுக்கல் வாங்கல்கள் சுலபமாகவும் நன்மை அளிப்பதாகவும் இருக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் உங்களைத் தேடி வந்து சேர்வர். பெண்களுக்கு மனம் மகிழும் படியான காரியங்களும் நடைபெறும்.

இராசியில் உஷ்ண கிரகமான சூரியன் நிற்பதால், உடல் ஆரோக்கிய விஷயத்தில் கவனம் செலுத்தவும். இரண்டாம் இடத்தில் செவ்வாய் இருப்பதால் சகோதரர்களுடன் எந்த விதமான மனக்கசப்புக்களையும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். எதிர்பாராத வாகனச் செலவுகள், வீட்டை பழுது பார்க்க வேண்டிய செலவுகள் ஏற்படலாம். எதிலும் கொஞ்சம் கஷ்டப்பட்டு கடைசியில்தான் உங்களுக்கு சாதகமாக அமையும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

இராசியில் செவ்வாய் சுக்கிரன் புதன் இருக்கிறார்கள். குரு அவர்களைப் பார்க்கிறார். சனியும் பார்க்கிறார். எனவே, நன்மை தீமை கலந்துதான் இருக்கும். 2, 11 க்குரிய புதன் இராசியில் இருப்பதும் அவரை குரு பார்ப்பதும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உள்ளவர்களுக்கு நல்ல மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் தரும். சில வாய்ப்புகள் தானாகவே உங்களைத் தேடி வரும். வருமானம் உயரும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். குறிப்பாக, வெளிநாட்டு வேலை ஒப்பந்தங்கள் உறுதியாகும். பழைய கடன்கள் வசூல் ஆகிவிடும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு சிறப்புக்கள் வந்து சேரும். ஆனால், இந்த நன்மைகளை எல்லாம் பெறுவதற்கு சில தடைகளையும் மனத்தாங்கல்களையும் கூட சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை 7 இல் உள்ள சனி காட்டுகிறது.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

இராசி அதிபதி புதன் விரயத்தில் இருக்கின்றார். இருந்தாலும், அவரை குரு பார்ப்பதால் தீமைகள் மிக அதிகமாக வந்துவிடாது. 6 இல் உள்ள சனி உங்களுக்கு பல நன்மைகளைச் செய்யும். இராசிக்கு 12 ல் சுக்கிரன் இருப்பதும் அவரை குரு பார்ப்பதும் ஒரு சாதகமான அமைப்பு. எத்தனை கஷ்டங்கள் இருந்தாலும் நிறைவாக ஒரு நன்மையும் இருக்கும் என்பதை இந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது. ஏதேனும் பிரச்சினைகள் வந்தால், அது உங்களுடைய தவறான முடிவுகளால்தான் இருக்கும் என்பதால், நிதானமாகச் செயற்படவும். சூரியன், 11 ஆம் இடத்தில் வலம் வருவதால், அரசாங்கக் காரியங்களில் சகாயமும் லாபமும் உண்டாகும். அரசாங்க தேர்வுகளில் வெற்றி பெறும் வாய்ப்புண்டு. பிள்ளைகளால் சில மனத்தாங்கல்கள் கசப்புகள் வருவதற்கு வாய்ப்புண்டு. ஏதேனும் ஒரு பொருளை யாருக்காவது கொடுத்துவிட்டு ஏமாறும் வாய்ப்பு உண்டு.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

உங்கள் ராசியில் நேரடியாக குருவின் பார்வை வருகிறது. இராசிக்கு உரிய சுக்கிரனும் 2 ஆம் இடத்திற்கு உரிய செவ்வாயும் 11 ஆம் இடத்தில் இருப்பதும் அங்கும் குரு பார்வை கிடைப்பதும் அருமையான அமைப்பு. எனவே , பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். திருமண முயற்சிகள் நல்லபடியாக நடக்கும். தொழிலில் திருப்தியான வருமானம் இருக்கும். பயணங்கள் இனிமையாக அமையும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் பொறுப்புக்கள் வந்து சேரும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். வக்கிர சனி 7ஆம் இடத்திலிருந்து உங்கள் இலாப ஸ்தானத்தையும் குடும்ப ஸ்தானத்தையும் பார்ப்பதாலும் அவ்வப்பொழுது சில சிறிய பிரச்சினைகள் தலை தூக்கவே செய்யும். ஆனால், எந்த பிரச்சினையாக இருந்தாலும் வந்த வேகத்தில் போய்விடும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

உங்கள் இராசியில் நேரடியாக குருவின் பார்வை வருகிறது. இராசிக்கு உரிய சுக்கிரனும் இரண்டாம் இடத்திற்கு உரிய செவ்வாயும் 11 ஆம் இடத்தில் இருப்பதும் அங்கும் குரு பார்வை கிடைப்பதும் அருமையான அமைப்பு. எனவே, பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். திருமண முயற்சிகள் நல்லபடியாக நடக்கும். தொழிலில் திருப்தியான வருமானம் இருக்கும். பயணங்கள் இனிமையாக அமையும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பதவிகள் பொறுப்புக்கள் வந்து சேரும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். வக்கிரசனி 7 ஆம் இடத்திலிருந்து உங்கள் லாப ஸ்தானத்தையும் குடும்ப ஸ்தானத்தையும் பார்ப்பதாலும் அவ்வப்பொழுது சில சிறிய பிரச்சினைகள் தலை தூக்கவே செய்யும். ஆனால், எந்த பிரச்சினையாக இருந்தாலும் வந்த வேகத்தில் போய்விடும். இராகு 7 இல் இருப்பதால் புதிய முதலீடுகளை தவிர்க்க வேண்டும். உடல் நலனில் கவனம் தேவை.

## தனுசு

தனுசு (மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

இராசிக்கு உரியவரே(குரு) இராசியைப் (9 பார்வையால்) பார்ப்பது என்பது அற்புதமான நிலை. அதுவும் ராசிநாதன் சுபக்கிரகமாக இருப்பதால் எத்தனைத் துன்பங்கள் வந்தாலும் அதை வெற்றிகரமாக கடக்கக் கூடிய வழிகளும் உங்களுக்குத் தோன்றும். ஏதோ ஒரு விதத்தில் உங்களுக்கு எல்லோரும் உதவி புரிவார்கள். பிரச்சினையில் இருந்து வெளிவர உதவுவார்கள். தொழிலில் தேக்க நிலை மாறும். புதிய சிந்தனை தோன்றும். புதிய யுத்திகளை கையாளுவீர்கள். பொன் பொருள் சேர்க்கை ஏற்படும். எதிர்பாராத நல்ல செய்தி காதில் விழும். வேலையில்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். ஏதோ ஒரு விதத்தில் உபரி வருமானம் வரக்கூடிய வாய்ப்பு உண்டு. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். நீங்கள் தேவையில்லாத விஷயங்களை மற்றவர்களோடு உரையாடுவதன் மூலமாக சில பிரச்சினைகளை உருவாக்கிக் கொள்வீர்கள். அதனால் எல்லா விஷயங்களையும் எல்லோரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

உங்களுக்கு மிகப்பெரிய நன்மையைச் செய்யக்கூடிய கிரகம், புத்திக்குரிய புதன்தான். அதனால், நீங்கள் உடல் சோர்வடைந்தாலும், உள்ளம் சோர்வடையாமல் இருக்க வேண்டும். அதுவே பல பிரச்சினைகளைத் தீர்க்கும். 6 க்குரிய புதன், 8 ஆம் இடத்தில் போய் உங்கள் ஐந்து 10 க்குரிய சுக்கிரனோடு இணைவதும், இலாப அதிபதி செவ்வாயோடு இணைவதும், அவரை குரு பார்ப்பதும், நீங்கள் எந்த பிரச்சினையாக இருந்தாலும் விரைவில் மீண்டு வந்து விடுவதைக் காட்டுகின்றது. “மறைந்த புதன் நிறைந்து தருவார்” என்ற பழமொழிக்கு ஏற்ப புத்தியாலும் யுக்தியாலும் இந்த வாரத்தை மிக எளிதாகக் கடந்து விடுவீர்கள். எந்தப் பிரச்சினையையும் திறமையாகக் கையாள வேண்டும். கணவன் மனைவி உறவுகளை சிக்கல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்) இராசிநாதன் சனி வக்கிரகதி அடைந்திருக்கிறார். 3 ஆம் இடத்தில் குரு இருப்பது ஒரு வித யோகம்தான். நண்பர்களின் மூலம் நல்ல ஆதாயமும் கணவன் மனைவி உறவுகளில் உற்சாகமும் இருக்கும் வாய்ப்பு அதிகம். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்களே எந்த பிரச்சினையையும் உண்டாக்கி விடக்கூடாது. 3 இல் உள்ள ராகு உங்களுக்கு பல நன்மைகளைச் செய்து பொருளாதார நிலையை உயர்த்துவார். 7ஆம் இடத்தில் பல நல்ல கிரகங்கள் இருந்து ராசியைப் பார்ப்பது சாதகமான அமைப்பு. அஷ்டமாதிபதி புதன் 7ஆம் இடத்தில் இருப்பதால் நீங்கள் இனி நடக்காது என்று நினைத்த சுபகாரியங்கள் தானாகவே நடைபெற வாய்ப்புண்டு. 7 ஆம் இடத்தில் சுக்கிரன் இருப்பதும், செவ்வாய் இருப்பதும், சனி அவர்களைப் பார்ப்பதும் உறவுப் பிரச்சினைகளில் மற்றும் பெண்கள் சம்பந்தமான பிரச்சினைகளில் சில மன வருத்தங்களையும் கசப்புகளையும் காட்டுகின்றது.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

குரு இராசிநாதன். அவர் 2 ஆம் இடத்தில் ராகுவோடு இணைந்து இருக்கிறார். 7 1/2 சனியின் ஆதிக்கம் இருந்தாலும்கூட அவர் வக்கிரகதியில் இருப்பது ஒரு விதத்தில் ஆதாயம்தான். இடமாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் ஏற்படும். அவை உங்களுக்கு நன்மையைச் செய்யும். 4, 7 க்குரிய புதன் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். நல்ல தகவல்கள் காதில் வந்து விழும். தகவல் தொழில்நுட்பம், பத்திரிகைத் துறையில் உள்ளவர்களுக்கு முன்னேற்றமான வாரமாக இருக்கும். உறவினர்கள் இணக்கமான உறவுகளை மேற்கொள்வார்கள். பெண்களுக்கு பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். வெளிநாட்டு வேலை செய்பவர்களுக்கு நல்ல ஆதாயம் உண்டு. கணவன், மனைவி இணக்கமான உறவுகள் மகிழ்ச்சியைத் தரும்.

அஷ்டமத்தில் கேதுவும், இரண்டில் இருக்கும் இராகுவும் நிதிப் பிரச்சினைகளையும், மனப்பிரச்சினைகளையும் உண்டாக்கி கொண்டே இருப்பார்கள்.

# தேசிய ஒற்றுமைக்கு தன்னையே அர்ப்பணித்த யு.எல்.எம். பாரூக்

## இன்று அவரது நினைவு தினமாகும்

ஒற்றுமையின் அடையாளமான யு.எல்.எம். பாரூக் இரண்டு வருடங்களுக்கு முன்னர் எம்மை விட்டுப் பிரிந்த அரசியல் தலைவராவார். யு.எல்.எம். பாரூக் 80 வருடங்கள் வாழ்ந்தவர். ருவன்வெல்ல கன்னத்தோட்ட முஸ்லிம் கிராமத்தில் பாரம்பரிய இடதுசாரி அரசியல் குடும்பத்தில் பிறந்து, கிராம சபைத் தேர்தலில் அரசியலில் பிரவேசித்த பாரூக், கேகாலை மாவட்டத்தில முதல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். முன்னாள் அமைச்சரும் ஆளுநருமான மறைந்த பி.சி. இம்புலானவின் தனிப்பட்ட செயலாளராக அரசியல் வாழ்க்கையைத் தொடங்கிய பாரூக், கிராம சபைப் பிரதிநிதியாகவும், அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் ராஜாங்க அமைச்சராகவும் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக பணியாற்றி, ஆகஸ்ட் 6, 2021ஆம் ஆண்டு காலமானார்.

பாரூக் 1941ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் திகதி ஒரு பாரம்பரிய இடதுசாரி குடும்பத்தில் மூனுஸ் லெப்பை, பளீலா உம்மாவின் மகனாகப் பிறந்தார். கன்னத்தோட்ட சுலைமானியா மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர், உயர் கல்வியை ருவன்வெல்ல முதுகமுவ சிங்கள மகா வித்தியாலயத்தில் பெற்றார்.

1956 ஆம் ஆண்டு, முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாச, ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி இடதுசாரி சார்பாக ருவன்வெல்ல தொகுதியில் போட்டியிட்டார். அப்போது சுமார் 15 வயதான பாரூக், பிரேமதாசவுக்கு ஆதரவாக அரசியலில் பிரவேசித்தார். பின்னர், நீண்ட காலமாக அமைச்சரின் தனிப்பட்ட செயலாளராகப் பணிபுரிந்தார். 1964ஆம் ஆண்டு மெகொடபத்து கிராம சபைக்கு போட்டியிட்டு வெற்றி பெற்று தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார். அங்கிருந்து கேகாலை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினராக தனது தீவிர அரசியல் பயணத்தை பாரூக் ஆரம்பித்தார்.

1964ஆம் ஆண்டு ருவன்வெல்ல கிராம சபைத் தேர்தலில் இலங்கை சமசமாஜக் கட்சியில் போட்டியிட்டு தனது சகோதரனை விட மூன்று மடங்கு வாக்குகளை பெற்று வெற்றி பெற்றமை பாரூக்கின் அரசியல் பயணத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். மறைந்த இம்புலான 1965ஆம் ஆண்டு டட்லி சேனாநாயக்கவின் அரசாங்கத்தில் விவசாயம் மற்றும் வர்த்தக பிரதி அமைச்சராக இருந்த வேளையில் தனது தனிப்பட்ட செயலாளராக பாரூக்கைத் தேர்ந்தெடுத்தார். மக்கள் சேவையில் எப்போதும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பாரூக்குக்கு துன் கோரளை மக்களின் மனங்களை வெல்வதற்கு இப் பதவி மிகவும் உதவியாக இருந்தது.

ஊவா மாகாண ஆளுநராக இம்புலான நியமிக்கப்பட்ட போது, அவரது இடம் காலியானது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாள ரா க இருந்த மறைந்த ரஞ்சன் விஜேரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகாரிக ள் மத்தியில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தி உறுப்பினரைத் தெரிவு செய்திருந்தார். இந்தப் போட்டிக்கு பாரூக்குடன் அப் பகுதியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பலமான செயற்பாட்டாளர்கள் ஏழு பேர் போட்டியிட்டனர். கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த தேர்தலில் 75% கட்சி நிர்வாகிகளின் வாக்குகளை பாரூக் பெற்றார். ருவன்வெல்ல பிரதேசத்தின் பிக்குமாரின் ஆசிர்வாதத்தை பாருக் பெற்றமையே இந்த வெற்றிக்கான விசேட காரணமாகும். பாரூக்குடன் போட்டியிட்ட ஏழு பேரில் பாறூக் மாத்திரமே முஸ்லிம். இன, மத பேதமின்றிய பாரூக்கின் செயற்பாடுகள் காரணமாக சுமார் 3% முஸ்லிம்கள் மாத்திரம் வாழும் ருவன்வெல்லயில் பாரூக்கை தெரிவு செய்து நாட்டுக்கே ருவன்வெல்ல மக்கள் எடுத்து காட்டாகத் திகழ்ந்தார்கள்.

1988 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட பாரூக் 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கேகாலை மாவட்டத்தில் போட்டியிட்டு அபார வெற்றி பெற்றார். ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் அரசாங்கத்தில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சரானார். இ.போ.ச வை மக்கள் வசமாக்கும் வேலைத்திட்டம் இக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அது அப்போதைய சபைத் தலைவராகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சராகவும் இருந்த மறைந்த விஜேபால மெண்டிசிடம் ஒப்படைக்கப்பட்டது. வட,



கிழக்கு மாகாணத்தில் மக்கள் மயப்படுத்தும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பாரூக் நியமிக்கப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாமல் வடகிழக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பாரூக் பயணம் செய்து மக்கள் உரிமைப் பிரசாரத்தை மிகவும் வெற்றிகரமாக முன்னெடுத்தார். உயிர் அச்சுறுத்தல் காரணமாக வேலை இழந்த நூற்றுக்கணக்கான இ.போ.ச மற்றும் ரயில்வே துறை ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்க பாரூக் ஏற்பாடு செய்தார்.

1988 ஆம் ஆண்டு முதல் கேகாலை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக பிரபலமாக இருந்த பாரூக், கட்சியின் தீர்மானத்தின்படி ருக்மன் சேனாநாயக்கவுக்கு ஆசனத்தை வழங்க வேண்டியிருந்தது. ருக்மன் சேனநாயக்கவின் வெற்றிக்காக தனது ஆசனத்தை தியாகம் செய்து தனது காரியாலயத்தையும் தனது கட்சி தொண்டர்களையும் வழங்கி அவரது மாபெரும் வெற்றிக்காக தன்னை அர்ப்பணித்தார். பாரூக்கின் இந்த முன்மாதிரியான செயல் அனைவராலும் பாராட்டப்பட்டது. பாரூக் பின்னர் இலங்கை போக்குவரத்து சபையின் தலைவராகவும் ஜேர்மன் பயிற்சிக் கல்லூரியின் தலைவராகவும் ஆனார்.

கேகாலை மாவட்டத்தின் அபிவிருத்திக்காக பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்திய பாரூக், மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் உறுப்பினராக, மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மற்றும் தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக தன்னை அர்ப்பணித்தார். ஒருமுறை சப்ரகமுவ மாகாண முதலமைச்சராக இருந்த ஜெயதிலக பொடிநிலமேயின் ஆதரவுடன் மாவட்டத்தில் கட்டட வசதி இல்லாத 19 முஸ்லிம் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்தார். கேகாலை மாவட்டத்தில் முஸ்லிம் கல்விச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றிய அவர், முஸ்லிம் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்த மத்திய அரசு மற்றும் சப்ரகமுவ மாகாண சபையின் ஆதரவை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தார். இலங்கையில் முக்கிய முஸ்லிம் அமைப்பாக இருந்த அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் துணைத் தலைவராகவும் பதவி வகித்தார்.

புலிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த முஸ்லிம்களை இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் வெளியேற்றி தெற்குக்கு அவர்கள் வந்த போது புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற பிரதேசங்களில் அம் மக்களை மீள் குடியேற்றுவதற்கான அரச பொறிமுறையை இணைக்க பாரூக் தலைமை தாங்கினார். சிங்களம் மற்றும் தமிழ் இரண்டினையும் சரளமாகப் பேசக்கூடியவர், பாரூக், துன் கோரள பிக்குமாரின் ஆசியைப் பெற்ற அரசியல் தலைவர் அவர். அரசியல் பயணத்தில் அவரது வெற்றிக்காக அடிக்கடி பிக்குமாரைச் சந்தித்து கௌரவித்து ஆசிர்வாதத்தை பெற்றதே முக்கிய காரணமாக அமைந்தது. பாரூக் தீவிர அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு, யூ.எல்.எம். பாரூக் அறக்கட்டளையை நிறுவி ருவன்வெல்ல தொகுதி மக்களுக்காக குறிப்பாக ஏழை பாடசாலை பிள்ளைகளுக்காக உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்தார்.

பாரூக்கின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரது மகன் நிஹால் பாரூக் நான்கு தடவைகள் மக்கள் வாக்குகள் மூலம் சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பாரூக்கை கௌரவப்படுத்தும்முகமாக கன்னத்தோட்ட ருவன்வெல்ல பிரதேச சபை அவரது இல்லம் அமைந்துள்ள கன்னத்தோட்ட இஹல வீதி யூ.எல்.எம். பாரூக் மாவத்தை என பெயரிட்டுள்ளது. ருவன்வெல்ல பிரதேச சபையில் பொது ஜன பெரமுன ஆட்சியில் இருந்த வேளையில் எதிர்க்கட்சியில் இருந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயரை கட்சி பேதமின்றி வீதிக்கு இட்டது முன்னுதாரணமான செயலாகும். 80 ஆண்டுகள் வாழ்ந்த பாரூக், துன் கோரளவிலிருந்து பிறந்த ஒரு முன்மாதிரியான தலைவர். பாரூக்கின் 50 வருட அரசியல் வாழ்வில், ஆகஸ்ட் 25, 2014 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற "யுக பெரலியக துன் கோரளயே அபிமானய" நூல் வெளியீட்டு விழாவில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ ஆகியோர் கூறிய கருத்துக்களுடன் இக்கட்டுரையை முடிக்கிறேன்.

பாரூக் அனைத்து கலாசாரங்களுடனும் வாழ்ந்தவர். குறிப்பாக விஹாரையுடன் மிக நல்ல தொடர்பை பேணி வந்தவர், அதுமட்டுமின்றி கோவில்களுக்கும், தேவாலயங்களுக்கும் சென்று பணிபுரிகிறார். அவருடைய வாழ்க்கையைப் பார்க்கும் போது பல விடயங்கள் தெரிகின்றன. அவர் இலங்கையின் அரசியல்வாதி என்பதால் இந்த இடத்துக்கு வந்துள்ளார் என ஜனாதிபதி கூறினார். சபாநாயகர் சமல் ராஜபக்ஷ பாரூக் பற்றிக் குறிப்பிடும் போது அவர் சிங்கள மொழியை நன்றாகப் பேசுபவர். அவர் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவது எங்களுக்கு நினைவிருக்கிறது. சிங்கள முஸ்லிம் மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர் என்பதும் எனக்கு நினைவிருக்கிறது. 1989 ஆம் ஆண்டு ருவன்வெல்ல தொகுதியில் வெற்றி பெற்ற பின்னர், பாராளுமன்றத்தில் ருவன்வெல்ல தொகுதியில் உள்ள பிக்குகளே எனது வெற்றிக்கு முழுப் பங்களிப்பை வழங்கினார்கள் என பதிவிட்டிருந்தமை விசேட அம்சமாகும்.

ஊடகவியலாளர் அமீன்
தமிழில் வீ.ஆர்.வயலட்




# படித்ததும் பகர்வதும் 154



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### தருமம் புகைப்படங்களில்!

வறுமையில் வாழும் மக்களுக்கு உதவிகள் செய்வதற்கு பல்வேறு வடிவங்களில், பல நிறுவனங்களும், தனிப்பட்ட மனிதர்களும் முன்வந்து செயல்படுவது எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். இதில் அன்றாட தேவைகளுக்கு அவசியமான உலர் உணவுகளை வழங்குதல், பாடசாலை கல்விக்குத் தேவையான அப்பியாச கொப்பிகள் உட்பட புத்தகப் பைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றினால் பல வறியவர்களினதும், வசதி குறைந்தவர்களினதும் தேவைகள் ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்யப்படுவதை பரவலாகக் காண்கிறோம்.



இத்தகைய பணிகளை செய்வோரில் சிலர் தமது செயற்பாடுகளை விளம்பரப்படுத்துவதில் கூடிய முக்கியத்துவம் கொடுப்பது தவிர்க்கப்பட வேண்டிய விடயமாகும். அதிலும் குறிப்பாக புகைப்படங்கள் மூலம் செய்யப்படுகின்ற விளம்பரங்கள் கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டியவையாக உள்ளன..

உலர் உணவுப்பொதிகளையும், பாடசாலை அப்பியாச புத்தக தொகுதிகளையும் வழங்குவோர் அவற்றைப் புகைப்படம் எடுத்து பத்திரிகையிலும் தொலைக் காட்சிகளிலும் சமூக ஊடகங்களிலும் பிரசுரம் செய்வதன் மூலம் இவ்வாறான உதவிகளை பெற்றுக்கொண்டவர்களை இழிவுபடுத்துவதாக அல்லது அவர்களை மற்றவர்கள் முன் காட்சிப்படுத்துவதாக அமைவது கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டிய விடயம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளவே செய்வர்.

வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டவர்களாக இருந்தாலும், மனிதர்கள் என்ற வகையில் அவர்களுக்கும் தன்மானம், சுயகௌரவம் என்பன இருக்கவே செய்கின்றன என்பதை எல்லோரும் நன்கு அறிவர். அதனை பாதிக்கும் வகையிலோ அல்லது அவர்களது உள உணர்வுகளை காட்சிப்படுத்தும் அல்லது காயப்படுத்தும் வகையிலோ இத்தகைய உதவிகள் வழங்குகின்ற விடயங்களுக்கான விளம்பரங்கள் அமைந்து விடலாகாது.

சமூக சேவை இயக்கங்கள் தாம் வழங்குகின்ற இத்தகைய பொதிகளில் தமது அமைப்பின் பெயரைக் குறிப்பிடுவது வழக்கம். இது பல சந்தர்ப்பங்களில் தவிர்க்க முடியாத விடயமாகவும், அவசியமானதவும் இருக்கலாம். ஆயினும் உதவி பெறுபவர்களின் அடையாளத்தை பகிரங்கப்படுத்தும் வகையிலான புகைப் படங்களை வெளியிடாமல் தவிர்ப்பதற்கு பல்வேறு வழிகள் இருக்கவே செய்கின்றன. அவற்றை நல்ல சிந்தனையோடு பின்பற்றி, உதவிபெறும் வறியவர்கள், வசதி குறைந்தவர்கள், மாணவர்கள் போன்றவர்களை வெளி உலகுக்கு வெளிச்சமிட்டு காட்டும் வகையிலும் ஆளடையாளங்களை தெரியப்படுத்தும் விதத்திலும் புகைப் படங்களை வெளியிடாமல் தவிர்ப்பதே சிறந்த மனித தர்மமாகும்.

அத்துடன் இவ்வாறு விளம்பரமின்றி செய்கின்ற தர்மங்களுக்கும், வழங்குகின்ற அன்பளிப்புகளுக்கும், கொடுக்கின்ற கொடைகளுக்கும் அதிகூடிய நன்மைகளை பெற்றுத்தரும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. எனவே உதவும் மனித உள்ளங்கள் புகழுக்கு இடமளியாமல் உயர்ந்த உள்ளம் கொண்டு நன்முறையில் செயல்பட உள உறுதி கொள்வோம்.

## நெஞ்சுக்கு நீதி

**தேடித்தேடி உதவுதல் உவகையும் உயர்வும் தருமே**
**தினந்தினம் தருமம் செய்தல் உலகில் மிக சிறப்பே**
**படித்துச் சொல்கிறோம் புகைப்படமெடுத்ததனை**
**பெறுவோரை இழிவாக்காதீர் பாரினிலது உயர்வே**

## பிரிந்தார் பெருமை

### அனிஸ்டஸ் ஜெயராஜா

பன்னூலாசிரியரும் சிறந்த இலக்கியப் படைப்பாளியுமான அனிஸ்டஸ் ஜெயராஜா கடந்த மே மாதம் 10 ஆம் திகதி (2023.05.10) இவ்வுலகிலிருந்து விடைபெற்றார். எழுத்துத்துறையில் கட்டுரை, சிறுகதை, நாவல், ஆய்வு என சகல விடயங்களிலும் தனது ஆற்றல்களை வெளிப் படுத்தியுள்ள இவர் திருகோணமலையில் பிறந்து கொழும்பில் வளர்ந்தவர்.



கொழும்பு புனித ஜோசப் கல்லூரியின் பழைய மாணவரான அனிஸ்டஸ் ஜெயராஜா, வானொலி, பத்திரிகை என ஒலிபரப்புத் துறையிலும் எழுத்துத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். எல்லோருடனும் நட்பாக பழகிய அனிஸ்டஸ் ஜெயராஜா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகர் எம்.எச்.எம். அஷ்ரப் உடன் நெருங்கிய தொடர்பை வைத்திருந்த, அவரது கட்சியின் சிறந்த செயற்பாட்டாளராவார்.

கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம், சுதந்திர இலங்கையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், எங்கள் தலைவன், எனது தேசம் எனது மக்கள், போரும் மனிதனும், ஒரே நாளில் வாழ்வு, விஷம், இந்தியாவே நீயுமா?, ஹலால் உட்பட பல நூல்களை இவர் வெளியிட்டுள்ளார். 'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வரலாற்றை எழுத வேண்டும்' என்பதில் இவர் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். ஆயினும் அது சாத்தியப்படாமை துரதிர்ஷ்டவசமாகும்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியில் அதிக ஆர்வம் கொண்டிருந்த இவர் அக்கட்சியின் பல முக்கிய உறுப்பினர்களோடு நல்லுறவைப் பேணி வந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய 'கிழக்கின் இதயம் தேசத்தின் உதயம்' நூல் வெளியீடு கொழும்பில் இடம்பெற்ற போது அனிஸ்டஸ் ஜெயராஜாவோடு சேர்ந்து செயல்பட கிடைத்த சந்தர்ப்பம் இன்றும் என் நினைவில் பசுமையாக உள்ளது.

## புது வரவு

### ஷிபானியா பௌசுல் தரும் "அந்திக்கரை"

இலங்கையின் இளம் இஸ்லாமிய பெண் படைப்பாளிகள் வரிசையில் யாப்பு இலக்கணத்தை முறையாக கற்று, கவி படைக்கும், அனுராதபுரம் மாவட்டத்தின் நேகமையைச் சேர்ந்த ஆசிரியை ஷிபானியா பௌசுல் பத்திரிகையிலும் முகநூலிலும் எழுதிய கவிதைகள் சிலவற்றின் தொகுப்பு "அந்திக்கரை" என்ற பெயரில் இலக்கண கவிதை தொகுதியாக வெளிவந்துள்ளது.

"என் வாசிப்பின் தீவிரத் தன்மையும், என் மனதில் தோன்றிய கற்பனைகளின் விம்பங்களுமாக இத்தொகுப்பில் அறுபது மரபுக்கவிதைகள் இலக்கணவிதிகளுக்கு உட்பட்டு விதைக்கப்பட்டுள்ளன. அத்தனை கவிதைகளும் மொத்தமாக வளர்ந்து விருட்சங்களாக இடம் பிடிக்க வேண்டுமென்பது எனது எதிர்ப்பார்ப்பாகும்". என்று இந்நூலில் இடம்பெற்றுள்ள தனது கவிதைகள் பற்றிக் குறிப்பிடுகிறார் நூலாசிரியர் ஷிபானியா பௌசுல்.




"இப்போதெல்லாம் புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை, தன்முனைக் கவிதை, என்றெல்லாம் பேசிக்கொள்கிறார்கள். ஒரு தொடர் வாக்கியத்தை நசுக்கி, மடக்கி, வளைத்து மேலும் கீழுமாக எழுதிவிட்டு அவர்களே அதை கவிதை என்கிறார்கள் அதற்கும் முகவரியில்லா சில குழுமங்களால் விருதுகளும் வழங்கப்படுகின்றன. ஆனால் தன் சமூகத்தில் காணப்படும் இழிவையும், கோபத்தையும், காதலையும் கவிஞர் ஷிபானியா பௌசுல் இலக்கண கவிதை வடிவில் தந்திருக்கிறார்.

தற்காலத்தில் இலக்கண வெண்பாக்கள் அல்லது குறும்பாக்கள் எழுதுபவர்களின் எண்ணிக்கை மிக அரிது. அதிலும் பெண் கவிஞர்கள் இல்லை என்றே சொல்லலாம். ஆனாலும் இந்தப் இளம் பெண் கவிஞர் ஷிபானியா பௌசுல் இலக்கண கவிதைகள், வெண்பாக்கள் எழுதுவதில் மிகச் சிறந்தவர் என்பது எனது எண்ணம். இந்த "அந்திக்கரை" தொகுதியில் இடம்பெற்றுள்ள அனைத்து கவிதைகளும், இலக்கண சீர்வரிசை பிசகாமல் அச்சொட்டாக எழுதப்பட்டதை அவதானிக்கலாம்." என்று தெரிவித்துள்ளார் அவுஸ்திரேலியா தமிழ் வானொலியின் "வளர்பிறை" தயாரிப்பாளர் முஹம்மது எஸ். முஹுசீன்

'அந்திக்கரை'யில் உள்ள 60 கவிதைகளில் "கொரோனாவே" கவிதையிலிருந்து சில வரிகள் இங்கே,

**"பாயும் படுக்கை மறக்க வைத்தாய்**
**பயத்தில் பாதி இறக்க வைத்தாய்**
**தாயும் சேயும் பிரித்து வைத்தாய்**
**தரணி முழுதும் கலங்க வைத்தாய்**
**வாயும் வயிறும் காய வைத்தாய்**
**வருகை யில்லா சாலை வைத்தாய்?**

நூல்: அந்திக்கரை, ஆசிரியர்: கவிஞர் ஷிபானியா பௌசுல், முதற்பதிப்பு: 2023, பக்கங்கள்: 84, வெளியீடு: வளர்பிறை பதிப்பகம், மெல்போன், அவுஸ்திரேலியா, தொடர்புகளுக்கு 0716116574

## சிந்தனை செய் மனமே

### புலியும் கழுதையும்!

ஒவ்வொருவரதும் சிந்தனைக்காக ஒரு உருவகக் கதை இங்கே:

ஒரு கழுதை புலியிடம் "புற்கள் நீல நிறமானவை" என்று கூறியது. "இல்லை, புற்கள் பச்சை நிறமானவை." என்று புலி சொன்னது,

விவாதம் சூடுபிடித்தது, இரண்டும் அதனை ஒரு நடுவரிடம் முன்வைத்து முடிவு செய்ய தீர்மானித்தன. இதற்காக காட்டின் ராஜாவான சிங்கத்தின் முன் சென்றன.

சிங்கத்திடம் கழுதை கத்த ஆரம்பித்தது, "ராஜாவே! புற்கள் நீல நிறமானவை தானே?".

சிங்கம் பதிலளித்தது: "ஆமாம் புற்கள் நீல நிறமானவைதாம்."

உடனே கழுதை "புலி என்னுடன் இவ்விடயத்தில் உடன்படவில்லை. முரண்படுகிறது அத்துடன் என்னை எரிச்சலூட்டுகிறது, தயவுசெய்து அதனை தண்டியுங்கள்."

பின்னர் சிங்கம், "புலி ஐந்து நாட்கள் மௌனமாக இருக்க வேண்டுமென தண்டனை விதிக்கிறேன்." என்றது.

கழுதை மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்து, தன் வழியில் சென்றது,

புலி சிங்கத்திடம் கேட்டது, "அரசே, புற்கள் பச்சை நிறமானவைதானே! நீங்கள் ஏன் என்னைத் தண்டித்தீர்கள்?"



சிங்கம் சிரித்துக்கொண்டே பதிலளித்தது: "உண்மையில் புற்கள் பச்சை நிறமானவைதாம்."

புலி மீண்டும் கேட்டது "அப்படியானால் என்னை ஏன் தண்டிக்கிறீர்கள்?".

அதற்கு சிங்கம் "புற்கள் பச்சை நிறமானவையா? அல்லது நீல நிறமானவையா? என்ற கேள்விக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால் கழுதையுடன் வாதிட்டு உன் நேரத்தை வீணடிப்பதும், அதற்கு மேல் அதனை என்னிடம் கொண்டுவந்து என்னைத் தொந்தரவு செய்வதும் உன்னைப் போன்ற துணிச்சலான, புத்திசாலித்தனமான, சிந்தனையுடையவர்கள் செய்யக் கூடாது என்பதற்குத்தான் இந்தத் தண்டனை." என்று கூறியது.

'உண்மை அல்லது யதார்த்தத்தைப் பற்றி கவலைப் படாத முட்டாள்களுடன், முரட்டு பிடிவாதக்காரர்களுடன் மற்றும் வெறியருடன் வாதிடுவது மிக மோசமாக நேரத்தை வீணடிக்கும் வேலை மட்டுமே' என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். அர்த்தமில்லாத விவாதங்களில் நேரத்தை வீணடிக்கக்கூடாது.

அறியாமை அலறும்போது, புத்திசாலித்தனம் அமைதியாக இருக்கும்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

---



திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மானந்தன் 50

# திருவள்ளுவத்தில் நிதிமுகாமைத்துவம்

நிறுவனத்தின் நிதிமுகாமைத்துவத்தில் மிகவும் முக்கியமான ஒரு கருமமாக நிறுவனத்தை கொண்டு நடத்துவதற்குத் தேவையான பொருத்தமான உகந்த நிதி நிலைமையினைத் தீர்மானிப்பதும் அதனைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்துவதும் அமைகிறது (Determine and maintain optimum cash Balance). நிறுவனம் ஒன்றின் நிதி வளத்தை முடிந்தவரை திறம்பட நிர்வகிக்கவும் அதன் உண்மையான பணப் புழக்கத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் போதுமான பணம் இருக்கும் வகையில் உகந்த பண இருப்பு தீர்மானிக்கப்பட வேண்டும். இக்கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார்.

**"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை**
**போகாறு அகலாக் கடை". (குறள். 478)**

பொருள் வரும் வழி அதாவது வருவாய் சிறியதாக இருந்தாலும் போகும் வழி அதாவது செலவு விரிவடையவில்லை என்றால் அதனால் தீங்கு எதுவும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். இங்கு நிறுவனத்தின் பணவரவு குறைவாக இருந்தாலும் பரவாயில்லை அதனது செலவுகள் வரவினை மீறிப் பெரியதாக இருக்கக் கூடாது என்பதுடன், வெளிச்செல்லும் பணத்தின் அளவு வரவினை மீறி இருக்கக் கூடாது என்கிறார். எனவே பணவரவின் அளவினையும் வெளிசெல்லும் அளவினையும் கண்காணித்து கடுப்படுத்த வேண்டும் என்ற கருத்தினையும் முன்வைக்கின்றார். எனவே நிதி முகாமையாளர் நிறுவனத்தின் பணவரவினை விரைவு படுத்தவும் உதாரணமாக வசூலாகாது இருக்கும் பணத்தினைப் பெறுவதிலும் செலவினைக் கட்டுப்படுத்தவும் உதாரணமாக சில கட்டணங்களைத் தாமதப்படுத்துவதன் மூலமும் நிறுவனத்தின் பணச் சமநிலையினைத் தீர்மானிக்க முடியும்.

திருவள்ளுவர் கூறுவது போல நிறுவனத்தின் செலவினை நிதிமுகாமையாளர் வரவுக்குள் அடக்கி விடுவாரானால் நிறுவனம் அழிவில் இருந்து தப்பிவிடும். இன்னும் விரிவாகச் சொல்லுவதானால் நிறுவனத்தின் நிதி வளத்தினை முகாமையாளர் பாதுகாப்பதுடன் வருமானத்திற்கு மேல் செலவு இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். எனவே இதனைச் செய்வதற்கு முகாமையாளர் நிதித் திட்டங்கள், செலவுக் கட்டுப்பாடுகள், கையிருப்புப் பணம் இம் மூன்றையும் ஒவ்வொருநாளும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த மூன்றும் நிறுவனத்தின் பொருளாதார நிலையைத் தீர்மானிப்பவை என்பதனால் இவற்றின் மீது கட்டுப்பாடு இல்லாவிட்டால் நிறுவனம் நட்டமடையும் என்பதனைத் திருவள்ளுவர் இங்கு கூறுகின்றார். அதாவது முகாமையாளர் நிறுவனத்தின் வரவுக்கு ஏற்ற வகையில் செலவு செய்யக்கூடியவராக அந்தச் செலவுகளை முறையாகக் கையாளத் தெரிந்தவராக அளவுக்கும் தேவைக்கும் ஏற்ப செலவு செய்யக் கூடிய ஒருவராக நிதிச் சமநிலையைப் பேணக் கூடிய ஒருவராக இருக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் இங்கு கூறும் கருத்தாகும்.



நிறுவனம் ஒன்றின் நிதி முகாமைத்துவத்தில் நிறுவனத்தில் இருக்கும் அதிகப்படியான பணத்தினை பொருத்தமான வகையில் தேவைக்கேற்ப சந்தைப்படுத்தக் கூடிய வகையில் முதலீடு செய்வதும் அமைகின்றது (Invest excess cash in marketable securities). இதனாலேயே பல நிறுவனங்கள் அவற்றின் அதன் அதிகப்படியான பணத்தின் பெரும்பகுதியை சந்தைப்படுத்தக் கூடிய பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. சந்தைப்படுத்தக்கூடிய பத்திரங்களை விரைவாகவும் எளிதாகவும் பணமாக மாற்றலாம் என்பதனால் நிறுவனத்துக்குத் திடீரென பணத் தேவை ஏற்பட்டால் அவற்றை எளிதாக திரவப் பணமாக மாற்றிப் பயன்படுத்த முடியும். குறுகிய காலத்தில் தங்கள் நிதிகளை அணுக வேண்டிய முதலீட்டாளர்களுக்கு இது மிகவும் முக்கியமானதாக அமையக்கூடும்.

இது நிறுவனத்தின் பணவரம்பினை முகாமை செய்வதில் மிகவும் உறுதியாக இருக்கும். நிறுவனத்தின் நிதி நிலைமை நன்றாக இருக்கும்போது அதன் வருமானம் அதிகரிக்கும் போது வீண் செலவுளைச் செய்வதைத் தவிர்த்து அதனை முதலீடு செய்வது நிறுவனத்தின் நிதி நிலைமை தளம்பலுக்கு உள்ளாகும்போது அதன் நிதி வரம்பினை கட்டுப்படுத்துவதில் மிகவும் உதவியாக இருக்கும். இதுதொடர்பான கருத்துக்களைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் தெளிவுபடுத்துகின்றார்

**"அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்" (குறள்.479)**

தமது பொருள்நிலை அறிந்து வாழாதவர் வாழ்க்கை உளபோல இல்லாகித் தோன்றி பின் அத் தோற்றமும் இன்றி கெட்டுவிடும் என்பது இக்குறளின் பொருள். அதாவது தனது நிறுவனத்தின் பணவரம்பின் எல்லைகளை அறியாத முகாமையாளரினால் நிறுவனத்தின் நிதியினைச் சரியாக முகாமை செய்ய முடியாது என்பது திருவள்ளுவரின் கருத்தாகும். பண அளவின் வரம்புகளை அறிந்துகொள்வதன் முக்கியத்துவத்தை அப்படி ஒரு வரம்பினை அமைப்பதன் முக்கியத்துவத்தை திருவள்ளுவர் இங்கு கூறுகின்றார். அதாவது நிறுவனம் ஒன்று தனது பண வரம்பிற்குள் இயங்குவதை உறுதி செய்வதற்காக தேவைக்கு ஏற்ப சந்தைப்படுத்தக்கூடிய வகையில் முதலீடுகளை மேற்கொண்டு அந்த வரம்பினை முகாமையாளர் உறுதி செய்ய வேண்டும். பண வரம்புக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் பணம் தொடர்பான ஒரு மாயையை உருவாக்கி அதன் சமநிலையினைக் குழப்பி இழப்பினை ஏற்படுத்தலாம் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

இவ்வாறு நிறுவனம் ஒன்றிற்கான பணவரம்புகளை முகாமையாளர் நிறுவுகின்றபோது அதன் மேல் கீழ் எல்லைகளை முறையாக காலத்திற்கு ஏற்ற வகையில் வரையறை செய்ய வேண்டும் (Set upper and lower limits of cash balance). இவ்வாறு காலத்திற்கு ஏற்ற வகையில் நிறுவனத்தின் பண வரம்புகளைத் தீர்மானிப்பது மற்றும் முதலீடுகளை மேற்கொள்வது அந்த நிறுவனத்தின் நிதி வளம் நிலைத்து நிற்க உதவும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார் .

**" பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்**
**தீராமை ஆர்க்குங் கயிறு" (குறள் 482)**

செல்வம் என்பது நிலையற்ற முடியும் தன்மையுடைய பொருள் என்பதனால் அது ஒருவரிடம் எப்போதும் ஒரே மாதிரி நிலைத்து நிற்பதில்லை எனவே காலமறிந்து அந்தச் செல்வத்தை முதலீடு செய்தால் அந்தச் செல்வமானது கயிற்றால் கட்டிப்போட்டது போன்று கலைந்து போகாமல் தங்கும் என்கிறார் திருவள்ளுவர். மாடு ஒன்றைக் கட்டையில் கட்டிக் கயிற்றுடன் பிணைத்தால் அந்த மாடு எங்கேயும் செல்லாது. அது போல காலமறிந்து முதலீடு செய்யும் தொழில் அந்தச் செல்வத்தைக் காக்க முடியும். உதாரணமாக வங்கிகளின் வட்டி விகிதம் கூடும் பொழுது அங்கு வைப்புத்தொகையாக முதலீடு செய்வதும் பின்னர் வட்டி குறையும் போது வேறு பாதுகாப்பான முதலீடுகளை மேற்கொள்வதன்மூலம் நிறுவனத்தின் பண வரம்புகளை பாதுகாத்துக் கொள்ள உதவும்.

ஒரு நிறுவனத்தை இலாபகரமானதாக நடாத்துவதே அந்நிறுவனத்தின் முகாமைத்துவத்தின் கடமையாக இருக்கின்ற அதேவேளை நிறுவனம் சார்ந்த சமூகத்திற்கு அதன் வாடிக்கையாளர்களிற்கு தனது நிதியினைப் பயன்படுத்தி சேவையாற்றுவதுடன் அச்சமூகத்தின் முன்னேற்றங்களில் நிறுவனத்தை ஈடுபடுத்துவதும் முகாமையாளரின் கடமையாகும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்

**ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்**
**தோற்றம் நிலக்குப் பொறை. (குறள் 1003)**

மற்றவரைவிட நாம் அதிகம் பொருள் சேர்க்க வேண்டும் என்று பொருள் சேர்ப்பதையே விரும்பிப் புகழை விரும்பாத மனிதரின் பிறப்பு இப்பூமிக்குப் பாரமாகும் என்று வலியுறுத்துகின்றார் திருவள்ளுவர். எனவே நிறுவனம் ஒன்று இலாபம் ஒன்றை ஈட்டுவது மட்டுமன்றி அவ்விலாபத்தில் இருந்து சமூக சேவைகளைச் செய்யக்கூடியவாறு முகாமையாளர்கள் தமது நிறுவனத்தின் வரவு செலவுத் திட்டத்தை வரைய வேண்டும் என்ற கருத்தை இங்கு திருவள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார்.

உண்மையில் முகாமையாளர் என்பவர் நிறுவனத்திற்குப் பொருள் சேர்ப்பதற்காக மட்டுமே தான் பிறப்பெடுத்தது போன்று அல்லும் பகலும் பொருள் பொருள் என்று ஓடியாடித் தேடி அலைந்து பெரும்பொருள் திரட்டாமல், அப்பொருளின் மேல் தீராத விருப்பங் கொண்டு அது தன்னைவிட்டுப் போகக்கூடாது என்பதற்காக அதனை இறுகப் பற்றிக்கொண்டிருக்காமல், தேடிய பொருள் வெளியே செல்லாதவாறு காத்துக்கொண்டு இருக்காமல் நிறுவனத்தின் பொருளினைச் சமூகம் சார்ந்த அறச் செயற்பாடுகளிற்குப் பயன்படுத்தும் வகையில் நிறுவனத்தின் நிதித் திட்டமிடல் அமைய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

(தொடரும்)

---

## கனடா தமிழர் தகவல் விருது விழாவில்

### சாதனைத் தமிழன் விருது பெற்ற குகநாதன்



கனடா, ஒன்ராறியோ மாகாண ரொறன்ரோ நகர சபா அங்கத்தவர்கள் சபா மண்டபத்தில் 32வது தமிழர் தகவல் விருது விழா அண்மையில் மிக நேர்த்தியாக நிறைவேறியது. யாழ்ப்பாணத்தை தலைமையகமாகக் கொண்டியங்கும் டான் தொலைக் காட்சியின் நிர்வாக இயக்குநர் எஸ். எஸ்.குகநாதனுக்கு 2023ஆம் ஆண்டுக்கான 'சாதனைத் தமிழன் விருது' வழங்கப்பட்டது. ஊடகத் துறையின் அச்சு மற்றும் இலத்திரனியல் பரப்பில் முன்னோடித் சாதனைகளைப் புரிந்தவர் குகநாதன். யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் 'ஈழநாடு' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இவர் விளங்கி வருவது சகலரும் அறிந்ததே.

குகநாதன் விருதினை ஏற்று ஆற்றிய உரை சபையோர்கள் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. யாழ்ப்பாண மக்களில் மூன்று வகையினரை சமகாலத்தில் அவதானிக்க முடிகிறது எனச் சுட்டிக்காட்டி அவற்றை விலாவாரியாக அவர் விளக்கியமை கேட்டு சபையினர் பலத்த கரவொலி எழுப்பினர்.

மண் வாசனை கமழும் நிகழ்ச்சிகளுக்கு முன்னுரிமை அளித்து வரும் டான் தொலைக்காட்சிக்கு வாழ்த்துகள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 74

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 06 | | 07 | 08 | 09 |
| 10 | 11 | 12 | | 13 | |
| | 14 | | 15 | | |
| 16 | | 17 | 18 | 19 | |
| 20 | 21 | 22 | | 23 | |

பெயர் ...........................................
வகுப்பு ...........................................
தொலைபேசி இல ...........................................
பாடசாலை பெயர் ...........................................
வதிவிட முகவரி ...........................................
...........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) மாணவர்கள் கல்வி பயிலும் இடம்.
(7) உள்ளே சுவை மிகுந்த முத்துக்கள் கொண்ட பழம். இனிப்பும் புளிப்பும் கலந்த சுவை கொண்ட முத்துக்கள் உள்ளே நூற்றுக்கணக்கில் காணப்படும்.
(10) மிக உயரமாக, கிளைகள் இன்றி வளரும் மரம். இம்மரத்தில் இருந்து பெறப்படுகின்ற அத்தனையும் மக்களுக்குப் பயன்படுகின்றன. ஒருவித்திலைத் தாவரம்.
(17) எமது பாதங்களை வெயில், அழுக்கு, கற்கள், முட்கள் பாதிக்காதவாறு பாதுகாப்பது இது.
(20) வீடு நிர்மாணிக்கும் போது சுற்றிவர இதனைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**மேலிருந்து கீழ்**

(2) துன்பம், அல்லல் என்றும் இச்சொல்லைக் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(4) மழைக்காலத்தைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(5) மரங்களின் கொப்பு.
(8) திரவத்தின் சிறு சொட்டு.
(15) மரத்தின் ஒத்தபொருள் சொல். (தலைகீழான சொல்)
(16) கடலில் வாழும் பெரும் உருவம் கொண்ட மீன். ஆட்களையே விழுங்கி விடும் ஆபத்தான மிகப்பெரிய மீன்களும் இந்த இனத்தில் உள்ளன. (தலைகீழான சொல்)
(17) உலகத்தின் ஒத்தபொருள் சொல்.
(19) நீர்ப்போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் சிறு சாதனம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 73

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நாசா 03. சிலை 06. காவலன் 10. குருளை
15. கதிர் 19. வடை 22. கோழி 24. மழலை

**மேலிருந்து கீழ்**

01. நாக்கு 03. வலை 04. சிலந்தி 06. காளை
11. குரு 15. கவலை 17. மலர் 18. விழி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 72

### பாராட்டு பெறுவோர்

**1. சபீஹா சப்ராஸ்**
தரம் 07, அல் கசாலி பாடசாலை,
அட்டுலுகம, பண்டாரகம.

**2. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**3. எம்.இசட்.எம். ஹாபீஸ்**
தரம் 03A, அல் நசரம் ம.ம. வித்தியாலயம்,
அவிசாவளை வீதி, மஹா புத்கமுவ, வெல்லம்பிட்டிய.

**4. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, க/வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி.,
இல. 41B, முஸ்லிம் வீதி வெலிப்பன்னை.

**5. ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**6. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**7. எம்.ஏ.எப். ஸனா**
தரம் 03, தி/ கிண்ணியா மு.ம.ம. வித்தியாலயம்,
நகர சபை வீதி, கிண்ணியா 04.

**8. ரமீஸ் இமாரா இஸ்ரா**
தரம் 10, அல் அமான் மு.ம.கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**9. வண. எம். ஆர்யசாந்த**
தரம் 05, தர்மபால பிரிவென,
பெல்லன, அகலவத்தை.

**10. எம்.ஏ.எப். அஸ்மா**
தரம் 09B, க/ பதிஉதீன் மகளிர் பாடசாலை,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

**11. தையிபா ஹசன்**
தரம் 08, பா.மு.ம. கல்லூரி,
இல. 34, டி வாஸ் லேன், கிரேன்பாஸ், கொழும்பு 14.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 74
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**கள்ளாமை:** எள்ளாமை வேண்டுவா னென்பான்
எனைத்தொன்றுங் கள்ளாமை காக்கதன் நெஞ்சு

**தெளிவுரை :**
பிறரால் இகழப்படால் வாழ விரும்புகிறவன், எத்தன்மையானப் பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக்கொள்ள எண்ணாதபடி தன் நெஞ்சைக் காக்க வேண்டும்.

# ஹிரோஷிமா அழிக்கப்பட்டு இன்றுடன் 78 ஆண்டுகள்

ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டை வீசி மிகப் பெரிய பேரழிவை ஏற்படுத்தி இன்றுடன் 78 ஆண்டுகள் முடிகின்றன.

1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின் கடைசிக் கட்டம். அனைத்து நாடுகளும் தனது எதிரிகளை வீழ்த்த பல்வேறு திட்டங்களை தீட்டின. அந்த நேரத்தில் அமெரிக்கா தனது எதிரி நாடான



ஜப்பான் நாட்டிலுள்ள ஹிரோஷிமாவில் ஒகஸ்ட் 6 ஆம் திகதியும் நாகசாகியில் ஒகஸ்ட். 9 ஆம் திகதியும் அடுத்தடுத்து அணுகுண்டுகளை வீசின.

உலக வரலாற்றில் அனுகுண்டுகளை போரில் பயன்படுத்தியது இதுவே முதல்முறை. இந்த இரு அணுகுண்டு வீச்சுகளால் நேரிட்ட விளைவுகள் மிகப் பயங்கரமாக இருந்தன.

குண்டுகள் வீசப்பட்ட 2 முதல் 4 மாதங்களுக்குள் ஹிரோஷிமாவில் அரசு அறிவித்தபடியே 90,000 பேர் உயிரிழந்தனர். பாதிக்கப்பட்டு அடுத்தடுத்த மாதங்களில் இறந்தவர்களுடன் சேர்த்து இந்த எண்ணிக்கை சுமார் 1,66,000 ஆக உயர்ந்தது.

நாகசாகியில் 60,000 முதல் 80,000 வரையிலானோர் உயிரிழந்தார்கள். இறந்தவர்களில் பாதிப் பேர் குண்டு வெடிப்பு நடந்த தருணத்திலேயே அந்தந்த இடங்களிலேயே உயிரிழந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனோலாகே என்ற விமானம் மூலம் “லிட்டில் பாய்” என்ற அணுகுண்டை காலை 8.15 மணிக்கு ஹிரோஷிமா நகரத்தின் நடுப்பகுதியில் வீசியது அமெரிக்க இராணுவம். அணுகுண்டு விழுந்தவுடன் பயங்கரச் சத்தத்துடன் வெடித்து நகரத்தில் 2,000 அடிகளுக்கும் மேல் தீப்பிழம்புகள் பற்றியெரிந்தன. மொத்தத்தில் சுமார் 16 கிலோ மீற்றருக்கு உட்பட்ட நிலப்பரப்பில் இருந்த அனைத்தும் முழுமையாக அழிந்தன. அனைத்துக் கட்டடங்களும் தரைமட்டமாயின. பிஞ்சு குழந்தை முதல் முதியோர் வரை பலர் உடல் கருகி உயிரிழந்தனர்.

தகவல் தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டதால் ஜப்பானின் வேறு எந்த பகுதிகளுக்கும் தொடர்புகொள்ள முடியவில்லை. ஹிரோஷிமாவில் என்ன நடக்கிறது என்பதை அந்நாட்டு அதிகாரிகளால்கூட கணிக்க முடியவில்லை. இந் நிகழ்வு நடந்து பதினாறு மணி நேரம் கழித்து அமெரிக்க வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையின் மூலம்தான் உலக அரங்கிற்கு என்ன நடக்கிறது என உணர முடிந்தது.

நாகசாகி மீது வீசப்பட்ட “பேட்மேன்” அணுகுண்டு வெடித்தவுடன் பல ஆயிரம் அடி உயரத்திற்கு தீப்பிழம்பு உருவானது. மேகங்களாக உயரத்தில் அடர்த்தியான நச்சுக் கரும்புகை உருவெடுத்து உலவின.

இந்த குண்டுவீச்சு நடந்து 6வது நாளில் அமெரிக்காவிடம் ஜப்பான் சரணடைந்தது. இந்த அணுகுண்டு வீச்சுதான் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வரக் காரணமாக அமைந்தது.

ஜப்பான் மீது அணுகுண்டுகளை வீசி பேரழிவை ஏற்படுத்தாதபட்சத்தில் இரண்டாம் உலகப் போர் மேலும் பல மாதங்கள் நீடித்து, இதைவிட அதிகமான மக்கள் இறந்திருப்பர் என்று அப்போது அமெரிக்கா குறிப்பிட்டது.

## இவ்வார மழலை



அதுல்யா
ராஜகாந்த் / அனுஷா



## பிளாஸ்டிக் போத்தல்களில் நீர் அருந்துவதை தவிர்ப்போம்!

தண்ணீர் கெட்டுப் போகாது. என்றாலும் கடைகளில் விற்கப்படும் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல்களில் காலாவதி திகதி குறிப்பிடப்பட்டிருக்கும். அது தண்ணீருக்கானது இல்லை. அந்த போத்தல்களுக்கானது.

காலாவதி திகதிக்கு பின் நேரடியாக சூரிய ஒளியில் அந்த போத்தல்கள் படும் பட்சத்தில் அதில் இருக்கும் BBA என்ற இரசாயனம் தண்ணீரில் கலந்து இதய பாதிப்பு, புற்றுநோய் பாதிப்புகளை ஏற்படுத்தலாம். அதனால், முடிந்தவரை பிளாஸ்டிக் போத்தல்களில் தண்ணீர் குடிப்பதை தவிர்ப்பது நல்லது.

பிரியா..

## அன்பு பெருகப் பாடுவோம்!

இருண்டு கிடக்கும் உள்ளங்களை
சுத்தம் செய்யப் புறப்படுவோம்
போகும் பாதை சுகமாகும்.
சக வாழ்வுதான் மலர்ந்திடும்.

நிம்மதி பெருக நடந்திடலாம்
அருகே அருகே அமர்ந்திடலாம்
மனங்கள்; விட்டுப் பேசிடலாம்
இன வாதங்கள் ஒழிந்திடலாம்

வெறித்து பார்க்கும் நிலைமாறும்
பாசம் எங்கும் பெருகிடும்
பூப்போல் முகங்கள் பூத்திடும்
உள்ளக் கறைகள் நீங்கிடும்.

நாட்டில் சுபிட்சம் மலர்ந்திடும்
வேசம் யாவும் மறைந்திடும்
உள்ளம் தூய்மை பெருகவே
அன்பு பெருகப் பாடுவோம்!

இக்பால் அலி

## நீருக்கடியில் மறையும் சாலை!

இ தினமும் இரண்டு முறை நீருக்கடியில் மறையும் சாலை எங்கே நிகழ்கிறது இந்த அதிசயம்?

பாஸேஜ் டு கோயிஸ் என்பது பிரான்சில் உள்ள ஒரு பிரபலமான சாலையாகும். இது ஒரு வினோதமான இயற்கை நிகழ்வுக்கு பெயர் பெற்றது.

4.15 கிமீ நீளமுள்ள இந்த சாலை ஒரு நாளைக்கு இரண்டு முறை தண்ணீருக்கு அடியில் மறைகிறது.

அதிக அலை காரணமாக இது நிகழ்கிறது. இந்த சாலையை பார்க்க உலகம் முழுவதிலும் இருந்து ஆர்வமுள்ள சுற்றுலா பயணிகள் இங்கு குவிகின்றனர்.

இந்த தனித்துவமான சாலை பர்ன்யோஃப் வளைகுடாவை நோயர்மூட்டியர் தீவுடன் இணைக்கிறது. என்ன தான் இது பார்க்க அழகானதாக இருந்தாலும் மிகவும் ஆபத்தானது.

அதிக அலையின் காரணமாக, சாலை கிட்டத்தட்ட 13 அடி தண்ணீருக்கு அடியில் மறைகிறது. கண பொழுதில் மறையும் இந்த நிகழ்வு ஒரு நாளைக்கு இரண்டு முறை நிகழ்கிறதாம்.

சாலையில் செல்லும் ஓட்டுநர்களுக்கு, கண்ணுக்குத் தெரியாத அலை குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

விபத்துகள் ஏதேனும் ஏற்பட்டால், மக்கள் பல மணி நேரம் சாலையில் தவிக்கின்றனர். இங்கு அதிகாரிகள் உயரமான கோபுரங்களை அமைத்துள்ளனர்.

மக்கள், இதுபோன்ற சூழ்நிலையில் சிக்கினால் கோபுரங்கள் உதவியாக இருக்கும்.

நீர்வரத்து குறைந்தவுடன், சாலையில் கடல் பாசி படர்ந்து, மக்கள் நடந்து செல்வதற்கு மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இந்த இடத்திற்கு செல்லும் போது மிகவும் அவதானத்துடன் செல்லுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







பருத்தி போல இருக்கும் இந்த பறவையின் பெயர் ஷிமா எனாகா, இது ஜப்பானில் உள்ள ஹொக்கைடோவில் வாழும் ஓர் அரிய பபறவை..

# கண்டுபிடிப்பாளர்கள்

## ஆர்க்கிமிடிஸ்



கி.மு. 260ஆம் ஆண்டு; இத்தாலி அருகில் உள்ள சிசிலி தீவில் சைரக்கியூஸ் எனும் கடற்கரை பட்டினம். அங்குள்ள கப்பல் கட்டும் துறையில் ‘சைரக்யூசியா’ என்ற சொகுசு கப்பல் ஒன்று நிற்கிறது. 4,064 டன் எடை கொண்டது. நீச்சல் குளம், உடற்பயிற்சிக் கூடம், பயணிகளுக்கு கழிவறை என எல்லா வசதிகளுடனும் அது கட்டிமுடிக்கப்பட்டு நிற்கிறது. அதை கடலில் செலுத்தவேண்டும். அதில்தான் பிரச்சினை.

இராட்சத வடக்கயிறுகளைக்கட்டி ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் அதை இழுத்து கடலில்விட முயன்றனர்.

ஒரு அடி கூட நகரவில்லை. சைரக்கியூஸ் நகர மன்னன் ஹைறான், “ஆர்க்கிமிடிஸ் எங்கே உடனே அழைத்து வாருங்கள்” என்றார்.ஆர்க்கிமிடிஸ் வந்தார். ஒற்றை ஆளாக கப்பிகள், கயிறுகள், கழிகள் ஆகியவற்றைக் கொண்டு கப்பலுடன் பிணைத்து ஒரு ஏற்பாட்டை செய்தார். விசையை செலுத்தும் அமைப்பை இயக்கினார். என்ன வியப்பு! கப்பல் கடலில் இறங்கிவிட்டது!.

மன்னர் ஹைறான் மகிழ்ச்சியால் துள்ளினார். மக்களின் ஆரவாரம் விண்ணைத் தொட்டது. “ஆர்க்கிமிடிஸ்! எப்படி இது சாத்தியமாயிற்று?” என கண்கள் விரிய கேட்டார் ஹைறான். “அரசே! எனக்கு நிற்பதற்கு ஒரு இடம் கொடுங்கள் நான் இந்த பூமியையே புரட்டிக் காட்டுகிறேன்” என்றார் ஆர்க்கிமிடிஸ். ஆம், தன் அறிவாற்றலால் அக்கால அறிவியலை ஈராயிரம் ஆண்டுகள் முன்னோக்கி செலுத்திய நெம்புகோல் ஆர்க்கிமிடிஸ்.

இத்தாலியின் அருகில் உள்ள சிசிலித் தீவில் சைரக்கியூஸ் நகரில் கி.மு. 287இல் ஆர்க்கிமிடிஸ் பிறந்தார். இவரது தந்தை ஒரு வானியல் அறிஞர். அலெக்சாண்டரா பல்கலைக்கழகத்தில் சிறிது காலம் படித்துவிட்டு சைரக்கியூஸ் நகருக்கே ஆர்க்கிமிடிஸ் திரும்பிவிட்டார். மன்னர் 2ஆம் ஹைறானின் அறிவியல் ஆலோசகராகவும் மன்னரின் மகனுக்கு ஆசிரியராகவும் பணியாற்றினார்.

போர்க்கருவிப் பொறியியலாளர்

மன்னன் ஹைறானுக்காக ஆர்க்கிமிடிஸ் பல படைக்கலங்களை உருவாக்கினார். சைரக்கியூசை முற்றுகையிட்ட எதிரி நாட்டுக் கப்பல்கள் மீது பிரம்மாண்ட ஆடிகளைக் கொண்டு சூரிய ஒளியை குவித்துத் தீப்பற்றச் செய்து அழித்தார். நெம்புகோல் முறையில் கிரேன்களை உருவாக்கி எதிரியின் போர் படகுகளை அந்தரத்தில் தூக்கி எறிந்து மூழ்கடித்தார். பாறாங்கற்களை எறியும் இயந்திரங்கள் மூலம் எதிரிகளின் கப்பல்களை உடைத்துப்போட்டார். ஆர்க்கிமிடிசின் இத்தகைய புதிய உத்திகளால் வலிமையான ரோம் படையால் சின்னஞ்சிறு சிசிலி தீவுக்குள் நெடுங்காலமாக நுழைய முடியவில்லை.

மக்கள் விஞ்ஞானி

ஆர்க்கிமிடிஸ், தன் கணிதக் கோட்பாடுகள், அறிவியல் கோட்பாடுகள், எந்திரவியல் அறிவு ஆகியவற்றால் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களை உருவாக்கித் தந்தார். தாழ்வான பகுதிகளிலிருந்து நீரைமேலே முகர்வதற்கு நீர்ப் பம்ப்பான ‘ஆர்க்கிமிடிஸ் திருகு’ஐ வடிவமைத்தார். அது இன்றும் கூட பல பகுதிகளில் பயன்பாட்டில் உள்ளது. நீர், காற்று ஆகிய பாய்மரங்களில் பொருட்களின் எடை குறித்த ஆர்க்கிமிடிசின் கோட்பாட்டைக் கொண்டுதான் நீர்மூழ்கிக் கப்பல் முதல் நீராவிக் கப்பல் வரை நீரில் மிதக்கின்றன. ஹைட்ரஜன் பலூன் முதல் ஆகாய விமானம் வரை வானில் பறக்கின்றன.

சாதாரண வாழ்வில் எதிர்கொள்ளும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கான தீர்வைத் தேடி, எக்காலத்திற்கும் பொருந்தும் கோட்பாடுகளை ஆர்க்கிமிடிஸ் கண்டடைந்தார். வட்டத்தின் பரப்பளவைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் மதிப்பு 22/7 எனக் கண்டுபிடித்தார். மின்னணு கணக்கீட்டுக் கருவி கண்டுபிடிக்கும் வரை ஆர்க்கிமிடிஸ் தந்த =22/7 தான் கணக்குகளில் பயன்படுத்தப்பட்டு வந்தது.

அறிவியல் துறைகள்

வடிவ கணிதம், எண் கணிதம், தொகை நுண் கணிதம், வானியல், இயற்பியல், எந்திர பொறியியல், நீர்நிலையியல், புதுப்புனைவுகள், போர்த்தளவாடப் பொறியியல் என அறிவியல் துறைகள் பலவற்றில் ஆர்க்கிமிடிஸ் முன்னோடியாக விளங்கினார். வட்டம், கோளம், கூம்பு, எறிவு, பரவளையம் என வளைந்த வடிவங்களை அளவீடு செய்வதற்கு அவர் உருவாக்கிய கணிதக் கோட்பாடுகளும், சூத்திரங்களும்தான் இன்றைய புதுப்புனைவுகளின் ஆதாரங்களாக விளங்குகின்றன.

விளையாட்டு



# ஹிஜாபும் விளையாட்டும்

அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடைபெற்று வரும் மகளிர் உலகக் கிண்ண கால்பந்து போட்டி பெரிதாக ஆரவாரம் காட்டாமல் முன்னோக்கிச் செல்கிறது. ஆடவர் கால்பந்து உலகக் கிண்ணத்துடன் ஒப்பிடுகையில் மகளிர்களுக்கு இன்னும் பெரிதாக செல்வாக்கு இல்லை என்பது தெரிந்தது. விளையாட்டில் ஆண், பெண் சமத்துவம், ஏற்றத்தாழ்வு, சம்பள முரண்பாடு எல்லாம் இந்த பின்னணியில்தான் பார்க்க வேண்டும்.

மொரோக்கோ பின்கள வீராங்கனை நுஷைலா பென்சினா உலகக் கிண்ண வரலாற்றில் ஹிஜாப் அணிந்து போட்டியில் பங்கேற்ற முதல் வீராங்கனையாக பதிவாகி இருக்கிறார். இது ஒரு வரலாற்று திருப்பம் என்றாலும் இதன் நல்லது கெட்டது பற்றிய விவாதம் என்பது விளையாட்டைத் தாண்டி சமயம், அரசியல் எல்லாம் கலந்தது.

கடந்த ஆண்டு கட்டாரில் நடந்த ஆடவர் உலகக் கிண்ணத்தில் மொரோக்கோ அணி அரையிறுதி வரை முன்னேறி அதிர்ச்சி காட்டியது. அதன் தொடர்ச்சியாகவே மகளிர் உலகக் கிண்ணத்திற்கு மொரோக்கோ அணி முதல் முறை தகுதி பெற்றது. அதாவது அரபு பின்னணி கொண்ட அணி ஒன்று மகளிர் உலகக் கிண்ணத்திற்கு முதல் முறை முன்னேறியதாக இது இருந்தது.

பொதுவாக மொரோக்கோ மகளிர் அணி கால்பந்துக்கே உரிய அரைக்காற்சட்டை மற்றும் ஜெர்சியுடனேயே இம்முறை உலகக் கிண்ணத்தில் களமிறங்கியது. ஜெர்மனிக்கு எதிரான முதல் போட்டியில் 0–6 என தோற்றபோது உலகம் அவதானிக்கும்படி அந்த அணியில் எதுவும் இருக்கவில்லை. ஏனென்றால் 25 வயதான பின்கள வீராங்கனை நுஹைலா பென்சிமா அந்தப் போட்டியில் பதில் வீராங்கனையாக இருந்தபோதும் போட்டியில் கடைசி வரை பயன்படுத்தப்படவில்லை.

தொடர்ந்து தென் கொரியாவுக்கு எதிராக கடந்த ஜூலை 30 ஆம் திகதி இடம்பெற்ற தீர்க்கமான போட்டியில் நுஹைலா ஆரம்ப அணியிலேயே இணைக்கப்பட்டார். மைதானத்திற்கு களமிறங்கியபோது ஏனைய வீராங்கனைகளில் இருந்து அவர் முற்றாக வித்தியாசமாக இருந்தார்.

தலையை மறைக்கும் வகையில் ஹிஜாப் அணிந்திருந்த அவர் அரைக்காற்சட்டைக்கு கீழால் காலை மறைக்கும் வகையில் மெல்லியதாக ஒரு காற்சட்டை போட்டிருந்தார். அவரது கை கூட மணிக்கட்டு வரை மறைக்கப்பட்டிருந்தது. சர்வதேச கால்பந்து மைதானத்தில் அதுவும் உலகக் கிண்ணத்தில் இப்படி ஆடை அமைப்புடன் மைதானத்தில் வீராங்கனை ஒருவர் இருப்பது இது புதிது.

நுஹைலாவின் இந்த தோற்றத்திற்கு முழுக்க முழுக்க காரணம் அவரது மத நம்பிக்கைதான். அது விளையாட்டு உலகில் இன்னும் முழுமையாக தீர்க்கப்படாத ஒரு விவகாரமாக இருந்து வருகிறது.

“பல ஆண்டுகளாக பல போராட்டங்களை சந்திக்க வேண்டி இருந்தது. சாதகமான முடிவு ஒன்று கிடைத்திருப்பதற்கு இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். உயர் தரத்தில் மொரோக்கோவுக்கு பெருமை சேர்க்கும் வகையில் நாம் விளையாட எதிர்பார்க்கிறோம்” என்கிறார் நுஹைலா.

வீராங்கனைகளின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை காரணம் காட்டி 2007 ஆம் ஆண்டு கால்பந்து போட்டிகளில் ஹிஜாப் அணிய சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) தடை விதித்தது. அதாவது முக்காடு அணிந்து போட்டியில் விளையாடுவது தலை அல்லது கழுத்தில் காயத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதே பிஃபாவின் பிரதான தர்க்கமாக இருந்தது.

போட்டியின்போது அணியும் துணி கழுத்தை இறுக்கி மூச்சுத் திணறலை ஏற்படுத்தும் என்றே பிஃபா ஆரம்பத்தில் பயப்பட்டது.

என்றாலும் இந்தத் தடை ஓர் உணர்வுபூர்வமான விவகாரமாக மாறியது. 2007 ஆம் ஆண்டு 11 வயது கனேடிய சிறுமி ஒருவர் ஹிஜாபுடன் ஆட வந்தபோது நடுவர் பிஃபா தடையை காரணம் காட்டி அவர் மைதானம் வர மறுத்தது சர்வதேச அளவில் பெரிதாக அவதானம் பெற்றது. இந்த விவகாரம் பிஃபா வரை எடுத்துவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிஃபா நிலைப்பாட்டில் படிப்படியாக மாற்றம் நிகழ ஆரம்பித்தது.

குறிப்பாக இந்தத் தடை முஸ்லிம் பெண்களிடையே பெரிதாக தாக்கம் செலுத்த ஆரம்பித்தது. பல பெண்கள் கால்பந்து விளையாட்டையே துறக்கும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக ஜோர்தான் அணிக்கு எதிரான தகுதிகாண் போட்டியில் ஆடவந்த ஈரான் மகளிர் கால்பந்து அணி வீராங்கனைகள் ஹிஜாப் அணிந்திருந்ததால் போட்டியில் ஆட தடை விதிக்கப்பட்டது.

அப்போது ஈரான் வீராங்கனைகள் மைதானத்திலேயே அழுத காட்சி உள்நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஹிஜாப் விவகாரத்தில் கடும் கட்டுப்பாடு இருக்கும் ஈரானில் இந்தத் தடை பெண்களை கால்பந்தில் இருந்து தூரமாக்கியது.

என்றாலும் கால்பந்து விதிகளை தீர்மானிக்கும் சர்வதேச கால்பந்து சம்மேளன சபை, சோதனை முயற்சியாக கால்பந்து போட்டிகளில் பெண்கள் இரண்டு ஆண்டுகளுக்கு ஹிஜாப் அணிய அனுமதி அளித்தது. இந்த சோதனை பிஃபா தர்க்கத்தை பொய்யாக்குவதாக இருந்தது.

இதனை அடுத்தே 2014 ஆம் ஆண்டு ஹிஜாப் அணிவதற்கான தடையை பிஃபா நீக்கியது. 2016 ஆம் ஆண்டு ஜோர்தானில் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்ட மகளிர் உலகக் கிண்ணத்திலேயே தடை நீக்கப்பட்டிருப்பது உலகக்கு பெரிதாகத் தெரிந்தது. அந்தத் தொடரில் பல வீராங்கனைகள் ஹிஜாப் அணிந்து ஆடியதை பார்க்க முடிந்தது.

மறுபக்கம் தடை நீங்கியதற்கு என்ன உலகக் கிண்ணத்தில் நுஹைலாவுக்கு முன்னர் யாரும் ஹிஜாப் அணிந்து ஆடி இருக்கவில்லை. குறிப்பாக 2019 ஆம் ஆண்டு பிரான்ஸில் மகளிர் உலகக் கிண்ணப் போட்டி நடந்ததும் இதற்கு பாதிப்பை ஏற்படுத்தி இருந்தது. ஏனென்றால் அங்கு ஹிஜாப் தடை தொடர்ந்து நீடித்தது.

பிஃபா தடையை நீக்கி இருந்தாலும் பிரான்ஸ் இன்னும் விடாப்பிடியாகவே





**மொரோக்கோ பின்கள வீராங்கனை நுஷைலா பென்சினா உலகக் கிண்ண வரலாற்றில் ஹிஜாப் அணிந்து போட்டியில் பங்கேற்ற முதல் வீராங்கனையாக பதிவாகி இருக்கிறார். இது ஒரு வரலாற்று திருப்பம் என்றாலும் இதன் நல்லது கெட்டது பற்றிய விவாதம் என்பது விளையாட்டைத் தாண்டி சமயம், அரசியல் எல்லாம் கலந்தது.**

இருக்கிறது. பிஃபா இந்த விவகாரத்தில் நெகிழ்வு பொக்கை கையாள்வதே பிரான்ஸ் போன்ற சில நாடுகள் தனித்து முடிவு எடுக்கக் காரணம். என்றாலும் இது ஒரு இஸ்லாமோபோபியா மற்றும் பெண்கள் விளையாட்டில் பங்கேற்பதை தடுக்கிறது என்று கூறி சிலர் பிரான்ஸில் நீதிமன்றத்திற்குக் கூட சென்றார்கள்.

போட்டியின்போது கிறிஸ்தவ வீரர்கள் சிலுவை அடையாளத்தை அணிந்து ஆட அனுமதிப்பதை வைத்து அவர்கள் வாதித்தார்கள்.

என்றாலும் மைதானத்தில் அல்லது அதற்கு அருகில் ஹிஜாப் அணிந்த பெண்களை அனுமதிப்பது நாட்டின் 1905 ஆம் ஆண்டின் மதச்சார்பின்மை சட்டத்திற்கு எதிரானது என்று பிரான்ஸ் கால்பந்து சம்மேளனம் கூறுகிறது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஹிஜாப் விவகாரம் பெண்கள் விளையாட்டில் பூதாகாரமாக வெடித்தபோதும் அண்மைக் காலத்தில் கூடைப்பந்து மற்றும் கரப்பந்து உட்பட பல விளையாட்டுகளிலும் ஹிஜாப் தடை நீக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேச கூடைப்பந்து விதிகளில் ஹிஜாபுக்கு இருக்கும் தடையை நீக்க கடுமையாக போராட வேண்டி இருந்தது. இந்த ஹிஜாப் தடையாலேயே விளையாட்டை விட மதத்தை முன்னிறுத்தி தனது கூடைப்பந்து வாழ்வுக்கே விடைகொடுத்தார் அமெரிக்க வீராங்கனை பில்கிஸ் அப்துல் காதிர். இந்தப் போராட்டத்தில் அவரும் முன்னின்று செயற்பட்டார். கடைசியில் 2017 ஆம் ஆண்டு ஹிஜாப் தடை கூடைப்பந்து விளையாட்டில் இருந்து நீக்கப்பட்டது.

என்றாலும் பிரான்ஸில் தொடர்ந்தும் இந்த நிலை நீடிக்கிறது. கூடைப்பந்து வீராங்கனையும் செயற்பாட்டாளருமான சலிமதா சிலா, தனது பிரெஞ்ச் லீக் போட்டியில் ஹிஜாப் அணிந்து ஆட அந்நாட்டு கூடைப்பந்து நிர்வாகம் தடை விதித்ததாக கூறுகிறார்.

பிரான்ஸின் இந்த முடிவுகள் சாதாரணமானதாகக் குறிப்பிட முடியாது. ஏனென்றால் 2024 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி அங்குதான் நடைபெறவுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்கு தனக்கே உரிய பாகுபாட்டுக்கு எதிரான கொள்கைகள் இருக்கின்றன. அது பிரான்ஸின் இந்தக் கொள்கைகளுடன் நேரடியாக முரண்படுகிறது. ஈரான், சவூதி அரேபியா போன்ற ஹிஜாப் விவகாரத்தில் கண்டிப்பாக இருக்கும் நாடுகளும் பிரான்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும். இதுவெல்லாம் அடுத்த ஒலிம்பிக் போட்டியில் எந்த அளவுக்கு தாக்கத்தை செலுத்தும் என்று தெரியவில்லை. உள்ளூரில் கூடைப்பந்து மற்றும் கால்பந்தில் இருக்கும் ஹிஜாப் தடை அங்கு ஏனைய விளையாட்டுகளுக்கும் பரவும் அச்சமும் நிலவுகிறது.

இது தொடர்பில் சர்வதேச ஒலிம்பிக் குழு கருத்துக் கூற மறுத்து வருகின்றபோதும் ஒலிம்பிக்கில் பாகுபாட்டுக்கு இடமில்லை என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்தி இருக்கிறது.

1996 வரை ஒலிம்பிக்கில் ஹிஜாப் அணிந்த பெண்களுக்கு இடம் அளிக்கப்படாதபோதும் குத்துச்சண்டை, பாரம் தூக்குதல், ஓட்டப் போட்டி, வாள் சண்டை மற்றும் ஜூடோ போட்டிகளில் வீராங்கனைகள் ஹிஜாப் அணிய அனுமதி இருந்தது.

ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த ஸ்கெட்டிங் வீராங்கனை சஹ்ரா லாரி பியொங்சாங்கில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக்குக்கான தகுதிகாண் போட்டியில் முதல் வீராங்கனையாக ஹிஜாபுடன் பங்கேற்றார்.

அதேபோன்று 2016 ஆம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் போட்டியில் எகிப்தின் டோவா எல்கோபஷி முதல் கடற்கரை கரப்பந்தாட்ட வீராங்கனையாக ஹிஜாப் அணிந்து பங்கேற்றார். அப்போது அவர் ஹிஜாப் உடன் ஒரு பக்கம் இருக்க, மற்றப் பக்கத்தில் நீச்சல் உடையுடன் ஆடும் வீராங்கனையின் புகைப்படங்கள் பத்திரிகைகளின் முதல் பக்கங்களில் பெரிதாக வெளியாகி இருந்தன.

அவுஸ்திரேலியாவில் வலைப்பந்தாட்டத்தில் ஹிஜாப் அணிய அனுமதி இருந்தபோதும் ரக்பி லீக்கில் தலையை மறைப்பது பற்றி குறிப்பிட்டு எந்த வழிகாட்டலும் இல்லை. என்றாலும் ஆபத்து என்று கருதும் எதையும் அணிய அனுமதி இல்லை.

அவுஸ்திரேலிய ரூல்ஸ் கால்பந்தின் அவுபர்ன் ஜயன்ட்ஸ் என்ற அணி முஸ்லிம் பெண்களால் உருவாக்கப்பட்டதோடு அதிலே ஹிஜாப் அணிந்து ஆடும் பெண்களை பரவலாக பார்க்க முடிகிறது.

ஹிஜாப் என்பது விளையாட்டில் சாதாரணமாகி வரும் நிலையில் அதற்கான சந்தைகளும் பெரிதாகி வருகின்றன. குறிப்பாக விளையாட்டு ஆடைகளை தயாரிக்கும் முன்னணி நிறுவனமான நைக்கி முஸ்லிம் பெண்களை இலக்கு வைத்து 2017இல் நவீன நீச்சல் உடையை அறிமுகம் செய்தது. என்றாலும் மேல் மட்ட போட்டிகளில் முழு உடலையும் மறைக்கும் வகையில் ஆடை அணிய முடியாது.

வீரர்களுக்கு அளவுக்கு அதிகமாக போட்டியில் சாதகமான நிலை இருப்பதாகக் கூறி 2010இல் முழு உடலையும் மறைக்கும் ஆடைக்கு நீச்சல் விளையாட்டு நிர்வாகம் தடை விதித்தது. இதனால் மூன்று முறை ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற எகிப்து நீச்சல் வீராங்கனை ஆயா மதனி விளையாட்டுக்கு விடை கொடுக்க வேண்டியதாயிற்று.

பொதுவாகவே முஸ்லிம் சமூகக் கட்டமைப்பில் இருந்து பெண்கள் விளையாட்டில் ஈடுபாடு காட்டுவது ஒப்பீட்டளவில் அரிதானது. இந்தக் கட்டுப்பாடுகள் இருக்கின்ற சிறிய சூழல்களையும் தடை செய்வதாக இருக்கிறது.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram

# செந்தூரம்

2023 ஓகஸ்ட் 6 ஞாயிற்றுக்கிழமை





வெற்றி நடை 07

போட்ட வலம்புரி கவிதா வட்ட கவியரங்கு



ரூ. 500 கோடி 08

பட்ஜெட்டாக இருந்தாலும் நடிக்க மாட்டேன்

கவிஞராக இலக்கிய உலகில் நுழைந்த

நஜ்முல் ஹுசைன் சிறுகதை ஆசிரியராக இன்று

# 61 ஆண்டுகள் தூங்காத மனிதன்



வியட்நாமைச் சேர்ந்த யாங் நிகொக்கிற்கு வயது 80ஐ தாண்டிவிட்டது. இன்னும் சுறுசுறுப்பாக வேலை செய்கிறார். ஆனால் அவர் தூங்கி 61 ஆண்டுகள் ஆகிறதாம். தூக்கம் பற்றி பாடம் நடத்தும் ஆரோக்கிய வித்தகர்கள், ஏன், மருத்துவர்களுக்குக் கூட இந்தக் கதை விந்தையாக இருக்கிறது.

வியட்நாமின் குவாங் நாம் மாகாணத்தைச் சேர்ந்தவர் நிகொக். 1962 ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் காய்ச்சலைத் தொடர்ந்து இப்படி தூக்கம் இல்லாமல் இருக்கிறேன் என்கிறார் அவர். வீட்டில் மனைவி, பிள்ளைகள், ஊர் மக்கள் எல்லோருமே நிகொக் தூங்கி பார்த்ததே இல்லை என்கிறார்கள்.

பசும் தேநீர் மற்றும் அரிசியால் செய்யப்பட்ட மதுவை குடிப்பதே தனது ஆரோக்கியத்திற்குக் காரணம் என்று அந்த முதியவர் மருத்துவக் குறிப்புகள் கூட சொல்கிறார். ஆனால், இடைவிடாது சிகரெட்டும் குடிக்கவும் செய்கிறார்.

உண்மையில் நிகொக் கூறும் கதை மருத்துவ உலகில் விடுவிக்க முடியாத புதிராக உள்ளது. அவர் தூக்கக் கோளாறு என்று அழைக்கப்படும் 'இன்சொம்னியா' பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று சிலர் சொல்கிறார்கள்.

இது ஒருவர் தூக்கம் வருவது அல்லது தூங்குவதை தடுக்கும் ஒரு பிரச்சினை. ஆனால், இந்தக் கோட்பாடு கூட ஒரு சில நாட்களுக்கு பொருந்தும். அரை நூற்றாண்டுக்கு மேல் தூங்காமல் இருக்க முடியுமா என்பதுதான் கேள்வி.

இதுபற்றி இன்னும் பல கோட்பாடுகள் இருக்கின்றன. ஒன்று அவர் தூக்கத்தை இல்லாமல் செய்யும் மரபணு மாற்றம் ஒன்றுக்கு ஆளாகி இருக்கலாமாம். நிகொக் அவருக்கே தெரியாமல் குட்டித் தூக்கம் போடுபவராகக் கூட இருக்கலாம் என்று மற்றொரு கோட்பாடு சொல்கிறது.

எப்படி, இருந்தபோதும் நிகொக்கின் நிலையை முழுமையாக ஆராய்ந்தால்தான் உண்மை தெரியவரும். என்னதான் மருத்துவம் வளர்ந்தாலும் ஆரோக்கிய வியாக்கியானங்கள் சொன்னாலும் மனித உடல்இன்னும் விடுவிக்கப்படாத புதிராக இருக்கிறது என்பதே உண்மை.

# கொலைகார பிரபுத்துவ பெண்



டர்யா சல்டிகோவா ரஷ்யாவில் 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய குடும்பத்து பெண். பெரும் பிரபு ஒருவரை திருமணம் புரிந்தார். ஆனால் 26 வயதிலேயே கணவரை இழந்தார். ஆனால் ஏகப்பட்ட சொத்து; ஊரில் பெரும் சொல்வாக்குக் கொண்டவர்.

அவரிடம் வேலைக்குச் சென்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்தார்கள். குடும்பத்தினர் அதுபற்றி பொலிஸாரிடம் முறையிட்டாலும் எதுவும் நடக்கவில்லை. முறையிட்டவர்கள் தாக்கப்பட்டார்கள். கடைசியில் ஆட்சியில் இருப்பவர்களிடம் போய் கூறியபோது விசாரணை நடத்தப்பட்டது. பார்த்தால், டர்யா பெரும் கொலைகாரி என்பது தெரியவந்தது. தன்னிடம் வேலைபார்க்கும் பெண்களை சித்திரவதை செய்து கொலை செய்திருக்கிறார். இப்படி சுமார் 138 பேரை கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுகிறது. குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அவர் தனது வாழ்நாளின் எஞ்சிய காலத்தை ஜன்னல் கூட இல்லாத இருண்ட சிறையில் கழித்தார்.

# ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற முதல் அமெரிக்க பெண்ணின் பரிதாபம்








ஒலிம்பிக் போட்டியில் அமெரிக்காவுக்காக முதல் தங்கப் பதக்கத்தை வென்ற பெண் என்ற சாதனையை படைத்தவர் மார்கரேட் அபோட். என்ன பரிதாபம் என்றால் அதுபற்றி மார்கரேட்டுக்கு அவர் இறக்கும் வரை தெரியாது.

1900ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடந்த இரண்டாவது ஒலிம்பிக் கோட்டியின் கொல்ப் போட்டியிலேயே மார்கரேட் முதலிடம் பெற்று தங்கம் வென்றார். ஆனால் அதிலே ஏகப்பட்ட குழப்பங்கள்.


மார்கரேட் கற்பதற்காகவே பாரிஸ் சென்றிருந்தார். அப்போது அங்கு ஒலிம்பிக் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சம காலத்திலேயே பாரிஸ் திருவிழா ஒன்றும் பிரமாண்டமாக நடத்தப்பட்டிருந்தது. போதாக்குறைக்கு ஒலிம்பிக் போட்டியில் பெண்களுக்கு உத்தியோகபூர்வமாக அனுமதி இல்லை. ஆனால் கொல்ப் போன்ற ஒருசில விளையாட்டுகளுக்கு பெண்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

எனவே, கொல்ப் போட்டி பற்றி பத்திரிகையில் விளம்பரம் வந்திருந்தபோது மார்கரேட் அது ஒலிம்பிக் போட்டி என்று தெரியாமல்தான் விண்ணப்பித்தார். போட்டியில் பங்கேற்பதற்கு அனுமதியும் கிடைத்தது. கொல்ப் விளையாடி பழக்கப்பட்டவர் என்பதால் போட்டியில் இலகுவாக வென்று தங்கப் பதக்கத்தையும் கைப்பற்றினார்.

அப்போது அந்த கொல்ப் போட்டி பாரிஸ் திருவிழாவுடன் சம்பந்தப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டது என்றே மார்கரேட் மட்டுமல்ல பெரும்பாலானவர்கள் நினைத்துக் கொண்டிருந்தனர். தங்கம் வென்ற அவர் அதனை பெரிதாக பொருட்படுத்தவில்லை. தனது வழக்கமான வாழ்வை தொடர்ந்த அவர் 1955 ஆம் ஆண்டு தனது 76 ஆவது வயதில் மரணித்தார்.

அதற்கு பின்னரே அவர் பங்கேற்றது ஒலிம்பிக் போட்டி நிகழ்ச்சி என்பதும் அவரே முதல் தங்கம் வென்ற அமெரிக்க பெண் என்றும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

# மூன்று ஆண்டுகளில் எடுத்த புகைப்படம்



இது என்ன படம்! மங்கலாக, கெமராவில் சரியாக போகஸ் வைக்காமல் எடுத்திருக்கிறார்கள் என்று இந்தப் படத்தை பார்த்தால் சொல்லத் தோன்றும். ஆனால் இந்தப் படத்தை எடுப்பதற்காக எடுத்துக் கொண்ட காலம் மூன்று ஆண்டுகளுக்கு மேல்.

ஒளி கூட தப்ப முடியாத பிரபஞ்சத்தின் பெரும் மர்மமாக இருக்கும் கருந்துளையை படம் பிடிப்பது சாத்தியம் இல்லை என்றே நம்பப்பட்டு வந்தது. அதனை பொய்யாக்கிய கருந்துளையின் புகைப்படமே இது. அதாவது கண்ணால் பார்க்க முடியாது என்று கூறப்படும் கருந்துளையின் முதல் புகைப்படம் இதுதான்.

இருண்ட கருந்துளையைச் சுற்றி சக்தி வாய்ந்த ரேடியோ கதிர்களின் உமிழ்வுகள் இருக்கும். அவற்றை வைத்தே இந்த படம் எடுக்கப்பட்டது. 'ஈவென்ட் ஹோரைசன் டெலஸ்கோப்' என்ற திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஆராய்ச்சியாளர்களே இதனை சாத்தியமாக்கினர். ஆனால் அது இலகுவானதாக இருக்கவில்லை.

இதில் 5 கோடி ஒளியாண்டுகளுக்கு அப்பால் இருக்கும் கருந்துளையே படம் பிடிக்கப்பட்டது. உண்மையில் அந்த கருந்துளையை படம்பிடிக்க பூமி அளவு தொலைநோக்கி ஒன்று தேவை.

எனவே விஞ்ஞானிகள் பூமியின் அளவான மெய்நிகர் தொலைநோக்கி ஒன்றை உருவாக்கி கருந்துளையை படம்பிடித்தார்கள். என்றாலும் இதன்மூலம் பெறப்படும் தரவின் அளவு பெட்டா பைட்டுகள், அதாவது 10 இலட்சம் கிகா பைட்டுகள். இதனை இணையத்தில் அனுப்ப முடியாத நிலையில் அந்தத் தரவுகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து முழு புகைப்படத்தையும் உருவாக்க எடுத்துக்கொண்ட காலமே மூன்று ஆண்டுகளாகும்.

**காதலன் மற்றும் தோழியுடன் சேர்ந்து கணவனை ஆசிரியை ஒருவர் தீர்த்துக்கட்டினார். சேலத்தை அதிர வைத்த இந்த சம்பவத்திற்கு மூளையாக செயல்பட்டது ஆசிரியையின் தோழிதான் என்ற திடுக்கிடும் தகவல்கள் விசாரணையில் வெளியாகி உள்ளது.**



# காதலன், தோழியுடன் சேர்ந்து கணவனை தீர்த்துக்கட்டிய ஆசிரியை


சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம் அடுத்த மலையம்பாளையத்தை சேர்ந்த 32 சுந்தரராஜ் (வயது 32). பொறியியலாளர் ஆவார். இவர் ஹைதராபாத்தில் உள்ள ஒரு நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். இவர் சேலம் குகை பகுதியைச் சேர்ந்த நிவேதா (27) என்பவரை 8 ஆண்டுகளுக்கு முன்பு கல்யாணம் செய்தார். சுந்தரராஜ் நிவேதா தம்பதிக்கு 7 வயதில் ஒரு மகன் உள்ளார். நிவேதா தனியார் பள்ளி ஒன்றில் தற்காலிக ஆசிரியையாக பணியாற்றி வந்தார்.

இந்நிலையில் சுந்தரராஜ் வீட்டில் தூக்குப்போட்டு இறந்ததாக சேலம் ஜலகண்டாபுரம் பொலிஸாருக்கு தகவல் வந்தது. இதையடுத்து பொலிஸார் சுந்தரராஜ் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சுந்தரராஜ் தற்கொலை செய்து கொண்டதாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து இருந்தனர். வழக்கம் போல் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த உடன் உடலை ஒப்படைத்துவிட்டு, அடுத்த பணிகளை மேற்கொள்ளலாம் என்று இருந்த பொலிஸாருக்கு பிரேத பரிசோதனை அறிக்கையில் வந்த தகவலை பார்த்து அதிர்ச்சி ஏற்பட்டது.

ஏனெனில் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படும் சுந்தர்ராஜின் கழுத்தில் காயங்கள் இருந்தன மேலும் அறிக்கையில் பல்வேறு முரண்பட்ட தகவல் இருந்தது. இதனால் சுந்தரராஜ் கொல்லப்பட்டிருக்கலாம் என்று பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து சுந்தரராஜ் மனைவி நிவேதாவை கடந்த 2 நாட்களுக்கு முன்பு பொலிஸார் விசாரணை வலையத்தில் கொண்டு வந்தனர். அப்போது அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்து வந்தார்.

ஒரு கட்டத்தில் பொலிஸார் கிடுக்கிப்பிடி விசாரணை செய்தனர். அப்போது தான் ஆசிரியை நிவேதா, அவருடைய கள்ளக்காதலன் தினேஷ் என்பவருடன் சேர்ந்து கொலை செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கொலைக்கு மூளையாக நிவேதாவின் தோழி வித்யா இருந்ததும் போலீஸ் விசாரணையில் அம்பலமானது.





உடனே பொலிஸார் சுந்தரராஜ் தற்கொலை வழக்கை கொலை வழக்காக மாற்றினார்கள். இந்த கொலை தொடர்பாக நிவேதா, அவருடைய கள்ளக்காதலன் தினேஷ், தோழி வித்யா ஆகிய 3 பேரையும் கைது செய்தார்கள். கைதான 3 பேரிடமும் விசாரணை நடத்திய பின்னர் அவர்கள் வாக்குமூலம் அளித்தனர்.அப்போது அவர்கள் கூறிய தகவலை பொலிஸார் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். பொலிஸார் கூறும் போது, சுந்தரராஜுக்கும், நிவேதாவுக்கும் கல்யாணம் ஆன பின்னர் குடும்பத்துடன் தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தில் குடியேறி இருக்கிறார்கள். 8 ஆண்டுகளாக அங்கு தான்இருந்துள்ளனர். இந்தநிலையில் சுந்தரராஜுக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. இதனால் சேலம் ஜலகண்டாபுரம் மலையம்பாளையத்துக்கு கடந்த 5 மாதத்துக்கு முன்புதான் வந்துள்ளனர். வேலையைவிட்டு வந்த சுந்தரராஜ் தறி ஓட்டும் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். தனது வயிற்றுவலிக்கு ஈரோட்டில் உள்ள ஒரு மருத்துவனையில் சென்று அடிக்கடி சிகிச்சை பெற்று வந்தார். இதனால் வருமானம் குறைந்ததால் நிவேதா, நானும் வேலைக்கு செல்கிறேன் என்று கூறி விட்டு அங்குள்ள தனியார் பள்ளியில் தற்காலிகமாக ஆசிரியர் பணியில் சேர்ந்திருக்கிறார்.

அப்போதுதான் தோழி வித்யா மூலம் தினேசுடன், நிவேதாவுக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த பழக்கம் நாளடைவில் அவர்களுக்கு இடையே கள்ளக்காதலாக மாறி உள்ளது. இந்நிலையில் தினேஷ், நிவேதா கள்ளக்காதல் சுந்தரராஜுக்கு தெரியவந்தது. அதன்பிறகு பள்ளிக்கு வேலைக்கு செல்ல வேண்டாம் என மனைவிக்கு தடை விதித்து கடுமையாக கண்டித்துள்ளார். இந்த பிரச்சினை குறித்து நிவேதா, தோழி வித்யாவிடம் கூறி இருக்கிறார். வித்யா, உன்னுடைய கணவரை கொன்று விடு. அப்போது தான் நிம்மதியாக வாழலாம் என்று கூறினாராம். இதையடுத்து சுந்தரராஜை தீர்த்துக்கட்ட நிவேதா முடிவு செய்தாராம். மகனை வீட்டின் ஒரு பகுதியில் தூங்க வைத்து விட்டு இன்னொரு பகுதியில் கணவரின் கொலை திட்டத்தை நிவேதா அரங்கேற்றி இருக்கிறாராம். அதன்படி உணவில் தூக்க மாத்திரை கலந்து கொடுத்து சுந்தரராஜை தூங்க வைத்துள்ளார். இதையடுத்து தினேசை வரவழைத்து சுந்தரராஜ் முகத்தை பிளாஸ்டிக் பையால் மூடி உள்ளனர். பின்னர் தலையணையால் அமுக்கி சினிமாவை மிஞ்சும் வகையில் கொலை செய்திருக்கிறார்களாம்.

கொலையை மறைக்க அவரது கழுத்தில் சேலையின் ஒரு முனையை கட்டி உள்ளனர். அதன் அருகிலேயே சேலையை கத்தரிக்கோலால் துண்டித்துள்ளனர். பின்னர் சேலையின் மீதி பாகத்தை மின்விசிறியில் கட்டி தொங்க விட்டுள்ளனர். அதன்பிறகு தினேஷ் வீட்டுக்கு சென்று இருக்கிறார்கள். மறுநாள் காலையில் கணவன் தற்கொலை செய்ததாக கதறி அழுது நாடகம் ஆடி உள்ளார். கழுத்தில் இருந்த காயத்தை பூவை போட்டு மறைத்துள்ளார் நிவேதா. ஆனால் பிரேத பரிசோதனை அறிக்கையில் தூக்க மாத்திரை முதல் கழுத்தில் காயம் வரை அனைத்தும் அம்பலமாகி மாட்டிக்கொண்டுள்ளார்கள். இதனிடையே சேலம் குகை பகுதியை சேர்ந்த நிவேதாவின் பள்ளி தோழியான வித்யா தான் இந்தகொலைக்கு மூளையாக செயல்பட்டது விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர் தான் நிவேதாவிற்கு சுந்தரராஜை எப்படி கொலை



செய்ய வேண்டும். அதனை மறைக்க என்ன செய்ய வேண்டும். உறவினர்கள், பொலிஸாரிடம் எப்படி நாடகமாட வேண்டும் என்ற விவரங்களை எல்லாம் சொல்லி கொடுத்தாராம்.

வித்யா ஜலகண்டாபுரத்தை சேர்ந்த செந்தில்குமாருடன் திருமணம் நடந்துள்ளது. பள்ளி தோழிகள் என்பதுடன் ஒரே பகுதிக்கு திருமணமாகி வந்ததால் அடிக்கடி சந்தித்தும் பேசி வந்துள்ளனர். வித்யா பட்டுப்புடவைகள் தயாரிக்கும் ஒரு நெசவு நிறுவனத்தில் வேலை செய்திருக்கிறார் அங்கு தினேசும் வேலை பார்த்து வந்துள்ளார். வித்யா மூலமாகத்தான் தினேஷ், நிவேதாவுக்கு அறிமுகம் ஆகி இருக்கிறார். அந்த வகையில் சுந்தர்ராஜை தீர்த்துக்கட்ட மூளையாக செயல்பட்டு திட்டம் போட்ட வித்யாவுடன் நிவோதா மற்றும் தினேஷ் உடன் சேர்ந்து கம்பி எண்ணுகிறார்.





வெள்ளவத்தை GIT பாலர் பாடசாலை மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு அதன் அதிபர் திருமதி ரூபி விநாயகமூர்த்தியின் தலைமையில்(29,30 ஆகிய இருதினங்களாக) இடம்பெற்றது. இக்கண்காட்சியில் பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கண்காட்சியைக் கண்டுகளித்ததுடன், ஜனனம் அறக்கட்டளையின் தலைவர் கல்வியியலாளர் கலாநிதி ஜனகனும் கண்காட்சியை பார்வையிட்டார்.






பல்லக்கெட்டுவ புனித ஜோசப் வாஸ் ஆலயத்தின் திருப்பணியாற்றும் அருட்பணி றொபட் ஜேக்கப், CMF எழுதிய "தழும்புகள்" நாவல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

யாழ் நெடுந்தீவை பிறப்பிடமாகக் கொண்ட இவர், கிளரீசியன் சபையில் மறை பணிப்பாளராக கடமையாற்றுகிறார். இவரின் மூன்றாவது படைப்பு இது.

வடக்கில் இடம்பெற்ற யுத்த கால அனுபவங்கள், கொரோனா காலத்து சம்பவங்களோடு, மலையக மண்ணில்இதன் கதா நாயகன் சந்திக்கும் விடயங்களை சிறப்பாக சிலாகிக்கும் நாவல் இது.


இதன் வெளியீட்டுவிழா ப/ பல்லக்கெட்டுவ தமிழ் மகா வித்தியாலயத்தில் அருட்பணி சதீஷ் சபரி முத்து அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையை க.லூக்காஸும், விமர்சன உரையை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் தமிழ்துறை விரிவுரையாளரான மார்கண்டு ரூபவதணன் நிகழ்த்தினார்.

கல்வி ஆலோசகர் மனோகரன், நீயுபர்க் தமிழ் மகா வித்தியாலய அதிபர் இராஜமாணிக்கம், பல்லக்கெட்டுவ தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி ரஞ்சனி இந்திரா உட்பட மேலும் பலர் விசேட உரைகள் நிகழ்த்தினர்.வளரும் கவிதாயினி செல்வி கவி. கண்ணம்மா நூலாசிரியரின் சமூப்பபணிகளை வாழ்த்தி கவிமழை பொழிந்தார்.

பல்லக்கெட்டுவ தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர்கள் நூலாசிரியரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

**தகவல்:**
**கோவுஸ்ஸ கே.ராம்ஜி உலகநாதன்**





கெக்கிராவை, நேகமத் தமிழ் ஆசிரியை ஸிஃபானியா, கணவர் பௌஸுல் சகிதம் கொழும்பில் மூத்த எழுத்தாளர் தமிழ்மணி மானா மக்கீனைச் சந்தித்து, "அந்திக்கரை" இலக்கண (மரபு) கவிதைத் தொகுப்பின் சிறப்புப் பிரதியை வழங்கி வாழ்த்து பெற்றார். படப்பிடிப்பு: எம். நஸார்.







புதிய அலை கலை வட்டத்தின் கலை, இலக்கிய பிரிவு ஏற்பாடு செய்த 'சமகாலத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் நேர்மறையான சிந்தனைகள் மற்றும் இலக்கு வைக்கப்படுதல்" தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்று கடந்த சனியன்று (29) கொழும்பு 13, எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையில் நடைபெற்றது. மேற்படி பாடசாலையின் அதிபர் ஸ்ரீ வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதாமேத்தா, தலைவர் சண்மு ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் வளவாளராக தனா பங்கேற்றிருந்தார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை புதிய அலை கலை வட்ட கலை, இலக்கியப் பிரிவின் தலைவர் சனாதனன் மேற்கொண்டிருந்தார்.




காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் எட்டாவது பௌர்ணமி கவியரங்கு மிகவும் சிறப்பாக நடைபெற்று முடிந்தது காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தினுடைய இம்மாத பௌர்ணமி கவியரங்கு. கவிமாமணி ரீ.எல் ஜவ்பர் கான் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வுகளுக்கு காத்தான் குடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலை முன்னாள் அதிபர் அல்ஹாஜ் கே.எம்.எம்.அஸீஸ் முன்னிலை அதிதியாக கலந்து கொண்டார். கலாசார அதிகாரி அஷ்ஷெய்க் ஜவாஹிர் பாலாஹி உட்பட பலர் கலந்து கொண்டனர். கவி அரங்கிற்கு கவி மேகம் கவி முரசு எம் எம் ஷாகிர் ஹுசைன் தலைமை வகித்தார். ஏ எல் எம் சபரி உசனார், ஜாபிர் அஜீரா, ஹலீல்தீன், காத்தான்குடி பாத்திமா ஏ எல் அப்துல் ரஹீம், மௌலவி இக்பால், கலைமதி, எம்ஏசி ரசாய்தீன், உஏம்.நிஷவ்ஸ் ஆகிய கவிஞர்கள் கவி மழை பொழிந்தனர். பல கவிஞர்கள் தேசிய சுகதாக்கள் தினத்தை ஒட்டியும் திறந்த தலைப்புகளிலும் கவிதை பாடினார்.மிகவும் சிறப்பாக குறித்த கவியரங்கு நடைபெற்று முடிந்தது. தலைமைக் கவிஞருக்கு கவி முரசு என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் கவிதை பாடிய கவிஞர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. அல்ஹிறா மகா வித்யாலய முதல்வர் கவிமேகம் ஏ எல் சப்ரி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.









நண்பர் 1 : என் பையனுக்கு ராஜான்னு பெயர் வெச்சது தப்பாப் போச்சு
நண்பர் 2 : ஏன் என்ன ஆச்சு ?
நண்பர் 1 : எப்பவும் (உடம்பில்) படையுடன் இருக்கான்



பையன் : அம்மா! எதிர் வீட்டு ஆன்டி பேர் என்னம்மா?
அம்மா : விமலா டா...
பையன் : அப்பாவுக்கு இது கூட தெரிய மாட்டேன்குதும்மா. அந்த ஆன்டிய "டார்லிங்"னு கூப்புடுறார்....



பஞ்சாயத்து தலைவர் : பத்தாயிரம் ஒரு மாத ஜெயில் தண்டனை இதுல எது வேனும் உனக்கு.
குற்றவாளி : ஹி.ஹி...பத்தாயிரமே போதும் சாமி எப்டியாச்சும் பொட்டிக்கடை வச்சாச்சியும் பொழச்சிக்குவேன்.

ஆசிரியர் : ஐந்து ரூபாயில் இரண்டு ரூபாய் போனால் எவ்வளவு??
மாணவன் : ஐந்து ரூபாயில் பெரிய ஒட்டைனு அர்த்தம் சார்.





ஜோன்ஸ் : பெண் பார்த்து வந்த பின் அவன் ஏன் விழுந்து விழுந்து சிரிக்கிறான்.
பீன்ஸ் : துன்பம் வரும் வேளையில் சிரிங்க என்று யாரோ சொன்னாங்களாம்.

# கவிஞராக இலக்கிய உலகில் நுழைந்த நஜ்முல் ஹுசைன்

## சிறுகதை ஆசிரியராக இன்று

ஒரு கவிஞராக இலக்கிய உலகில் அறிமுகமான என். நஜ்முல் ஹுசைன் இப்போது ஒரு சிறுகதை ஆசிரியராகவும் அறிமுகமாகின்றார். ஆம் அவர் அவ்வப்போது பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து "வேறாகா வேர்கள்" என்ற தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை நூல் ஒன்றை வெளியிடுகின்றார்.



ஸ்ரீ லங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வு கொழும்பு 10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, அல் ஹிதாயா கல்லூரியின் எம். சீ. பஹார்தீன் கேட்போர் கூடத்தில் நடைபெறுகிறது. மன்றத் தலைவர் கலா பூஷணம் தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்து கொள்கிறார். இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிக்க தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர் விசேட அதிதியாக கலந்து கொள்கிறார்.



நூலின் முதல் பிரதியை பிரபல தொழில் அதிபர் அல்ஹாஜ் டாக்டர் எம். சீ. பஹார்தீன் பெற்றுக் கொள்கிறார்.

மன்றச் செயலாளர் எம். எஸ். எம். ஜின்னா வரவேற்புரை நிகழ்த்த, விசேட அதிதி தே. செந்தில் வேலவர், இலக்கியச் செம்மல் சட்டத்தரணி ரஷீத் எம். இ ம்தியாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். கலைஞானச் சுடர் சுபாஷினி பிரணவன் கவி வாழ்த்து வழங்குவார். தினகரன் வாரமஞ்சரி கவிதைப் பூங்காவின் முன்னாள் பொறுப்பாசிரியர் கவிஞர் ரஷீத் எம். றியாழ் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்கிறார்.



1967ஆம் ஆண்டளவில் எழுத்துலகில் பிரவேசித்தவர் என். நஜ்முல் ஹுசைன். தனது நண்பனான ஜயதிஸ்ஸ பெரேராவுடன் இணைந்து சுஜாதா என்ற தமிழ் சிங்கள கையெழுத்து பத்திரிகையின் தமிழ்ப் பகுதியின் பொறுப்பாசிரியராக இருந்தவர். அவ்வப்போது அக்காலத்தில் வெளிவந்த கையெழுத்துப் பத்திரிகைகளில் பல ஆக்கங்களை எழுதிக் கொண்டு வந்தார். குறிப்பாக அவற்றிலே பல சிறுகதைகளையும் அவர் எழுதியிருக்கின்றார். அவ்வாறு அவர் எழுதிக் கொண்டு வந்தாலும் கூட தன்னை ஒரு சிறுகதை எழுத்தாளராக அவர் நினைத்துக் கொள்ளவில்லை. அத்துடன் வானொலியிலும் குறிப்பாக வானொலி முஸ்லிம் சேவையில் "செவ்வாய்க்கிழமை" என்ற அவரது சிறுகதை முதலில் ஒலிபரப்பானது. அதன் பின்னர் அவரது பல சிறுகதைகள் வானொலியில் ஒலிபரப்பாகி இருக்கின்றன.

1968 ல் தென்னிந்திய குமுதம் இதழ் இவரது முதல் ஆக்கத்திற்கு இடமளித்துள்ளது. அவர் விளையாட்டாய் எழுதியதை, இது குமுதத்திற்குப் பொருத்தமானது என்று சொல்லியதுடன் நிற்காமல் அதனை அவரே கொண்டு போய் தபாலிலிட்டிருக்கிறார். அவர்தான் மறைந்த அனீஸ் அஸ்ரப். மிகச் சிறுவயதிலேயே நஜ்முல் ஹுசைனை இனங்கண்டு அவரை எழுதத் தூண்டியவரும் இவரே. கொழும்பு பீர் சாஹிபு வீதியிலே வாழ்ந்த நஜ்முல் ஹுசைன் பாடசாலையின் பின்னர் அனீஸ் அஸ்ரப்பின் தந்தையான காலஞ்சென்ற டாக்டர் ஏ. ஆர். எம். மொஹிதீனுடைய டிஸ்பென்சரியிலேயே கழிப்பார். குமுதம் இதழில் இவரது ஆக்கம் வெளிவந்தது இவருக்கு பெரும் உற்சாகத்தைக் கொடுத்தது.

அந்த வேளையில் இவரது கவனம் கவிதையின் பக்கம் திரும்பியது. அதிகமான கவிதைகளை எழுதினார். அவை பற்பல பத்திரிகைகள் சஞ்சிகைகளில் பிரசுரமாகின.

அதேவேளை இலங்கை வானொலியின் பல தமிழ் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கலந்து கொண்டார். பிரதிகளுக்கு குரல் கொடுப்பவராக முதலில் கலந்து கொண்டாலும் பின்னர் ஆக்கங்களும் எழுதினார். மாணவர் மன்றம், இஸ்லாமிய சமயப் பாடசாலை, நூருல் இஸ்லாம், இளைஞர் மன்றம், அகல் விளக்கு, இளைஞர் உலகம், மருத மலர், செவ்வாய் மலர் போன்றவை அவர் பங்கெடுத்த நிகழ்ச்சிகளில் சிலவாகும. பின்னர் கவிதைகளின்பால் இவருக்குள்ள ஈடுபாட்டை அவதானித்து நண்பர் எம். எஸ். எம். ஜின்னா, இவருக்கு முஸ்லிம் சேவை கவியரங்கில் கவிதைப் பாடும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்து கவியரங்கிற்கான பல வாய்ப்புகள் இவரைத் தேடி வந்தன. அப்போது தயாரிப்பாளர்களாக இருந்த மறைந்த எம். எம். இர்பான், ஆஸாத் மௌலானா, எம். எச். எம். ஹாரிஸ் போன்றோர் பெரிதும் துணை நின்றனர். ஹாபிஸ் எஸ். எம். ஹனீபா, அஹமத் முனவ்வர் போன்றவர்களும் அவருக்கு உற்சாகமூட்டி பல நிகழ்ச்சிகளை வழங்கினர். முதன் முதலாக வானொலி கவியரங்கொன்றினைத் தலைமையேற்று நடாத்தும் வாயப்பினை அப்போதைய தயாரிப்பாளர் எம். இஸட். அஹமத் முனவ்வர் வழங்கினார். வானொலி முஸ்லிம் சேவையில் "இளைஞர் இதயம்" நிகழ்ச்சியினையும் இவர் நடாத்தியுள்ளார். தற்போதைய முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் எம். ஜே. பாத்திமா றினூஸியாவும்

(7 ஆம் பக்கம் பார்க்க)



(6 ஆம் பக்கத் தொடர்)

தற்போது இவரது இலக்கிய முயற்சிகளுக்கான வாய்ப்பினை வழங்கி வருகின்றார். தயாரிப்பாளர் ஏ. எம். முஹம்மத் ரலீம் இவரது பல நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குகிறார்.

அது போன்றே ரூபவாஹினியின் முஸ்லிம் நிகழ்ச்சிப் பணிப்பாளராக இருந்த மறைந்த ரஷீத் எம். ஹபீல் தொலைக்காட்சியில் முதல் வாய்ப்பினை வழங்கினார். தொடர்ந்து தற்போதைய பணிப்பாளர் எம். கே. எம். யூனுஸ் கவிதைப் பாடுவதற்கும் கவியரங்குகளில் பங்குபற்றுவதற்கும், அது போன்றே இஸ்லாமிய கீதங்கள் இயற்றுவதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்கி வருகிறார். தயாரிப்பாளர்கள் முபாரக் மொஹிதீன், மபாஹிர் மஸூர் மௌலானா, அஸாரியா பேகம் ஆகியோருடன் மற்றைய தொலைக்காட்சிகளில் ஷியாஉல் ஹசன், பொத்துவில் அஸ்மின், ஏ. எம். அஸ்கர், கலைநிலா உவைஸ் ஷெரீப் போன்றோர் அவருக்கு உறுதுணையாக நின்றமையை நன்றியுடன் நினைவு கூர்கிறார்.

இலங்கை தமிழ்க் கவிஞர்களின் தேசிய அமைப்பாக விளங்கும் வலம்புரி கவிதா வட்டம் (வகவம்) எனும் அமைப்புக்கு தலைவராய் நின்று கவிஞர்களுக்கு களமமைத்துக் கொடுக்கிறார்.

1992 ல் பனித்தீ எனும் கவிதைத் தொகுதியினையும், 2018 ல் "இனிவரும் நாட்களெல்லாம்", "நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக்கவிதைகள்" (அவரது துணைவியார் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் தொகுத்தது) ஆகிய கவிதை நூல்களை வெளியிட்டார்.








பாடல் எழுதும் துறையிலும் இவர் கால் பதித்தார். மறைந்த இசையமைப்பாளர் எம். எஸ். செல்வராஜா முதல் வாய்ப்பை வழங்கினார். தொடர்ந்து கே. எம். சவாஹிர் மாஸ்டர், கலைக்கமல், அமீர்கான், பஸால் ஜின்னாஹ் போன்றோர் சந்தர்ப்பங்களை வழங்கினர். பிரபல பாடகி நூர்ஜஹான் மர்சூக்கின் "அமல் விளக்கேற்றி", பிரபல பாடகர் கலைக்கமலின் "மண் வாசனையின் மகரந்தப் பூக்கள்" ஆகிய இறுவட்டுகளில் இவர் எழுதிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

கொழும்பு சாஹிரா கல்லூரியின் தமிழ்த் தின விழா கவியரங்கில் கவிக்கோ அப்துல் ரகுமான் முன்னிலையில் கவிதை பாடியதோடு, 2011 ல் மலேசியாவில் நடந்த உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டிலும் கவிக்கோவின் தலைமையில் கவிதை பாடியுள்ளார். தனது தமிழக விஜயத்தின் போதும் பல பிரபலங்கள் முன்னிலையில் மேடையில் கவிதை பாடியுள்ளார்.

சென்ற வருடம் கத்தார் நாட்டிற்குச் சென்றிருந்த போது கத்தார்ஸ்கை தமிழ் பணிப்பாளர் எம். ஜே. பாஸித், முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி ஆகியோரினதும் தமிழகத்தைச் சேர்ந்த இலக்கிய அமைப்புகளினதும் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச கவியரங்கைத் தலைமையேற்று நடாத்தினார். இதில் இலங்கைக் கவிஞர்களோடு தமிழக கவிஞர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


கொழும்பு கம்பன் கழக மேடையிலும் உரையாற்றியுள்ளார். ஆரம்பத்தில் இவரிடம் இருந்த சிறுகதை எழுதும் ஆற்றல் மீண்டும் இவரை சிறுகதைகளை எழுதத் தூண்டியது. இவரது இந்த ஆற்றலுக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், அருள் சத்தியநாதன், ஞானம் ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன், ஞாயிறு தினக்குரல் பாரதி இராசநாயகம், விடிவெள்ளிப் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எம். பீ. எம். பைரூஸ், எம். சீ. நஜிமுதீன், அல் ஹஸனாத், எங்கள் தேசம் இர்ஷாத் இமாம்தீன், தினகரன் செந்தூரம் மறைந்த பதியுஸ் ஸமான், தமிழ் மிரர் முஸ்டீன், சிறுகதை மஞ்சரி மு. தயாளன், படிகள் எம். வஸீம் அக்ரம் ஆகியோர் கரம் கொடுத்தனர்.

6 ந் திகதி வெளியிடப்படும் "வேறாகா வேர்கள்" சிறுகதைத் தொகுதி இவற்றில் இடம்பெற்ற சிறுகதைகளே.

இந்நூல், சிறுவயதிலிருந்து அவருடன் வேறாகா வேர்களாக நிற்கும் அவரின் நண்பர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. முஹம்மத் கே. மொஹிதீன், எம். ரி. எம். சரூக், எம். எஸ். எம். ஜின்னா, அலி அக்பர், பீ. நிலாமுதீன், எம். ரபாய்தீன், முன்ஸிர் ஹுசைன், நயீம் அஸ்ரப், அமீர் ஹம்ஸா (ஹாஜியார்) எம். பீ. எம். சித்தீக், ஏ. ஆர். எம். உமர்தீன் (இர்ஷாத் கமால்தீன்), எம். ஏ. எம். தமீர், முஹம்மத் றஸீன், கே. எம்.எம். நசீர் போன்ற பல நண்பர்களை தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தனது சிறுகதைகளை வாசித்து மிகவும் உற்சாகமூட்டிய மறைந்த காவ்யாபிமானி கலைவாதி கலீல், அதுபோன்றே இன்றும் தட்டிக் கொடுத்து வருகின்ற சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர் கனி, கவிஞர் மௌலவி காத்தான்குடி பௌஸ் ஆகியோரையும் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளார். தமிழ்த் தென்றல் அலி அக்பரை தலைவராகவும், பாரம்பரியம் புகழ் எம். எஸ். எம். ஜின்னா செயலாளராகவும் செயலாற்றும் ஸ்ரீ லங்கா இஸ்லாமிய கலை இலக்கிய மன்றமே, ஏற்கனவே இவரது கவிதைத் தொகுதிகளை வெளியிட்டது போன்று இந்தச் சிறுகதைத் தொகுதியையும் வெளியிடுகிறது. கவிஞராக இருந்து இப்போது சிறுகதை நூலாசிரியராக பரிணாமம் பெற்று இன்று "வேறாகா வேர்கள்" எனும் சிறுகதைத் தொகுதியை வெளியிடும் என். நஜ்முல் ஹுசைனை நாமும் வாழ்த்தி மகிழ்கிறோம்.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



# வெற்றி நடை போட்ட வலம்புரி கவிதா வட்டத்தின் 90 ஆவது கவியரங்கு



வலம்புரி கவிதா வட்டத்தின் 90 ஆவது கவியரங்கு 01/08/2023 அன்று கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது. வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்தினார். கவிஞர் தி. ஸ்ரீதரன் தலைமையில் கவியரங்கு நடைபெற்றது. வரவேற்புரையை செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்த்த பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார்.

எம்மை விட்டு மறைந்த கவிஞர் எம். பிரேம்ராஜின் சகோதரி ராஜசேகர் புஷ்பராணி, காலஞ்சென்ற வகவ அபிமானி எஸ். தில்லைராஜனின் தாயார், பிரபல கவிஞர் கிண்ணியா அப்துல் கஹ்ஹார் ஆகியோருக்காக பிரார்த்தனைப் புரியப்பட்டது.

கவிஞர் தி. ஸ்ரீதரனின் தலைமையில் சிறப்பாக நடந்த கவியரங்கில் கவிஞர்கள் மினுவங்கொட ஏ. சிவகுமார், அநுராதபுரம் நேகமஷிபானியா பௌஸுல், பர்ஹாத் சித்தீக், எஹலியகொட முஸ்னி முர்ஷித், சிறுமி இளங்கோ கலைநிலா, லைலா அக்ஷியா, நித்திலன் ராஜா, வெலிப்பன்னை அத்தாஸ், தாமரைச் செல்வி, கவிஞர் திலகம் எம்.பிரேம்ராஜ், அப்துல் அஸீஸ், அகீலா சிஃபர், எம்.யூ.கமர்ஜான் பீபி,ஏ.கே. இளங்கோ, இரா சிவராசா, இளநெஞ்சன் முர்ஷிதீன், ஆர். தங்கமணி, சட்டத்தரணி ரஷீத்.எம்.இம்தியாஸ், வாழைத்தோட்டம் எம். வஸீர், சிந்தனைப் பிரியன் முஸம்மில், எஸ். தனபாலன் ஆகியோர் கவிதை பாடினர். கவிஞர் இளங்கோவின் மகளான சின்னஞ் சிறுமி இ.கலைநிலா பெருங்கவிஞர்களுக்கு முன்னால் தைரியமாக கவிதைப் பாடி அனைவரினதும் ஒட்டு மொத்தப் பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டார். கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜும், தாமரைச்செல்வியும் ஏட்டிக்குப் போட்டியாக மேடையில் ஒன்றாக நின்று கவிதைப் பாடி கவியரங்கிற்கு சுவை சேர்த்தனர். பாரதியாரின் சில கவிதைகளை சிங்களத்தில் மொழி பெயர்த்து கவிஞர் அப்துல் அஸீஸும் சபையின் கவனத்தை ஈர்த்தார். ஆற்றொழுக்கான கவிதைகளால் கவியரங்கத் தலைமையினை நடாத்தி கவியரங்கத் தலைவர் கவிஞர் தி. ஸ்ரீதரனும் வகவத்தின் பாராட்டை உரித்தாக்கிக் கொண்டார்.

கலா விஸ்வநாதன், தமிழ்த் தென்றல் அலி அக்பர், எம். எஸ். எம். ஜின்னா, மௌலவி பீ. எம்.ஜஸீல், நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், மஸீதா அன்சார், பீ.அமல் பாண்டியன், மலாய்கவி டிவாங்ஸோ நிஸாம்டீன், இ. கவிதா போன்றோர் சபையை அலங்கரித்தனர்.


(படங்கள் முஹம்மத் நசார்)





# மீண்டும் அஜித்குமார் ஜோடியாக தமன்னா?

அஜித் குமார் நடிப்பில் மகிழ் இயக்கத்தில் இயக்கத்தில், லைக்கா நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாகயிருக்கும் 'விடாமுயற்சி' படத்தின் படப்பிடிப்பு அடுத்த மாதம் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அஜித் தற்போது வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டு சென்னை திரும்பி விட்டதால் அவர் விரைவில் படப்பிடிப்பில் கலந்து கொள்வார் என்றும் கூறப்படுகிறது. இந்த நிலையில் இந்த படத்தில் அஜித் ஜோடியாக த்ரிஷா நடிப்பார் என்று கூறப்பட்ட நிலையில் தற்போது அதில் மாற்றம் ஏற்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. அஜித் ஜோடியாக 'விடாமுயற்சி' திரைப்படத்தில் தமன்னாவை நடிக்க வைக்க பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் விரைவில் இது குறித்த உறுதி செய்யப்பட்ட தகவல் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது. கடந்த 2014 ஆம் ஆண்டு அஜித் நடிப்பில் வெளியான 'வீரம்' என்ற திரைப்படத்தில் நாயகியாக நடித்த தமன்னா 9 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் அஜித் உடன் நடிக்க இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் ரஜினியின் 'ஜெயிலர்' திரைப்படத்தில் தமன்னாவின் 'காவாலா' என்ற பாடல் சூப்பர் ஹிட் ஆகியதே, 'விடாமுயற்சி' படத்தில் அவருக்கு வாய்ப்பு கிடைக்க காரணம் என்றும் கூறப்படுகிறது.



# கைபிடித்தபடி ஊர்சுற்றும் நடிகை தமன்னா-விஜய் வர்மா ஜோடி

பிரபல நடிகை தமன்னா மற்றும் பாலிவுட் நடிகர் விஜய் வர்மா இருவரும் காதலித்து வருகின்றனர் என்பதும் இவர்கள் அவ்வபோது ஒன்றாக ஊர் சுற்றி வருகின்றனர் என்பதும் ரசிகர்கள் அறிந்ததுதான். இந்நிலையில் மும்பை சாலைகளில் இருவரும் ஒன்றாக வலம்வரும் சில புகைப்படங்கள் தற்போது இணையத்தில் கவனம் பெற்று வருகின்றன.

தமிழ், தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக இருந்துவரும் நடிகை தமன்னா தற்போது பாலிவுட்டிலும் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில் 'லஸ்ட் ஸ்டோரி 2' ஆந்தலாஜி திரைப்படத்தில் நடிகர் விஜய் வர்மாவிற்கு ஜோடியாக தமன்னா நடித்திருந்த நிலையில் இந்த ஜோடிகள் குறித்த தகவல்கள் தற்போது ஊடகங்களில் வைரலாகி வருகின்றன. தெலுங்கு சினிமாவில் அறிமுகமான நடிகை தமன்னா கடந்த 18 வருடங்களுக்கு மேலாக தமிழ், தெலுங்கு, இந்தி மொழி சினிமாக்களில் முன்னணி நடிகையாக இருந்து வருகிறார். இந்நிலையில் படுக்கை அறை காட்சிகளில் எப்போதும் தலைக்காட்டாத அவர் சமீபத்தில் படுக்கை அறை காட்சிகள் மற்றும் முத்தக் காட்சிகளிலும் சலிக்காமல் நடித்து வருகிறார். இதனால் ரசிகர்கள் மத்தியில் படு ஆச்சர்யத்தை ஏற்படுத்திய அவர் நடிகர் விஜய் வர்மாவுடன் காதலில் இருப்பதையும் ஒப்புக் கொண்டுள்ளார். இந்த ஆண்டு புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது நடிகை தமன்னாவும் நடிகர் விஜய் வர்மாவும் ஒன்றாக கோவாவில் தங்களுடைய நேரத்தை செலவிட்டு இருந்தனர். இது குறித்த புகைப்படங்கள் சோஷியல் மிடியாவில் வைரலான நிலையில் இதைத் தொடர்ந்து மும்பை உணவகத்தில் இருவரும் ஒன்றாக சந்தித்துக் கொண்ட புகைப்படங்களும் இணையத்தில் பேசு பொருளாகின. இதைத் தொடர்ந்து இருவருமே தங்களது காதலை ஒப்புக் கொண்டனர். 'லஸ்ட் ஸ்டோரி 2' திரைப்படத்திற்கு பிறகு முதல் முறையாக நடிகை தமன்னா மற்றும் நடிகர் விஜய் வர்மா இருவரும் மும்பையில் ஒன்றாக காட்சி அளித்துள்ளனர். அப்போது எளிமையான வெள்ளை டிஷர்ட் மற்றும் கருப்பு டெனிம் ஜீன்ஸ் உடையில் நடிகை தமன்னா இருந்தார். கூடவே ஸ்வெர்ஷர்ட் மற்றும் டெனிம் ஜீன்ஸ் அணிந்திருந்த நடிகர் விஜய் வர்மா இருவரும் கூட்டத்தைப் பார்த்தபடியே சிரித்துக் கொண்டு கையைப் பிடித்தபடி நடந்து சென்றுள்ளனர். இந்தப் புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

நெல்சன் திலீபன் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி இருக்கும் 'ஜெயிலர்' திரைப்படத்தில் நடிகை தமன்னா நடித்துள்ளார். இதைத்தவிர அவர் நிகில் அத்வானி இயக்கத்தில் 'வேதா' திரைப்படத்தில் இணைந்துள்ளார். இதேபோல நடிகர் விஜய் வர்மா சுஜோய் கோஷ் இயக்கத்தில் திரில்லர் திரைப்படம் ஒன்றில் இ ை ணந் து நடித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.





# நயன்தாராவின் குழந்தைகளுக்கு நான்தான் மாமன்

சந்தானம்

காமெடியனாக பல பாராட்டுகளை பெற்ற நிலையில், ஹீரோவாகவும் நடித்துக் காட்ட முடியும் என்று பல படங்களில் நடித்து வருகிறார் சந்தானம். அதில் எதிர்பார்த்த அளவுக்கு இவரால் வெற்றியை பெற முடியவில்லை என்றாலும், தொடர்ந்து ஹீரோ படலத்தை கைவிடாமல் நடித்துக் கொண்டே இருக்கிறார். அந்த வகையில் சமீபத்தில் இவருடைய நடிப்பில் வெளிவந்த "டிடி ரிட்டன்ஸ்" எதிர்பார்த்த அளவிற்கு வரவேற்பு கிடைத்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து வடக்குப்பட்டி ராமசாமி படப்பிடிப்பு போய்க்கொண்டிருக்கிறது. மேலும் சில சூழ்நிலை காரணமாக மறுபடியும் காமெடியனாக பல படங்களில் நடிக்க போவதாக தகவல் வெளியாகி உள்ளது. அடுத்ததாக தற்போது இவர் அளித்த பேட்டியில் இவருடைய வருங்கால படங்களை பற்றியும், சில விஷயங்களையும் பேசி இருக்கிறார். அதில் இவருக்கும் நயன்தாராவுக்கும் உள்ள உறவு முறையே பற்றி கூறி இருக்கிறார். அதாவது சிம்பு நடிப்பில் வெளிவந்த வல்லவன் படத்தில் நயன்தாராவுக்கும் இவருக்கும் அண்ணன் தங்கை போல் உறவு ஏற்பட்டிருக்கிறது. அதிலிருந்து நயன்தாராவுக்கு ஒரு அண்ணனாக என்னை கருதி பல விஷயங்களை மனதில் வைத்திருக்கிறேன். அது என்னுடைய ஆசை என்றும் கூறியிருக்கிறார். அதாவது நயன்தாரா சினிமாவில் என்னதான் பிசியாக இருந்தாலும் கல்யாண வாழ்க்கைக்கு சென்று ரெண்டு குழந்தைக்கு வாடகை தாய் மூலம் தாயாகி இருக்கிறார். அவ்வப்போது இவர்களுடைய குழந்தைகளின் புகைப்படத்தை இணையத்தில் வெளியிட்டு இவர்களின் மகிழ்ச்சியான தருணத்தை பகிர்ந்து வருகிறார்கள்.

அந்த வகையில் சந்தானம் கூறியது, நயன்தாராவின் இரண்டு குழந்தைகளுக்கும் மாமன் என்கிற முறையில் என் மடியில் வைத்து காது குத்த வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். அத்துடன் தங்கைக்கு தேவையான அனைத்து சீர் வகைகளையும் செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். அப்பொழுதுதான் என்னுடைய உறவு இன்னும் நீடிக்கும் என்று கூறியிருக்கிறார். நயன்தாராவுக்கு இப்படி ஒரு அண்ணன் உறவு சந்தானத்திடம் இருக்கிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. மேலும் சந்தானத்தின் ஆசையும் எதிர்பார்ப்பையும், பத்திரிகையாளர்கள் முன்னாடி ஓப்பனாக சொல்லியிருக்கிறார். இது பத்திரிகையாளர்களுக்கு சொன்ன மாதிரி தெரியவில்லை இவருடைய ஆசையை நயன்தாராவுக்கு தெரியப்படுத்தியது போல் இருக்கிறது. எது எப்படியோ கண்டிப்பாக நயன்தாரா காதுக்கு இந்த செய்தி போகும். மாமன் முறையில் சந்தானத்தை வைத்து அழகு பார்க்க போகிறாரா என்பதை பார்க்கலாம்.



# பெண் குழந்தைகளை பாதுகாக்க வேண்டும்

சமந்தா

ரசிகர்கள் தங்கள் அபிமான நடிகர், நடிகைகள் சோகமான காட்சிகளில் நடிப்பதை பார்த்து கண்ணீர் வடிப்பது உண்டு. நடிகை சமந்தாவும் தன்னை சில காட்சிகள் அழ வைத்ததாக தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் கூறும்போது, "எத்தனையோ அப்பாவி பெண் குழந்தைகள் விருப்பம் இல்லாமல் விபசார கூடங்களில் ஜீவன் இல்லாத வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த காட்சிகளை ஒரு படத்தில் பார்த்தபோது அடிவயிற்றில் இருந்து துக்கம் பொங்கி எழுந்து கண்களில் கண்ணீராக வெளிப்பட்டது. அந்த நிலைமையில் இருக்கும் பெண் குழந்தைகளின் வாழ்க்கை எவ்வளவு கொடூரமாக இருக்கும் என்பதும் புரிந்தது. நீண்ட நாட்களாக அந்த காட்சிகளே நினைவுக்கு வந்து தூக்கம் இல்லாமல் தவித்தேன். பெண் குழந்தைகளை மிகவும் ஜாக்கிரதையாக பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியம். கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்தாலும் அவர்களின் வாழ்க்கை சின்னா பின்னமாகி விடும் என்பது புரிந்தது'' என்றார்.





# ரூ. 500 கோடி பட்ஜெட்டாக இருந்தாலும் நடிக்க மாட்டேன்

மாளவிகா

ஏறக்குறைய அனைத்து தென்னிந்திய மொழி சினிமாக்களிலும் நடித்து பிரபலமாக இருந்துவரும் நடிகை மாளவிகா மோகனன் தனது 10 வருட சினிமா வாழ்க்கைக்குப் பிறகு முக்கிய முடிவு ஒன்றை அறிவித்து இருக்கிறார். அந்தத் தகவல் தற்போது ரசிகர்களிடையே வியப்பை ஏற்படுத்தி உள்ளது. பிரபல ஒளிப்பதிவாளர் கே.யு. மோகனின் மகளான நடிகை மாளவிகா மோகனன் மலையாள சினிமாவில் நடிகர் துல்கர் சல்மான் நடிப்பில் வெளியான 'பட்டம் போல' திரைப்படத்தில் நடித்து 2013 இல் சினிமாவிற்கு அறிமுகமானார். தொடர்ந்து பல மலையாளம் மற்றும் தெலுங்கு திரைப்படங்களில் நடித்துவந்த அவர் இயக்குநர் கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'பேட்ட' திரைப்படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களிடையே பெரிய வரவேற்பை பெற்றார்.

மேலும் நடிகர் விஜய் நடிப்பில் வெளியான 'மாஸ்டர்' திரைப்படத்திலும் அதேபோல நடிகர் தனுஷ் நடிப்பில் வெளியான 'மாறன்' திரைப்படத்திலும் நடித்திருந்தார். இந்நிலையில் தற்போது இயக்குநர் பா.ரஞ்சித் இயக்கத்தில் உருவாகி வரும் 'தங்கலான்' திரைப்படத்தில் நடித்துவரும் நிலையில் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு உள்ளார். அதாவது சினிமாவிற்கு வந்து 10 வருடங்கள் ஆகிவிட்டது. இனிமேல் எனது கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் படங்களில் மட்டுமே நடிப்பது என முடிவு செய்துள்ளேன். ரூ.500 கோடி வசூலிக்க கூடிய படமாக இருந்தாலும் எனது கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் இல்லை என்றால் அதில் நான் நடிக்க மாட்டேன். படம் ஓடி வசூலில் சாதனை படைத்தாலும் முக்கியத்துவம் இல்லாத கதாபாத்திரமாக இருந்தால் யாரும் நினைவில் வைத்துக் கொள்ள மாட்டார்கள் அதனால்தான் இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று தெரிவித்துள்ளார். மேலும் பேசிய அவர் சிறிய வயதில் இருந்தே நடிகை ஷோபனா, கஜோல், மாதுரி தீட்சித் போன்றோர்களை எனக்குப் பிடிக்கும். இவர்கள் ரசிகர்களின் மனதில் நிற்கும் அளவிற்கு கதாபாத்திரங்களை தேர்வு செய்து நடித்தனர். அதேபோல நானும் நல்ல படங்களைக் கொடுக்கும் திறமையான இயக்குநர்களின் படங்களில் நடிக்க ஆசைப்படுகிறேன் என்று தெரிவித்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி என்று பல மொழிகளில் நடித்து பிசியான நடிகையாக இருந்துவரும் நடிகை மாளவிகா நடிப்பை தவிர ஒரு பைக் பிரியர் என்பதும் அவர் ஃபார்முலா ஒன் பைக் டிரைவிங்கில் ஈடுபட்டுள்ளார் என்பதும் மேலும் போட்டோகிராபியில் ஆர்வம் கொண்டவர் என்பதும் ரசிகர்கள் அறிந்ததுதான். இந்நிலையில் அவர் பெரிய பட்ஜெட் திரைப்படமாக இருந்தாலும் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் இல்லை என்றால் அந்தப் படத்தில் நடிக்க மாட்டேன் என்று தெரிவித்து இருப்பது ரசிகர்களிடையே ஆச்சர்யத்தையும் வியப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது.



# சூப்பர் ஸ்டார் பட்டத்திற்கு ஆசைப்படும் இளம் ஹீரோ...


சூப்பர் ஸ்டார் நடிப்பில் 2005 ஆம் ஆண்டு மிகப்பெரிய வசூல் சாதனையை ஏற்படுத்தி வெளிவந்த சந்திரமுகி படத்திற்கு ஏகபோக வரவேற்பு கிடைத்தது. இதனை தொடர்ந்து இரண்டாம் பாகத்தை ரசிகர்கள் அனைவரும் ஆவலாக எதிர்பார்த்தனர். அதிலும் வேட்டையனாக வந்த ரஜினியின் அவதாரத்தை மறுபடியும் பார்ப்பதற்கு ரசிகர்கள் காத்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் இந்த இரண்டாம் பாகத்தில் ரஜினிக்கு பதிலாக லாரன்ஸ் நடித்திருக்கிறார். முக்கியமாக ரஜினியின் முழு சம்மதத்தையும், ஆசிர்வாதத்தையும் பெற்ற பிறகு லாரன்ஸ் நடிக்க ஆரம்பித்தார். இதில் இவருக்கு ஜோடியாக பாலிவுட் நடிகை கங்கனா ராணவத் நடித்திருக்கிறார். மேலும் காமெடிக்கு வடிவேலு மற்றும் ராதிகா சரத்குமார் போன்ற பல பிரபலங்கள் நடித்துள்ளார்கள்.

இப்படத்தை மிகப் பிரமாண்டமான முறையில் லைக்கா தயாரித்து, பி வாசு இயக்கி உள்ளார். தற்போது அனைவரும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த இப்படத்தின் ரிலீஸ் திகதியை அதிகாரபூர்வ அறிவிப்புடன் இணையத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். அதாவது ரிலீஸ் ஆகும் படங்கள் எப்பொழுதுமே லீவு தினத்தன்று வெளியிட்டால் குடும்பமாய் பார்த்து ரசிப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அதனால் பெருத்த லாபமும் அடைய வாய்ப்புகள் இருக்கிறது. அந்த வகையில் சந்திரமுகி 2 செப்டம்பர் 18ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி அன்று திரையரங்குகளில் வர இருக்கிறது. மேலும் தற்போது அனல் பறக்கும் வேட்டையனின் போஸ்டரை வெளியிட்டு இருக்கிறார்கள். இப்போஸ்டரில் லாரன்ஸை பார்க்கும் பொழுது, சும்மா அதிருதில்ல என்று சொல்வதற்கு ஏற்ப கச்சிதமாக இருக்கிறது. ஏற்கனவே லாரன்ஸ்க்கு இந்த மாதிரியான படங்கள் என்றால் சொல்லவே வேண்டாம் கைவந்த கலை.

எப்படியும் வெற்றியை பார்க்காமல் விடமாட்டார். அதுவும் பி வாசு இயக்கத்தில் ஏற்கனவே வெற்றி பெற்ற ரஜினி படம், இன்னும் சொல்லவா செய்ய வேண்டும். இப்படத்தின் மூலம் லாரன்ஸுக்கு மிகப்பெரிய வரவேற்பு கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்துடன் இப்படம் தமிழ், ஹிந்தி, தெலுங்கு, மலையாளம், கன்னடா போன்ற ஐந்து மொழிகளில் வெளிவர இருக்கிறது மேலும் லாரன்ஸின் வேட்டையின் நடிப்பை பார்ப்பதற்காகவே ரசிகர்கள் ஆவலாக காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படம் கொலை நடுங்க வைக்கும் அளவிற்கு மரண பயத்தை கொடுக்கப் போகிறது என்று இப்படத்தை பார்த்த பல பிரபலங்களும் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் இந்த வருடம் சந்திரமுகி 2 சூப்பர் ஹிட் படமாக இருக்கப் போகிறது.



# மாமியார் மருமகள் உறவில் விரிசல் ஏன்?



(கடந்த வார தொடர்...)

தாயாக இருக்கும் பெண்கள் மாமியாராக மாறும் போது ஏதோ பதவி உயர்வு கிடைத்தது போல மாறிவிடுகின்றனர்.

மாமியார் என்பது உறவு. அதிகாரம் செலுத்திட கிடைத்த உரிமை அல்ல. தான் வளர்ந்த சூழல் உறவுகள் குடும்பம் எல்லாவற்றையும் விட்டு விட்டு கணவனையும் அவனின் குடும்பத்தினரையும் நம்பி வரும் பெண்ணிடம் அன்பு செலுத்தாவிட்டால் பரவாயில்லை. குறை கண்டுபிடிப்பது குதர்க்கம் பேசுவதும் அவளின் குடும்பத்தை பற்றி ஏசுவது என்பனவற்றை தவிர்த்தாலே பல பிரச்சினைகள் வாராமலிருக்க வழி வகுக்கும் அத்துடன் அவளின் சின்ன சின்ன தவறுகளை பெரிது படுத்தாமல் கொஞ்சம் சொல்லிக்கொடுத்து நகர உறவு சுமுகமாக தொடரும் .

உங்கள் மகனை கடைசி காலம் வரை காக்க வந்திருக்கும் மருமகள் என்கிற அந்தப் பெண்ணுக்கு உங்கள் வீட்டு பழக்க வழக்கங்கள் புதிதாய் இருக்கும்.. பொறுமையாய் கற்றுக்கொடுங்கள். அவளிடம் உங்கள் வீட்டில் இல்லாத சில புதிய விடயங்கள் இருக்கும். ஏற்றுக் கொள்ள முயலுங்கள்.

மாமியார் என்பவர் ஒரு வீட்டுக்கு `மருமகளாய் வந்தவரே. அவர் புகுந்தவீட்டில் மருமகளாக நுழைந்த போது ஏற்பட்ட சங்கோஜம் இன்று மறந்து திரிவதே மிகவும் கொடுமை.அத்துடன் தன் மகள் செய்யும் தவறுகளை சொல்லி திருத்தும் தாய் வெளி நபர்களிடம் விட்டுக் கொடுப்பதில்லை.

அதே மருமகள் செய்யும் போது அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு பகிரப்படும். மிகப்பெரிய சண்டையாக மாறி குடும்பத்தின் நிம்மதி கெட்டு விடும்.

குடும்பம் ஒரு கோவில் என்பார்கள். அந்த கோவிலின் நிழலில் நிம்மதிக் கிடைக்காவிட்டால் வாழ்ந்து பயனேது.

மனம் விட்டு பேசுதல் சிறந்த முறை. மாமியார் மருமகள் தவறு செய்யும் போது மகனிடம் பிரச்சனையாக சொல்லாமல் மருமகளிடமே எடுத்து சொல்வது சிறப்பு. மகனிடம் சொன்னாலும் யாருக்கும் பாதிப்பு ஏற்படாமல் புரியவைப்பது சிறப்பு. அதேபோல மருமகளும் மாமியார் சொல்லும் எல்லா விடயங்களுக்கும் விதவாண்டம் பேசாமல் சில விடயங்களை புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். முடியாத விடயங்களை மாமியார் அவர் குடும்பம் புரியும் விதமாக சொல்லி புரிய வைத்து நடப்பது சிறப்பு.

சின்னப்பெண்தானே போகப்போக புரிந்துகொள்வாள் என்று மாமியாரும் பெரியவர்கள் சொல்லிவிட்டு போகட்டும். நம் மாமியார் தானே என்று மருமகளும் நினைக்க வாழ்க்கை நல்ல படியாக தொடரும்.

மாமியார், மருமகள் என்கிற உறவு நிலை தாய், மகள் உறவே. இதிலிருந்து பிரிந்து செல்வதை விட புரிந்துகொள்ள முயன்று விட்டுக்கொடுத்து நடக்க குடும்பம் சிறக்கும்.

இரு குடும்பங்களும் மகிழ்ச்சியாய் நிம்மதியாய் இருக்கும். எனவே நாகரீக காலத்தில் மாமியார் மருமகள் சண்டையை நிறுத்தி புதுமை படைப் போம் வாரீர். வாழ்க்கை வாழ்வதற்கே.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

# கற்றாழையை முக அழகிற்கு பயன்படுத்த 3 வழிகள்



கற்றாழையை முக அழகிற்கு பயன்படுத்த 3 வழிகள்

உங்கள் சரும பிரச்சினைகள் அனைத்திற்குமான அருமருந்தாக கற்றாழை விளங்குவதை இப்போது புரிந்து கொண்டிருக்கலாம். இந்த அருமையான பொருளை எப்படி பயன்படுத்துவது என்பதை அறிந்து கொள்ளவும் ஆர்வம் ஏற்பட்டிருக்கும். கற்றாழையை பயன்படுத்தக்கூடிய மூன்று வழிகளை அறிந்து கொண்டு, அதை உங்கள் சரும நல முறையில் சேர்த்துக்கொண்டு, மாசு மருவில்லா பொலிவான சருமத்தை பெறுவது எப்படி ? என அறிந்து கொள்ளுங்கள்.

செடியில் இருந்து இயற்கை கற்றாழையை எடுத்துக்கொள்ளுங்கள்.



கற்றாழை இலை இன்றை கத்திரித்து, அதன் முள்களை நீக்கிவிட்டு அதன் சாற்றுப் பகுதியை முகத்தின் பக்கவாட்டில் பூசிக்கொள்ளவும். செடியில் இருந்து கத்தியை கொண்டும் கொஞ்சம் சாற்றை அகற்றி பயன்படுத்தலாம். இரண்டு இலைகளில் இருந்து எடுக்கப்படும் சாறு போதுமானது. தேவை எனில் இன்னும் கொஞ்சம் எடுத்துக்கொள்ளலாம். இதில் கொஞ்சம் பாதாம் எண்ணெய் சேர்த்து முகம் மற்றும் கழுத்துப்பகுதியில் இரவு படுக்கச்செல்லும் முன் தடவிக்கொள்ளவும். இரவு அப்படியே விட்டு விட்டு காலை எழுந்ததும் கழுவிக்கொள்ளவும்.

**நீங்களே செய்யக்கூடிய ஆலோவேரா பேஸ் மாஸ்க்**

எண்ணெய் பசை/ கலையயான தன்மை கொண்ட சருமத்திற்கு: எண்ணெய் பசை மிக்க சருமம் எனில், உங்கள் சருமத்தில் இருந்து கூடுதல் எண்ணெயை, பருக்களை அகற்ற உதவும் கற்றாழை மாஸ்க் இது. ஒரு கோப்பையில் கற்றாழை சாற்றை எடுத்துக் கொள்ளவும்.

அதில் 10 முதல் 12 சொட்டு டீ டிரி ஆயில் விடவும். இதை நன்றாக கலந்து கொள்ளவும். இந்த கலவையை இரவு படுக்கச் செல்லும் முன், முகத்தில் பூசிக்கொண்டு, காலையில் கழுவிக்கொள்ளவும். வாரம் ஒரு முறை இவ்வாறு பயன்படுத்தவும்.

**உலர் சருமத்திற்கான கற்றாழை**

உலர் சருமத்திற்கு: உலர் மற்றும் மங்கலான சருமத்தை மென்மையான சருமமாக மாற்ற, கற்றாழை, தேன் மற்றும் வெள்ளரி கொண்ட பேஸ் மாஸ்கை தயார் செய்யவும். இந்த மூன்று பொருட்களுமே நீர்த்தன்மை அளிக்கக் கூடியவை. இவற்றை பயன்படுத்தும் போது, சருமம் மென்மையாகி பொலிவு பெறுகிறது. ஒரு வெள்ளரி, ஒரு ஸ்பூன் தேன் மற்றும் கொஞ்சம் கற்றாழையை சேர்த்து நன்றாக கலக்கவும். இந்த கலவையை பூசிக்கொண்டு 20 நிமிடம் விட்டு பின்னர் கழுவிக்கொள்ளவும்.

கற்றாழை மற்றும் வாழைப்பழம் மாய்ஸ்சரைசிங் தன்மை மற்றும் பளபள வைக்கும் பேஸ் மாஸ்க். இது எல்லா வகையான சருமத்திற்கும் குறிப்பாக, வழக்கமான, எளிதில் பாதிக்கும் சருமத்திற்கு மிகவும் ஏற்றது. இது சருமத்தை எரிச்சலில் இருந்து விடுவித்து, சருமத்தின் எலாஸ்டிக் தன்மையை மேம்படுத்துகிறது. ஒரு கோப்பை வாழைப்பழத்தை மேஷ் செய்து, 2 ஸ்பூன் கற்றாழை மற்றும் சில சொட்டு பன்னீர் விடவும். இதை நன்றாக கலந்து, முகத்தில் பூசிக்கொள்ளவும். உலர்ந்த பிறகு கழுவிக்கொள்ளவும்.

**கற்றாழை பயன்படுத்திய அழகு சாதனப்பொருட்களை பயன்படுத்தவும்**

உங்கள் சரும நல பராமரிப்பில் கற்றாழையை பயன்படுத்த மற்றொரு வழி, கற்றாழையை மூலப்பொருட்களில் ஒன்றாக கொண்ட அழகு சாதன பொருட்களை பயன்படுத்துவதாகும். கற்றாழை நலன் கொண்ட, லீவர் ஆயுஷ் ஆலோ வேரா ஆயில் கிளியர் பேஸ் வாஷ் கொண்டு உங்கள் முகத்தை கழுவிக்கொள்ளவும். உங்கள் சருமத்தை சுற்றுச்சூழல் மாசில் இருந்து காக்கும் அதே நேரத்தில், சருமத்திற்கு கற்றாழை மாய்ஸ்சரைசிங் தன்மை அளிக்கும், லாக்மே 9 டு 5 நேச்சுரலே லாஒ வேரா அக்வா ஜெல் சாதனத்தை பயன்படுத்துங்கள். கற்றாழையின் நற்குணங்கள் மற்றும் நாள் முழுவதும் யுவி கதிர்களில் இருந்து எஸ்.பி.எப் 20 பாதுகாப்பு அளித்து சருமத்தை நீர்த்தன்மையுடன் வைத்திருக்கும் சாதனத்தையும் நீங்கள் பயன்படுத்தலாம். உலர் மற்றும் கோடுகள் கொண்ட உதடுகளுக்கு வாசெலின் ஆலோ வேரா லிப் பாம் பயன்படுத்தவும். வெளியே பருவநிலை எப்படி இருந்தாலும் உதடுகளை மென்மையாக வைத்திருக்க இது உதவுகிறது.













தினகரன் THINAKARAN தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

ஊடக அனுசரணையில்

# ஜோசப் பர்னாந்து கௌரவிப்பு நதுநசியின் நூல் வெளியீடு

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் மாதாந்தம் நடத்தும் "மாதம் ஒருவரை கௌரவிக்கும் நிகழ்வு" புறக்கோட்டை, ஐந்துலாம்பு சந்தியில் உள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவை கலைஸ்ரீ மன்றத்தினரும் ஐயப்பன் படக் குழுவினரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெற்ற இவ்விழாவில், கலைஞரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய ஜோசப் பர்னாந்து கௌரவிக்கப்பட்டார். ஜன நாயக மக்கள் காங்கிரஸின் உப தலைவர் ஜேக்கப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாராட்டப்பட்ட ஜோசப் பர்னாந்துவைப் பற்றி உரையாற்றினார். மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் குமரகுருபரனும் ஜோசப் பர்னாந்துவைப் பற்றி உரையாற்றினார். இங்கு தினகரன் வாரமஞ்சரியில் நதிநசி என்ற புனைப் பெயரில் கவிதைகளை எழுதி வந்த முல்லைத்தீவு, உடுப்புக்குளத்தைச் சேர்ந்த ஆசிரியரான நா. நகுலேஸ்வரனின் நூல் வெளியீட்டு விழாவும் இங்கு இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டு வெளியிட்டு வைத்தார்.
அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் எஸ். விஜேராஜ், கலைஸ்ரீ கலைமன்றத்தின் தலைவர் கலைஸ்ரீ ஆகியோர் இதில் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டார்கள். இவ்விழாவில் வைரவிழா கலைஞன் போல்ராஜ், காளி ஆகியோரின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. பாடகர்களான கவிக்கமல், பாசில், முரளி, அசோகன், அருணா, அருண், அமரதாஸ் ஆகியோரின் பாடல்களும் இடம்பெற்றன. புகைப்படப்பிடிப்புக் கலைஞர்களான சம்பத், பாலா, நசார், சலீம், மலையகம். IK தேவா ஆகியோரும் இதில் கலந்து கொண்டார்கள்.























## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## தொடர்புபடுத்துங்கள்




## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்






# தென்கிழக்கின் கலை, இலக்கிய ஊடகப்பரப்பில் தன்னை ஆழமாக அடையாளப் படுத்தியிருப்பவர் திருக்கோவில் ஏ.எஸ்.கார்த்திகேசு

தென்கிழக்கின் கலை, இலக்கிய ஊடகப்பரப்பில் தன்னை ஆழமாகத் அடையாளப் படுத்தியிருப்பவர் திருக்கோவில் ஏ.எஸ்.கார்த்திகேசு. கிழக்கிலங்கையில் வரலாற்றுப் பழமையும் சிறப்பும் கொண்டு விளங்கும் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்து வருபவர், சுப்பிரமணியம் கார்த்திகேசு. பல்துறை கலைஞராவார்.திருக்கோவில் பிரதேசத்தின் இயற்கைச் சுழலும் இவரின் இலக்கிய ஆர்வமும் மூத்த இலக்கிய கர்த்தாக்களின் வழிகாட்டல்களும் இவரை ஒரு இலக்கிய எழுத்தாளராக மாற்றி இருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

**பிறப்பும் கல்வியும்**

சுப்பிரமணியம், மனோரஞ்சிதம் தம்பதியின் மகனான 1976.11.08ஆம் திகதி பிறந்தவர். இவர் ஆரம்ப கல்வியை திருக்கோவில் கள்ளீயந்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை,வடிவேல் வித்தியாலயம்(விஸ்வதுளசி வித்தியாலயம்)பின்னர் திருக் கோவில் மெதடிஸ். மிசன் தமிழ் மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வி தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்(தேசிய கல்லூரி)ஆகிய பாடசாலைகளில் கற்றவர்.தனது பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைத்துறைப் பிரிவில் கற்று 2007ஆம் ஆண்டு பட்டதாரியானார்.தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 2016ஆம் ஆண்டு தொழில்சார் உளவியல் டிப்ளோமா பட்டத்தினையும் பூர்த்தி செய்துள்ளார்.

**ஊடகப்பணியும், தொழிலும்.**

இவர் தேசிய நாளிதழ்களில் 2000ஆம் ஆண்டு முதல் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் எழுதிவந்தவர் 2010.03.23ஆம் திகதி தினகரன் தேசிய பத்திரிகையில் திருக்கோவில் பிராந்திய பகுதி நேர ஊடகவியலாளராக இணைந்து கொண்டு தனது ஊடகப் பயணத்தை ஆரம்பித்து இன்றுவரை சிறப்பாகவும் நடுநிலையாகவும் இன நல்லிணக்கத்துடன் செய்திகளை எழுதி வருகின்றார். இவர் யுத்த காலத்தில் மனிதாபிமான உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களில் பிரதேச மற்றும் மாவட்ட திட்ட இணைப்பாளராக பணியாற்றி வந்த நிலையில் 2012.06.07 ஆம் திகதி பட்டதாரி பயிலுனராக திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து பொத்துவில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றார்.இவர் அரச தொழில் தவிர்ந்த ஓய்வு நேரங்களில் கலை இலக்கியப் பணிகளை திருக்கோவில் பிரதேசத்தில் முன்னெடுத்து வருகின்றார். இவர் இலக்கியத் துறையில் 1995ஆம் ஆண்டு கால் எடுத்து வைத்திருந்ததுடன் அன்று முதல் தினகரன், வீரகேசரி, மித்திரன், தினமுரசு, மெட்ரோ நியூஸ், தமிழ்மிரர், சுடர்ஒளி, தினக்குரல்,ஆகிய பத்திரிகைகளிலும், இந்தியாவில் இருந்து வெளிவரும் மின்னிதழ்களிலும் தனது ஆக்கங்களை எழுதி வருகின்றார். இவர் ஊடகவியலாளர், கவிஞர், பாடலாசிரியர் அரச உத்தியோகத்தர் அகில இலங்கை சமாதான நீதவான்,சமூக செயற்பாட்டாளர் உளவியலாளர் என பன்முக ஆளுமையுடன் இன நல்லிணக்கமுடைய பண்பாளருமாவார்.

**இலக்கியத்துறை**



இவர் அகத்தியன்,மனோ கார்த்திக் ஈழகவி போன்ற புனைப் பெயர்களில் தனது ஆக்கங்களை எழுதி வருவதோடு 2022ஆம் ஆண்டு மகாகவி பாரதியாரின் 140ஆவது ஜனனதினத்தில் தனது முதலாவது கவிதை நூலான"கடிகாரப் பறவைகள்" எனும் நூல் ஒன்றினையும் வெளியிட்டு இருந்தார். அத்தோடு இவரது இரண்டாவது கவிதை நூலான " நதியில் நீந்தும் நட்சத்திரங்கள்" எனும் கவிதை நூல் தற்போது அச்சில் இருப்பதுடன் இவ்வருடம் இந்நூலை வெளியிடவுள்ளார்.


**வரலாற்றுக் கட்டுரைகள்**


திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள பழைமைவாய்ந்த இந்து ஆலயங்கள் பற்றிய ஆலய சிறப்புக்களை ஆலய உற்சவக் காலங்களில் கட்டுரைகளாக தொடர்ந்து எழுதி வரும் இவர் புராதன ஆலயமான ஶ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கான"தல வரலாறு" எனும் வரலாற்று நூல் ஒன்றினை 2024ஆம் ஆண்டு வெளியிடுவதற்கான அச்சு வேலைகள் தற்போது இடம்பெற்று வரும் நிலையில் இவ் வரலாற்று நூலுக்கான வரலாற்று ஓவிங்களை உலக புகழ் இந்திய ஓவியர் " பத்மவாசன்"வரைந்து வருகின்றார். என்பதும் குறிப்படத்தக்கது.

**பாடலாக்கத்துறை**

கார்த்திகேசு திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் வரலாறுகளை பாடல்களாக எழுதி இசை அமைத்து 04 இறுவட்டுக்களை வெளியீடு செய்துள்ளதுடன் 2018ஆம் ஆண்டு திருக்கோவில் ஶ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற குடமுழுக்கு விழாவின் போது இவரால் எழுதி வெளியிடப்பட்ட "பஞ்சாமிர்தம்" எனும் பக்தி இறுவட்டில் உலக புகழ் பாடும் நிலா எஸ்.பி.பாலசுப்பிரமணியம்"வங்கக் கடலோரம் சங்கத் தமிழ் முருகன்" எனும் பக்திப் பாடலை பாடியிருப்பதானது இவரின் இலக்கியப் புலமைக்கு எடுத்துக் காட்டாகும்.

இவர் பொத்துவில் குண்டுமடு ஶ்ரீ முருகன் ஆலயம், விநாயகபுரம் ஶ்ரீசிவன் ஆலயம், தம்பிலுவில் முனையூர் ஆலயம், தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயம் போன்ற தலங்கள் மீதும் பக்திப் பாடல் எழுதி இதுவரை 04 இறுவட்டுக்களை வெளியிட்டுள்ளார். திருக்கோவில் தினகரன் நிருபர் எனும் பெயருடன் 2010ஆம் ஆண்டு முதல் பத்திரிக்கை துறையில் இணைந்து கொண்ட சுப்பிரமணியம் கார்த்திகேசு சுமார் 100க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி அதனுடாக தனது பிரதேசத்தில் உள்ள பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்து பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளும் கிடைக்கப்பெற்று இருப்பதும் குறிப்பிடத்தக்கது.




**திருவதிகை கலை இலக்கிய கூடத்தின் ஊடான இலக்கியப் பணிகள்**





திருவதிகை கலைக் கூடத்தின் ஸ்தாபகரான இவர் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் அம்பாரை மாவட்ட ஏ.எஸ்.கே.திருவதிகை கலைக்கூடம் ஒன்றினை ஸ்தாபித்து கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் 2023ஆம் ஆண்டு பதிவு செய்து அதனுடாக திருக்கோவில் பிரதேசத்தில் வாழும் கலைஞர்களை ஒன்றினைத்து பிரதேசத்தின் கலை இலக்கிய வளச்சிக்கு பங்களிப்பு செய்து வருகின்றார்.

இலக்கிய கலைக்கூடத்தின் ஊடாக பிரதேசத்தில் உள்ள இளம் எழுத்தாளர்களை எழுத்துத் தறையில் உள்ளீர்த்து அவர்களின் கவிதை சிறுகதை சிறுவர் பாடல்கள் வரலாற்று நூல்கள் போன்றவற்றை வெளியிடுவதற்கான ஊக்கத்தினையும் ஆதரவினையும் வழங்கிவருகின்றார். அதேவேளை மூத்த எழுத்தாளர்கள், கல்வியாளர் கள் இலக்கிய செயற்பாட்டாளர்கள் ஆகியோருக்கு தனது கலைக் கூடத்தின் ஊ டாக வருடம் தோரும் கௌரவிப்புக்களையும் நினைவுச் சின்னங்களையும் வழங்கிவருகின்றார். புதிய எழுத்தாளர்களின் நூல் வெளியீடுகளையும் அம்பாரை மாவட்ட ஏ.எஸ். கே.திருவதிகை கலைக்கூடத்தின் ஊடாக வெளியிட்டு விழாக்கையும் ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

**விருதுகள்**

இவரின் கலை இலக்கிய ஆர்வத்தினைப் பாராட்டி 2007ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக திருக்கோவில் பிரதேச செயலகம் "சுவதம்" விருது வழங்கி கௌரவித்தது. தொடர்ந்து 2016ஆம் ஆண்டு கொழும்பு மனித உரிமைகள் அமைப்பு மற்றும் 2016 ஆம் ஆண்டு கொழும்பு அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால்; 'சாமஶ்ரீ தேசகீர்த்தி' விருதும் "சிவனுக்கோர் பாமாலை" எனும் பக்தி இறுவட்டினை வெளியீட்டமைக்காக 2016ஆம் ஆண்டு விநாயகபுரம் சிவன் ஆலயம் விருது வழங்கி கௌரவித்து இருந்ததுடன் 2018ஆம் ஆண்டு திருக்கோவில் ஶ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய மகா கும்பாபிசோக விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட"பஞ்சாமிர்தம்"எனும் இறுவட்டுக்கு ஆலய நிருவாகத் தினரால் கௌரவம் வழங்கப்பட்டது.2019ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனம் சிறந்த ஊடகவியலாளருக்கான விருது வழங்கி கௌரவித்தது.

இதேவேளை அரச உத்தியோகத்தர்களுக்கிடையிலான 2017ஆம் ஆண்டு பாடலாக்கப் போட்டியில் பிரதேச மட்டத்தில் முதலாம் இடமும் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடமும் பெற்றுள்ளார்.அதற்கான சான்றிதழ்களும் நினைவுச் சின்னங்களும் திருக்கோவில் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படடது.அத்தோடு தமிழ்லெட்டர்ஸ் சமூக ஊடக நிறுவனம் 2018 மற்றும் 2023 ஆண்டுக்கான சிறந்த இன நல்லிணக்கத்திற்கான ஊடகவியலாளர் விருதுகளை வழங்கி கௌரவித்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

**—பி.எம்.எம்.ஏ.காதர்—**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# இதழியலின் ஆசான் சிவகுருநாதன்

ஈழத்தில் இதழியல் வரலாற்று நீட்சி யின் ஒரு காலத்து அடையாளம் தின கரன் சிவகுருநாதன் அவர்கள். இதழி யலின் ஆற்றுப்படுத்துகை ஆசானாக மதிக்கப்படுபவர்;. இதழியல் எழுத் துக்கு உரமிட்டு எழுத வந்தவர்களைக் கை கொடுத்து வரவேற்றவர்;. மதிப்பு மிக்க மனிதராக மற்றோர் மனங்களை வென்று நின்றவர் திருமிகு அமரர் இரத் தினதுரை சிவகுருநாதன் அவர்கள்.


அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவை அவரது எழுத்து வழி நினை வுகொள் ஆவணமாக இலங்கை இதழி யலில் சிவகுருநாதன் எனும் பனுவலை ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்திருக் கிறார்.அண்மையில் இதன் வெளியீடு இடம்பெற்றது.

கலாசூரி சிவகுருநாதன் அவர்கள் சட்டத்துறையில் இயங்கியவர்;. ஊட கத்துறையில் ஆழக்காலூன்றியவர்;. கலை இலக்கியப்பணிகளில் ஊடுபரவி நின்றவர்;. சமூக இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர்.

அரைநூற்றாண்டு ஊடக வாழ்வில் தொட்டணைத்தூறும் மணற்கேணியாகி நின்றவர.;இதனால் கலாசூரி சிவகுகுரு நாதன் ஊடகத்துறையில் ஒரு நிறுவன மாக செயற்பட்டார்.

ஆசிரியத் தலையங்கம் தீட்டுவதில் வல்லவர்;. படைப்பிலக்கியவாதிக ளைக் கௌரவித்தவர். ஈழத்து இலக் கியத்துக்கு தினகரனில் களம் தந்த வர். பத்திரிகையாசிரியருள் மக்கள் திலகமாய் மதிப்புற்ற அமரர் கலாசூரி சிவகுருநாதன். எல் லோருக்கும்இனியமனி தரான கலாசூரி, தான் சிரிக்காமல் பிறரைச் சிரிக்க வைக்கும் நகையுணர்வு மிகுந் தவர்; தான். கூடும் அவையை நகையுரை களால் மகிழ்வூட்டிய ஊடக ஆசான் சிவ குருநாதன். அன்பு பொலியும் மகா மனி தராவார் என்பதாகப் பலரும் நினைவுப் பனுவலில் அமரர் சிவ குருநாதனை வரலாற்று ஆவணமாக்கினர்.

அவர் மீது எழுதப் பட்ட அஞ்சலிகளும் ஆ ர ா த னை க ளு ம் ஒரு மகத்தான ஊடக மகானின் பண்புக ளைச் சுட்டி நின்றன. வானுறையும் தெய் வத்துள் வைக்கப்படுப வன் என பேராசிரியர் கா.சிவத்தம்பியும் அஞ் சலித்தார்.




சந்தனக் கட்டை போல் தேய்ந்து மணம் பரப்பிய சிவாவின் வாழ்வியல் புகள் எளிமையின் மொத்த உருவமாக அவரைக்காட்டின.

''இவர் ஏரிக்கரை வீட்டின் எங்கள் பிரிய தமிழ்க்குரல். தினந்தோறும் எங்கள் ஜன்னல் வழியாக எட்டிப்பார்க்கும் ஒற்றை ஒளிக்கதிர்'' என மேமன் கவி கவியுரைப்பார். அமரர் கலாசூரி சிவகுருநாதன் தினகரனின் சூரியன்.

## எனினும் நான் எழுதுகிறேன் !

என்னை நீ வரலாற்றில் எழுதி விடலாம்
கசப்பான திரிக்கப்பட உனது பொய்களுடன்
என்னை மித மிஞ்சிய அழுக்கிலிட்டு நீ மிதிக் கலாம்
ஆயினும் நான் மேலெழுவேன் தூசி போல
என் துணிச்சல் உன்னைத் துவம்சிக்கிறதா
ஏன் மனமுடைந்து அல்லற்படுகிறாய்
என் அமர்வு கூடத்தில் எரிபொருள் பாய்ச்சும் எண்ணெய்க்கிணறுகள் என்னிடம் இருப்பது போலான மெத்தனத்துடன் நான் நடப்பதனாலா
அதே சந்திரர்கள் போல சூரியர்கள் போல ஆர்ப்பரித் தடங்கும் கடலலைகளின் நிச்சயத் துடன் அதே நம்பிக்கைகள் துள்ளித் துளிர்ப்பது போல இனியும் நான் எழுவேன்

*Still I Rise 1*

*Yoy may me down in history*
*With Your better twisted lies*
*You may trod me in the very dirt*
*but still like dust I'll rise.*
*Does my sassiness upset You?*
*Why are you beset with gloom?*
*'Cause I walk like I've got oil wells pumping in my living room.*
*Just like moons and like suns*
*With the certainty of tides*
*Just like hopes springing high*
*Still I'll rise*
*maya Angelou*

**தமிழில்: க.நவம்**
**நன்றி: எனினும் நான் எழுகின்றேன்**

## மறுசொல்

முல்லை முஸ்ரிபா



# விதிக்கப்பட்ட கதை 9

'வானத்தில் தயிர்ச்சட்டி வடிவத்தில் கிடந்தது நிலவு'' கதையொன்றின் தொடக்கம் தருகிற அதிர்வு கதைக்குள் வாசகனின் இயக்கத்தை வலுப்படுத்தும்.

ஓட்டமாவடி அறபாத் மூத்தம்மா கதை வழியே ஒரு கிராமிய வாழ்வியல் அனுபவத்தை அதன் ஈரம் வற்றா உணர்வுக் கலவையாக தன் பேனாவில் கலை படைத்துள்ளார். மூத்தம்மா என்கிற வயோதிப மாதுவை மையப்படுத்திய இந்தக் கதை கதைப்பொருளிலும், சொல் முறையிலும்,உணர்வுத் ததும்பலிலும் மேலெ முந்து நிற்கிறது.

மூத்தம்மாவுக்கும் பேரன் காஸிமுக்குமிடை யிலான உறவின் உயிர்ப்பே கதையெங்கும் படி கிறது.''மூத்தம்மோய்',''என்னமனெ' உரையாட லினூடு படர்கிறது உறவின் உயிர்ப்பு.

கிராமிய மண்ணின் மணத்தையும், மனத் தையும் மூத்தம்மா நினைவூட்டுகிறாள்.

''தயிர்ச்சட்டியின் வடிவத்தில் வானில் கிடந் தது நிலா. கொட்டி வைத்த இடத்தில் சற்றுநே ரம் இசகாமல் பிசகாமல் உறைந்திருக்கும் எருமைத் தயிரைப்போல் ஆடாமல் இருந்தது அதன் வடிவம். வெண்ணிற மேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கணம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ என வியக்க வைத்தது அதன் அழகு''உருவகமும் உவமையுமான விப ரிப்பு அழகு.

மூத்தம்மாவும் நிலவு தான். நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்யும் மேகம் காஸிம். கடலின் சீற்றம், மாமரத்தின் பூக்கள், ஒழுங்கைக்குள் தனகும் நாய்கள், பந்தல், ஊஞ்சல், மஞ்சோனா மரம், பக்குல் என கிராமத்தின் சொற்களால் காட்சி மொழியைக் கையாள்கிறார் அறபாத்.



நினைவோட்டமும், நனவோட்டமுமான கதை மூத்தம்மாவின் எண்ணங்கள், செயல்கள், தோற்றம் குறித்த காஸிமின் பார்வையாக நகர் கிறது.

கதையில் பலவிடங்களில் உணர்வுதுடிக் கிறது. 'ஏன்கா ராவையில மட்டும் பக்குல் கத்துது?' அடக்க முடியாமல் கேட்டேன்.

''அது மனெ நம்மட ஊருக்க, குடும்பத்துக்க, ஆராவது மௌத்தாப் போறதுக்கு அடையாளம் எண்டு சொல்லுவாக, அதுதான் இந்தப் பக்குல் வாசலுக்கு வாசல் கேவித் திரியுதாம்',''அப்ப ஏன்கா நம்மட உம்மா மௌத்தாப் போனஅன் டெக்கி இது கத்தல. கத்திருந்தா நம்மட உம்மா வவூட்டுக்க ஒளிச்சு வச்சிருக்கலாம் என்னகா? 'மூத்தம்மா என்னை இறுக அணைத்துக் கொண்டா.

கிராமியச் சொற்களின் கதையாடல் மூத்தம் மாவை யதார்த்தம் ததும்ப பேசுகிறது.

மூத்தவாப்பா, மூத்தம்மாவின் அழகிய இணையாகக் கதைக்குள் இயங்குகிறார். ஒரு கூட்டுக்கரத்தையாக அவரது குணவியல்புகள் கதையெங்கும் பரவுகின்றன சுருட்டுப்புகையாக.

மூத்தம்மாவில் கிராமிய வாழ்க்கை இயல்பு கெடாமல் காட்சி மொழியாகிறது. மஞ்சோனா மரத்தின் கீழ் விரித்தபாய், வெற்றிலைப் பெட்டி, கோழிக் கூட்டின் சலசலப்பு, பக்குலின் கேவல், நாயின் உறுமல், மாடுகளின் மூச்சிரைச்சல், கூட்டுக்கரத்தை, அரிக்கன் லாம்பு, வட்டுவம், பனையோலைப்பாய், செவத்தாளில் பால் கறப் பது என கிராமியத்தின் மணம் மூத்தம்மாவில் மணக்கிறது.

இந்தக் கிராமத்தின் முடிசூடா குட்டி ராணி. மூத்தம்மா போல் சுயமாய் ஓர் இளவரச னாய் இயங்க விரும்பு பவன் பேரன் காஸிம் என அறபாத் மூத்தம் மாவை முன் மாதிரிப் பாத்திரமாகக் கட்டமைக்கிறார். குழந்தையின் நம்பிக்கையைத் தன் செயலூக்கத்தால் கட்ட மைக்கிறாள் மூத்தம்மா.கதையில் காஸிம் கூறு கிறான்'...இந்த ராஜ்யத்தின் அரசியைப்போல் நானுமொரு இளவரசன் ஆவேன்.

மூத்தம்மா என்ற மகாராணியின் கீழ் இருப் பதில் என்றுமில்லாத கர்வம் சுரந்தது. எனது சிரசில் சௌந்தர்ய கிரீடம் சூடியதான மிதப்பு.' என சிறகு முளைத்துக் காற்றில் எம்புகிறான் சிறுவன்.

கதையில் தன் வெள்ளைக் கொக்காக மூத் தம்மா வெடவெடக்கிறாள்; என் வெள்ளைக் கொக்கு தூங்கிக்கொண்டிருந்தது' என காஸிமின் மீதான மூத்தம்மாவின் இறுகிய உறவை அறபாத் இக்கதையில் எழுதுகிறார். கதை முடிவு மூத்தம்மாவின் மௌத்து இவனுக் குள் எழுப்பும் துயர் கடந்த நம்பிக்கை 'மனெ நீ வெயிலுக்க வராம தங்கச்சிய பார்த்துக்க'' மஞ்சோனா மரத்தடியில் சுருக்கென்று நின்று கொண்டேன்.கதை சுருக்கென்று நின்று கொண் டாலும் அது எழுப்பும் உணர்வலைகள் நின்றுவி டுவதில்லை.

ஈழத்தின் இளம் தலைமுறைப் படைப்பாளர் களில் முக்கிய கதை சொல்லியாக மேலெழும் ஓட்டமாவடி அறபாத்தின் நினைந்தழுதல் நினைவில் நிற்கும் கதைகளாலான பனுவல்.

# கருணாநிதியின் சமயோசித புத்தி



தமிழ் சினிமாவில் நாடகங்களில் நடித்து பின் சினிமாவுக்கு வந்த பல நடிகர்களில் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் ஒருவர். யாரையும் காயப்படுத்தாமல் நகைச்சுவை செய்வது இவரின் பாணி. இவரது காமெடியில் எப்போதும் சமுதாயத்திற்கு தேவையான கருத்து ஒன்று இருக்கும். காமெடி மூலம் மக்களுக்கு நல்ல கருத்துக்களையும், அறிவுரைகளையும் சொன்னவர். எம்.ஜி.ஆருக்கு மிகவும் நெருக்கமாக இருந்தவர். என்.எஸ்.கிருஷ்ணனிடமிருந்து பல நல்ல விஷயங்களை எம்.ஜி.ஆர். கற்றுக்கொண்டார்.

அதேபோல், திரையுலகில் வசனகர்த்தவாக அறிமுகமானவர் கலைஞர் கருணாநிதி. துவக்கத்தில் சில படங்களுக்கு வசனம் மட்டும் எழுதினார். அதன்பின் பல திரைப் படங்களுக்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதியுள்ளர். சிவாஜி அறிமுகமான பராசக்தி படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் கலைஞர் எழுதியதுதான்.1951ம் வருடம் கலைஞர் கருணாநிதி திரைக்ககதை, வசனம் எழுத என்.எஸ்.கிருஷ்ணன் இயக்கத்தில் உருவான திரைப்படம் மணமகள். இந்த படத்திற்கான வேலை நடந்து கொண்டிருந்த போது உங்களுக்கு என்ன சம்பளம் வேண்டும் என கலைஞரிடம் என்.எஸ்.கிருஷ்ணன் கேட்க, கருணாநிதியோ 'எவ்வளவு கொடுத்தாலும் சரி' என்றாராம்.உடனே என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு காகிதத்தை எடுத்து 00001 என எழுதி அதாவது ஒரு ரூபாய் என்பதை எழுதி 'இவ்வளவு கொடுத்தால் சம்மதமா' என கேட்டாராம்.

கருணாநிதி அந்த காகிதத்தை அவரிடமிருந்து வாங்கி அதை அப்படியே திருப்பி காட்டினாராம். அப்போது அதில் 10000 என இருந்தது. அதாவது 10 ஆயிரம் என்பதை காண்பித்து இது கொடுத்தால் சம்மதம் என்றாராம். கருணாநிதியின் சமயோசித புத்தியை பார்த்து வியந்த என்.எஸ்.கிருஷ்ணன் 'அடடே நீங்கள் என்னையே ஜெயித்துவிட்டீர்களே' என சிரித்தாராம்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை



# பாவாடை தாவணியில் பார்த்த உருவமா பாடலுக்கு ஆடிய பாவை

தமிழ் சினிமாவில் எம்.ஜி.ஆர்., சிவாஜி, ஜெய்சங்கர் என பல நடிகர்களுடன் நடித்த மூத்த நடிகை ஜமுனா. இவர் 1936ஆம் ஆண்டு சீனிவாச ராவ் – கவுசல்யா தேவிக்கு மகளாய் பிறந்தார். இவருடைய சொந்த ஊர் ஆந்திரப்பிரதேசத்தில் தெனாலிக்கு அருகில் உள்ள துக்கிரலா. இவர், தன்னுடைய அம்மாவின் ஒத்துழைப்பால் சிறு வயதிலேயே மேடை நாடகங்களில் நடித்து வந்தார்.

தன்னுடைய சிறு வயதிலேயே நாடகங்கங்களில் நடித்து வந்த இவரின் நடிப்பை பார்த்த இயக்குனர் ராஜாராவ் தன்னுடைய "புட்டில்லு" திரைப்படத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு கொடுத்ததை சரியாக பயன்படுத்திக்கொண்டு நடிப்பதற்கு காலடி எடுத்து வைத்தார்.

பின்னர் 1959ஆம் ஆண்டு பிரபல நடிகரான ஏ.நாகேஸ்வராவுடன் இணைந்து "இல்லரிகம்" என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார். இப்படம் பெரியளவில் வெற்றி பெற்று வெள்ளிவிழா கண்டது. இதனை தொடர்ந்து தெலுங்கு சினிமாவின் எம்.ஜி.ஆரான என்.டி.ஆருடன் இணைந்து பல திரைப்படங்களில் நடித்து வந்த இவர் தெலுங்கு சினிமாவில் மட்டுமே 190 படங்களுக்கும் மேலே நடித்தியிருக்கிறார். நடிகை ஜமுனா தெலுங்கு சினிமாவில் மட்டுமன்றி தமிழிலும் சில படங்கள் நடித்திருக்கிறார். இவர் விரல்விட்டு என்னும் எண்ணிக்கையிலான தமிழ் படங்களில் நடித்திருந்தாலும் அவை ரசிகர்கள் மனதில் நிலைக்கும் படியான பெயரை இவருக்கு வாங்கி கொடுத்தது. உதாரணமாக கடன் வாங்கி கல்யாணம், நிச்சய தாம்பூலம், குழந்தையும் தெய்வமும் ஒன்று, தங்கமலை ரகசியம், மிஸ்ஸியம்மா போன்ற படங்களிலும் எம்.ஜி.ஆருடன் ஒரே ஒரு படத்திலும் நடித்திருக்கிறார்.

மேலும் இன்றும் கேட்கத் தோன்றும் "பாவாடை தாவணியில் பார்த்த உருவமா போன்ற பாடல்களில் ஆடி இருக்கிறார். இப்படி தமிழ், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி உள்ளிட்ட பலமொழி படங்களில் நடித்திருக்கும் இவர் 1968ஆம் ஆண்டு சிறந்த நடிகைக்கான பிலிம் பேர் விருது, 1999ஆம் ஆண்டு எம்.ஜி.ஆரின் தமிழக அரசு கௌரவ விருது, 2010ஆம் ஆண்டு என்.டி.ஆர் விருது என பல விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.– 19



வருடத்திற்கு வருடம் எம்.ஜி.ஆருக்கு புதிய படங்கள் ஒப்பந்தம் ஆகியது. சிரமம் இல்லாமல் குடும்பம் நடந்து கொண்டிருந்தது. வசதிக்கேற்ப சினிமா நடிகர்கள், நாடக நடிகர்கள் வசிக்கும் ராயப்பேட்டை லோயஸ் வீதியில் சத்தியபாமாவின் விருப்பத்திற்கு இணங்கி எம்.ஜி.ஆர். பழையதாக இருந்தாலும் ஒரு பெரிய வீட்டை வாடகைக்கு எடுத்துக் குடியேறினார். வழமை போல் எல்லோரும் அங்கு ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

முன்பெல்லாம் மகன்கள் கொண்டு வந்து கொடுக்கின்ற பணத்தை சுருக்குப் பையில் போட்டு மடியில் வைத்துக் கொள்ளும் காலம் போய் பீரோவில் வைத்து, அந்த பீரோவின் சாவியை சத்தியபாமா தனது இடுப்பில் சொருகி இருப்பதை பார்த்து எம்.ஜி.ஆர். ஆனந்தமடைந்தார்.

சதானந்தவதியை குணமாக்கும் பொறுப்பை எம்.ஜி.ஆர். டாக்டர் சுப்பிரமணியத்திடம் கொடுத்திருந்தார். அந்தக் காலத்தில் டாக்டர் சுப்பிரமணியம் பிரபலம் மிக்கவராகத் திகழ்ந்தவர். டாக்டர் சுப்பிரமணியம் எம்.ஜி.ஆரிடம் நான் கூறும் வரை சதானந்தவதியிடம் உடல் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்று கூறியிருந்தார். ஆனால் அதையும் மீறி எம்.ஜி.ஆர். மனைவி சதானந்தவதியுடன் உடல் தொடர்பு வைத்துக் கொண்டார். அதன் விளைவாக சதானந்தவதி கர்ப்பமுற்றார். ஆனால் கருவானது கர்ப்பப்பையில் உருவாகாமல் வேறு இடத்தில் உருவாகி விட்டது. அந்தக் குழாய் எந்த நேரத்திலும் வெடித்து விடலாம் என்றிருந்தது. கர்ப்பம் அடைந்தமையால் சதானந்தவதியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது. டாக்டர் சுப்பிரமணியத்திற்கு ஆத்திரம் ஏற்பட்டது. சதானந்தவதியின் நிலையை நன்கு விளக்கி சொல்லியிருந்தும் எம்.ஜி.ஆர். உடல் தொடர்பு கொண்டு விட்டாரே என்று டாக்டர் சுப்ரமணியத்திற்கு எம்.ஜி.ஆர். மீது அளவு கடந்த கோபம் ஏற்பட்டது. டாக்டர் சுப்பிரமணியம் எம்.ஜி.ஆருடன் கதைக்க விரும்பவில்லை. டாக்டர் சுப்பிரமணியம் அவரது கடமையை ஒழுங்காக செய்தார். ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு மேல் "கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி" ஆக காலம் கடத்தியதால் இயற்கையின் தாக்குதலை சமாளிக்க முடியாது போனதால் சதானந்தவதியின் உயிருக்கே ஆபத்து ஏற்படும் விபரீதத்திற்கு தான் காரணமாகி விட்டேன் என்று எம்.ஜி.ஆர். உணர்ந்து கவலை கொண்டார். இத்தனை மாதங்கள் பொறுத்துக் கொண்ட நான் இன்னும் சில மாதங்கள் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாதா என்று தன்னைத் தானே நொந்து கொண்டார்.

எம்.ஜி.ஆர். தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ள ஓரளவு முடிந்தாலும் டாக்டர் சுப்ரமணியத்தை சமாதானப்படுத்த முடியவில்லை. டாக்டர் எம்.ஜி.ஆருடன் முகம் கொடுத்துப் பேசவே விரும்பாதவராக இருந்தார்.


சதானந்தவதியின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டதனால் உடனடியாக அறுவை சிகிச்சை செய்து குழந்தையை எடுத்து விடுவதை தவிர வேறு வழி இல்லாது போய்விட்டது.

எம்.ஜி.ஆருக்கு முதல் மனைவி தங்கமணி மூலமாக குழந்தை கிடைத்தாலும் உயிருடன் கிடைக்கவில்லை. இரண்டாவது மனைவி சதானந்தவதி முதலாவதாக கர்ப்பம் அடைந்த நிலையில் தெரியாத்தனமாக ஊசி போடப்பட்டதனால் கருச்சிதைவு, சதானந்தவதியின் இரண்டாவது கர்ப்பம் கர்ப்பப்பையில் உண்டாகாமல் குழாயில் குழந்தை உண்டாகி உயிராபத்து ஏற்பட்டதனால் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. எம்.ஜி.ஆருக்கு குழந்தை கிடைப்பதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் கிடைத்தும் குழந்தை இல்லை என்ற கவலை மேலோங்கியது. எம்.ஜி.ஆர். சினிமா வட்டாரத்தில் வீரநடை போட ஆரம்பித்தாலும் இல்லற வாழ்க்கை இல்லையே என கவலை அடைந்து மனைவி சதானந்தவதி, அம்மா சத்தியபாமா, அண்ணன், அண்ணி மிகவும் சோர்ந்து விட்டனர்.

தனது இளைய செல்ல மகனுக்கு வாழ்க்கையில் இப்படி கடுமையான சோதனைகள் ஏற்படுகிறதே என்று ஆண்டவனையும் அந்த அம்மனையும் நினைத்து வேதனைப்பட்டார். தனது மகனுடைய சம்மதம் இல்லாமல் அவனுக்கு திருமணம் செய்தது ஒன்றுக்கு இரண்டும் சரியாக அமையவில்லையே! இதற்கு காரணம் என்னவாக இருக்கும்? மகனுடைய இல்லற வாழ்க்கையை கெடுத்து விட்டோமோ? இப்படி சத்தியபாமா பலவாறு தனது மனதை குழப்பிக் கொண்டே இருந்தார். இந்த சமயத்தில் வால்டாக்ஸ் வீதியில் இருக்கும் அம்மன் கோயிலுக்கு தனியாக சென்று அந்த கோயில் பூசாரியிடம் தனது இளைய மகனுக்கு இல்லற வாழ்க்கையில் ஏற்படும் சிரமங்கள் பற்றி எடுத்துக் கூறி விபரம் கேட்டார். அந்த கோயில் பூசாரி விடயங்களை கேட்டு விட்டு அம்மா நீங்க அடுத்த வெள்ளிக்கிழமை வாருங்கள்... விபரம் சொல்கிறேன் என்றார். அதன்படி அடுத்த வெள்ளிக்கிழமை அன்று சத்தியபாமா அந்தக் கோயிலுக்கு சென்று பூசாரியிடம் விபரம் கேட்டார். அம்மா! உங்க இளைய மகனுக்கு 27 வயது வரை இல்லற வாழ்க்கை இப்படித்தான் இருக்கும்... கவலைப்படாதீங்க... 27 வயதுக்கு பிறகு உங்க மகன் இல்லற வாழ்க்கையில் திருப்திகரமாக இருப்பார்... என்று ஆறுதல்படுத்தி மேலும் சில விடயங்களைக் கூறினார். "இதை அறியாமல் நீங்க உங்க மகனுக்கு உங்க இஷ்டப்படி திருமணம் செய்து வைத்தீர்கள். அது உங்க தவறு... இப்போது நீங்க இரண்டாவதாக திருமணம் செய்து வைத்த அந்தப் பெண்ணும் இறந்து விடுவாள்.... எனவே இனிமேலாவது மகனுடைய சொந்த வாழ்க்கையில் நீங்க தலையிட வேண்டாம்... எந்த விடயத்தையும் உங்க மகன் இஷ்டத்திற்கு விட்டு விடுங்கள்... எல்லாம் நல்லதாகவே நடக்கும்..." என்று கூறி சத்தியபாமாவை அனுப்பி விட்டார்.

இதைக் கேட்ட சத்தியபாமா தான் மிகவும் பெரிய தவறு செய்து விட்டேன் என்று நினைத்து மிகவும் வேதனைப்பட்டார். இந்த விடயத்தை யாரிடமும் சொல்லாமல் தனது மனதிற்குள்ளே வைத்துக் கொண்டார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# ஹற்றனில் மலையகம் 200 விசேட நிகழ்வு





















பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை நினைவுகூரும் வகையில் 'வேறுபாடுகளின்றி நல்லிணக்கத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் அண்மையில் ஹற்றன் DKW மண்டபத்தில் விசேட நிகழ்வொன்று நடைபெற்றது.

அப்செக் ஸ்ரீ லங்கா மலையக சமூக செயல் நிலையத்தின் ஏற்பாட்டில் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் அனுசரணையில் பெருந்தோட்ட பிரஜைகள் மத்தியில் தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை உறுதி செய்தல் எனும் மகுடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும,

IDM நேஷன்ஸ் கெம்பஸின் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவரும், சர்வதேச இசைக்கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவருமான அருட்கலாநிதி எஸ்.சந்துரூ பெர்ணான்டோ விசேட அதிதியாக கலந்துகொண்டார்.

பிரதம அதிதியாக சட்டத்தரணியும், தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயறிட்ட பிரதிப் பணிப்பாளர் மா. திருநாவுக்கரசு, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் எஸ். சந்தனம், திட்டமிடல் முகாமையாளரும், நிகழ்வின் பிரதம ஒருங்கிணைப்பாளருமான ஏ.டி.முரளீஸ்வரன் உட்பட அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒகஸ்ட் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.